ஸ்ரீ :

பிள்ளையுலகாசிரியர் திருத்தம்பியாரான

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

அருளிச்செய்த

ஆசார்ய ஹ்ருதயம்

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணாங்கராசார்யர்

எழுதிய

தாத்பர்யஸாரத்துடன்

கூடியது

கிடைக்குமிடம் :

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

சென்னை பி. என். கே. அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது

1946

விலை 1—10—0.

ஸ்ரீ:

ஆசார்யஹ்ருதய சூர்ணிகைகளின்

அகராதிக் குறிப்பு

[லக்கம் - சூர்ணிகைகளிஸ் வரிசை லக்கம்]

அங்கீகரிக்க அவகாசம்	186	இருத்துமெண்டானுய்	202
அங்கு நம்பிசரணென்று	192	இருந்தமையென்றது	231
அச்சேத்ய மென்னுமது	132	இருள் துயக்குமபக்கு	98
அஜ்ஞா ப்ரமிக்கிற	86	இவ்கள் தேடிநிற்க	124
அடிதொழுதெழென்ற	213	இவற்ருல் வரும்	116
அடியோம் தொடர்ந்து	120	இவற்ருலே ஸாதாரணம்	30
அணையவூரப்புணைய	87	இவற்றில் ப்ராவண்யம்	187
அதவா வேதவேத்ய	70	இவற்றுக்குக் காரணம்	6
அதாவது மயர்வற	97	இவற்றுக்கு மந்த்ர	208
அதில் ஸம்ஸ்க்ருதம்	40	இவற்றுக்கு மூலம்	8
அதில் ஸித்ததர்மவிதி	193	இவற்றுக்கு விநியோகங்கள்	27
அது ஐவரை வெல்வித்து	191	இவற்றுக்கெல்லை	4
அதுக்கு மூலம் யான்	93	இவன் நடுவே	112
அதுக்கு மூலம் "விதயச்ச"	66	இவை கிட்டமும் வேட்டு	11
அதுக்கு ஹேது	94	இவை ஜ்ஞாநஸ்சன	233
அது தத்வோபதேசம்	190	இவை ஸ்வரூபத்தை	20
அதுதானும் ஆஸ்திக்ய	15	இறுகவிறப்புக்கும்	143
அத்யயநஜ்ஞாநாது	37	இன்பு மன்பும் முற்படுவது	122
அத்ரி ஜமதக்நி	92	ஈசவாயீசனீசஸ்	222
அநந்தக்லேச	5	உண்ணுறு கிடந்தோர்	123
அந்தணர் மறையோர்	34	உதாத்தாதி பதக்ரம	69
அபிலாஷா சிந்தநாது	136	உபயப்ரதாநப்ரணவ	161
அருள் முடிய	29	உயிர் மாய்தல்	200
அவகாஹித்தாரை	176	உறக்கம் தலைக்கொண்ட	49
அவர்களுக்குக் காயோடை	60	உருமையோடே	229
அவன் முனிந்தார்க்கு	197	ஊரார் நாட்டார்	142
அவித்யாநிவர்த்தக	234	ஐந்திலேடொள்பதோடு	215
அழுநீர் துளும்ப	61	எண்டிசையுமகல்	227
அழும் தொழும்	127	எண்ணிலாக் குணங்கள்	225
அறியாதார்க்கு	196	எண்ணிலும் வரும்	109
அளிப்பானடியேன்	209	எவ்வுலகத்தெவ்வெவையும்	39
அன்றிக்கேஸ்வரூபகுண	54	எழுவதோருரு	130
ஆசறுதூவியென்னும்	154	எற்றைக்குமென்றது	129
ஆதித்யராமதிவாகர	83	என்பெறுதியென்ன	152
ஆப்திக்கு இவர்	67	என்னதுன்னதாவியிலே	201
ஆவாவென்று தானே	223	என்னையும் யாவர்க்கும்	224
ஆற்றில் துறையில்	80	ஏதந்நிமித்தம் முன்னமே	10
இடகிலேன் நோன்பறிவி	102	ஒரு தலையில் க்ராமகுலாதி	35
இதின் ஔபாதிகத்வம்	89	ஒன்று கூடினதாய்	12
இது உபயமுமன்றிக்கே	101	கடிதகடகவிகடநா	168
இந்த உட்பொருள்	38	கண்வலிப்படாதே	153
இந்த வுதிரத்தரிப்பு	13	கதிர்ஞானமூர்ந்திக்ரு	199
இப்பிறப்பே சிலநாளில்	103	கமலக்ரண்ணனென்று	230
இயற்பா மூன்றும்	50	கருவுள் வேறலாமை	57
இராணனில் நசவாக	125	கர்மக்ருபாபீஜம்	9

[லக்கம் - சூர்ணிகைகளின் வரிசை லக்கம்]

கர்மகைங்கர்யங்கள் 26
கலை வளை அஹம் 147
கல்பாதியில் தோற்றிற்று 55
கலைகணற்ருரை 164
காருணிகனை 1
கீழைமேலை வடக்கிலனை 141
குழலில் நெஞ்சும் 128
கைகம் முதலிழந்தார் 169
கோஸலகோகுல 105
குருசிஷ்ய க்ரந்த 64
கோவ்ருத்திக்கு 96
க்யா நிலாபபூஜா 205
க்ருஷ்ணக்ருஷ்ணத்வைபா 77
சதுர்விதமான 16
சந்தோகனென்று 52
சரண்ய முருந்தத்வம் 181
சாதுசனம் நண்ணை 214
சாஸ்த்ரிகள் தெப்பக் 19
சிறு சீராச்சுளகு 144
சுரிகுழல் அஞ்சன 228
சூழ்ச்சி அகற்றினீரெ 138
செந்திறத்த தமிழ் 41
செய்த நன்றி 108
சென்று சேர்வார்க்கு 170
சேர்ப்பாரைப் பகுதி 150
சேஷத்வபஹிர்ப்பூத 88
சேஷத்வ போக்த்ருத்வ 21
சொல்லப்பட்ட வென்ற 46
சோராத சூவா 220
ச்ரமணீ விதுர 95
ச்ரம மனம் சூழும் 173
ஜகதசரதவளுதேவ 82
ஜந்மாந்தரஸஹஸ்ர 99
ஜாத்யாச்ரமதீக்ஷைகளில் 31
ஜ்ஞாநசதுர்த்திகளின் 22
ஜ்ஞாநத்தில் தம்பேச்சு 118
தமருகந்த அடியோமு 158
தமிழ் மாமுனிதிக்கு 91
தம்பிழையும் சிறந்த 156
தர்மவீர்ய ஜ்ஞானத்தாலே 58
தாய்க்கும் மகனுக்கும் 204
தாயாரேதலர் 139
நேவத்வமும் நிந்தையான 81
நேவிமார் பணியாநேர் 226
நேறும் கலங்கி 119
நோல்புரையே போமது 18
நோழிமாரன்னையர் 135
த்யாஜ்ய தேஹவ்யாமோஹம் 185
த்யாஜ்யோபாதேயங்கள் 3
த்வயார்த்தம் தீர்க்க 210
நண்ணுதார் மெய்யிலுான் 203
நலமருளினன் 114
நால்வேதம் கண்ட 47
நாலயலார் அயற்சேரி 140
நாலில் ஒன்று ப்ரவர்த்தகம் 24
நிலாமுற்றம் ப்ரஜ்ஞா 146
நீர்பால் நெய்யமுதாய் 188
பகலோலக்கமிருந்து 157
பகவத் பக்தபரங்கள் 217
பகவன் ஞானவிதி 194
பட்டத்துக்குரியவாஜனையும் 106
பட்டம் சூடகமாவன 148
படைத்தான் கவியென்ற 48
பந்துகழல் பாவை 149
பரத்வ காரணத்வ 218
பரபரனுய் நின்ற 219
பரமஸத்வத்தோடே 56
பலஸாதந தேவதாந்தர 62
பாட்டுக்கு க்ரியையும் 216
பாரத கீதைகளின் 68
பாஷ்யகாரர் இதுகொண்டு 65
பிரிந்த துன்பக்கடல் 180
பிரியில் இலேனுக்கு 126
புனர்தொறுமென்ன 115
புண்ணியம் பாவம் 117
புரவியேழொரு காலுடைய 53
பூண்டநாள் சீர் 155
பெருக்காறு பலதலைத்து 131
பெரும்பாழில் கேஷத்ர 104
பெரும் புறக்கடலும் 74
பெற்றும் பேறிழந்தும் 78
பேச்சுப் பார்க்கில் கள்ள 76
போக்ய பாகத்வரை 177
போகத்தில் தட்டுமாறும் 178
ப்ரவண சித்தம் 171
ப்ரஹ்ம நிஷ்டரும் 206
ம்ருத்கடம் போலன்றே 73
ம்லேச்சனும் பக்தனுல் 85
மண்டிணரும் மற்றை 28
மண்ணுடின ஸஹ்ய 71
மண்ணோர் விண்ணோர் 160
மதியால் இசைந்தோம் 110
மயில் பிறைவில் அம்பு 137
மனம் செய் எல்லையில் 189
மஹாத்மாக்கள் விரஹம் 179
மஹாமதிகள் அச்சம் 174
மாதவன் மலை 111
மார்க்கபந்து சைத்யம் 182

[லக்கம் - சூர்ணிகைகளின் வரிசை லக்கம்]

மாலை கங்குல் காலை 145
மாவுருவில் கள்ளவேடம் 90
மீன நவநீதங்கள் 79
முடிந்த அவாவென்றது 232
மூன்நீர் வாழ்ந்தார் 107
முனிவரையிடுக்கியும் 17
முழுதுமாய் எங்க 221
முற்பாடர்க்கு க்ரியா 25
மூளத்தெழுந்த 23
மூன்றில் சுருக்கிய 211
மெய்ந்நின்று மங்கவொட்டு 207
மெலிவிலும் சேமம் 165
மேகம் பருகின 72
மோகூதாநத்தில் 184
ரஹஸ்யத்துக்கு 212
ராமாயணம் நாராயண 63
ருக்கு ஸாமத்தாலே 51
ருசிவிவசர்க்கு 163
வடமொழி மறை 42
வத்ஸலையான மாதா 14
வம்சபூமிகளை யுத்தரிக்க 84
வரவாறில்லை வெறிதே 113
வன்பெருவானக 159
விந்யை தாயாகப் பெற்று 121
விப்ரர்க்கு கோந்ப சரணை 36
விவேக பலம் 2
விவேக முகராய் 151
விளம்ப விரோதம் 167
வீட்டின்ப வின்பப்பாக்களில் 75
வேத சதுஷ்டயாங்க 43
வேதநூல் இருந்தமிழ் நூல் 45
வேத வித்துக்களும் 33
வேதவேத்ய வைதிகோப 195
வைஷ்ணவவாமநத்தில் 162
வ்யவஸாயஜ்ஞர் 166
ஸகல வித்யாதிக வேதம் 44
ஸகி வெறி விலக்கி 134
ஸத்வாஸத்வ நிதாநம் 7
ஸம்பந்தோபாய பலங்களில் 133
ஸஸைன்ய புத்ரசிஷ்ய 183
ஸாதநஸாத்யங்களில் 32
ஸாதநஸாத்யஸ்த 198
ஸாதரரைப் பரிசழிக்கும் 172
ஸாத்யஷ்ருதிஸ்தாயும் 175
ஸ்வாத்யாய யோகங்களை 59
ஸ்வீக்ருத ஸித்த ஸாதநர் 100

ஆசார்யஹ்ருதய சூர்ணிகை

அகராதிக் குறிப்பு

முற்றிற்று.

ஓர் முக்கிய அறிவிப்பு

முழுவதும்போல், ஸ்ரீவசநபூஷணம், தத்வத்ரயம், ஆசார்யஹ்ருதயம் இந்த நான்கு ரஹஸ்யங்களையும் ஒரு பிழையுமின்றிக் கண்ட பாடமாக்கிப் பரீக்ஷை கொடுத்துத் தேறுபவர்களுக்கு 75 ரூ. பரிசளிக்கப்படும். பரீக்ஷா ஸ்தலம் காஞ்சீபுரம் நம்பிள்ளை ஸன்னிதி. இதில் விருப்பமுடையவர்கள் நமக்கெழுதிப் பரீக்ஷா நிபந்தனைப் புத்தகம் வரவழைத்துப் பார்க்க.

ப்ர. அண்ணங்கராசாரியர்.
காஞ்சிபுரம்.

ஆசார்ய ஹ்ருதயத்தில் அருளிச் செய்யப்பட்டுள்ள விஷயங்களின் ஸங்க்ரஹம் வருமாறு :—

ஸாராஸார விவேகம் பண்ணுகைக்கு எம்பெருமான் சாஸ்த்ரங்களை யருள்செய்தது.

அந்த சாஸ்த்ரங்களிலுல் தத்வஜ்ஞானம் பிறப்பதன் அருமையை நோக்கி ஸகல சாஸ்த்ர தாத்பர்யமான திருமந்த்ரத்தை வெளியிட்டருளினது.

சாஸ்த்ரங்களிலுடைய அவற்றின் தாத்பர்யமான திருமந்த்ரத்திலுடையவும் விஷய பேதம் முதலியன.

அவையிரண்டிலும் உற்றமுடைய அதிகாரிகளின் ப்ரகாரங்கள்.

அந்த வியாஜத்தாலே ப்ரஸ்துதமான திருவாய்மொழியின் வைபவம்.

அதுக்கு வக்தாக்களான ஆழ்வார்களின் பிரபாவம்.

அந்த ப்ரபாவத்துக்கு மூலமான பகவந்நிர்ஹேதுக கடாக்ஷம்.

அந்த கடாக்ஷமடியாக இவர்க்குண்டான ஜ்ஞாந பக்திகள்.

அந்த ஜ்ஞாநபக்தி தசைகளில் இவர் பேசும் பேச்சுக்கள்.

அந்த பக்தி தசையில் பகவத்ப்ரேமயுக்த ரெல்லாரோடும் இவர்க்குண்டான ஸாம்யம்.

அந்த பக்தி தசையில் பேசும் அந்யாபதேசங்களுக்கு ஸ்வாபதேசங்கள்.

அந்த பக்திக்கு இலக்கான திவ்ய தேசங்களில் நிற்கிற எம்பெருமானது குண விசேஷங்கள்.

அந்த குணங்கள் மலிந்த எம்பெருமானை யநுபவித்து அவ்வநுபவம் உள்ளடங்காமே புறவெள்ளமிட்டு திவ்ய ப்ரபந்தங்கள் அவதரித்தமை.

பொருளொற்றுமையிலுல் கீதைக்கும் திருவாய்மொழிக்குமுள்ள ஸாம்யம்.

கீதையிற் காட்டிலுமுண்டான ஏற்றம்.

இதில் ஆழ்வா ருபதேசிக்கிற விஷயபேதம்.

அவ்வோவிஷயங்கள்தோறு முபதேசிக்கிற அர்த்த விசேஷங்கள்.

அந்த வ்யாஜத்தாலே உபதேசத்திற்கு இலக்கான சிஷ்யனது லக்ஷணங் கூறுதல்.

அந்த லக்ஷணமில்லாதார்க்கும் இவர் உபதேசிக்கைக்கு ஹேதுக்
களும், உபதேசம் பலித்தமையும்.

உபதேசிக்கிற இத்திவ்ய ப்ரபந்தங்கள் ரஹஸ்யத்ரயார்த்த
மென்பது.

அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்த பஞ்சக
மும் இப்பிரபந்தங்களிலே ஸங்க்ரஹ விவரணரூபேண
சொல்லப்படுகின்றமை.

ப்ரபந்தாரம்பங்களில் வேண்டிய மங்களாசரணங்கள் இப்ப்ரபந்
தாதியிலுண்டானமை.

ஸாதுபரித்ராணாதிகளாலே ஜகத்ரக்ஷணார்த்தமான ஸர்வேச்வரா
வதாரம் போலே இப்ப்ரபந்தாவதார மென்பது.

இதில் பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட ஈச்வரனுடைய
பரத்வாதி குணங்கள்.

அக்குணக்கடலானவன் இப்பத்துப்பத்தாலும் ஆழ்வார்க்கு
தத்வஜ்ஞானம் முதலாக ப்ராப்திபர்யந்தமாகப் பிறப்பித்த
தசா விசேஷங்கள்.

பத்துத்தோறும் இவர் தாம் பிறர்க்கு உபதேசித்த ப்ரகாரங்கள்.

இவர்க்கு முதலிலேயே ஆர்த்தி பிறந்திருக்கச் செய்தே ஈச்வரன்
இவரை இங்கு வைக்கைக்கு ப்ரதான அப்ரதான ஹேதுக்கள்.

இவர்க்குப் பிறப்பித்த பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளாகிற தசா
விசேஷங்கள் தோன்றுமிடங்கள்.

திருவாய்மொழியாயிரத்தின் ஒன்றுன தாற்பரியத்தைக் கூறி
நிகமித்தல்.

முகவுரை

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கு அணிவிளக்காக அவதரித்துள்ள அநேக க்ரந்தங்களுள் ஆசார்ய ஹ்ருதயமென்னும் இந்த க்ரந்தத்தின் அருமை பெருமைகள் அளவிட்டுச் சொல்ல முடியாதவை. வேதம் போலே இந்த திவ்யக்ரந்தமும் ஸ்வயம் வ்யக்த ப்ராதுர்ப்டாவவிசேஷம் என்றே சொல்லலாம்படி யிராநின்றது. அறிவிற் சிறந்த ஆரியர்கள் அனுபவித்தே அறியவேண்டியதான இதன் பெருமையை அறிவிலியான அடியேன் எடுத்துரைக்கப் புகுவது அபஹாஸ்யமாகும்.

இந்த நாடறிய மாறன்மறைப்பொருளை நன்குரைத்த ஈடு முப்பத்தாறுயிரமென்று ஸுப்ரஸித்தமான பகவத்விஷய மஹாக்ரந்தத்தை அருளிச்செய்தவரான வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு இரண்டு திருக்குமாரர்கள்; பிள்ளை லோகாசார்யர் மூத்தவர்: அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் இளையவர். இவ்விருவரும் நைஷ்டிக ப்ரஹ்மசாரிகளென்று பெரியோர் பணிப்பர். இவ்விரண்டு ஆசார்ய சிகாமணிகளும் நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்குச்செய்தருளின பேருதவிகளைச் சொலப்புகில் வாயமுதம் பரக்கும், இருவினை பற்றறவோடும்.

ஸ்ரீவசநபூஷணம் முதலிய அஷ்டாதச ரஹஸ்யக்ரந்தங்கள் பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்தவை ஸுப்ரஸித்தங்கள். அவருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்தவை திருப்பாவைக்கு ஆறுயிரப்படிவியாக்கியானம், அமலனாதிபிரான் வியாக்கியானம், கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம், பட்டோலை, அருளிச்செயல் ரஹஸ்யம், ஆசார்ய ஹ்ருதயம் முதலியன.

இவற்றுள் ஆசார்ய ஹ்ருதயம் பலபடியாலும் ஒப்புயர்வற்றது. வைதிக ஸந்தானத்துக்கு ப்ரதமாசார்யரான நம்மாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக்கருத்துக்களைத் தெளிய வெளியிடுகையாலே இதுதனக்கு ஆசார்ய ஹ்ருதயமென்று திருநாமமாயிற்று. ஸகல ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களும் ஆழ்வாரருளிச்செயல்களும் அவற்றின் வியாக்கியானங்களும் எல்லாம் ஒருங்கே திரண்டு இவ்வாசார்ய ஹ்ருதயக்ரந்தமாக வடிவெடுத்த தென்றுரை இது இறையும் அதிசயோக்தியாகாது. இதின் அர்த்தங்களை ஆழ்ந்து அறிந்து அநுபவித்து ஆனந்திப்பதென்பது ஒருபுறமிருக்கட்டும்; மூலமாகிய சொல்தொடைகளை மாத்திரம் கண்டபாடமாக்கி அநுஸந்தித்தால் அதன் இனிமையே அப்ரமேயமானது. 'செவிக்கினிய செஞ்சொல்' என்பது இதற்கே மிகத்தகும்.

இதனைக் கண்டபாடமாக்கி அநுஸந்தித்துவரும் முறைமை ஆழ்வார்திருநகரி வானமாமலை ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பிராந்தங்களில் விசேஷமாக வுள்ளதேயன்றி மற்ற விடங்களில் அவ்வளவு சிறப்பாகக் காணவில்லை. முமுக்ஷுப்படி ஸ்ரீவசந பூஷணம் முதலிய ரஹஸ்யங்களின் ப்ரசாரமே அருமையான விடங்களில் ஆசார்ய ஹ்ருதயத்தின் ப்ரசாரம் அருமையுற்றிருக்கின்ற தென்றால் இதில் வியப்பொன்றுமில்லை.

உபய வேதாந்த ரஹஸ்யக்ரந்த காலக்ஷேபங்களை நிர்வஹிக்கும் பெரியோர்களும் ஆசார்ய ஹ்ருதயத்தில் வந்தவாறே சரமப்படவேண்டிய நிலைமையைப் பெரும்பாலும் காணுகின்றோம். வடமொழி தென்மொழிக்கடல்களில் பரிபூர்ணமான அவகாஹநமுள்ளவர்க்கன்றி மற்றையோர்க்கு இந்த அரும்பெரும் பிரபந்தம் நிலமாவது அரிதே; ரஸிக்கவும் மாட்டாது.

இந்த க்ரந்தத்தை வியாக்கியானத்துடன் பலகால் ஸேவித்துப் பன்முறை பிரவசனம் செய்தருளின மஹான்களுள்ளும் மூலத்தின் பொருளை முகஸ்தமாகச் சொல்லவல்லவர்கள் மிகச் சிலரே யிருக்கக்கூடும். "ஓரொருவருண்டாகிலத்தனைகாண்."

மூலத்தைதக் கண்டபாடம் செய்திருக்கின்ற பலரையும் அடியேன் பரீக்ஷித்துப் பார்த்திருக்கின்றேன்; நெடுநாளைக்கு முன்பு அச்சிட்டிருக்கின்ற மூலப் பதிப்புகளில் காண்கிற அபத்தங்களெல்லாம் அந்தக் கண்ட பாடத்திலும் பெரும்பாலும் அப்படியேயுள்ளனவென்று கண்டேன். அடியேனும் இளமையில் பல வகையான அபத்தங்களுடனே இதைக் கண்டபாடம் செய்தேன். [சந்தை சொல்லிக் கொடுத்தவர் கற்பித்த புத்தக பாடத்தை அப்படியே கொண்டேன்.] அடியேனுக்கு பகவத்விஷய ரஹஸ்யாதிகளை யுபதேசித்தருளின உலகம் நிறைந்த புகழாளரான ஸ்ரீமத்பரமஹம்ஸத்யாதி. அழகிய மணவாள ராமாநுஜஜீயர் ஸ்வாமி இவ்வாசார்ய ஹ்ருதய வியாக்கியானத்தை ப்ரவசனஞ் செய்தருளுங்காலத்தில் திருமேனியில் மிகமிகத் தளர்ச்சியுற்றிருந்ததனால் அப்போராசிரியர் திருவடிகளில் இதனை ஸேவிக்கமாக க்ரஹிக்க பாக்கியமிழந்தேன். 'எதிர்க்கோட்டை அப்பனையங்கார்ஸ்வாமி' என்று ப்ரஸித்தரான வொரு மஹான் ப்ரஹ்மசர்யாச்ரமத்திலேயே யாவஜ்ஜீவம் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாயக்ரந்தங்களை மிக ஆச்சரியமாக ப்ரவசனஞ் செய்தருளினரென்று கேட்டிருந்ததுண்டு. அந்தஸ்வாமி திருவாலியில் சிலகாலம் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாயக்ரந்தங்களை ப்ரவசனஞ் செய்தருளுகிற அடைவிலே இவ்வாசார்ய ஹ்ருதயத்தையும் நிரவத்யமாக நிர்வஹித்தருளினராம். அவருடைய ஸ்ரீபாதத்திலே கேட்ட திருவாலி பரவஸ்து ராமாநுஜாசாரியர்ஸ்வாமி யென்பவர் அடியேனுக்கு உயிரினுமாற்ற வினிய நண்பராயிருந்தபடியால் ஒருகால் அவர் காஞ்சிக்கு எழுந்தருளியிருந்தபோது, தம்

ஆசிரியரான அப்பன்ஸ்வாமி திருக்கையால் எழுதியருளின ஆசார்ய ஹ்ருதயமூல ஸ்ரீ ஸேகாசத்தைத் காட்டியருளினர். அதை ஸேவிக்கையில் பலவிடங்களில் மிகவினிய நல்ல பாடங்களைக் கண்டு உள்ளம் பூரித்து அந்தத் திருவாலி பரவஸ்து ஸ்வாமி யிடத்தில் ஆசார்யப்ரதிபத்தி பண்ணினேன்.

நல்ல பாடங்களைக் காட்டிஞலுங்கூட ரஸிக்கமாட்டாதவர் களும் அநாதிவாஸநாபலத்தாலே ஆக்ரஹப் படுகிறவர்களும் எக்காலத்திலும் எந்நாட்டிலு முளர். இற்றைக்கும் பலரால் ஆதரிக்கபடுகிற தவறுன பாடங்களில் சிலவற்றை யெடுத்துக் காட்டி, அங்கு இருக்கவேண்டிய யுக்தமான பாடங்களையும் குறிப்பிடுகிறேன். ரஸிகர்கள் கண்டு ரஸிக்கவேணும். கூடிய மட்டில் திருத்தமான பாடங்களையே கொண்டிருக்கும் மஹான் களும் குறிக்கொள்க.

1. முதல் சூர்ணையில் "உணர்வெனும் சுடர்விளக் கேற்றி" என்கிற பாடம் அச்சுப் பிரதிகளிலும் கண்ட பாடங்களிலும் வந்திருக்கிறது. இங்கு 'உணர் வெனும்' என்பது பிசகு; 'உணர் வென்னும்' என்றிருக்க வேண்டும். எப்படியிருந்தாலென்ன? பொருள் ஒன்றுதானே யென்று அவலீலையாகச் சொல்லிவிடுவர் பலர். இந்த ரஹஸ்யத்தில் ஸ்ரீ ஸூக்திகளெல்லாம் பெரும் பாலும் அருளிச்செயல்களே யாதலால் எந்தப் பாசுரத்தை யுட் கொண்டு 'உணர்வெனும்' என்கிற இந்த ஸ்ரீஸூக்தி அவதரித் துள்ளதென்று பார்க்கவேணும். *வாடினேன் வாடியில் *உணர் வெனும் பெரும்பதம் தெரிந்து என்பதை யுட்கொண்டு இது அவதரித்த தென்று ஸஹஸா சொல்லிவிடுவர்கள். இதுவே உண்மையானால் இங்குப் பாடத்திருத்தம் வேண்டியதில்லைதான்; அந்தப் பாசுரத்திற்கு இங்கு ப்ரஸக்தி லேசமுமில்லை பின்னேயோ வென்னில்; "உய்த்துணர் வென்னு மொளிகொள் விளக்கேற்றி" என்கிற மூன்றாந் திருவந்தாதிப் பாசுரமே இங்கு விஷயவாக்ய மாதலால் அதிலுள்ளபடியே "உணர் வென்னும் சுடர்விளக் கேற்றி" என்றுதான் பாட மிருக்கவேண்டும். தொகுத்தல் விகாரம் இங்கு அப்ரஸக்தம்.

2. ஆறுவது சூர்ணையில் "இவற்றுக்குக் காரணம் இரண்டி லொன்றில் ஒன்றுகைகள்"—என்பது தவறுனபாடம். "மூக் குணத் திரண்டவையகற்றி, ஒன்றினில் ஒன்றி நின்று" என்கிற திருவெழு கூற்றிருக்கைப் பாசுரம் இங்கு விஷயவாக்ய மாதலால் 'ஒன்றினில்' என்றே பாடமிருக்க வேண்டும்.

3. பதினைந்தாவது சூர்ணையில் 'ஆஸ்திக்யம் விவேகம்' என்று தனித்தனிப் பதமான பாடம் பிசகு; இது அந்வயியாது. "ஆஸ்திக்ய விவேகாந்ய சேஷத்வ...," என்று ஸமஸ்தமாக இருக்கவேணும்.

4. இருபதாவது சூர்ணையில் "உணர்ந்துணர்ந்துணர்வும்.... மிகவுணர்வு முண்டாம்" என்கிற பாடம் மிகவும் தவறு. சிறிதும் அந்வயியாது. உணர்வு உண்டாகுமென்று இங்குச் சொல்லுகிற தன்று. சூர்ணையின் தொடக்கத்தில் இவை என்றிருக்கிறது. அதுவே எழுவாய். சீழ்ச் சூர்ணையில் சொன்ன ப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தியும் உண்டாம் என்றபடி. அவை எதனாலேயுண்டாம் என்னில், அந்த ஹேதுக்களைச் சொல்லுகிறது இந்த சூர்ணை. "ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந்துணரவும் உணர்வைப்பெறவுரை மிகவுணரவுமுண்டாம்" என்பது திருத்தமான பாடம். உணர— உணர்வதனாலே என்றபடி.

5. மூப்பத்தைந்தாவது சூர்ணையில் "குலந்தரு மென்றும் மாசில் குடிப்பழி யென்றும்" என்பது தவறானபாடம். 'குலந்தரு மென்கிற பாட்டிற் கூறியபடியே கிடைக்கிற மாசில் குடிக்குப் பழியாகுமென்கிற காரணத்தினால்' என்று இங்கு விவக்ஷிதமான பொருளாதலால் "குலந்தரு மென்னும் மாசிற் குடிப்பழி யென்று" என்பது திருத்தமான பாடம்.

6. சூ. 36ல் "கோத்ரஸ்த்ர சரணகூடஸ்தர்" என்பது "கோத்ர சரணஸ்த்ர கூடஸ்தர்" என்றிருக்கத்தக்கது. இந்த க்ரமத்திலேயே மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் அவதரித் திருப்பதனால்.

7. சூ. 37ல் "அறியக்கற்று வல்லராணல்"—'வல்லா ராணல்' என்றிருக்கவேணும். ஆழ்வார் ப்ரீஸ்த்திக்தி அங்ஙனே யிருக்கையாலே.

8. சூ. 49ல் "சொல்பயிற்றிய வேதம்" என்பது தவறு. "சொல்பயிற்ற, வேதம்" என்பது திருத்தமான பாடம் சொல் பயிற்ற—கற்பித்ததனாலே என்றபடி.

9. சூ. 54ல் "ஸ்வரூப ரூபகுணவிபூதி...." இங்கே 'ரூப' என்பது சேராது; 'ஸ்வரூப குணவிபூதி' என்றிருக்கவேணும்.

10. சூ. 57ல் "கருவுள் வேறிலாமை"—வேறலாமை என் பது திருத்தமான பாடம். "நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்" என்பது மூல ப்ரீஸ்த்தியாதலால்.

11. சூ. 60ல் "காயோடென்னுமவையே" என்பதில் 'என்னுமிவையே' என்று திருத்தவேணும்; "வீழ்கனியு மூழிலை யுமென்னுமிவையே நுகர்ந்து" என்கிற பெரிய திருமடற்சந்தை இங்கு விஷயவாக்ய மாதலால்.

12. சூ. 62.ல் "விசும்புந்துழாய் திருமாலென்றும் எங்கே காண்கேனென்றும் இவரலமாப்பு" என்கிற பாடம் அநந்விதம். "திருமாலென் றெங்கே காண்கே னென்னுமிவர்" என்பது திருத்தமான பாடம்.

13. சூ. 63-ல். "வேதாதிகளில் பௌருஷமான கீதா வைஷ்ணவங்கள் போலே" என்றவிடத்தில் "பௌருஷமாகவ கீதா....." என்பது திருத்தமான பாடம்.

14. 'ம்லேச்சனும் பக்தனுல்' இத்யாதி 85 ஆம் சூர்ணையில் "முடிமன்னனும்" என்பது 'முடிமன்னவனும்' என்று திருத்தத் தக்கது. "துளங்கு நீண் முடியரசர் தங்குரிசில் தொண்டை மன்னவன்" என்கிற பெரிய திருமொழிப் பாசுரம் இங்கு விஷய வாக்யமாதலால்.

15. சூ. 94-ல் "கழறலர்ஞான முருவின" என்பது சிறிதும் அர்த்தமில்லாத பாடம். திருவிருத்தத்தில் *கழறல மொன்றே நிலமூழுதாயிற்று* என்ற பாட்டில் 'கழறலம்' என்றும் 'அழறலர்' என்றும் வருவதால் அந்த வாஸனை கொண்டு இங்கு "கழறலர் ஞான முருவின" என்று பாடம் பண்ணிவிடுகிறார்கள். "கழலலர் ஞான முருவின" என்பது யுக்தமான பாடம். (உலகளந்த) கழலென்ன அலர்ஞானமென்ன [அதாவது தனது விகஸிதஜ்ஞானமென்ன] இவ்விரண்டும் மறுபாடுருவின பரப்பெங்கும் என்றபடி.

16. சூ. 102. "இடகிலேன் நோன்பறிகிலேன்" என்பது அந்வயிக்க முடியாத அபத்த பாடம். "....நோன்பறிவிலேன்" என்பது திருத்தமான பாடம். "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்கிற விஷய வாக்யத்தோடும் பொருந்தும்.

17. சூ. 112. *இவன் நடுவே அடியானித்யாதி சூர்ணையில் த்ருப்திகரமான பாடம் தெளிவாகத் தெரியவில்லை. "இவன் நடுவே அடியானென்று..... வன்களவி லநுபவமாகிற" என்று சில ஸ்ரீகோசங்களிற் பாடம். "இவன் நடுவே அடியானென்ன,.... வன்களவி லநுபவமாக" என்று சில ஸ்ரீகோசங்களிற் பாடம். (அறுதியிடமாட்டாதவனுய் அலமருகின்றேன்.)

18. "வித்யை தாயாகப் பெற்று" இத்யாதியான 121 ஆம் சூர்ணையில் "நோக்கி யலங்கரித்து" என்கிற பாடம் சிறிதும் பொருள் படமாட்டாதது. இங்கு யுக்தமான பாடம் கிடைக்காமல் நெடுநாளளவும் வருந்திக் கிடந்தேன். காதுவ வானமாமலைக்கு விடைகொண்டிருந்தபோது அங்கு மடம் ஆஸ்தான வித்வான் உ. வே. வா. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமி யிடத்தில் ஓலை ஸ்ரீகோசமிருப்பதறிந்து வாங்கிப் பார்க்கையில் "நோக்கியர் அலங்கரித்து" என்கிற பாடம் கண்டு உள்ளம் பூரித்தேன். "மாமேனய் நோக்கியரான திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் எதிரே வந்து.... அலங்கரித்து" என்கிற வியாக்கியான ஸ்ரீஸூக்தியாலும் ஸமஞ்ஸவாதமாயிற்று இப்பாடம்.

19. சூ. 125. "விதிதன் புணையென்று"—'விதிதன் புணைவனென்று' என்பது திருத்தமான பாடம்.

20. அழுந்தொழு மித்யாதி 127 ஆம் சூர்ணையில் "ஊணுக வீரசரிதம் கற்பார்" என்கிற ஸ்தானத்தில் 'வீரசரித மூணுகக் கற்பார்' என்கிற பாடம் காண்கிறது.

21. "என் பெறுதியென்ன ப்ரமியாது" இத்யாதியான 152 ஆம் சூர்ணையில் "கடந்து புகுந்து தகைவறப்புக்கு" என்பது அநந்விதமான பாடம். "கடந்துபுகுந் தகைவறப்புக்கு" என்பதே திருத்தமான பாடம். கடந்துபுகும் தகைவு அற— கடந்துபுக வேண்டுகையாகிற தகைவு இல்லாதபடி என்க.

22. சூ. 156. 'நம் பிழையும்' என்பது 'தம் பிழையும்' என்று திருத்தத் தக்கது.

23. சூ. 160. 'மண்ணேர் விண்ணேர் வேற்பில்'—இங்கு வேற்பில் என்பது வைப்பில் என்று திருத்தத்தக்கது. "வானேர்க்கும் மண்ணேர்க்கும் வைப்பு" என்கிற பாசுரம் இங்கு விஷய வாக்யம். "தண்ணீர் வேங்கட விண்ணேர் வெற்பனே" என்கிற பாசுரத்திற்குச் சேர 'வேற்பில்' என்கிற பாடமும் இருக்கலா மென்று சிலர் கூறுவது இவ்விடத்து ப்ரமேயமின்னதென்று அறியாமையிலாகும்.

24. சூ. 173, "ஸௌகுமார்ய ப்ரகாசம் அச் சேரியிலே'= ஆய்ச்சேரியிலே யென்பது சுத்தபாடம். "உடையநங்கையார் பிறந்தகமாகையாலே ஆழ்வார்க்கு ஆய்ச்சேரியாயிருப்பதாய்" என்கிற வியாக்கியான ஸ்ரீ ஸூக்தியோடுஞ் சேரும். [நம்மாழ் வாருடைய திருத்தாயாருக்கு உடைய நங்கையாரென்று திரு நாமம்.]

25. சூ. 183. "முகநாபி பாதங்கள் த்வாரத்ரயத்தாலே"— முகநாபி பாதங்களை என்பது சுத்த பாடம்.

26. சூ. 198. "வைத்தெழுவுதி"—ளுது என்று திருத்துக.

27. சூ. 202. "போகேலென்றுலும் உகப்பையும் தவிர்ந்து"—'போகேலென்றுலுகப்பையுந் தவிர்ந்து' என்பது சுத்த பாடம். 'உம்மை' இங்கு வேண்டா.

28. சூ. 209. "அடைக்கலம் சூடி பொய்யாதானும்"— 'சூடிய' என்று திருத்துக.

29. சூ. 211. "எம்மாவொழி நெடுவே யென்கிற"— 'எம்மாவொழிவில் நெடு.....' என்று திருத்துக.

30. சூ. 218. "காலாஸக்திபலகதிக்கு"—'காலாஸத்தி....' என்று திருத்துக.

31. சூ. 219. "வளவேழ்வைப்பாமவன் அவையுள்"— இங்கு 'அவன்' என்பது அநந்விதம். 'வளவேழ்வைப்பாம வையுள்' என்பதே சுத்தபாடம்.

32. சூ. 220. "எம்மா வீட்டை உபாயாநுகூணமாக்கினவர்"—'உபயாநுகூண....' என்று திருத்துக. (இதிலேயே) "திண்ணனனவதென்று"—'திண்ணனனவதென்று' என்பது சுத்தம்.

33. சூ. 222. "ஆடுங்கள்ளிறைச்சி" 'ஆடுக்ள்ளிறைச்சி' என்று திருத்துக.

34. சூ. 223. "தேவர் குழாங்களைக் கண்டு கூப்பிட்டு"—காப்பிட்டென்று திருத்துக.

35. சூ. 224. "திரிவிக்கிரமனுய்க் குறள் கோலப்பிரானுய்" ='திரிவிக்கிரமனுகக் குறள்....' என்பது சுத்தபாடம்.

36. சூ. 226. 'அவர்க்கே குடிகளாய் பரதந்த்ரஸ்வ ரூபத்தை'—'குடிகளாம்' என்று திருத்துக.

37. சூ. 227. "வைகல்வாழ் முதலான விந்தோபாயம்"—"வாழ்தலான" என்று திருத்துக.

38. சூ. 228. அறியச் சொன்ன ஸுப்ரபாதத்தை"—'ஸுப்ரபாதத்தே' என்று திருத்துக. (அதிலேயே) "மாயையை மடிவித்து"—'மடித்து' என்று திருத்துக. (அதிலேயே) "ஸாக்ஷாத்கரித்த பரமப்ராப்திக்கு"—பரப்ராப்திக்கென்று திருத்துக. "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" என்ற உபநிஷத்துக்குச் சேர. (அதிலேயே) "கூசம் செய்யாது செய்திப்பிழை"—'செய்யாத' என்று திருத்துக.

....

தெலுங்கிலும் தமிழிலு முள்ள அச்சுப் பிரதிகளை வைத்துக் கொண்டு திருத்தம் காட்டுவதாலல் இன்னமும் அதிகமாகவே காட்ட நேரும். இப்போது அடியேன் வெளியிடு மிப்பதிப்பை அக்ஷரந்தோறும் உற்று நோக்கினல் அந்த அபத்த பாடங்க ளெல்லாம் அறும். அடியேனுக்குங் கிடைக்காத சுத்த பாடங் கள் இன்னமும் இருக்கக்கூடும். அவற்றைப் பரமக்ருபையோடு தெரிவிப்பார் திறத்தில் பெருநன்றிபாராட்டி வெளியிடுவேன். இப்போது இதில் செய்திருக்கிற திருத்தங்களில் ஒன்றுகூட அடி யேன் ஸ்வதந்திரமாகச் செய்ததன்று. ஏடுகளில் கண்டனவும் பெரியார்வாய்க் கேட்டனவுமாம். இந்தத் திருத்தங்கள் வேண்டா தனவென்று தோன்றிப் பழைய பதிப்புகளிற் பாடங்களையே ஆதரிக்கவேணுமென்பார்க்கு அடியேன் மறுமாற்ற மொன்று முரைக்ககில்லேன். "எங்ஙனே சொல்லிலு மின்பம் பயக்குமே" என்ற ரீதியில் இந்த திவ்யக்ரந்தத்தை எவ்வண்ணமாகப் பாடங் கொண்டு அநுஸந்தித்தாலும் பரமபோக்யமே யாகும்.

இதற்கு மணவாள மாமுனிகள் இட்டருளின வியாக்கியா னம் அழுதிலுமாற்ற வினிது. அதனுடைய பரம போக்யதையை ஸர்வஜ்ஞர்களன்றே கொண்டாடவேண்டும். உலகில் வியாக் கியானங்களருளிச் செய்த ஆசிரியர்கள் பலருளரெனினும் அவர் களுடைய வியாக்கியானங்களிலே பலவகையான க்லேசங்களை யறுபவியா நின்றேறும். பல குறைகளையுங் காணு நின்றேறும். அப் படி ஒருவிதமான குறையும் கூறுதற்கிடமின்றியே ஒருவகை

யான க்லேசத்தையுங் கொடாதே ஸ்வச்ச கங்காப்ரவாஹ மென்னவமைந்த வியாக்கியானம் மணவாள மாமுனிகளுடையதே யாம். ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் மிகத் தெளிவாகத் திரு வுள்ளத்திலடக்கிக் கொண்டிருந்து தேனும் பாலுங் கனனலு மமுதுமான ஸ்ரீஸூக்திகளைத் தொடுக்குந்திறன் மாமுனிக ளொருவர்க்கே அஸாதாரணமாகும்.

அந்த வியாக்கியானம் காலக்ஷேப முறையிலேயே பலகால் அதிகரித்து அறிய வேண்டியதா யிருப்பதாலும் ஸம்ஸ்க்ருத வாக்ய பஹுளமாயிருப்பதாலும் ஸுகுமார மதிகளுக்கும் இந்த க்ரந்தத்தின் அர்த்த விசேஷங்களும் தாற்பரியமும் எளிதிலுணர லாம்படி செய்யவேணுமென்கிற விருப்பங் கொண்ட அடியேன் விரிவான ஒரு உரையும் ஸங்க்ரஹமானதொரு தாத்பர்ய ஸார மும் எழுதினேன். விரிவுரை ஏற்கெனவே ஸ்ரீமுக வருஷத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு மறுபதிப்பும் நடைபெற்று வருகின்றது. தாத்பர்ய ஸாரம் இப்போது வெளி யிடப்படுகிறது.

எவ்வளவு எளிமைப்படுத்தி யெழுதினாலும் விஷயங் கள் கனத்தவையாதலால் அவை எளிமைப்படுத்த வொண்ணுத வையாகவேயிருக்கின்றன. சிலவிடங்களில் எளியனவாகத் தோன்றும். சில விடங்களில் கஹனமாகவே தோன்றும். நல்லாசிரியர்களிடத்தில் நேரில் கேட்டே நன்குணர வேண்டிய விஷயங்களை நாம் எவ்வளவு எளியனவாக எழுதினாலும் பரிபூர்ண பலன் விளைவது அரிதே. பலகால் கேட்டே அறியவேண்டு மத்தனை. ஆனாலும், மிகுந்த ஆஸ்தையோடு ஊன்றிப் பார்க்கு மவர்களுக்கு இத்தாத்பர்ய ஸாரம் பெரும்பாலும் பயன்படு மென்று கருதுகின்றேம்.


மிகவுயர்ந்த இந்த திவ்ய க்ரந்தத்தின் ஆழ் பொருளையும் அரிய பெரிய கருத்தையும் அடியேனும் நன்கறியாதவனையிருக்க, பிறர்களுக்கறிவிக்கப் பெருமுயற்சி கொண்டது உண்மையில் தகுதியற்றதே. இது ஸ்வரூப ப்ராப்தமான நைச்யாநு ஸந்தா னப் பேச்சன்று; உண்மையுரை. ஆயினும் இந்த திவ்ய க்ரந்தத் தில் அடியேனுக்குண்டான வ்யாமோஹம் அளவிறந்ததாதலால் அது படுத்துகிற பாடிது.

இங்ஙனம்:

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராய்ய தாஸன்.

10—5—46



ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

தனியன்கள்

ஸ்ரீ சைலேச தயாபாத்ரமித்யாதி—ப்ரணதோஸ்மி நித்யம்.

ஆசார்யஸ்வாந்தவக்தாரம் அபிராமவராபிதம்.
ஸ்ரீக்ருஷ்ணதநயம் வந்தே ஜகத்குருவராநுஜம்.
த்ராவிடாம்நாயஹ்ருதயம் குருபர்வக்ரமாகதம்
ரம்யஜாமாத்ருதேவேந தர்சிதம் க்ருஷ்ணஸுநுநா.

பணவாளரவணைப் பள்ளிபயில்பவர்க் கெவ்வுயிரும்
குணபோகமென்று குருகைக்கதிபனுரைத்ததுய்ய
உணர்பாவினுட்பொருளொன்று மறியாவுலகறிய
மணவாளன் மாறன்மனமுரைத்தான் வண்டிருமுடும்பைவந்தே.
மாதவத்தோன் மாறன்மனம் கூறும் மணவாளன்
தோதவத்திற் தூய்மறையோரான பெற்ருர்—நீதியினல்
ஆங்கவர்தாள்சேர்பெற்ருராயிமணவாளமுனி
பூங்கமலத்தாள்கள் நெஞ்சே போற்று.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்
திருவடிகளே சரணம்

ஸ்ரீரஸ்து

அழகிய மணவாளப்பெருமாள் காயனார்
அருளிச்செய்த

ஆசார்ய ஹ்ருதயம்.

(முதல் ப்ரகரணம்.)

க. காருணிகனை ஸர்வேச்வரன் அறிவிலாமனிசர் உணர்வென்னும் சூடர்விளக்கேற்றிப் பிறங்கிருள் நீங்கி மேலிருந்த நந்தாவேத விளக்கைக்கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையிலருள் செய்தான்.

உ. விவேகபலம் வீடுபற்று.

ங. த்யாஜ்யோபாதேயங்கள் ஸ்வகதுக்கங்கள்.

ச. இவற்றுக்கெல்லை இன்புதுன்பளி பன்மாமாயக்கழுந்து கையும், களிப்பும் கவர்வுமற்றுப் பேரின்பத்தின்புறு கையும்.

ஞ. அநந்தக்லேச நிரதிசயாநந்த ஹேது—மறந்தேன் அறிய கிலாதே உணர்விலேன் எணிலேன் அயர்த்தென்றும், உய்யும்வகை யின்றவொன்றை நன்கறிந்தனன் உணர்வினுள்ளே ஆம்பரிசென் றும் சொல்லுகிற ஜ்ஞாதவ்யபஞ்சகஜ்ஞாநாஜ்ஞாநங்கள்.

ஞ. இவற்றுக்குக் காரணம் இரண்டி லொன்றினில் ஒன்று கைகள்.

ட. ஸத்வாஸத்வநிதாநம் இருள்தரும் அயலங்களாகவென் னும் ஜன்மஜாயமாநகாலகடாகூங்கள்.

அ. இவற்றுக்கு மூலம் இருவல்லருள் நல்வினைகள்.

கூ. கர்மக்ருபாபீஜம் பொய்ந்நின்ற அருள்புரிந்த வென்கிற அவித்யாஸௌஹார்தங்கள்.

கய. ஏதந்நிமித்தம் முன்னே ம முதல்முன்னமேயான அசிதயாநாதிஸம்பந்தங்கள்.

ககூ. இவை கிட்டமும் வேட்டுவேளாணும் போலே ஒண் பொருள் பொருளல்லாதவை யென்னுதே நானிலாத யாணுமுள ணவ னென்கிற ஸாம்யம்பெறத் தின்றாதி அந்தமும் வாழ்வுமாகிற ஹாநிஸத்தைகளை யுண்டாக்கும்.

கஉ. ஒன்று கூடினதாய் பற்றறுக்க மீண்டொழிகையாலே பழுவடியே னென்னுமதொன்றுமே ஒழிக்க வொழியாதது.

கஙி. இந்த வுதிரத்தரிப்பு த்ரைகுண்ய விஷயமானவற்றுக்கு ப்ரகாசகம்.

கச. வத்ஸலையானமாதா பிள்ளை பேகணியாமல் மண்தின்னவிட்டு ப்ரத்யௌஷதமிடுமாபோலே ஸ்வ்வுயிர்க்கும் தாயிருக்கும் வண்ணமானவிவனும் ருசிக்கீடாகப் பந்தமறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே.

கஞ. அதுதானும் ஆஸ்திக்யவிவேக அந்ய சேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி பாரதந்த்ர்யங்களை யுண்டாக்கினவழி.

கசு. சதுர்விதமான தேஹவர்ணச்ரமாதிகார பல மோக்ஷ ஸாதந கதி யுகதர்மவ்யூஹ ரூபக்ரியாதிகளை அறிவிக்கிற பாட்டுப் பரப்புக்கு—பெரிய தீவினில் ஒன்பதாம் கூறும் மானிடப் பிறவியும் ஆக்கை நிலையும் ஈரிரண்டிலொன்றும் இளமையுமிசைவு முண்டாய் புகுவதேலு மென்கிறதுக்குள்ளே விக்நமற நின்றவாநில்லாப் ப்ரமாதியைக் கொண்டு அறக்கற்கை அரிதென்றிறே வேதஸாரோபநிஷத் ஸாரதராநுவாக ஸாரதம காயத்ரியில் முதலோதுகிற பொருள்முடிவான சுருக்கைத் தெய்வவண்டாய் அன்னமாய் அமுதம் கொண்டவன் சாகைகளிலும் ஓதம்போல்கிளர் நால் வேதக் கடலிலும் தேனும் பாலு மமுதுமாக வெடுத்துப் பெருவி ளம்பருளும் பேரருளாலே சிங்காமை விரித்தது.

கள. முனிவரை யிடுக்கியும் முந்நீர் வண்ணனையும் வெளியிட்ட சாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு விசிஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்கள் விஷயம்.

கஅ. தோல்புரையே போமதுக்குப் பழுதிலா யோக்யதை வேணும்; மனமுடையீரென்கிறச்சாக்கையே அமைந்த மர்மஸ்பர்சிக்கு நானும் நமருமென்னும்படி ஸர்வருமதிகாரிகள்.

கஙு. சாஸ்த்ரிகள் தெப்பக்கையரைப்போலே இரண்டையுமிடுக்கிப் பிறவிக்கடலை நீந்த ஸாரஜ்ஞர் விட்டதிலிருப்பாரைப் போலே இருகையும் விட்டுக் கரைகுறுகும் காலமென்னுவர்கள்.

உய. இவை ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந் துணரவும் உணர்வைப் பெறவுமிகவுணரவுமுண்டாம்.

உக. சேஷத்வ போக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்ய போக்யதைகள்.

உஉ. ஜ்ஞாந சதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிகளுக்கு உதயம்.

உங. மூலைக்தெழுந்த ஸ்ரீமர்யதுல்யயாதாத்ம்யசாமம் விதியில் காணும் ப்ரதமமத்யமதசைகளைப் பகல்விளக்கும் மின்மினியுமாக்கும்.

உச. காலில் ஒன்றுப்ரவர்த்தகம். ஒன்று நிவர்த்தகம்.

உஞ. மூற்பாடர்க்கு க்ரியாங்கமானவை யிரண்டும் செயல் தீர்ந்தார் வ்ருத்தியில் ஸ்வநிர்பந்தமறுக்கும்.

உசு. கர்மகைங்கர்யங்கள் ஸத்யாஸத்ய நித்யாநித்ய வர்ண தாஸ்யாநுகுணங்கள்.

உள. இவற்றுக்கு விதிராகங்கள் ப்ரோக்ஷகங்கள்.

உஅ. மண்டிணுரும் மற்றையாருமாச்ரயம்.

உகூ. அருள் மூடிய நிறுத்தி அுடைய நின்றதும் நல்லதோ ருள் தன்னுலே நன்று மெளியனுகிறதும் விஷயம்.

ஈய. இவற்றுலே ஸாதாரண மஸாதாரண மென்னும்.

ஈக. ஜாத்யாச்ரமதீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள்போலே அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்.

ஈஉ. ஸாதநஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ணதர்மி கள் தாஸவ்ருத்திகளென்று துணிவேறிடுவித்தது.

ஈஙு. வேதவித்துக்களும் மிக்கவேதியரும் சந்தஸாம் மாதா வாலும் அதுக்கும் தாயாய் தாயினுமாயின செய்யுமத் தாலும் பிறப்பிக்குமது இருவர்க்கும் ச்ரேஷ்டஜந்மம்.

ஈச. அந்தணர் மறையோ ரென்றும் அடியார் தொண்ட ரென்றும் இவர்களுக்கு நிரூபகம்.

ஈஞ. ஒருதலையில் க்ராமகுலாதிவ்யபதேசம் குலந்தருமென் னும் மாசில்குடிப் பழியென்று பதியாகக் கோயிலில் வாழுமென்பர்கள்.

ஈசு. விப்ரர்க்கு கோத்ர சரண ஸூத்ர கூடஸ்தர் பாசுர பாராசர்ய போதாயநாதிகள்; ப்ரபந்ந ஜநகூடஸ்தர் பாராங்குசபரகாலயதிவராதிகள்.

ஈள. அத்யயநஜ்ஞாநாநுஷ்டாநங்களாலே ப்ராஹ்மண்ய மாகிறுப் போலே சந்தங்களாயிரமுமறியக் கற்று வல்லாராஞல் வைஷ்ணவத்வ ஸித்தி.

ஈஅ. இந்த உட்பொருள் கற்றுணர்ந்து மேலத்தலை மறையோ ராகாதாரை அயல்சதுப்பேதிமாரென்று உத்பத்தி நிரூபிக்கும்.

கூகூ. எவ்வுலகத் தெவ்வெவையும் என்னையாலே வேதம் பதுறுவிதம்.

சடு. அதில், ஸம்ஸ்க்ருதம் த்ராவிடமென்கிற பிரிவு ருகாதி பேதம் போலே.

சக. செந்திறத்ததமிழென்னையாலே ஆகஸ்த்யமுமாதி.

சஉ. வடமொழி மறையென்றது தென்மொழி மறையை நினைத்தேற.

கசு. வேதசதுஷ்டயாங்கோபாங்கங்கள் பதிஞலும்போலே இந்நாலுக்கும் இருந்தமிழ்நூல் புலவர் பனுவலாறும், மற்றையெண்மர்நன்மாலைகளும்.

சச. ஸகலவித்யாதிகவேதம்போலே இதுவும் நிவ்யப்ர பந்தப்ரதாநம்.

சரு. வேதநூல் இருந்தமிழ்நூல் ஆஜ்ஞை ஆணை வசையிலே தமில் சுருதி செவிக்கினிய ஓதுகின்றதுண்மை பொய்யில்பாடல் பண்டை நிற்கும் முந்தையழிவில்லா வென்னும் லக்ஷணங்களொக்கும்.

சசு. சொல்லப்பட்ட வென்றவிதில் கர்த்ருத்வம் ஸ்ம்ருதி அத்தை ஸ்வயம்பூ படைத்தானென்றது போலே.

சள. நால்வேதம்கண்ட புராணரிஷி மந்த்ரதர்சிகளைப் போலே இவரையும் ரிஷிமுனி கவியென்னும்.

சஎ. படைத்தான்கவி யென்றபோதே இதுவும் யதாபூர்வ கல்பநமாமே.

சஅ. உறக்கம் தலைக்கொண்டபின்னை மறைநான்குமுணர்ந்த தங்களப்பனேடே ஓதின சந்தச்சதுமுகன் சலங்கலந்த வெண் புரிநூல் மானுரி திரிதந்துண்ணும் காமனுடல் இருக்கிலங்கு ஜ்யேஷ்டபுத்ராதிகளுக்கு மறைபயந்தாப்போலே ஆதுமில் காலத் தெந்தையான வாய்மூதலப்பன் பிரமகுருவாய் இராப்பகல் முன் சொல்ல, கற்றனமே யென்றவிவரும் நாவினல் நன்மையாலென்று ஓதவல்ல பிராக்களைக் கன்மின்களென்று சொல் பயிற்ற, வேதம் ஓதுவாரோத்தாகையாலே ஆதர்வணிதிகள் போலே இதுவும் பேர் பெற்றது.

நுல. இயற்பா மூன்றும் வேதத்ரயம் போலே. பண்ணார் பாடல் பண்புரையிசைகொள் வேதம் போலே.

நுக. ருக்கு ஸாமத்தாலே ஸரஸமாய் ஸ்தோபத்தாலே பரம புமாபோலே சொல்லார்தொடையல் இசைகூட்ட அமர்சுவையாயிரமாயிற்று.

நஉ. சந்தோகனென்று ஸாமாந்யமாகாமல் முதலிலே பிரித்து யாழ்பயில் கானஸ்வரூபிணையைப் பாலியாகியென்று விசேஷிக்கையாலே வேதகீதச்சாமி நானென்றஸாமம் தோன்ற உத்கீதப்ரணவத்தை ப்ரதமத்திலே மாறுடி சாமகதி முடிவாகத் தொண்டர்க்கமுதென்ன தேவாந்தமாக்கி மஹாகோஷ நல்வேத வொலிபோலே மஹாத்யயநமென்னப் பாடுகையாலே இத்தை சாந்தோக்ய ஸமமென்பர்கள்.

நங. புரவியே ழொருகாலுடைய தேரிலே திருச்சக்கர மொத்துக் காலசக்கரச் செங்கோல் நடாவி ஜ்யோதிச்சக்ர வொளி சுருக்கி அக்நீஷோமீய தேஜோம்ருகத்துக்கு ஊற்றும், மந்தேஹர்க்குச் சென்தீயும் முக்திமார்க்கத் தலைவாசலும் கண்ணை வான் கண்ணில் பிறந்த கண்மணியும் த்ரயீமயமூமான மஹாடலத்திலே தண்டாமரை சூமக்கத் தோள்வளையும் குழையும் திருச்செய்யழுடியும் ஆரமும் படையும் திகழும் பொன்மேனியும் செஞ்சுடர்த் தாமரைக கண்ணுமாய் அணிநிறமூர்த்தி ஈதென்றுப்படி இரண்டையும் தன்னிறமாக்குகிற செய்யாளான வித்தையோடே அருக்கன் மேவின ஸதாத்யேய தேஜஸ்ஸின் ஸாமாஸோத்காந நாமமுள்ளுறையான ஆத்யந்தங்களாலே ஓராயிரமாமவற்றிலே ஒன்றை ஆயிரமுகத்திலுருளின தீர்த்தம் போலே தீர்த்தங்களாயிரமுமாக விஸ்தரிக்கிறுரென்று வேதகுருபதேசம்.

நச. அன்றிக்கே ஸ்வரூபகுண விபூதிசேஷ்டிதங்களை விசதமாக்குகிற பஞ்சராத்ர புராணேதிஹாஸங்கள் போலே நீலபாரூபோக்தி தெரியச்சொன்ன வேதோபப்ரும்ஹணமென்பர்கள்.

நந. கல்பாதியில் தோற்றிற்று வர்ணிக்கும் சதுர்முகன் சந்தஸ்ஸும் மோஹசாஸ்த்ரப்ரவர்த்தகன் பிணைச்சுடலை வெந்தாரக்குமாறு மணிந்து வேறறிச் சூழன்முடுமாலமமர் பிச்சுத் தெளிந்து தான்வணங்குமாறுணைக்கக் கேட்ட ஸஜாதீயர் ப்ரஸாதமும் ஆர்ஷமூலம்.

நசு. பரமஸத்வத்தோடே உள்ளியுரைக்கும் நிறைநாரனத்தயனும் சிவனும் திருமாலருள் கொண்டு இவர்பாடினர்.

நள. கருவுள் வேறலாமை அரனயனெனச் செய்படமைவு போலே மூவுருவா முதல்வன் துப்பரவாலே பரம கவிகளால் பாடுவியாது நேர்படச் சொல்லும் நீர்மையிலாவெளினைத் தன்னைக்கி என்னை முதல் வந்து புகுந்து தப்புதலறத் தன்னை வைத்தகைத் தன் சொல்லால் தானே துதித்து மலக்கு நாவியல் மொய்ய சொல்லால் சொல்லவல்லேனென்று நானும் சொல்லி நாடும் கையெடுக்கும்படி என் சொல்லால் யான் சொன்ன இன்கவியென்பித்தானென்றுரிறே.

நஅ. தர்மவீர்யஜ்ஞானத்தாலே தெளிந்து ஹ்ருஷ்டராய் மேலே மேலே தொடுப்பாரைப் போலன்றே அருளின பக்தியாலே உள்க்லங்கிச் சோகித்து மூவாறுமாஸம் மோஹித்து வருந்தி யேங்கித் தாழ்ந்த சொற்களாலே நூற்கிறவிவர்.

நக. ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றும் தெளிந்தும் கண்ட மைமைப்பாலே ஓதியுணர்ந்தவர் இன்று மாசாபாசபத்தர்; அவன் வழங்கும் திவ்ய சக்ஷுஸ்ஸாலே நேரே கார்செறிந்த நீருடி கட்கரிய அரும் பொருளைக் கண்டபோதே யாமுறுமை யென்னும்படி இவர்க்கு வன்பாசங்கள் நீங்கிற்று.

சுய. அவர்களுக்குக் காயோடென்னுமிவையே தாரகாதி கள்; இவர்க்கு எல்லாம் கண்ணனிறே.

சுக. அழுநீர்துளும்பக் கடலும் மலையும் விசும்பும் துழாய் திருமாலென்று எங்கே காண்கேனென்னுமிவரலமாப்பு அவர் களுக்குப் புத்ரவியோகத்திலே.

சுஉ. பலஸாதநதேவதாந்தரங்களில் இவர்கள் நினைவு பேச் சிலே தோன்றும்.

சுங. ராமாயணம் நாராயணகதை யென்று தொடங்கி கங்காகாங்கேயஸம்பவாத்யஸத்கீர்த்தநம்பண்ணின எச்சில்வாய் சுத்திபண்ணுமல் திருமாலவன்கவியென்ற வாயோலைப் படியே மாற்றங்களாய்ந்துகொண்டு உரியசொல்வாய்த்தவிது வேதாதி களில் பௌருஷமாநவ கீதாவைஷ்ணவங்கள் போலே அருளிச் செயலில் ஸாரம்.

சுச. குருசிஷ்யக்ரந்த விரோதங்களைப் பரமதாதிகளாலே பரிஹரியாமல் செஞ்சொல் செந்தமிழ் இன்கவி பரவியழைக்கு மென்று அந்யோந்யம் கொண்டாடிப் பேசிற்றே பேசுமேகண் டரில் எள்ளனில் மிகுவென்னுமிவருரைகொளின்மொழிகொண்டு சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்க வேண்டுகையாலே வலங்கொண்ட விதுக்குச் சேராதவை மநு விபரீதங்கள் போலே.

சுரு. பாஷ்யகாரர் இதுகொள்ளென்று ஸூத்ரவாக்யங்கள் ஓருங்கு விடுவர்.

சுசு. அதுக்கு மூலம்—" விதயச்ச " என்கிற பராசார்ய வசநம்.

சுள. ஆப்திக்குஇவர் சுருதி மார்க்கண்டேயன் பார்த்த னென்கிறவிவை வ்யாஸ மநு ப்ரஹ்மவாதிகளை வேதம் சொல்லுமாபோலே.

ரூஅ. பாரதகீதைகளின் வேதோபநிஷத்த்வம் போலே இது வும் வ்யாக்யையாலுமும் வேதாஹஸ்யமாம்.

ரூரூ. உதாத்தாதிபதக்ரம ஜடாவாக்ய பஞ்சாதி பாத வருத்த ப்ரச்ந காண்டாஷ்டகாத்யாயாம்சபர்வாத்யலங்காரங்கள்போலே ஸுழுத்தசை சீர்ப்பந்தமடி தொடை நிரைநிரையோசை தனையினம் யாப்புப் பாத்துறை பண்ண இசை தாளம் பத்து நூறுயிரம் முதலான செய்கோலம் இதுக்குமுண்டு.

ரூஉ. அதவா வேதவேத்யங்யாயத்தாலே பரத்வபரமு வேதம் வ்யூஹவ்யாப்த்யவதாணங்களில் ஓதின நீதி கேட்ட மது படுகதைகளாய் ஆகலூர்த்தியில் பண்ணிய தமிழானவாறே வேதத்தை த்ராவிடமாகச் செய்தா ரென்னும்.

ரூக. மண்ணுடினஸஹ்யஜலம் தோதவத்திச் சங்கணி துறை யிலே துகில்வண்ணத் தெண்ணீராய் அந்தஸ்ஸத்தைக் காட்டுமா போலே அல்பச்ருதர் கலக்கின ச்ருதி நன்ஞானத்துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை யறிவித்தது.

ரூஎ. மேகம் பருகின ஸுழுத்ராம்புபோலே நூற்கடல் சொல் இவர்வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே.

ரூக. ம்ருத்கடம் போலன்றே பொற்குடம்.

ரூச. பெரும்புறக் கடலும் ச்ருதிஸாகரமும் அலைத்து ஆழ்ந்து ஓடுமிடங்களில் அயோக்யர்க்குச் சமைத்த மடுவும் சாய்கரகமும் மாநமேயசாமம்.

ரூந. வீட்டின்ப வின்பப்பாக்களில் த்ரவ்ய பாஷா நிரூபண ஸமம் இன்பமாரியி லாராய்ச்சி.

ரூரு. பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய்ந்நூல்களும் க்ராஹ்ய ங்கள்; பிறவி பார்க்கில் அஞ்சா மோதக்கும் அறு மூன்றும் கழிப்பனும்.

ரூள. க்ருஷ்ணக்ருஷ்ணத்வைபாயநோத்பத்திகள் போலன்றே க்ருஷ்ணத்ருஷ்ணதத்வ ஜன்மம்.

ரூஅ. பெற்றும் பேறிழந்தும் கன்னிகையானவளுமும் எல் லாம் பெற்றுளாயும் தத்துக் கொண்டாள் என்பார்நின்றுரென்னு மவளுமும் நெடுங்காலமும் நங்கைமீரென்னு மிவருக்கு நோன்றே.

ரூக. மீநகவநீதங்கள் கந்திக்குமிடமும் வெறிகொள் குழாய் கமழுமிடமும் தன்னிலொக்குமோ?

அபி. ஆற்றில் துறையில் ஊரிலுள்ள வைஷம்யம் வாசாம கோசரம்.

அக. தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே ப்ரஹ்மஜந்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டை நாளில் பிறவி உண்ணுட்டுத் தேசிறே.

அஉ. ஜநக தசரத வஸுதேவ குலங்களுக்கு மூத்த பெண் ணும் நடுவில் பிள்ளையும் கடைக் குட்டியும் போலே இவரும் பிறந்து புகழுமாக்கழு மாக்கி அஞ்சிறையு மறுத்தார்.

அங. ஆதித்ய ராமதிவாகராச்யுதபாநுக்களுக்குப் போகாத உள்ளிருள்நீங்கி சோஷியாத பிறவிக்கடல் வற்றி விகஸியாத போதில்கமலமலர்ந்தது வருளபூஷண பாஸ்கரோதயத்திலே.

அச. வம்ச பூமிகளை யுத்தரிக்கக் கீழ்க் குலம் புக்க வராஹ கோபாலரைப் போலே இவரும் நிமக்நரை யுயர்த்தத் தாழ விழிந்தார்.

அரு. ம்லேச்சனும் பக்தனுல் சதுர்வேதிகளநுவர்த்திக்க அறிவு கொடுத்துக் குலதைவத்தோடொக்கப் பூஜை கொண்டு பாவநதீர்த்தப்ரஸாதனுமென்கிற திருமுகப் படியும், விச்வாமித்ர விஷ்ணுசித்த துலஸீப்ருத்யரோடே உள்கலந்து தொழுகுல மானவன் நிலையார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக் குறை முடித்தமையும், கீழ்மகன் தலைமகனுக்கு ஸமஸகாவாய் தம்பிக்கு முன்பிறந்து வேலும் வில்லும் கொண்டு பின் பிறந்தானைச் சோதித்துத் தமையனுக்கு இளையோன் ஸத்பாவம் சொல்லும்படி வகுத்த மானமையும், தாது மொழிந்து நடந்து வந்தவர் களுடைய ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும், ஒரு பிறவியிலே இரு பிறவியானரிருவர்க்கு தர்மஸுநு ஸ்வாமிகள் அக்ரபூஜை கொடுத்தமையும், ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் ஸந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ர க்ருத்யமும், புஷ்பத்யாக போக மண்டபங்களில் பணிப் பூவுமால வட்டமும் வீணையும் கையுமான அந்தரங்கரை முடிமன்னவனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்திக்கமும் யாகா நுயாகோத்தர வீதிகளில் காயாந்நஸ்தல சுத்திபண்ணின வ்ருத்தா சாரமும் அறிவார்க்கிறே ஜந்மோத்கர் ஷாபகர்ஷங்கள் தெரிவது.

அசு. அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணச்ரமவித்யாவ்ருத்தங்களை கர்தபஜன்மம் ச்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹு திசவவிதவாலங்காரமென்று கழிப்பர்கள்.

இரண்டாம் ப்ரகரணம்

அ௯. அணையவூரப்புனைய அடியும் பொடியும்படப் பர்வத பவநங்களிலே ஏதேனுமாக ஜனிக்கப் பெறுகிற திர்யக்ஸ்தாவர ஜந்மங்களைப் பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பர்கள்.

அஅ. சேஷத்வ பஹிர்பூத ஜ்ஞாநாநந்தமயனையும் ஸஹியாதார் த்யாஜ்யோபாதியை ஆதரியார்களே.

அஆ. இதின் ஔபாதிகத்வம் ஒரு ராஜா தன்னை மறமுனிவணக்கினவன் நீசனுக்குவித்த ராஜாவை வாரே உறுப்பாக யஜிப்பித்து ஸ்வர்க்கமேற்றினபோதே தெரியும்.

அஇ. மாவுருவில் கள்ளவேடம். திருந்து வேதமலமான மானிடம் பாடல், ஸர்வவர்ண சூத்ரத்வம், காடுவாழ் சாதியில் கடல்வண்ணன் வேடம். தென்னுரையில் ஹரிகீர்த்தி. ச்வபசரில் பத்திபாசனமுமறிவார் ஆராமரென்ன வேற, அறியாதார் சாதியந்தணர் களேலும் தகரவிழுவர்.

அஈ. தமிழ்மாமுனிதிக்கு சரண்யமென்றவர்களாலே க்வசித்க்வசித்தென்று இவராவிர்ப்பாவம் கலியும் கெடும்போலே ஸுமசிதம்.

அஉ. அத்ரி ஜமதக்நி பங்க்திரத வஸுரநந்த ஸுமநுவானவனுடைய யுகவர்ணக்ரமாவதாரமோ? வ்யாஸாதிவதாரவேசமோ? மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ? முன்னம் நோற்ற அனந்தரம்மேல் புண்ணியங்கள் பலித்தவரோவென்று சங்கிப்பர்கள்.

அஊ. அதுக்குமூலம்—யான் நீ என்று மறுதலைத்து வானத்து மண்மிசை மாறும் நிகருமின்றி நிலையிடம் தெரியாதே தெய்வத்தினமொருவகைக்கொப்பாக இனத்தலைவன் அந்தாமத்தன்பு செய்யச் சேர்ந்தமைக் கடையாளமுளவாக உகந்துகந்து திமிர்கொண்டாலொத்து நாட்டியல்வொழிந்து சடைரேயாட்டி மதாவலிப்தர்க்கு அங்குசமிட்டு நடாவிய கூற்றமாய்த் தீயன மருங்குவாராமல் கலியுகம் நீங்கிக் கிதயுகம் பற்றிப் பட்டெழு போதறியாதிருந்தப்ரபாவம்.

அஎ. அதுக்குவேறது—ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொருளென்றளிமேகிழ்ந்து முற்றுமாய்நின்று நூலுரைத்து

யோகுபுணர்ந்து கண்காணவந்து ஆள்பார்க்கிறவன் உலகின நியல்வை நல்வீடுசெய்ய இணக்குப் பார்வைதேடிக் கழலலர் ஞானழுருவின முழுதுமோட்டின பெருங்கண் எங்குமிலக்கற்று அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப்படிந்து துளங்குகிறவர் மேலேபடப் பக்கநோக்கறப் பன்னின விசேஷகடாகூம்.

கூருி. ச்ரமணீ விதுர ரீஷிபத்நிகளைப் பூதராக்கின புண்ட ரீகாக்ஷன்நெடுநோக்கு சாபமிழிந்தென்னப் பன்ணுமிறே.

கூசூ. கோவ்ருத்திக்கு நெரிஞ்சியைப் புல்லாக்கினவன் ஜகத்திதார்த்தமாக எனக்கே நல்லவருள்களென்னும்படி ஸர்வ ஸௌஹார்த்த ப்ரஸாதத்தை ஒருமடை செய்து இவரைத் தன்னுக்க லோகமாகத் தம்மைப்போல ஆக்கும்படியானர்.

கூஎ. அதாவது மயர்வறமதிநலமருளுகை.

கூஅ. இருள் துயக்கு மயக்கு மறப்பென்கிற அநுதய ஸம்சய விபர்யய விஸ்ம்ருதிகளற்று மலர்மிசை யெழுகிற ஞானத்தைக் காதலன்பு வேட்கை அவா வென்னும் ஸங்க் காமாநுராகஸ்நேஹா த்யவஸ்தா நாமங்களோடே பரமபக்திதசை யாக்குகை.

கூகூ. ஐம்மாந்தர ஸஹஸ்ர நல் தவங்களாலே க்யாதகுலங் களிலே பிறந்து எழுதி வாசித்து தத்வஜ்ஞராய்க் குளித்து ஓதி உருவெண்ணு மந்தி ஐவேள்வி அறுதொழில்களால் மிக்கு ஊன்வாடப் பொருப்பிடைத் தாம் வருந்தித் துன்ப வினைகளை விடுத்து விவேக சமாதிகள் வளர எட்டுநீக்கி எட்டுமிட்டு எட்டி னைய பேதப் பூவில் சாந்தொடு தேவகாரியம் செய்து உள்ளம் தூயராய் வானிப் புன்புலவகத்தினுள் இளைப்பினையடைவே விளக் கினைக்கண்டு யோகநீதி நண்ணி அறம் திகழுமறையோர் மனந் தன்னுள் அமர்ந்துறையும் அரும்பெரும் சூடரைக் கண்கள் சிவந்திற்படியே மனவுட்கொண்டு நிரந்தரம் மறவாமை தொடக்க ருஸ்ம்ருதியாய்க் கனவில் மிக்க தர்சநஸமமாய் ஆகத்துப் புல்கு மத்யர்த்தப்ரியமாய் வைகும் சிறப்புவிட்டுக் குற்றேவலென்னை அநந்ய ப்ரயோஜநமாய் வேதநோபாஸந ஸேவாத்யாநாதிக ளென்றுசொல்லுமது ஸாத்யஸாதநபக்தியாக சாஸ்த்ர ஸித்தம்.

கூடூ. ஸ்வீக்ருத ஸித்தஸாதநர் இத்தை ஸாத்யமாக இரக்க ப்ராப்திக்கு முன்னே ஸித்திக்கும்.

கூக. இது உபயமுமன்றிக்கே அறியாக்காலத்தே ஒக்கப் பிறந்து தழுவினின்று கட்டமே நோயாயுலர்த்தி வீழ்ந்தலப்பாய்

த்யாகஸ்வீகார நிஷ்டாஹராநிகளாக்கி ஸத்தாபோக வ்ருத்தி யுபகரணமாவதொன்று.

கஂ2. இடகிலேன் நோவ்பறிவிலேன் கிற்பன் கீழ்நாள்க ளென்னையாலே ஸாதநத்ரய பூர்வாப்யாஸஜமல்ல.

கஂ3. இப்பிறப்பே சிலநாளிலென்றபோதே இரண்டும் கழியும்.

கஂ4. பெரும்பாழில் கேஷத்ரஜ்ஞன் பெரும் செய், கலியாரேவ ஆளும் வன்குறும்பர் குடியேறிப் பெருங்குடியும் தங்கள் கருத் துள்ளேயாக்கிப் படிந்துண்ணும் போகத்தே தாராதே பொறுக் கொணாப் போகத்துக்குக் காவல் செய்து குமைத்துத் நிரித்து வீழ்த்தி வலித்தெற்றி அருவியறுத்துக் கடனுயின இறுப்பிக்கப் பாழ்த்த விதியானவாறே தன்பால் மனம் வைப்பிப்பதாகத் தேய்ந்தறமன்னி ஓள்வாளருவி வினைத்தூற்றை வேரறுவித்துத் தீக்கொளீஇக் கவ்வையெருவிட்டு . அழுதவாறுதலைப்பற்றி ஈரியாய்க் கசிந்ததிலே ஈரநெல்விதித்தி எழுநாற்றுக்களையையும் வேர் முதல் மாய்த்துப் பட்டிச்சேவதக்கி மீது கொள்ளாமல் குறிக்கொள்விதத்துக் கடல்புரைய விளைந்து தலைவணக்கினவாறே நாளுநாள் கோட்குறையாக நின்றுரறியாமல் குந்தம்கொண்டு ஆராமையுண்டு காலக்கழிவாலே நிலத்துகாமல் பற்றறுத்துக் கண்டாலடித்துப் பதரறுத்துப் போர்த்தகோல் விடுத்து ஸுகூம வொட்டும் நீரிலே கழுவி வேரோர் கலத்திட்டுப் பைங்கொடி மடந்தையரைக் கொண்டு ஷட்குண ரஸாந்நமாக்கி வாரேர்ந்து ஆராவமுதானவாறே முற்று முண்ண முன்னம் பாரித்து உழுவ தோர் நாஞ்சில் கொண்டு பெருகழுயலும் பத்தியுழுவன் க்ருஷி பலமிதே.

கஂ5. கோலல கோகுல சராசரம் செய்யும்குணமொரு றின்றியே அற்புத மென்னைக் கண்டோம்.

கஂ6. பட்டத்துக்குரிய வாஜியு மரசும் செய்யுமவை ஆராயாது.

கஂ7. முந்நீர் வாழ்ந்தார் சூட்டும் கோவையாழி யென்கிற ஸாகூதாக்ருத ஸ்வபரவ்ருத்தாந்தர்க்கு யாத்ருச்சிகாதி களுண்டாகில் தோன்றும்.

கஂ8. செய்தநன்றி தேடிக் காணுதே கெடுத்தாய் தந்தா யென்கிற அத்வேஷாபிமுக்யங்களும் ஸத்கர்மத் தாலல்ல.

கஂ9. எண்ணிலும் வரும் கணவனைக்கு எண்டா லுமில்லை.

ககம. மதியால் இசைந்தோ மென்னும அநுமதிச்சைகள் இருத்துவ மென்னுத வென்னை இசைவித்த என்னிசைவினது.

ககக. மாதவன் மலை நீர் நிழலென்று எறிடுமது—வ்யாவ் ருத்யுக்தி அன்யார்த்தம் அபுத்தி பூர்வகம் அவிஹிதம் பலவிஸத்ருசம் பலாந்தரமேஹது.

ககஉ. இவன் நடுவே அடியாரென்று ஓலைப்படா ப்ரமா ணம் பக்ஷபாதி ஸாக்ஷி வன்களவிலநுபவ மாகிற இந்திர ஞாலங்கள் காட்டிக் கொள்ளக் காப்பாரற்று விதி சூழ்ந்தது.

ககங. வரவாறில்லை வெறிதே என்றறுதியிட்டபின் வாழ் முதலென்கிற ஸுக்ருத மொழியக் கற்பிக்கலாவ தில்லை.

ககச. நலமருளினன் என்கொலென்று ஆழுலகூடம் அரு ளால் மன்னுமிவர்க்கு அன்புக் கடியானதுவே அடிசேருகைக்கும் ஸாதநம்.

ககஞ. புணர்தொறு மென்னைக் கலந்து பிரிந்து ஜ்ஞாந பக்தி களை வளர்த்தது கனங்குழையிடக் காது பெருக்கு தலும் மாஸோபவாஸிபோஜநப் புறப்பூச்சும் போலே ஆற்ற நல்ல மாபோகச்சிரமமாக.

ககக. இவற்றுல் வரும் ஸம்ச்லேஷவிச்லேஷங்களாகிறன— னளியனுய் நிற்குமரியனைப் எய்தானென்கிற தர்சந ஸமமான மாநஸாநுஸந்தாநமும் திண்கொள்ளப் பெருத மநச்சைதில்யமும்.

ககள. புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவை அவைசரித்த வர்க்கு ப்ரியஹிதபான் தான் துளக்கற வெங்கும் தழைக்க நடத்தும்.

ககஅ. ஜ்ஞாநத்தில் தம்பேச்சு; ப்ரேமத்தில் பெண்பேச்சு.

ககக. தேறும் கலங்கி யென்றும் தேறியும் தேறுதும் ஸ்வரூபம் குலையாது.

கஉ0. அடியோம் தொடர்ந்து குற்றேவல் அடிச்சியோ மடிக்கீழ் குற்றேவலாகை அவஸ்தாந்தரம்.

கஉக. வித்தை தாயாகப் பெற்றுப் பாலுமமுதுமான திரு நாமத்தாலே திருமகள்போல வளர்த்த தஞ்சமாகிய தந்தை மற்றொருவர்க்குப் பேச்சுப்படாமல் விச்வபதி லோகபர்த்தா வென்னும் மணவாளரை நாலிரண்டிழை கொண்டு மூப்பிரியான ப்ரஹ்ம ஸூத்ர பந்தத்தோடே வரிப்பிக்க, பரம்புருடன் கைக் கொண்டபின் சதுர்த்தியுள்புக்கு இடைபீடு நடுக்கிடக்கும் நாள் கழித்து ஜந்மபூமியை விட்டகன்று சூழ்விசும்பிற்படியே உடன்

சென்று குடைந்து நீராடி வியன்துழாய் அஞ்சனத்திற் நீறு
ரானப்பொடி பீதகவாடை பல்கலன்கொண்டு நோக்கியர் அலங்
கரித்துப் பல்லாண்டிசைத்துக் கவரிசெய்ய நிறைகுடவிளக்க
மேந்தி இளமங்கைய ரெதிர்கொள்ள வைகுந்தம் புக்கிருந்து
வாய்மடுத்துப் பெரும்களிச்சியாக வானவர் போகமுண்டு கோப்
புடைய கோட்டுக்கால் கட்டில் மிதித்து ஆரோஹித்து பரத
க்ரூரமாருதிகளைப் பரிஷ்வங்கித்த மணிமிகுமார்பிலே குருமாமணி
யாயணையும் வஸ்துவுக்கு மணிவல்லிப் பேச்சு வந்தேறியற்று.

கஉஉ. இன்பு மன்பும் முற்படுவது கொழுந்து விடுவது
கிறது கடிமாமலர்ப் பாவைபோடுள்ள ஸாம்ய ஷட்கத்தாலே.

கஉங. உண்ணுது கிடந்தோர் மாயையினை லென்னும்
வீறுடையமுடிக்குரியாரோடு இத்திரு மண்ணோரன்ன வொரன்
ணுதல் பின்னைகொல் என்கிற ஒப்பு, தென்பால் நெடுமாடம்
கடும் கிலை அம்பெரியூட்டி நீறெழவெரித்த பெருந்தோற்றத்
தாருயிர் காகுத்தன் ஆதியங் காலம் மண்புரை பொன்மாதின்
துகளாடி எருதேழ்தழீஇச் சுறையினை யென்னு மவற்றிலே
தோன்றும்.

கஉச. இவர்கள் தேடிநிற்கப் பொய்கை முதுமணல் முல்லைப்
பந்தல் முற்றம் மச்சொடு மாளிகை அவ்வவ்விடம் புக்கு வாரிச்
சிதைத்துப் பறித்துக் கிழித்துக் கோயின்மை குறும்பு செய்து
அல்லல் விளைத்துக் கவருமூகக்கு நல்லவர் முழுநி ஆவென்னும்
தேன்மொழியாலே கோகுலத்தை மறப்பிக்கும் நகரஸ்த்ரீகள்,
நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினாறு பல்லாயிர மெண்ணிறந்
தார் பாவம்—கடல் ஞாலம் மின்னிடை மல்லிகை வேய்மரு பேய்
முலை முனிந்து மற்பொரு விறல் கஞ்சனை மங்கநூற்ற வாயும் தீர்ப்
பாரென்னு மவற்றிலே தோன்றும்.

கஉஞ. இராவனனில்* நசவாகக் குழைத்தவன் பின் தொடர
விருந்த வன்சிறையிலும் விதிதன் புணைவனென்று ஜீவிதாதிகளால்
குறைவின்றி மாயும் வகை விஷசஸ்த்ரங்கள் தேடி வில்வலவாஹா
வென்று இரங்கமெழாக் கொடுமைகள் சங்கித்து எய்னையும்
ஜீவந்தீமென்று ஆள்விட்டுச் சுடரையடைந்து அகலகில்லாழுற்று
வமை பெருமகளோடே.

கஉசு. பிரியில் இலேனுக்கு இளங்கோவும் அக்குளத்தில்
மீனிரை.

கஉஎ. அழும்தொழும் ஸ்நேஹபாஷ்பாஞ்சலியோடே ருஷி
ராஸாநுக்களில் கூவிக்கொள்ளும் பிரியாவடிமைக்கு சாரணைசா
ரணென்று வாளும் வில்லும்கொண்டு பந்துவும் பிதாவுமவரோ

யென்கையும், அன்னை யென் செய்யிலென் ராஜ்யமும் யானே யென்று பெரும் செல்வமுமிச்சியாமல் வேண்டிச் சென்று திருவடியே சுமந்து விரைந்து வருமளவும் கண்ண நீர் பங்கமாக நிலம்தழாவிக் குடிக்கிடந்த கையறவும், கோதிலடிமை உறுமோ வென்பித்த புலன்கொள் நித்ய சத்ரு விநிந்தநமுமான ப்ராதாக்கள், அப்பொழுதைக்கப்பொழுது போனையென்னும் மாதாபிதாக்கள், செந்தீத் தண் காற்று இளநாகம் முதலான பகையறச் சிந்தை செய்து எங்கு முளனென்னும் பள்ளிப்பிள்ளை, முற்ற விட்டு மற்றிலே னென்னும் தர்மாத்மா, வாளி பொழிந்த நிர்க்குண விச்வாத்மா உள்ளேயுறைய வீரசரிதம் ஊணைக்கற்பார் பாவம் மற்றிலே னென்னும் ராமதாஸன், பல்வகையும் கண்டு வெண்சங்கேந்தின ரூபபரனை ச்வேதன் முதலானர் படிகளும் காணலாம்.

கஉஅ. குழலில் நெஞ்சும் அருகலில் சுவையுமான விவர் அவர்களளவல்லர்.

கஉக. எற்றைக்கு மென்றது தோன்றப் பிறந்து ஒப்பித்து வீசிக் காப்பிட்டுக் காட்டுக்கு முற்பட்டு தர்மம் சொல்லிக் கேட்டு சிஷ்யாதாஸீ பக்தைகளாய் பாடி வருடி இன்று வந்தென்பாரையும், சென்ரு ஓரும் நிவாஸதாஸ பேதம் கொள்வாரையும், தாமவராக பாவிப்பர்.

கஉO ஈழுவதோரூரு அழிக்க, செய்கிற வழுவிலாவடிமைக்குப் பாஞ்சாலி படுத்துமதும் கௌஸல்யாநுவ்ருத்தியு மொப்பாக்குகை பரிசு.

கஉக. பெருக்காறு பலதலத்துக் கடலை நோக்குமா போலே நெக்கொநிந்து கரைந்தலந்திடந்து உடையப் பெருகு காதல் கடலிடம் கொண்ட கடலை பஹு-ழுகமாக அவகாஹிக்கும்.

கஉஉ. அச்சேயத்ய மென்னுமது ஈரும் வேம் ஈரியாயுலர்த்த வென்னப்பட, சித்தம் சித்தாய் அல்லேனென்று நீங்க, காரணங்கள் முடியா னேயிலவையாக, உடலமாத்மதர்மம் கொள்ள, காற்றும் கழியும் கட்டிஅழக் கொண்டபெருங்காதலுக்குப் பத்திமை நூல் வரம்பில்லையே.

கஉங. ஸம்பந்தோபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்த்தைகளுக்குத் தோழி தாயார் மகளென்றுபோர்.

கஙூச. ஸகி வெறிவிலக்கி ஆசையறுத்து அறத்தொடு நின்ம ழுன்றில் அநந்யார்ஹதக்வமும், வாடி மெலிந்து பிக்தேறி வறப் பேசிக் கட்டிழந்தகன்று சார்வதே வலித்தமை ஸாதகமா மோ வென்று மாதர அஞ்சிமுறைப்பட்டு முறையிடுகிற வழில் அத்யவஸாயமும், புத்தி பலகால் ஆள்விட்டு ஆற்றுமை சொல் லிக் கவராதவை விட்டு இரைக்க மடலெடுத்துக் கண்புதையப் போக்கற்று உருகெஞ்சுள்ளெழுக் கூடுநாள் தேடித் தாழ்த்ததுக் கூடி உசாத்துணையற்றுச் சூழவும் பகைமுகம் செய்யத் தடை நில்லாதே புயக்கற்று மாலையும் காலையும் பூசலிடுகிற பந்தினேழில் த்வரையும் தெரியும்.

கஙூரு. தோழிமாரன்னைய ரென்கிற பன்மை ரகூகதக்வாதி பந்த வாத்ஸல் யாதிவ்யவஸாயபுத்தி பேதத்தாலே.

கஙூசூ. அபிலாஷா சிந்தநாநுஸ்ம்ருதீச்சாருதி பரபரமபக்தி களிலே பேதை முதலான பருவம் கொள்ளும்.

கஙூன. மயில் பிறை வில் அம்பு முத்துப் பவளம் செப்பு மின் தோரன்னம் தெய்வவுரு விகாஸ சுத்தி காந்தி ஜ்ஞாநா நந்தா நுராகபக்த்யணுத்வ பரதாகதிகளை யுடைய அகமேனியின் வகுப்பு.

கஙூஅ. சூழ்ச்சி அகற்றினீ ரென்னும் பழி. இணக்கி யங் ஙனே யென்னும் மேலெழுத்து, முன்னின்றுய் இவளை நீ ரென் னும் இருபடை மெய்க் காட்டு. நீ ரென்னே யென்னு முடன் பாடு, இடையில்லையென்னு முதறுதல், இருந்திருந்து நடந்தா ளென்னும் கொண்டாட்டம் அவஸ்தாத்ரயவ்ருத்தி.

கஙூகூ. தாயாரேதலர் உற்றீர்களென்னும் ஸாத்யஸித்த ஸாதநநிஷ்டரை; மகள் நம் முடையேதலர் யாமுடைத் துணையென்னும் ஸித்தஸாதந ஸாத்யபரரை.

கஙூ0. நாலயலார் அயற் சேரியார் உபாயசதுஷ்டயாந்தர் யாமித்வபரர்.

கசகூ. கீழை மேலை வடக்கிலவை புறம்பாகத் தன் பற் றுளளசல.

கசகூஉ. ஊரார் நாட்டாருலகர் கேவலீச்வர்யகாமஸ்வ தந்த்ரர்.

கசகூங. இறுகலிறப்புக்கும் இறந்தால் தங்குமூரொக்குமே.

கசகூச. சிறு சீரார் சுளகுகள் உபயவிலேகபரிகரம்.

கஙூரு. மாலைகங்குல் காலை பகல்—ராஜஸதமஸ் ஸத்த்வ சுத்த ஸத்த்வ ஜ்ஞாநங்கள்.

கசகூசூ. நிலாமுற்றம் ப்ரஜ்ஞாப்ராஸாத மென்னு மெல்லி லிலம்.

கசள. கலிவலை அறம் மமக்ருதிகள்.

கசஅ. பட்டம் சூடகமாவன—பராவர குருக்கள் டூட்டு மாத்ம பூஷணங்கள்.

கசக. பந்து கழல்பாவை குழமணன் யாழ்தென்றல் மதிய மடிசில் சாந்தம் பூணகில் சிற்றில் தூதை முதலாவன —குணத்ரய விசித்ர கர்மஸ-மத்ரத்காலே கட்டி லீலையாக ப்ரேரிக்க விழுந் தெழுந்தும் சுழன்றுழன்றும் பறிபட்டும் அற்பசாரமாமவையு மாய் மதீயமென்னில் விட்டகலவும் சதீயமென்னில் இகழ் வறவும் முனிவது மிக்கால மீதோ வென்னப்படும் பொங்கைகம் புலனில் போக்யாதிஸமூஹம்.

மூன்றும் ப்ரகரணம்

கருல. சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாநகர்மங்களைச் சிறகென்று குருஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும்.

கருக. விவேகமுகராய் நூலுரைத்து அள்ளலில் ரதியின்றி அணங்கின் நடையைப் பின்சென்று குடை நீழலிலே கவரியசை யச் சங்கமவை மூல வரிவண்டிசைபாட மாநஸபத்மாஸநத்திலே யிருந்து விதியிலிடரி லந்தரமின்றி யின்பம்படக் குடிச் சீர்மை யிலேயாதல் பற்றற்ற பரமஹம்ஸாதலான நயாசலன் மெய்ந் நாவன் நாதயாமுநர் போல்வாரை அன்னமென்னும்.

கருஉ. என் பெறுதி யென்ன ப்ரமியாது உள்ளத்துளூறிய மதுவ்ரதமாய் தூமதுவாய்கள்கொண்டு குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்ரஹித்துத் தேதெனவென்று ஆளம்வைத்துச் சிறுகாலெல் லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக் கொள்ளப் பாடித் துன்னிட்டு நெருக்க நீக்கென்று கடந்து புகும் தகை வறப் புக்கு வண்டொதித்திருண்ட குழலிலே சங்கையற மருவி அருளாத யாமென்றோடி வந்து வாசமேயூதி வண்டே கரியான தெயவ வண்டோடே சேர்விக்கும் சேமமுடை நாரதன் முனி வாஹனர் தம்பிரான்மார் போல்வாரை வண்டு தும்பியென்னும்.

கருங. கண்வலைப்படாதே அகவலைப்பட்டு வளர்த்தெடுப் பார் கையிருந்து தயிர் நெய்யமர் பாலமுதுண்டு ஒருமிடறுய்ப் போற்றி ஒரு வண்ணம் திருந்த நுவலாததுக்கு என்பிழைக்கும் நீயலேயே நல்வளம் தரப்பனென்னு மவற்றுக்கு முகந்து, சொல் லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியா வைத்த மாற்றம் கைகூப்பி

வணங்கப் பாடி ஆலியா வழையா பாபிமாநத்திலே ஒதுங்கின நம் பிக்கன்பர் தலைமீதடிப்பொடி உடையவருடையார்போல்வாரைக் கிளிபூவை குயில் மயிலென்னும்.

கருச. ஆசறுதாவியென்னும் பாஹ்யாப்யந்தர சுத்தி யோடே நிரையுகளரும் வ்யஸநவ்யதையற்றுத் தாய்வாயிலுண் ணும் பிள்ளைக்கிரை தேடி வைகலுடன் மேய்ந்து நுங்கால் பைங் கானமென்று ப்ரஹ்மரதம் பண்ணிக்கொடுத்தவை கொண்டு நல்ல பதத்தையும் வேண்டேனென்னும் தனிப்பெரும் பித்தர் நம்முதலி கள் போல்வாரை நாரை கொக்கு குருகென்னும்.

கருரு. பூண்ட நாள் சீர்க் கடலையுட்கொண்டு திருமேனி நன் னிறமொத்து உயிரளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து ஜ்ஞா நஹ்ரதத்தைப் பூரித்துத் தீங்கின்றி வாழ நிதி சொரிந்து கொடுத் தது நினையாதே லஜ்ஜித்து வெளுத்தொளித்துக் கண்டுகந்து பர ஸம்ருத்தியே பேருன அன்பு கூருமடியவர் உறையிலிடாதவர் புயற்கை அருள்மாரி குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேக மென்னும்.

கருசு. தம்பிழையும் சிறந்த செல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டை வாஸமும் மறப்பித்த கூமாதிகூ ஸாரஸ்ய ஸௌளந்தர்யங்களை யுணர்த்தும் வ்யூஹவிபவ பரத்வ த்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்.

கருன. பகலோலக்கமிருந்து கறுப்புடுத்துச் சோதித்துக் காரி யம் மந்த்ரித்து வேட்டையாடி ஆராமங்களிலே விளை யாடும் ராஜநீதி ஆதும் சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்த வென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு விண்மீதென்கிற ஐந்திலும் காணலாம்.

கருஅ. தமருகந்த அடியோமுக்கே யென்னும் பின்னைர் வணங்குமிடத்திலே எல்லாம் பூர்ணம்.

கருகூ. வன்பெரு வானக முதலுய்ய இனிதாகத் திருக்கண் கள் வளர்கின்ற திருவாளன்திருப்பதி, வடிவுடை கடலிடம் கட்கிலீ யென்னுமவற்றில் இவள் திறத் தென்கொலோ வென்பிக்கிற வ்யூஹஸௌலப்யார்த்த ப்ரதாநம்.

கருய. மண்ணோர்விண்ணோர்வைப்பில் போகின்றவழுலகுக் குயிர்பாசம்வைத்த நிகரில்வாத்ஸல்யழுஜ்ஜ்வலம்.

கசுக. உபயப்ரதாநப்ரணவமான உறை கோயிலில் எத்தேவு மென்னும் பரேசத்வம் பொலியும்.

கசுஉ. வைஷ்ணவ வாமநத்தில் நிறைந்த நீலமேனியின் ருசி ஜநகவிபவ லாவண்யம் பூர்ணம்.

கசுஊ. ருசிவிவசர்க்குப் பாதமே சரணக்குமௌதார்யம் வானமாமலையிலே கொழுந்து விடும்.

கசுஎ. கலிகணற்றுரை யுருக்கும் மாதுர்யம் குடமூக்கிலே ப்ரவஹிக்கும்.

கசுஏ. மெலிவிலும் சேமம் கொள்விக்கும் க்ருபை தென்னகரிலே நித்யம்.

கசுஐ. வ்யவஸாயஜ்ஞர் ரக்ஷண ஸ்தைர்யம் பம்போத்தர தேசஸ்தம்.

கசுஒ. விளம்ப விரோதமழிக்கும் விருத்தகடநாஸாமர்த்ய்ம் நன்னகரிலே விஸ்தீர்ணம்.

கசுஓ. கடிதகடகவிகடநா பாந்தவம் அவ்வூரிலே த்விகுணம்.

கசுஔ. கைம்முதலிழந்தாருண்ணும் நிதியின் ஆபத்ஸகத்வம் புகுமூரிலே ஸப்ருத்தம்.

களய. சென்று சேர்வார்க்கு உசாத்துணையறுக்கும் ஸௌந்தர்யம் மாநகரிலே கோஷிக்கும்.

களக. ப்ரவண சித்தம் பரத்வ விமுகமாக்கும் ஆநந்தவ்ருத்தி நீணகரிலே.

களஉ. ஸாதரரைப் பரிசழிக்கும் சேஷ்டிதாச்சர்யம் குளத்தே கொடிவிடும்.

களங. ச்ரமமனம் சூழும் ஸௌகுமார்ய ப்ரகாசம் ஆய்ச்சேரியிலே.

களச. மஹாமதிகள் அச்சம் கெட்டு அமரும் சௌர்யாதிகள் சிற்ரூற்றிலே கொழிக்கும்.

களஞ. ஸாத்யஹ்ருதிஸ்த்தனையும் ஸாதந மொருக் கடுக்கும் க்ருதஜ்ஞதாகந்தம் தாயப்பதியிலே.

களசு. அவகாஹித்தாரை அநந்யார்ஹமாக்கும் நாயகலக்ஷ்மணம் வளம்புகழூழூரிலே குட்டமிடும்.

க்னள. போக்யபாகத்வரை தெளிந்தசந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்.

களஅ. போகத்தில் தட்டுமாறும் சீலம் காட்கரையிலே கரையழிக்கும்.

கனசூ. மஹாத்மாக்கள் விரஹம் ஸஹியாத மார்த்தவம் வளத் தின் களத்தே கூடு பூரிக்கும்.

கஅய. பிரிந்த துன்பக் கடல் கடத்தும் விஷ்ணு போதாந்ரு சம்ஸ்யம் நாவாயிலே நிழலெழும்.

கஅக. சரண்யமுகுந்தத்வம் உத்பலாவதகத்திலே ப்ரஸித்தம்.

கஅஉ. மார்க்கபந்து சைத்யம் மோஹநத்தேதமடுவிடும்.

கஅங. ஸஸைந்ய புத்ரசிஷ்ய ஸாத்யஸித்த பூஸுராரார்ச்சநத் துக்கு முகநாபி பாதங்களை த்வாரத்ரயத்தாலே காட் டும் ஸாம்யம் அநந்தசயநத்திலே வ்யக்தம்.

கஅச. மோகூதாநத்தில் ப்ரணத பாரதந்த்ர்யம் வளம்மிக்க நதியிலே கரைபுரளும்.

கஅரு. த்யாஜ்யதேஹவ்யாமோஹம் மருள்கள் கடியும் மயல் மிகு பொழிலிலே தழைக்கும்.

கஅசு. அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம் பெரு நகரிலே பேர் பெற்றது.

கஅள. இவற்றில் ப்ராவண்யம் இவள் பரமே யென்னவுண் டாய் ஷோடசகலாபூர்ணமான சந்த்ரமண்டலம் போலே பதிறை திருநக்ஷத்ரம் நிரம்பினவாறே தேவபோக்யமானவதிலம்ருதம் போலன்றிக்கே என்னுத் தமிழரிசைகாரர் முதற்பத்தர் வானவ ரென்னம்மான் பார்பரவென்னுமபடி ஸேச்வரவிபூதிபோக்ய மான பாலோடமுதன்ன மென்மொழி முகம் செய்தது.

கஅஅ. நீர்பால் நெய்யமுதாய் நிரம்பினவேரி நெளிக்குமா போலே பரபக்த்யாதிமயஜ்ஞாநாம்ருதாப்தி நிமிகிற வாய்கரை மிடைந்து மொழிபட்டு அவாவிலந்தாதி யென்று பேர் பெற்றது.

கஅகூ. மனம்செய் எல்லையில் ஞானவின்பத்தை நின்மலமாக வைத்தவர் ஞானப்பிரானே ஞானத்து வைம்மினென்றவிது—தத்வ விவேகநித்யத்வாநித்யத்வ நியந்த்ருத்வ ஸௌலப்ய ஸாம்யா ஹங்காரேந்த்ரிய தோஷ பல மந : ப்ராதான்ய கரண நியமந ஸுக் ருதிபேத தேவாஸுரவிபாக விபூதியோக விச்வரூபதர்சந ஸாங்க பக்தி ப்ரபத்தி த்வைவித்த்யாதிகளாலே அன்றோதிய தோஸ மென்னும்.

கஙய. அது தத்த்வோபதேசம்; இது தத்த்வதர்சி வசநம்.

கஙக. அது ஐவரை வெல்வித்துப் பதிற்றைந்திரட்டிப் படச் சொன்னது; இது நாடாகத் தோற்றேமென்று ஐயைந்து முடிப்பான் சொன்னது.

ககூஉ. அங்கு நம்பிசரணென்று தொடங்கி முடிவில் அப்ரிய மென்றது; இங்கு பரமேயென்றிழிந்து பொஸிக வென்று உகந்தது.

ககூஙூ. அதில் ஸித்ததர்மவிதி; இதில் விதத்யநுஷ்டாநங்கள்.

ககூச. பகவன் ஞானவிதி பணிவகையென்று இவரங்கீ காரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்.

ககூஞ. வேதவேத்ய ஜீவதிகோபதேசம் ஆவித்யாரளவிலே; அஜ்ஞர் ஜ்ஞாநிகள் ஜ்ஞாநவிசேஷயுக்தர் ஸர்வஜ்ஞ னென்னுமல் இவர் திருத்துவர்.

ககூட. அறியாதார்க்கு உய்யப்புகுமாறும் இக்கரையேறி னர்க்கு இன்பவெள்ளமும், நிலையறியாதார்க்கு ஆழங் காலும் கரையேற்றுமவனுக்கு நாலாறு மறிவிக்க வேணும்.

ககூண. அவன்முனிந்தார்க்குத் தாம் கண்டது, தம்மை முனி வார்க்குத் தம்கண், காணாதது காண்பார்க்குக் கண் மாறுமிடம், ராகாந்தனுக்கு மாயாதோஷம் இவர் காட்டுமவை.

ககூத. ஸாதநஸாத்யஸ்த மத்யஸ்தரைவிட்டு அவற்றில் கலங் கும் ஜீவேச்வரர்க்கு வீடுமின் நிணமின் பிடித்தேன் விடுவேனே வைத்தெழுவது வாடி நிற்கக் கன்மமன்று ஆன்பின் கைகழியேல் உழிதராய் என்சொற்கொள் என்று இவர் பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுவர்.

ககூகூ. கதிர்ஞானமூர்த்திக்கு உணர்த்துவது ப்ரேமத்தாலே; தமமூடுவார்க்கு வேட்கை யெழுவிப்பது ஞானத் தாலே.

உஙூ. உயிர் மாய்தல் ஆழுமென்னுருயிரென்னும் பரதுக் கம்ஸஹியாமை இரண்டிலு முண்டு.

உஙக. என்னதுன்னதாவியிலே அறிவாராத்மா வென்று அவன் மதம் தோன்றும்.

உஙஉ. இருத்து மெண்டானுய்ப் பொய்கலவாது அன்பு செய்து பற்றிலனுய் கூஷ்த்திருட் பீடித நிர்த்தநரைப் போலே கண்டுகொண்டுண்டுபருகிப் பரிஜனதிகளோடே தன்னைத்தந்து என் செய்வனென்றேயிருந்து அகிலபரத்தையும் ஸமர்ப்பிக்க, அது சுமந்து அல்லுநன் பகலும் போகு என்றிலும் அகல்வானுமல்ல னுய் போகேலென்றால் உகப்பையும் தவிர்ந்து விதிவகையே நடத்துமவனே உபதேசஸத்பாத்ரம்.

உஙஈ. நண்ணுதார் மெய்யிலுான் ஆசை நிர்வேதத்தோடே ஆஸ்திக்யாமாநித்வாதிகள் விஞ்சின ப்ராணிபாதாபிவாதந பரிப்ரச்ந ஸேவாபரார்க்கு உளங்கொள் பேசுமளவன்றென்னு மர்த்தத்தை வம்மின் விரோத மீனச்சொல் எவ்வுயிர்க்குமறியவென்று அடைவு கெட அதபஸ்கார்க்கு உபதேசிக்கிறது ஞாலத்தார் பந்த புத்தியும் அநர்த்தம் கண்டு ஆற்றுமையும் மிக்கக்ருபையுமிறே.

உஙச. தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவ ராடிபணிந்தவர்க்குமே இவையுள்ளது.

உஙரு. க்யாதிலாப பூஜாபேக்ஷையற மலர் காடி ஆட்செய்ய உய்யக்கொண்டு ஆரைக்கொண்டு வாளும்வில்லும் கொண்டென்கிற இழவுகள் தீரப் பெற்றது.

உஙசு. ப்ரஹ்மநிஷ்டரும் ஸம்வத்ஸரவாஸிகளுமாகில் ஏபாவம் பயனன்றுகிலும் சேராது.

உஙன. மெய்ந்நின்று மங்கவொட்டுக்கு நடுவு அநுபவகீர்ப் போபதேசம்.

உஙஅ. இவற்றுக்கு மந்த்ரவித்யநுஸந்தாந ரஹஸ்யங்க ளோடே சேர்த்தி.

உஙக. அளிப்பானடியேனடைக்கலம் சூடிய பொய்பா தானு மழுந்தாவென்று ஸ்வரூபவிரோதி நிவ்ருத்திகளை யும் தாமரையுந்திப் பெருமாமாயனளாகவே வாழிய வென்று ப்ராப்ய பலங்களையும் நெறிகாட்டி மனத்துக் கொண்டு கண்ணனலடித்துக் கண்டிலமால் யாதாகி லென்று உபாயத்தையும் சொன்னவை மந்த்ரச்லோ கங்களோடே சேரும்.

உகஙி. த்வயார்த்தம் தீர்க்கசரணகதியென்றது ஸாரஸங்க்ர ஹத்திலே.

உகக. மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர்திண்ணவை யொன்று பயிலேறு கண் கரு வீடு சொன்னல் ஒருக் கொண்ட நோற்ற நாலும் எம்மா வொழிவில் நெடுவே யென்கிற இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும், அருளினன் வீடு பெற்ற வென்கையாலே ஐந்திலு மிரண்டையும், தொழுது களித்தேன் சொல்லுப் பெற்றேன் பணிசெய்யென்கிற மூக்தலக்ஷ ணவ்ருத்தியாலே இரண்டிலொன்றையும் இதுக்கு ப்ரமேய மென்னும்.

உகஉ. ரஹஸ்யத்துக் கோரொழுத்தும் அதுக் கோருருவும் போலேயானவற்றிலே இமையோரதிபதி அடியேன் மனனே

பொய் மயர்வு பிறந்தருளினன் விண்ணப்பம் தொழுதெழென்ற பஞ்சகத்தோடே அவித்யாதிஸ்வரூபஸ்வபாவாத்மேச்வர பந்த ரக்ஷணக்ரம குண விக்ரஹ விபூதியோக தத்யாபிமாநோபதேச விஷயர்ந்யாபதேசஹேதுத்வாதிகளும் ஸங்க்ருஹீதம்.

உகஈ. அதுதொழுதெழென்ற விதிலே வஸ்துநிர்த்தேச நமஸ்காரா சீஸ்ஸுக்களுமுண்டு.

உகஉ. சாதுசனம் நண்ணு மயர்வற மாசறுக்கும் தெருள் கொள்ளப் பத்தராவரடிமையறவுரிய நோய்களறுக்கும்உடைந்து ஏற்றரும் வானின் தாளின்கீழ் அடிக்கீ ழின்பக்கதிபயக்கும் ஊடுபுக்கு மூவுலகு முருகாநிற்ப ரென்னும் ஸாம்யத்தாலே வாச்யன் பத்தினையதோற்றம் போலே தோற்றங்களாயிரத்தின் பத்துப் பத்தான விதிஞவிர்ப்பாவம்.

உகஊ. ஐந்தினேடொன்பதோடொருபத்தென்னுமனை போலே நூறே சொன்ன பத்துநூறுஓராயிர மென்றதும் ஸாபிப்ராயம்.

உகஎ. பாட்டுக்கு க்ரியையும் பத்துக்குக் கருத்தும் போலே நூற்றுக்கு உபதேசப்பத்து.

உகஏ. பகவத் பக்த பரங்கள் ஆச்ரயண விதிசேஷங்கள்.

உகஅ. பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ ஸத்யகாமத்வாபத்ஸகத்வார்த்திஹரத்வ விசிஷ்டன் மயர்வையறுக்க, தத்த்வவேதநமறப்பற்று ஜ்ஞப்தி பல முக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து மோக்ஷபலவ்ருத்தி செய்யவர்த்தித்துப் புருஷார்த்தபலாந்யருசியொழிந்து விரக்திபலாகம் கழியமிக்கு ப்ரேமபலோபாயத்தேபுகுந்து ஸாதநபலோபகாரக் கைம்மாறின்றி க்ருதஜ்ஞதாபலப்ரதிக்ருதமானத்தை யுணர்ந்து ஆத்ம தர்சநபலப்ராப்தி மரணவதியாகப் பெற்றுக் காலாஸத்திபலகதிக்குத் துணை கூட்டினை தம் பேற்றைப் பிறாறியப் பத்துத்தோறும் வெளியிடுகிறார்.

நான்காம் ப்ரகரணம்

உகக. பரபரனுய்நின்ற வளவேழ்வைப்பா மவையுளும்பர் வானவராதிபதி மயர்வறமன்னி மனம் வைக்கத் திருத்தி மறக்கு மென்று நல்கிவிடாதே மன்ன, அயர்ப்பிலனறுத்தேன் என் சொல்லிமறப்பனே வென்னும்படி தத்த்வஜ்ஞரானவர் சூடாடியெம்பிராணை விடாது கண்டாய் நீயும் நானுமென்கிற ஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி வீடுமினென்று த்யாஜ்

யோபாதேய தோஷ குணபரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக வுபதேசித்து எளிதாகவவதரித்துப் பிழைகளை ஸஹித்துப் புரையறக் கலந்து அல்பஸந்துஷ்டனுய் அம்ருதமே ஔஷதமாக்கி நீர்புரையத் தன்னை நியமித்து போகத்தை ஸ்தம்பித்து பக்திகணனைகளுக்கு ஒக்கவருமவனுடைய ஸேவைக்கு எளிமையுமினிமையு மூண்டு, தொழுதால் அரும்பயனுயதரும், உத்யோகத்தே வினைகளும் மாளும், அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வுகொண்டு நலம் செய்வதென்று தாம் மயர்வறமதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதற்பத்தில்.

உஉய. சோராத மூவா வேர்முதலாய் உலகம் படைத்தவனென்கிற சிதசித்த்ரயத்ரிவித காரணமானவன் அறியாதனவறிவிக்க உள்ளம் தேறித் தூமனம் மருளிலென்னும் ஜ்ஞாநபலமானஞனிக்கொண்ட மோகூம் தேடிவாட, உலராமலாவி சோர்ந்து சிக்கனப் புகுந்து ஸம்பந்திகளும் சேர்தல் மாறினரென்னை வாழ்வித்து உபகரிக்கிற நீந்தும் கெடலில் எம்மாவீட்டை உபயாநு குணமாக்கினவர் ஆச்ரயணீயனுக்குப் பூர்வோக்த பரத்வத்தைஸ்தாபிக்கிற ஸகலபலப்ரதத்வகாரணத்வ சேஷசாயித்வச்ரிய: பதித்வஸௌலப்யாதிகளைத் திண்ணனனுணவதென்று வெளியிட்டு, கள்வாதீர்த்த னென்று வசநப்ரத்யகூங்களும் காட்டிப் புலனைந்தென்று ஸம்ஸார மோகூஸாதந துர்க்காநந்தரஸம் மூன்றை விதிக்கிற அந்தர்கத குணேபாஸநத்தை மதித்துப் பெருக்கி மூழ்கியழுந்திக் கீழ்மை வலம் சூதும் செய்து இளமை கெடாமல் செய்யும் கூத்ர வாஸ ஸங்கீர்த்த நாஞ்சலிப்ரதகூணைகதிசிந்தநாத்யங்கயுக்த மாக்குகிறார் இரண்டாம் பத்தில்.

உஉக. முழுதுமாய் எங்கணு மொழிவற அருவாகி நின்று தோய்விலனும் ஸர்வவ்யாபகன் தீர்ந்தவடியார்களைத் தாளினைக் கீழ்க் கொள்ளும் தன் படிக்கும் நீதந்தமாமாயப் புணர்வினைப் பிறப்பழுந்தி அலமருகின்றேறன் வேறவரிந்து எந்நாளெங்கு லந்து தலைப்பெய்வனென்று கழித்துப் புகும் தம் காதலுக்கும் ஸத்ருசமாகக் கண்டு கொள்ளென்னு மூனமில் மோகூ பலமான முடிச்சோதியி லநுபவத்தாலே நித்யவஸ்து நீடுபெற்று அவச்சேதமற்றவடிமை செய்யவேண்டும்படி ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து சொல்லிப் பாடியேத்திப் பிதற்றி யெழுந்தும் பறந்தும் துள்ளிக் குனித்துத் தடுகுட்டக்கும்பிடுநட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்து நையும் ப்ரீதியுகள, தம்மடியாரென்ன வுடன்கூடும் ஸாத்யம் வள, பைகொள் பாம்புபோலே இந்த்ரியவ்ருத்தநியமமறப் பாட வந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோகக்ருத்தாய்,

குறைமுட்டுப் பரிவிடர்துயர் துன்பமல்லல் துக்கம் தளர்வு கேடுக
ளின்றி அம்ருதாநந்தமக்நரானவர் செய்யதாமரைக் கண்ணன்
அமரர் குல முதலென்று அஞ்சாதபடி எளிவருநிலிணவனு மென்
றவை பரத்வமாம்படி அவதரும் லீலலப்ய காஷ்ட்டையைக்
காட்டி வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவதென்னவது?
வேண்டிற் றெல்லாம்தரும், தன்னுகவே கொள்ளும், கவி சொல்ல
வம்மினென்று முக்தைச்வர்யத்தை முன்னிட்டு ச்வவ்ருத்தியை
மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றும்பத்தில்.

உஉஉ. ஈசன யீசனீசன் பாலென்ன வர்கொள் வானத்தும்
ஆயே யென்கிற வ்யாப்தி நிறம்பெறத் நனிக்கோல் செலுத்தும்
ஸர்வநியந்தா ஓழிவில் காலத்துக்குச் சேர பூர்வ போகங்களை ஓது
மாலெய்தின சாபலத்துக்குச் சேர ஸமகாலமாக்கிப் போதால்
வணங்காமை தீர்த்த ப்ரணயித்வத்திலே காதல் மையலேறிய பித்
தாய்ப் தேசதூரத்துக்குக் கூவியும் கொள்ளா யென்றது தீர, கண்ட
சதிரையும் ஒரு நிலமாகக் காட்ட, வீவிலின்பம் கூட்டினையென்று
முக்தபோகமாநஸப்ராப்திபலமான தேவதாந்தராத்மாத்மீய
லோகயாத்ரைச்வர்யாகூரங்களில் வைராக்யம், உன்னித்து உயி
ருடம்பினுல் கொடுவுலகம் வேட்கையெல்லாமொழிந்தே
னென்னவுடையரானவர் ஓருநாயகமென்று ராஜ்யஸ்வர்காத்
மாநுபவால்பாஸ்திரத்வஸாவதிகத்வாதிகளையும், ஆடு கள்ளி
றைச்சி கரும்செஞ்சோருகிற நிந்த்யங்களாலே இளந்தெய்வத்
துக்கு இழைத்தாடும் நிஹீநதையையும், பேசநின்ற தேவதாஜ்
ஞாநாசக்திஸாபேக்ஷத்வாதிகளையும் இலிங்கத்து விளம்பும்
பாஹ்ய குத்ருஷ்டிமத தமோ நிஷ்டதையையும் சொல்லி, ஓடிக்
கண்டீர் கண்டும் தெளியகில்லீர் அறிந்தோடுமின் ஆட்செய்
வதே உறுவதாவதென்று விரக்திபூர்வகமாக ஆச்ரயணத்தை ருசிப்
பிக்கிறார் நாலாம்பத்தில்.

உஉந. ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும்
தொல்லருளென்று பாத்வாதிகளையுடையவன் எவ்விடத்தா
னென்னும் பாவியர்க்கும் இருகரையுமழிக்கும் க்ருபாப்ரவாஹ
முடையவன் பொய் கூத்து வஞ்சக்களவு தவிர முற்றவும் தானுய்
உன்னைவிட்டென்னப்பண்ணின விரக்திபலபரமாத்மராகம்
போமர் பின்னின்று கழியமிக்கு யானேயென்ன வாய்ந்
தாற்றகில்லாது நீராய் மெலிய ஊடுபுக்கு வளர விஷவ்ருக்ஷபலங்
கள் கைகூடினவர் அடிமை புக்காரையும் ஆட் செய்வாரையும்
காண லோகத்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்
களைக் கண்டு காப்பிட்டு ப்ரஹ்லாத விபீஷணர் சொற் கேளாத
அரக்கரசூரர் போல்வாரைத் தடவிப் பிடித்து தேசகாலதோஷம்

போக எங்குமிடங் கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜீவி யுங்கோள், நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தின வனை மேவிப் பரம்புமவரோடொக்கத் தொழில் யுகதோஷ மில்லையாமென்று விஷ்ணுபக்திபராக்கிக் கண்ணுக்கினியன காட்டலாம் படியாளர் கண்ணிலே நோக்கிக் காணும் பக்தி ஸித் தாஞ்சநத்தை யிடுகிறார் அஞ்சாம்பத்தில்.

உஉச. என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மி னென்று கருணையாலே *ஸர்வலோக பூதேப்ய: என்றவை கட லோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல் வெட் டாக்குகிற சரண்யன் அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்யஜ்ஞாநங்களை வாலன்றிக்கே அங்குற்றேறன் என்னன் புணரா யென்னும்படி மெய்யமர் பக்தி பூம பலமாகவும் அநந்யகதித்வமுடையு தமக்குப் பாதமே சரணுக்க அவையே சேமங் கொண்டு வக சிந்தையராய் திர்யக்குக்களையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து விளம்பரோஷ முபாயத்தாலேயழிய உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே ஸப்ரகாரமாக ஸக்ருத்கரணீயமென்று புராண பௌராணிகர் த்யாஜ்யாம்சமாக்கின சிதசித் ப்ராப்யப்ராபகா பாஸங்களைக் கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும் ஆளீர் மேவீரூதீரென்று கதிய சேஷமாக்கியும் புறத்திட்டுக்காட்டியென்று ப்ரஸங்கிக்கில்முடியும்படிவிட்டு, தந்தைதாயுண்ணும்சோறு மாநிதி பூவையாவையுமொன்றே யாக்கி, தளர்வேனை திரிவேனை குறுகாதோ முதல்வாவோ வென்னு மார்த்தியோடே திரிவிக்கிரமனைக் குறள் கோல்ப் பிரா ணைப் அடியை மூன்றையிரந்த வன்கள்வன் கண் முகப்பே அகல் கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடந்தாமரைகளை இணைத் தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த உலகத் திலதத்தே கண்டு அகலகில்லேனென்று பூர்வ வாக்யமநுஸந்தித்தவர் பிணக்கறத் தொடங்கி வேதப் புனித விறுதி சொன்ன ஸாத்யோபாயச்ரவண ஸசோகஸஜாதீயர்க்குத் தந்தனன் மற்றோர் களைகணிலம் புகுந்தேனென்று ஸ்வஸித்தோ பாய நிஷ்டையை உக்த்யநுஷ்டாநங்களாலே காட்டுகிறார் ஆறும்பத்தில்.

உஉரு. எண்ணிலாக் குணங்கள் பாலதுன்ப வேறவன் மாயாப்பல்யோகு செய்தியென்னு மாச்சர்ய சக்தி யோகத்தாலே தெளிவுற்றவர்க்கு வற்றரும் வைகுந்தத்தை யருளும் ப்ராபகத்வம் புற்பாவெறும்பு பகைவனுக்கு மாக்க வல்ல ஸர்வசக்தி, பாதமகல கில்லாதகம்மை அகற்றுமவற்றின் கடுவே யிருத்தக் கண்டு கலி

வான் சுமடுதந்தாய் ஓவென்று ஸாதனபலமான ஆக்ரோசத் தோடே பழியிட்டுக் கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கித் தேற்ற வொண்ணுதபடி தோற்று ஒன்றி நிற்கப் பண்ணின பலாதாகம் மற்றும் கற்பாரிழ்ஷிலே சுவறிப் பழைய தனிமைக் கூப்பீடுதலே யெடுத்துச் சூழவும் பகைமுகம் செய்ய எடுப்பும் சாய்ப்புமான க்லேசம் நடக்க உபாயாதிகாரதோஷமொழிய மாயங்கள் செய்து வைத்த வைஷித்திரிஷ்யக் கேட்க ஐச்சமாக விருத்தி உறக் கொண்ட ஸ்வபர ப்ரயோஜநத்தை யருளிச் செய்ய என் சொல்லி எந்நாள் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவுமென்கிற உபகாரஸ்ம் ருதியோடே தன்சரிதை கேள்வியாகாமல் இன்பம் பயக்க விருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக காந கோஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர் சரமோபாய பரா ஞர்க்கு நீணகரமது துணித்தான் சரணன்றி மற்றொன்றிலம் உள் ளித் தொழுமின் என்று ப்ராப்யஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ர காசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில்.

உஉ சேவிமார் பணியா நேர்பட்ட நல்ல கோட்பாடு என் னும்படி சக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜநாதிகளை யுடைய ஸத்யகாமன் கொண்ட வாக்வ்ருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையும் அச்சமும்தீர, தலைச்சிறப்பத் தந்தவதில் க்ருதஜ்ஞதாபலப்ரத்யுபகாரமாக வேந்தர் தலைவன் கன்யகாதாநம் போலே ஆரத்தழுவி அறவிலை செய்த ஆத்ம லாபத்தாலே அதீவ விளங்கிப் பணைத்து ஜன்மபாசம்விட்டு ஆத்வாரம் ஆளுமாளா ரென்று பரிந்து அநுரூபனேடே அமர்ந்து பிரிவில் க்ருபண தசை யாகத் துவரும் ஸீதா குணங்களாலே ப்ரீதி வர்த்திக்க, திக்கி வுள்ளே உறைந்து கண்டு கொண்டிருந்து அமாநுஷபோகமாக் கினவன் மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவ லிடாமல் சிறியேனென்றதின் பெருமையைக் காட்ட தேஹாதி களில்பரமாய் நின்றுநினைக்கில்லக்ஷ்மீதுல்யமாய் அவர்க்கே குடிகளாம் பரதந்த்ரஸ்வரூபத்தை யநுஸந்தித்தவர் ஸ்வஸாதஸா த்யஸ்தர் இருகரையராகாமல் மண்ணவரும் வானவரும் நண் ணுமத்தையே குறிக்கொண்மின் உள்ளத்தென்று ப்ராப்யைகபர ராக்குகிறார் எட்டாம் பத்தில்.

உஉ. எண்டிசையும் அகல்ஞாலம் எங்கு மளிக்கின்ற ஆவின்மேலென்னும்படி நித்யபோகபாத லீலோபகரணத்தின லயாதிகளைப் போக்குமாபத்ஸகன் ஆருயிரென்னப்படுத்தின ஆத்மதர்சநபலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருகென்று

மூடுகவிட்டு ஏகமெண்ணிக் காணக்கருதி எழு நண்ணி நினைதொறு முருகியலற்றிக் கவையில் மனமின்றிப் பதிஞலாண்டு பத்துமாஸ மொருபகல் பொறுத்தவர்கள் ஒருமாஸ தினஸந்த்யையில் படுமது கூணத்திலேயாக இரங்குகிற த்வரைக் கீடாக இனிப் பத்தி லொன்று தசமதசையிலே பேறென்று நாட்கடலாகத் தம்பிக் கிட்டதாகாமல் நாளவதுணைபோலே நாளிடப் பெற்றவர் இம் மடவுலகர் கண்டதோடு பட்ட அபாந்தவாரகூகாபோக்யா ஸுகாநுபாய ப்ரதிஸம்பந்தியைக் கர்ட்டி மற்றொன்று கண்ண னல்லாலென்கிற வைகல் வாழ்தலான ஸித்தோபாயம், அதில் துர் பல புத்திகளுக்கு மாலை நண்ணி காலைமாலை விண்டு தேனைவாடா மலரிட்டு அன்பராம் ஸாங்கபக்தி, அதில் அசக்தர்க்குத் தாளடை யும் ப்ரபத்தி, அதில் அசக்தர்க்கு உச்சாரண மாத்ரம், ஸர்வோ பாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் தெண்டனென்று கீதா சார்யனைப் போலே அதிகாராநுகுணம் நெறியெல்லா முரைக்கிறார் ஒன்பதாம்பத்தில்.

உஉஅ. சுரிகுழல் அஞ்சனப் புனல்மைந்நின்ற பொல்லாப்புனக் காயாவென்னும் ஆபத்திற் கொள்ளும் காமரூப கந்தரூபத்தாலே ப்ரபந்நார்த்திஹரனைவன் அருள்பெறும்போதணுகவிட்டதுக் குப் பலமான வானேறும் கதிக்கு அண்ட மூவுலகும் முன் னேடிக் கால் விழுந்திடத்தே நிழல் தடங்களாக்கி அழுதமளித்த தயாதன் பெற்ற கோவலனைகையாலே வேடன் வேடுவிச்சி பகூடி குரங்கு சராசரம் இடைச்சி இடையர் தயிர்த்தாழி கூனி மாலா காரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர் அவன் மகனவன் தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்றமைந்தனுகிற பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்து மாத்தனை வழித்துணையாக்கி அறியச் சொன்ன ஸுப்ரபாதத்தே துணைபிரியாமல் போக்கொ ழித்து மீள்கின்றதில்லை யென்று நிச்சித்திருந்தவர் ஸஞ்சிதம் காட் டும் தசையானவாறே முந்துற்ற நெஞ்சுக்குப் பணிமறவாது மருளொழி நகு கைவிடலென்று க்ருத்யாக்ருத்யங்களை விதித்து நெஞ்சுபோல்வாரைத் தொண்டீரென்றழைத்து, வலம் செய்து ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுது மென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யும் வக்தவ்யம் ச்ரோதவ்யம் த்ரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டுப் பிணக் கறவைச் சார்வாக நிகமித்து எண்பெருக்கிலெண்ணும் திருநாமத் தின் சப்தார்த்தங்களைச்சுருக்கி மாதவனென்று த்வயமாக்கிக் காணத்ரயப்ரயோகவ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலைசெய்து கொடுத்துச் செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவழி காவலிட்டு மனம் திருத்தி வீடு திருத்தப் போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணு

லகம் தரவிரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்ட வாக்கையிலே புக்குத் தானதகர்களை அதிலே வகுத்துக் குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு தேஹதோஷ மறிவித்து மாயையை மடித்து வானேதரக் கருதிக் கருத்தின்கண் பெரியனை வனை இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாத்யநாதர ஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க, "இந்த்ரியகிங்காராய்க் குழி தூர்த்துச் சுவைத்தகன்றீர் என்னில், அவை யாவரையும் அகற்ற நீவைத்தவை யென்பர்; அது தேஹயோகத்தாலே யென்னில்; அந்நாள் நீதந்த சுமடென்பர்; முன்செய்த முழுவினையாலே யென்னில், அது துயரமே உற்ற விருவினை உன் கோவமுமருளு மென்பர்; ஈவிலாத மதியிலே னென்னுமும்மதன்றே கர்த்ருத்வ போக்த்ருத்வங்களென்னில், ஆங்காரமாய்ப் புக்குச் செய்யுகப் பயனுண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக் தாவென்பர்; யானே எஞ்ஞான்று மென்றத்தாலேயென்னில்; அபர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழிலென்பர்; ஜீவப்ரக்ருதிசைதந்யம் நீங்கும் வ்ரத வேஹது; அகமேனியிலழுக்கறுக்கை அபிமானிக்ருத்யம்; தான் நல்கும் பந்தம் நிருபாதிகம், ஸௌஹார்தம் எஞ்ஞான்றும் நிற்கும்; பிணக்கிப் பேதியாத ஜ்ஞாநாதி வைகல்யமில்லை; வக மூர்த்தியில் அல்லல்மாய்த்த யத்நபலித்வங்கள் நம்மது; நாம் தனி நின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே அறிந்தனமே யென்னும் ஸர்வஜ்ஞ நிவர்; நெறிகாட்டி அருகும் சுவடும் போலே இதுவும் நிருத்தர மென்று கவிழ்ந்து நிற்க, அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம் போலே எறப் பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிற மேகஸூக்த பேரீகீத காஹளசங்காசீஸ்ஸ்துதி கோலாஹலம் செவிப்பட்ட வாறே ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்குத் தலைமிசையாய் வந்த தாள் களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திருவாணையிட்டுக் கூசம் செய் யாத செய்திப் பிழை, பற்றுக்கொம்பற்ற கதிகேடு, போர விட்ட பெரும்பழி, புறம் போனல் வருமிழவு, உண்டிட்ட மூற்றீ ம்பு, அன்புவளர்ந்த அடியுரம்; உயிருறவு முதலளவுதுரக்கைக ளாலே பெருவாணை அல்லவாக்கின பேரவா குளப்படியாம்படி கடல் போன்ற ஆகாரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித் தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில்.

உஉசு. உருமையோடே உற்றேனைக்காதொழிந்தது நாடு திருந்த நச்சுப்பொய்கையாகாமைக்கு ப்ரபந்தம் தலைக் கட்ட வேர்சூடுவார் மண் பற்றுப்போலேயென்னு மவற்றிலும் இனி யினியென்று இருபதின்கால் கூப் பிடும் ஆர்த்தியதிகார பூர்த்திக்கென்னுமது முக்ய்யம்.

உகூ, கமலக்கண்ண னென்று தொடங்கிக் கண்ணுள் நின் றிறுதி கண்டேனென்ற பத்தும் உட்கண்ணாலேயாய் காண்பானவாவுதல் அதிவிரட்டியாகையாலே கண்டு களிப்ப வளவும் பரஜ்ஞாநகார்ப்ய பரபக்தி

உகூக. இருந்தமை யென்றது பூர்ண பரஜ்ஞாநம்.

உகூஉ. முடிந்த அவாவென்றது பரமபக்தி.

உகூங. இவை ஜ்ஞாநதர்சநப்ராப்த்யவஸ்த்தைகள்.

உகூச. அவித்யாநிவர்த்தக ஜ்ஞாந பூர்த்திப்ரத பகவத்ப்ர ஸாதாத் மோக்ஷலாப மென்கை மயர்வற வீடுபெற்ற வென்ற ப்ரபந்தைகார்த்த்யம்.

ஆசார்யஹ்ருதயம் முற்றிற்று.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்
திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்

(முடிவில் அநுஸந்திக்கும் தனியன்)

தந்தருளவேணும் தவத்தோர் தவப்பயனை
வந்த முடும்பை மணவாளா—சிந்தையினால்
நீயுரைத்த மாறன்நினைவின் பொருளனைத்தென்
வாயுரைத்து வாழும் வகை.

ஸ்ரீ

ஆசார்யஹ்ருதய தாத்பர்ய ஸாரம்

(ஸ்ரீ காஞ்சி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் எழுதியது.)

1. [காருணிகனை]. அருட்கடலான எம்பெருமான், அறிவிலி களான ஸம்ஸாரிகள் ஞான மென்னும் விளக்கை யேற்றி அக விருள் நீங்கப் பெற்றுத் தன்னைக் கண்டு ஸதஸத்விவேகம் பண்ணு கைக்காக, ஸகல வேத காரணமாய் நித்யமாய் ஸர்வார்த்த ப்ரகாசக மாயிருக்கிற அகாரத்தில் நின்று முண்டான விளக்குப் போன்ற வேதங்களையும் அவற்றுக்கு உபப்ரும்ஹணங்களான வற்றையும் வெளியிட்டருளினன்.

2. [விவேக]. ஸதஸத்விவேகத்திற்குப் பலன் எதென்னில்; த்யாஜ்யங்களை விடுகையும் உபாதேயங்களைப் பற்றுகையுமேயாம்.

3. [த்யாஜ்யோபாதேய]. அனைவர்க்கும் துக்கம் த்யாஜ்யம்; ஸுகம் உபாதேயம்.

4. [இவற்றுக்கெல்லை]. * அநந்தக்லேச பாஜநமான ஸம்ஸாரத் தில் அழுந்துகைக்கு மேற்பட்ட துக்கமில்லை; நித்யவிபூதியில் நிரந்தரம் பகவதநுபவம் பண்ணுகைக்கு மேற்பட்ட ஸுகமில்லை.

5. [அநந்தக்லேச]. கீழ்ச் சொன்ன துக்கபரமாவதிக்கு ஹேது அர்த்த பஞ்சகஜ்ஞானமில்லாமை; கீழ்ச் சொன்ன ஸுக பரமாவதிக்கு ஹேது அர்த்தபஞ்சகவுணர்ச்சி.

6. [இவற்றுக்குக் காரணம்]. அர்த்த பஞ்சகஜ்ஞானமுண்டாவ தற்குக் காரணம் ஸத்வகுண ப்ராசுர்யம்; அஃது உண்டாகா மைக்குக் காரணம் ரஜஸ்தமோகுண ப்ராசுர்யம்.

7. [ஸத்வாஸத்வ]. ரஜஸ்தமோ குணங்களின் ப்ராசுர்யத்துக் குக் காரணம் இவ்விருள்தருமா ஞாலத்திற் பிறவி; ஸத்வகுண ப்ராசுர்யத்திற்குக் காரணம் ஜாயமாநகடாகூடம்.

8. [இவற்றுக்குமூலம்]. பிறவிக்கு மூலம் புண்ய பாபங்கள்; ஜாயமாநகடாகூடத்திற்கு மூலம் எம்பெருமானுடைய ஸ்வாபா விகக்ருபையாகிற ஸுக்ருதம்.

9. [கர்மக்ருபா]. புண்யபாபரூப கருமங்களுக்குக் காரணம் அவித்யை; க்ருபைக்குக் காரணம் ஸௌஹார்தம்.

10. [ஏதந்நிமித்தம்]. அவித்யைக்கு அடி அநாதியான அசித் ஸம்பந்தம்; ஸௌஹார்தத்துக்கு அடி அத்யந்தமநாதியான நாரா யண ஸம்பந்தம்.

[ஆக இவ்வளவாலும் அசித்ஸம்பந்தமடியாக அவித்யை, அதடியாகப் புண்யபாபங்கள், அவையடியாகப் பிறவி, அதடியாக ரஜஸ்தமோகுண ப்ராசுர்யம், அதடியாக அர்த்த பஞ்சகஜ்ஞானமின்மை, அதடியாக ஸம் ஸாரதுக்க முண்டாகுமென்றும், நாராயண ஸம்பந்தமடியாக அவனுடைய ஸௌஹார்தம், அதடியாக க்ருபை, அதடியாக ஜ்ஞாயமாகடாக்ஷம், அதடி யாக ஸத்வகுண ப்ராசுர்யம், அதடியாக அர்த்தபஞ்சகஜ்ஞானம், அதடியாக மோக்ஷஸுகமுண்டாகு மென்றும் சொல்லப் பட்டதாயிற்று].

11. [இவை கிட்டமும்]. கிட்டமானது தன்னோடு சேர்ந்த மாணிக்கத்தை ஒளியறததின்று உருவழித்துத் தன்னைப்போல ஆக்குமாபோலே அசித்ஸம்பந்தமானது ஒண்பொருளான ஆத்மாவை அஸத்கல்பமாக்கி ஜ்ஞானலேசமறத் தின்று ஸத்தா ஹாநியைப் பண்ணும்; வேட்டுவேளான் என்கிற குளவியானது அபதார்த்தமான வொருபுழுவைச் சுவரிலே கொண்டு வந்து வைத்து ஊதித் தன்னிறமாக்குமா போலே நாராயண ஸம்பந்த மானது பொருளல்லாததைப் பொருளாக்கி விபுத்வஸாம்யம் தந்து தன்னுக்கி ஸத்தை பெறுவிக்கும்.

12. [ஒன்று கூடினதாய்]. அசித்ஸம்பந்தம் வந்தேறி; நார யண ஸம்பந்தம் அநாதி.

13. [இந்தவுதாத்...]. இந்த அநாதி ஸம்பந்தமே இப்பகவான் கலைகளை வெளியிட்டமைக்கு ஹேதுவாயிற்று.

14. [வத்ஸலையான]. தாயானவள் பிள்ளை முகம் கன்றத படிக்கு மண் தின்னவிட்டு, அதனுலுண்டான தோஷம் போகப் பிறகு மாற்றுபருந்திடுமா போலே, ஆத்மவர்க்கங்களனைத்தின் திறத்திலும் தாய்போல் வத்ஸலனை எம்பெருமான் சேதந னுடைய ருசிக்குத் தக்கவாறு பந்தகங்களைபங் காட்டிப் பின்னை பந்தநிவர்த்தக பேஷஜமானவற்றையும் காட்டினது பொருந்தும்.

15. [அதுதானுமாஸ்திக்ய]. ஸகலாத்மாக்களுக்கும் ஹித தைதையே கோருமவனை எம்பெருமான் இப்படி பந்தகங்களையும் காட்டியது தானும் க்ரமத்திலே அவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு இட்ட வழியாம்.

16. [சதுர்விதமான]. அவகாஹிக்கவரிய பல்வகைப்பட்ட அர்த்தங்களையும் அமைத்துக் கொண்டிராநின்ற சாஸ்த்ரங்களின் தாத்பர்யம் கைப்படும்படி அதிகரிப்பதற்கு- ஜம்பூத்வீபத்தின் நவமகண்டத்திற் பிறவி, மானிடப் பிறவி, சரீரஸ்வாதர்யம், அதிகாரிவர்ணத்தில் உத்பத்தி இளமையின்வாய்ப்பு, நெஞ்சு இசைவு முதலானவை இன்றியமையாதனவாதலால் இவ்வளவும் பெற்று இடையூறொன்றுமின்றி சாஸ்த்ரங்களை யதிகரிப்பது அரி தென்று திருவுள்ளம்பற்றின எம்பெருமான் தன் கருணையாலே

ஸம்ஸாரிசேதநரை உஜ்ஜீவிப்பிக்கைக்காக ஸ்ரீபதரிகாச்ரமத்திலே நரநாராயணரூபேண தானே சிஷ்யனுமாய் ஆசாரியனுமாய் அவதரித்து ஸகலசாஸ்த்ரதாத்பர்யஸாரமான திருமந்த்ரத்தை வெளியிட்டருளினன்.

17. [முனிவரையிடுக்கியும்]. வ்யாஸர் முதலிய மஹர்ஷிகளுக்கு அந்தர்யாமியாயிருந்து அவர்களைக்கொண்டு வெளியிட்ட சாஸ்த்ரத்துக்கு சேதநருடைய தேஹவிசிஷ்ட வேஷத்திலே நோக்கு. [அதாவது, சாஸ்த்ரங்கள் வர்ணச்ரம தர்மங்களைச் சொல்லுமென்கை.] தாஸ்கை நின்று வெளியிட்ட திருமந்த்ரத்துக்கு சேதநருடைய நிஷ்க்ருஷ்ட வேஷத்திலே நோக்கு. [அதாவது, திருமந்த்ரம் ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் சோதிக்கத் தோன்றியதென்றபடி.]

18. [தோல்புரையே]. உள்ளிதழான ஸ்வரூபத்தில் ஊற்றமின்றிக்கே மேலெழ தேஹத்திலே நோக்கான சாஸ்த்ரத்தை அதிகரிக்க ஆபிஜாத்யமாதல் ஆசாரமாதலாகிற யோக்யதை வேணும்; ஸ்வரூபஸ்பர்சியான திருமந்த்ரத்துக்கு அனைவரும் மதிகாரிகள்.

19. [சாஸ்த்ரிகள்]. சாஸ்த்ரநிஷ்டரான உபாஸகர்கள்—ஆறு நீந்துவதற்குத் தெப்பத்தை ஒரு கையிலே பிடுக்கிக்கொண்டு தாங்களும் ஒருகை துழாவுகின்றவர்களைப்போன்று ஸ்வயத்நத்தையும் அதனாலாகும் பகவத் க்ருபையையும் அவலம்பித்து ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்க நினைப்பர்கள்; திருமந்த்ரநிஷ்டரான ப்ரபந்நர்கள்—ஓடத்தினுள்ளே இருகையும் விட்டு நிர்ப்பரராயிருப்பாரைப்போலே வைகுந்தனென்பதோர் தோணியைப்பற்றி, கேவல பகவத்க்ருபையே [அதாவது ஸ்வப்ரயத்நத்தால் விளையாத பகவத்க்ருபையே] உத்தாரகமென்று அத்யவஸித்து* கூவிக்கொள்ளுங்காலமின்னங் குறுகாதோ வென்று பகவத்ப்ராப்திகாலத்தை ப்ரதீக்ஷித்திருப்பர்கள்.

20. [இவை ஸ்வரூபத்தை]. சாஸ்த்ர நிஷ்டர்கள் ஸ்வப்ரவ்ருத்திகளிலே ஊன்றுவதற்கும் திருமந்த்ர நிஷ்டர்கள் பகவத்க்ருபையே உத்தாரகமென்று அத்யவஸித்திருப்பதற்கும் காரணம் எதென்னில், ஆத்மஸ்வரூபத்தைப்பற்றி அவரவர்கள் தெரிந்து கொண்டிருக்குமதுவேயாம். சாஸ்த்ரநிஷ்டர்கள் தெரிந்து கொண்டிருக்குமது எங்ஙனே யென்னில்; ஆத்மஸ்வரூபம் ஞானத்தையே குணமாகவுடைத்தாயிருக்கும்; அந்த ஞானத்தாலே எங்கும் வியாபித்து தேஹத்திற் காட்டில் விலக்ஷணமாய் கர்த்ருத்வ போக்த்ருத்வ யுக்தமாய் பகவானுக்கு சேஷமாயிருக்குமென்று. இனி திருமந்த்ரநிஷ்டர்கள் தெரிந்துகொண்டிருக்குமது எங்ஙனே

யென்னில் ; எம்பெருமானைத் தவிர்ந்த தெல்லாமும் ஹேயமென்று மறிவைப்பெறும்படி நிர்ஹேதுகமாக எம்பெருமான் நடத்த அதனாலே ஆத்மஸ்வரூபத்தை தேஹாதிவிலக்ஷணமாய் ஜ்ஞாதிருத் வாதிகுணகமாய் பாகவத சேஷத்வபர்யந்த பகவச் சேஷத்வமே வடிவாய் பாரதந்த்ர்ய போக்யதைகளேயே ஸ்வரூபமாக வுடைத்தா யிருக்குமதாக. இப்படிப்பட்ட உணர்ச்சியின் வாசியிறேலேயே சாஸ்த்ரநிஷ்டர்கள் ஸ்வயத்நத்தாலே பிறவிக்கடலை நீந்த நினைப்ப தும் ஸாரநிஷ்டர்கள் தங்கள் பாரத்தை அவன்மேலே போகட்டு ஸ்வயத்நரஹிதராயிருக்கையும் ப்ராப்தமாகிறது.

21. [சேஷத்வபோக்...]. சாஸ்த்ரமுகத்தாலே ஸ்வரூபத்தை அறியுமளவில் பகவச்சேஷத்வமும் பகவதநுபவபோகத்ருத்வ மும்மே ப்ரகாசிக்கும். சாஸ்த்ரதாத்பர்யமான திருமந்த்ரத்தினுட்புக் கால் பாரதந்த்ர்யமும் போக்யதையுமாகிற ஸ்வரூப யாதாத்ம்யம் ப்ரகாசிக்கும். இவற்றில் சேஷத்வத்திற் காட்டில் பாரதந்த்ர்யம் மிகச் சிறந்ததாகும். எதனாலென்னில், இஷ்ட விநியோகத்திறகு போக்யமாயிருக்குமளவே சேஷத்வமாகும். அவ்வளவேயல்லா மல் இவ்வஸ்துவை சேஷிக்கு இஷ்டமானபடி விநியோகப்படுத்திக் கொடுக்கும் பாரதந்த்ர்யம். ஆகவே ஸ்வரூப யோக்யதாமாத்ர ரூபமான சேஷத்வத்திற் காட்டில் பலோபதாநரூபமான பாரதந் த்ர்யம் சிறந்ததே. இனி, போகத்தில் ஸ்வார்த்தத்வபுத்திக்கு ஹேது வான போக்த்ருத்வத்திற் காட்டில் அந்த போக்த்ருத்வத்தை சேஷியி னுடைய உகப்புக்கு உறுப்பாக்கிக் கொடுக்கிற போக்யதை சிறந் தாயிருக்கும்.

22. [ஜ்ஞாந சதுர்த்திகளின்]. சேஷத்வம் பாரதந்த்ர்யம் போக்த் ருத்வம் போக்யதை என்ற நான்கினுள் சேஷத்வமும் போக்த்ருத் வமும் தாழ்ந்தவை யென்றும், பாரதந்த்ர்யமும் போக்யதையும் உயர்ந்தவை யென்றும் நிஷ்கர்ஷிப்பதற்குத் திருமந்த்ரத்தில் என்ன கமக முளதென்னில், அது நிரூபிக்கப்படுகிறது. திருமந் த்ரத்தில் சேஷத்வம் தோன்றின பின்பும் அதற்கு ஒரு விரோதி தோன்றி அதைக் களைய வேண்டியதாயிற்று. அப்படியே அதில் போக்த்ருத்வம் தோன்றின பின்பும் அதற்கொரு விரோதி தோன்றி அதைக் களையவேண்டியதாயிற்று. பாரதந்த்ர்யம் தோன்றின பின்பு அதற்கு ஒரு விரோதியும் தோன்றிற்றில்லை; அதைக் களைய வேண்டிய ப்ரஸக்தியுமில்லை யாயிற்று. போக்யதை தோன்றின பின்பு அதற்குமொரு விரோதி தோன்றிற்றில்லை, அதைக் களைய ப்ரஸக்தியு முண்டாயிற்றில்லை. ஆக, மேலே விரோதி தோன்றும்படியாக நிற்கிற சேஷத்வ போக்த்ருத்வங் களிற் காட்டிலும் விரோதி தோன்றப் பெறுத பாரதந்த்ர்ய போக்

யதைகளே மேலானவை யென்னத்தட்டில்லை. இரண்டுக்கு விரோதிகள் தோன்றினதாகவும் அவை களையப் பட்டதாகவும் சொன்னது இனி விவரிக்கப்படுகிறது. ப்ரணவத்தில் மூன்றாவது அகாரமான மகாரமானது ஆத்மாவைச் சொல்லுகிறது. மநஜ்ஞாநே னென்கிற தாதுவடியாக மகாரம் தோன்றிற்றுதலால் ஆத்மா ஜ்ஞாதா வென்று சொல்லிற்றுகிறது. ஜ்ஞாதாவான போதே கர்த்தாவுமாய் போக்தாவுமாயிற்று. இந்த போக்த்ருத்வமானது அந்த போகத்திலே ஸ்வார்த்தத்வமாகிற கல்மஷத்தின் உதயத்தை [தான் அநுபவித்துத் தான் ஆனந்தப்படுவதாகிற விரோதியை] ஸஹித்திருந்த படியால்தான் மேலே நம: என்று அந்த விரோதியைக் களைய நேர்ந்தது. ஆகவே, போக்த்ருத்வமானது மேலெழுந்ததான ஸாமாந்யதர்ம மென்றும், போக்யதை யானது வடிக்கட்டி யெடுக்கப்பட்ட ஸாரமான தர்மமென்றும் தேறிற்று. இப்படியே சேஷத்வத்திற்காட்டிலும் பாரதந்த்ர்யமே ஸாரமென்பதும் தேறும்; எங்ஙனே யென்னில்; ப்ரணவத்தில் "இதிலே சதுர்த்தி வறிக்கழியும்" என்கிற முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்தியின் படியே அகாரத்தின்மேல் வறிக் கழிந்ததான [லுப்த] சதுர்த்தியிலாயிற்று சேஷத்வம் தோன்றியிருக்கிறது; இது தோன்றியிருக்கச் செய்தேயும், தன்னைத்தானே ரக்ஷித்துக் கொள்வதில் முயற்சி செய்தற்கு ஹேதுவான ஸ்வாதந்த்ர்யத்தைக் காட்டுகிற ம: என்கிற ஷஷ்டி வற்பட்டு அப்படிப்பட்ட ஸ்வாதந்த்ர்யத்தை ந என்று கழிக்க வேண்டியதாயிற்று. அது கழிந்தே பாரதந்த்ர்யம் ப்ரகாசித்தது. ஆக, சேஷத்வம் மாத்திரம் தோன்றினால் அதன் மேல் ஒரு விரோதி யுண்டாகி அதனைப் பாரதந்த்ர்ய வேஷத்தினால் கழிக்கவேண்டியும், போக்த்ருத்வம் தோன்றினால் அதன் மேல் தானனைந்தப் படுவதாகிற வொரு விரோதி யுண்டாகி அதனை போக்யதா வேஷத்தினால் கழிக்க வேண்டியும் நேர்ந்தபடியாலே விரோதியின் உத்பத்தியை ஸஹிக்குமவை ஜ்ஞாத்ருத்வ போக்த்ருத்வங்கள் என்று ஸ்பஷ்டமாக அறியலாயிற்று. பாரதந்த்ர்யமும் போக்யதையும் ஸித்தித்தபின்பு அவற்றின்மேல் ஒரு விரோதியும் தோன்றவு மில்லை, அது கழிக்கப்படவு மில்லை; ஆகவே அவை விரோதியின் உத்பத்தியை ஸஹியாதவை யென்ற காரணத்தினால் சிறந்தவையாயின. சேஷத்வ போக்த்ருத்வங்கள் வடிக்கட்ட வேண்டிய நிலைமைகளென்றும், பாரதந்த்ர்ய போக்யதைகள் வடிக்கட்டியான நிலைமைகளென்றும் தேறிற்று.

[இப்படி உத்க்ருஷ்டமான பாரதந்தர்ய போக்யதைகளை ஆத்மாவுக்கு வடிவாக ஸாரஜ்ஞரான திருமந்த்ர நிஷ்டர் உணர்ந்தமையால் அவர்களுக்கு ஸ்வயத்நராஹித்ய முண்டாயிற்று. இங்ஙனன்றியே கீழ்ப்படியான சேஷத்வ போக்த்ருத்வங்களை ஆத்மாவுக்கு வடிவாக சாஸ்த்ரிகள் உணர்ந்த

மையாலே அவர்களுக்கு ஸ்வப்ரயத்நபரத்வ முண்டாயிற்று என்று நிகமித்துக்கொள்க.]

23. [மூன்றெழுந்த]. ஸ்வப்ரயத்நலவலேசத்தையும் ஸ்வப்ரயோஜந லவலேசத்தையும் ஸஹியாதவையாய் எம்பெருமானுடைய போகத்திற்கு மிகவும் பாங்காயிருந்து கொண்டு ஸ்வரூபத்தை நிறம் பெறுவிக்கு மவையான பாரதந்த்ர்யமும் போக்யதையும் கீழ்ச்சொன்ன தன்மைகளில்லாத சேஷத்வத்தையும் போக்த்ருத்வத்தையும் கீழ்ப்படுத்தித காமே மேலாயிருக்கும்.

[இந்த சூர்ணையில் ப்ரதமம் மத்யமம் சரமம் என மூன்று பதங்கள் உள்ளன; திருமந்த்ரத்தில் முதல் அக்ஷரத்தில் ஸ்ரீப்ரகாசதுர்த்தியிலே தோன்றின சேஷத்வம் ப்ரதமதசை; பிறகு அந்த சேஷத்வத்திற்கு ஆச்ரயத்தைச் சொல்லுமதான மகாரத்தில் தோன்றின ஜ்ஞாத்ருத்வ பலப்ராப்தமான போக்த்ருத்வம் மத்யமதசை; அதன்மேல் நம: பதநாராயணயபதங்களில் விளங்கின பாரதந்த்ர்யமும் போக்யதையும் சரமம். சரமமானவிவை ப்ரதம மத்யமதசைகளான சேஷத்வ போக்த்ருத்வங்களைப் பகல விளக்குப் போலே பயனற்றதாகவும் மின்மினிப் பூச்சி போலே அற்பமான வொளியையுடையதாகவும் பண்ணுமென்ற தாயிற்று.]

24. [நாலிலொன்று]. கீழே ப்ரவ்ருத்தி பராகச் சொல்லப்பட்ட சாஸ்த்ரிகளுக்கும், நிவ்ருத்திபராகச் சொல்லப்பட்ட ஸாரஜ்ஞர்களுக்கும் அந்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு ஹேதுக்கள் எவை யென்னில்; சேஷத்வ போக்த்ருத்வங்கள் பாரதந்த்ர்ய போக்யதைகள் என்கிற நான்கினுள் சேஷத்வ போக்த்ருத்வங்களே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்று கண்ட சாஸ்த்ரநிஷ்டர்களை, போக்த்ருத்வமானது 'போக்யவஸ்து கிடைப்பதற்கு போக்தாவானவன் முயற்சி செய்யவேண்டாவோ?' என்னும் நினைவாலே போக்யபூதமான பகவத் விஷயத்தின் லாபத்திற்கு உறுப்பான உபாயப்ரவ்ருத்தியிலே கொண்டுமூட்டும்; பாரதந்த்ர்ய போக்யதைகளையே ஸ்வரூபவுண்மைவடிவென்று கண்ட ஸாரஜ்ஞர்களாகிய திருமந்த்ரநிஷ்டர்களை போக்யதையானது 'போக்தாவான எம்பெருமானன்றே தனக்கு போக்யமான இவ்வாத்ம வஸ்துவைப் பெறுகைக்கு முயற்சி பண்ணுவான்; அப்பெருமானுக்கு போக்கியமாயிருக்குமிவ் வாத்மவஸ்துவுக்கு அவனைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்ய அதிகாரமில்லை' என்னும் நினைவாலே உபாய ப்ரவ்ருத்தியில் நின்றும் மீள்விக்கும். (அதாவது) நிவ்ருத்தியிலே மூட்டும்.

[சேஷத்வ போக்த்ருத்வ பாரதந்த்ர்ய போக்யதைகளாகிற நாலில் ஒன்றான போக்த்ருத்வமானது சாஸ்த்ரிகளை உபாயாநுஷ்டானத்திலே ப்ரவர்த்திப்பிக்கும்; போக்யதையாகிற மற்றொன்று ஸாரஜ்ஞரை உபாயாநுஷ்டானத்தில் நின்றும் நிவர்த்திப்பிக்கும் என்றதாயிற்று.]

25. [முற்பாடர்க்கு]. (திருமந்த்ரநிஷ்டர்களுக்கும் சேஷத்வ போக்த்ருத்வங்களுண்டே; அவர்களிடத்தில் அவை எப்படியிருக்குமென்னில், அது சொல்லுகிறது இதில்.) சாஸ்த்ரிகளென்று முற்படச் சொல்லப்பட்ட உபாஸகர்களுக்குக் கருமத்திற்கு அங்கமாகவுள்ள அவையிரண்டும் "செயல்தீரச் சிந்தித்து வாழ்வாரே வாழ்வார்" என்கிற திருமழிசைப் பிரானருளிச் செயலின்படியே 'இவ்வாத்மா செய்யக் கடவதொன்றுமில்லை, எம்பெருமானே நிர்வாஹகன்' என்று அநுஸந்தித்து உபாயாநுஷ்டானமாகிய ப்ரவ்ருத்தியில் நின்றும் நிவ்ருத்தரான [ஸாரஜ்ஞர்களான] ப்ரபந்நருடைய கைங்கர்யமாகிற வ்ருத்தியில் எம்பெருமானுகப்பைப் பின் செல்லுமது தவிர, தம் நிர்ப்பந்தத்தைக் காட்டிக்கொள்ளமாட்டா.

26. [கர்ம கைங்கர்யங்கள்]. கீழ்ச் சூர்ணிகையில் க்ரியா என்னும் சப்தத்தால் சொன்ன கர்மமும், வ்ருத்தி என்னும் சப்தத்தால் சொன்ன கைங்கர்யமும் முறையே சாஸ்த்ரஜ்ஞர்களுடையவும் ஸாரஜ்ஞர்களுடையவும் எந்த அம்சத்திற்கு ஏற்றிருக்குமென்னில்; கர்மாநுஷ்டாநமானது அஸத்யமுமாய் அநித்யமுமான வருணத்திற்கு [-ஜாதிக்கு] ஏற்றிருக்கும். கைங்கர்யமானது ஸத்யமுமாய் நித்யமுமான அடிமைக்கு ஏற்றிருக்கும்.

[வருணத்தை அஸத்யமென்றும் அநித்யமென்றும் பேசுவது ஏனென்னில்; அது ஆத்மாவுக்கு ஏற்பட்ட வடிவன்றே. வந்தேறியான தேஹத்தளவிலே நின்று அந்த தேஹத்தோடு கூடவே கழிந்து போவதன்றோ வருணமென்பது. ஆகவே அதனை அஸத்யமென்றும் அநித்யமென்றும் சொல்லக்குறையில்லை. அடிமையென்பது அப்படிப்பட்டதன்று; "திருமாலே நானுனக்குப் பழவடியேன்" என்கிறபடியே அது ஆத்மாவுக்கே ஏற்பட்ட வடிவாகி ஆத்மாவுள்ள வளவும் தொடருகையாலே அது ஸத்யமும் நித்யமுமாகப் பேசப்பட்டது.]

27. [இவற்றுக்கு விதிராகங்கள்] வேதங்களில் "யஜேத" என்றும் "ஜுஹுயாத்" என்று மூள்ள விதிகள் கர்மத்தை ப்ரேரிக்கின்றன. கைங்கர்யம் அப்படி விதியினால் விளைவ தன்று. "உகந்து பணி செய்து" என்று அருளிச்செய்கையாலே அநுராகமே கைங்கர்யத்தை ப்ரேரிக்கின்றது.

28. [மண்டிஞரும்]. "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் பல்லே யென்று மண்டினர்" என்று உகந்தருளின நிலங்களென்னும் திருப்பதிகளிலே மிகவும் ஊற்றமுடையாரான ப்ரபந்நர் கைங்கரியத்திற்கு ஆச்ரயபூதர். அந்தப் பாசுரத்திலேயே "மற்றையார்க்கு உய்யலாமே" என்று மற்றையாராகச் சொல்லப்பட்ட உபாஸகர் கர்மத்திற்கு ஆச்ரயபூதர்.

29. [அருள்முடியநிறுத்தி]. அவரவர்கள் எதேனும் தேவதைகளை ஆச்ரயித்துப் பெற நினைக்கும் பேறுகள் எம்பெருமான் தன்னுடைய அநுக்ரஹத்தாலே தேறுகின்றன என்னும்படி, தனக்குச் சரீரபூதர்களான தேவதைகளை நிறுத்தி அவர்களுக்கு அந்தர்யாமியாய் நின்றவிடம் கர்மத்திற்கு இலக்கு. அங்ஙனன்றியே "நல்லதோரருள் தன்னிலே காட்டினன் திருவரங்கம் உய்பவர்க்குய்யும்வண்ணம்" என்றும், "கருத்துக்கு நன்று மெளியனுய்" என்றும் சொல்லுகிறபடியே கேவலம் தன் கருணையாலே மிகவும் எளியனுய்க்கொண்டு அர்ச்சாவதாரமாய் நிற்கிறவிடமே கைங்கர்யத்திற்கு இலக்கு.

[கர்மானுஷ்டாநங்களில் அக்நி, இந்திரன், ஸோமன், வருணன், ப்ரஜாபதி, பசுபதி, ப்ருஹஸ்பதி—என்கிற தேவதைகளின் பெயர் பல காலும் வரும். அந்தத் தேவதைகளை நோக்கி வழிபாடுகள் செய்யப்படும். ஆனால் அந்த ஆராதனைகள் அந்தத் தேவதைகளுக்கு அந்தர்யாமியான எம்பெருமானிடமே போய்ச்சேருகின்றன வென்பது வேதாந்திகளின் ஸித்தாந்தம். ஆனதுபற்றியே, கர்மங்களுக்கு தேவதாந்தர்யாமி பகவான் இலக்கானவன் என்றது.]

30. [இவற்றாலே]. இப்படி தேவதாந்தர்யாமியையும் அர்ச்சாவதாரத்தையும் விஷயமாகவுடைய இத்தன்மைகளாலே, ஸாதாரண விக்ரஹ விசிஷ்டனை விஷயமாகவுடைய கர்மம் ஸாதாரண மென்றும், அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனை விஷயமாக உடைய கைங்கர்யம் அஸாதாரண மென்றும் சொல்லப்படும்.

31. [ஜாத்யாச்ரம]. ப்ராஹ்மணாதி ஜாதிகளிலும் ப்ரஹ்மசர்யம் முதலிய ஆச்ரமங்களிலும் ஜ்யோதிஷ்டோமாதி தீக்ஷைகளிலும் தர்மம் பேதிக்குமாபோலே, அத்தாணிச் சேவகமென்கிற அந்தரங்கஸேவையாகிற கைங்கர்யத்திலே அதிகரித்தவர்களுக்கு, தேவதாந்தர்யாமி விஷயமாய் தச்சரீரபூததேவதாத்வாராதாராதநமாகையாலே ஸாதாரணமாயிருந்துள்ள கர்மம் உறங்குவான் கைப்பண்டம் போலே தன்னடையே நழுவும்.

32. [ஸாதநஸாத்யங்களில்]. ஸாதநத்தில் முதலடியான கர்மமும், ஸாத்யத்தின் சரமாவதியான கைங்கர்யமும் இந்தாராதம்ய மறிந்தவர்களை "நீங்கள் வர்ணதர்ம நிஷ்டர்கள், நாங்கள் தாஸவ்ருத்தி நிஷ்டர்கள்" என்று உறவறுத்துத் துறைவேறிட்டுப் போகப் பண்ணிற்று. [இங்கு வில்லிபுத்தூர் பகவர் வ்ருத்தாந்தத்தை ஸ்மரிப்பது. திருவயிந்திரபுரத்தில் துறை வேறிட்ட ஐதிஹ்யம்.]

33. [வேதவித்துக்களும்]. வேதவித்துக்களான பூர்வபாக நிஷ்டர்கள் காயத்ரியின் உபதேசத்தாலே பிறப்பிக்குமது கர்மநிஷ்டர்க்கு ச்ரேஷ்டமான ஜந்மம்; வேததாத்பர்ய வித்துக்கள்

திருமந்த்ரோபதேசத்தாலே பிறப்பிக்குமது கைங்கர்யநிஷ்டர்க்கு ச்ரேஷ்டமான ஜந்மம்.

34 [அந்தணர்மறையோர்]. விசேஷணபூத சரீரத்வாராவந்த வருணமும், தத்ப்ரயுக்தமான வைதிகத்வமும் கர்மடர்களுக்கு நிரூபகம்; ஆத்மவஸ்துவுக்கு அந்தரங்க நிரூபகமான சேஷத்வமும், தத்ப்ரயுக்த கிஞ்சித்காரத்வமும் ப்ரபன்னர்க்கு நிரூபகம்.

35. [ஒருதலையில்]. கர்மநிஷ்டரென்று சொல்லப்பட்ட வொரு தலையில் சரீராநுபந்திகளான க்ராமகுலாதிகளையிட்டு வழங்கு மந்த வ்யபதேசத்தை கைங்கர்ய நிஷ்டரான மற்றைத் தலையி லுள்ளவர்கள், திருமந்த்ரஸித்த பகவத்ஸம்பந்தஜ்ஞாநப்ரயுக்த மாய்-சேஷத்வவிரோதியான அஹங்காராதிகளில்லாமையாலே நிர் தோஷமாயிருக்கிற இக்குலத்துக்கு அவத்ய மென்று கருதி, "வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்" என்றும், "கோயி லில் வாழும் வைட்டணவன்" என்றும் பகவதந்வயமுள்ள தே சஸம்பந்தத்தையிட்டு வ்யவஹரிப்பர்கள்.

36. [விப்ரர்க்கு]. ப்ராஹ்மணர்க்கு கோத்ர கூடஸ்தர் பரா சராதிகள்; சரண கூடஸ்தர் பாராசர்யாதிகள்; ஸூத்ர கூடஸ் தர் போதாயநாதிகள். ப்ரபன்ன ஜநங்களுக்குக் கூடஸ்தர் நம் மாழ்வார் திருமங்கை யாழ்வார் தொடக்கமான ஆழ்வார்களும், எம்பெருமானர் முதலான ஆசார்யர்களும்.

37. [அத்யயநஜ்ஞாநாது]. முதலிலே வேதத்தை ஆசார்யோச் சாரணாநுச்சாரணமுகேந அக்ஷராராசிக்ரஹணம் பண்ணுகை யாகிற அத்யயநத்தைப் பண்ணி மீமாம்ஸாச்ரவணாதிகளாலே வேதார்த்தமறிந்து ததநுரூபமான அநுஷ்டானமுண்டானால்ப்ராஹ் மண்யம் ஸித்திக்குமாபோலே, திருவாய் மொழியை ஆசார்யமு கேந ஓதி உபதேச முகத்தாலே அதன் பொருளையறியப் பெற்று அதற்குத் தக்கவாறு அநுஷ்டிக்கவும் வல்லாரானால்ப்ராஹ்மண் யவத்வம் ஸித்திப்பது.

38. [இந்தவுட்பொருள் கற்று]. வேதமோதுகைக்கு ப்ரயோஜநம் ஈச்வரனை யுள்ளபடி அறிந்து 'ஸ்வரூபாநுரூபமானபுருஷார்த்தம் கைங்கர்யம்? என்று அத்யவஸிக்கையாகையாலே இப்படிப் பட்ட ஜ்ஞாநமில்லாமல் நான்கு வேதங்களையு மதிகரித்தவர் களாயிருந்தும் அந்த வேதத்தோடு தங்களுக்கு ஸம்பந்தமின்றி அதுக்கு அசலானவர்களென்றறுதியிடப்பட்டு "விஷ்ணுபக்தி விஹீநோ யஸ் ஸர்வ சாஸ்த்ரார்த்த வேத்யபி! ப்ராஹ்மண்யம் தஸ்ய நபவேத் தஸ்யோத்பத்திர் நிரூப்யதாம்" என்று—இவர்கள் ப்ராஹ்மணரல்ல ரென்று உத்பத்தி ஆராயப்படும்.

39. [எவ்வுலகத்தெவ்]. "ஓதுவாரோத்தெல்லா மெவ்வுலகத் தெவ்வெவையும்" என்கையாலே வேதமானது ஓதுமவர்களுடைய பேதத்தாலும் லோகபேதத்தாலும் பஹுவிதமாயிருக்கும்.

40. [அதில் ஸம்ஸ்க்ருதம்]. இப்படி பஹுவிதமான வேதத்தில் ஸம்ஸ்க்ருதவேதம், த்ராவிடவேதமென்கிற பிரிவு—ஸம்ஸ்க்ருதாம்சந்தன்னில் ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வண வேதம் என்கிற பிரிவுபோலே.

[வேதராசி ஒன்றுயிருக்கச்செய்தே ஸம்ஸ்க்ருத பாஷாரூபமானவதுதன்னிலே ருக்வேதமென்றும் யஜுர்வேதமென்றும் பலபடியாகப் பிரிந்தாப்போலே பாஷாபேதத்தாலுமிப்படி பிரிந்திருக்குமென்றபடி.]

41. [செந்திறத்த]. "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" என்று ஸம்ஸ்க்ருதத்தோடே ஸஹபடிதழும் ப்ரதமோக்தழுமாகையாலே — அகஸ்த்யப்ரகாசிதமானமாத்ரம் கொண்டு ஆகஸ்த்யமென்னப்படுகிற த்ராவிடமும் அநாதியாயுள்ளதாம்.

42. [வடமொழிமறை]. 'மறை' என்று இவ்வளவே சொல்லவமைந்திருக்க "வடமொழிமறை" என்று விசேஷித்து ஸம்ஸ்க்ருத வேதமென்றது-த்ராவிடவேதமு முண்டென்று நினைத்தன்றே. [ப்ரதிகோடியில்லாதபோது இப்படி விசேஷிக்க வேண்டாவே.]

43. [வேதசதுஷ்டயாங்க]. ருக்வேதம் முதலிய நான்குக்கும் சிக்ஷா, வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், கல்பம், ஜ்யோதிஷம் ஆகிற ஆறங்கங்களும், மீமாம்ஸாந்யாயபுராண தர்மசாஸ்த்ராதிகளான உபாங்கங்களெட்டுமாயிருந்துள்ள பதினெலும்போலே, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழியாகிற இந்த த்ராவிட வேதங்கள் நான்குக்கும் திருமங்கையாழ்வாருடைய திவ்ய ப்ரபந்தங்களாறும், மற்றையாழ்வார்கள் எண்மருடைய விலக்ஷண ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாம்.

44. [ஸகல வித்யாதீக]. வேதமானது தனது அங்கோபாங்கங்களான ஸகலவித்யைகளிற் காட்டிலும் தனக்குண்டான வைபவத்தாலே மேன்மைபெற்றுப்போலே, நம்மாழ்வாருடைய நான்கு திவ்ய ப்ரபந்தழும் தம் அங்கோபாங்கங்களான மற்றெல்லா ப்ரபந்தங்களிற் காட்டிலும் ஸ்வவைபவத்தாலே மேலாயிருக்கும்.

45. [வேதநூல்]. "வேதநூல் பிராயம்" என்று அத்தை வேதசாஸ்த்ரமென்றுப்போலே இத்தையும் "இருந்தமிழ் நூல்' என்று பெரிய த்ராவிட சாஸ்த்ரமென்கையாலும், அத்தை "ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா" என்று பகவதாஜ்ஞா ரூபமாகச் சொன்னப்போலே, இத்தையும் "ஆணையாயிரம்" என்று அப்

படியே சொல்லுகையாலும், அத்தை "வசையில் நான்மறை" என்று விப்ரலம்பாதி தோஷரஹித மென்றுப்போலே, இத்தையும் "ஏதமிலாயிரம்" என்று நிர்தோஷமாகச் சொல்லுகையாலும், அத்தை "சுடர் மிகு சுருதி" என்று 'ச்ருயத இதி ச்ருதி:' என்கிற படியே பூர்வபூர்வோச்சாரண க்ரமத்திலே ச்ரவணேந்த்ரியத் தாலே க்ரஹிக்கப்படுமதாகச் சொன்னப்போலே இத்தையும் "செவிக்கினிய செஞ்சொல்" என்று ச்ராவ்யமாகச் சொல்லுகை யாலும், அத்தை "வேதநூலோதுகின்றதுண்மை யல்லதில்லை" என்று ஸத்யவாதியென்றுப்போலே, இத்தையும் "பொய்யில் பாடலாயிரம்" என்று அஸத்ய கந்தரஹிதமென்கையாலும், அத்தை "பண்டை நான்மறை" என்று அநாதியாகவும், 'நிற்கும் நான்மறை" என்று மேலழிவில்லாததாகவும் சொன்னப்போலே, இத்தையும் "முந்தையாயிரம்", "அழிவில்லாவாயிரம்" என்று அவ்வண்ணமாகவே சொல்லுகையாலும் இந்த லக்ஷணங்களெல் லாம் இரண்டுக்கு மொக்குமென்றுணரத்தக்கது.

46. [சொல்லப்பட்டவென்ற]. "குருகூர்ச் சடகோபன் சொல் லப்பட்ட வாயிரம்" என்று திருவாய் மொழியில் ஆழ்வார்க்குச் சொன்ன கர்த்ருத்வம் "அநாதிநிதநா ஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா" என்று-ஸ்ம்ருதி அந்த வேதத்தை ப்ரஹ்மா ஸ்ருஷ் டிக்தானென்றுப் போலே; [அநாதி நிதநமான ஸந்தர்ப்பம் ப்ரஹ் மாவின் வாக்கில் நின்று மாவிர்ப்பவித்த மாத்ரமு கொண்டு ப் ரஹ்மாவுக்கு அதில் சொன்ன கர்த்ருத்வம் போலே இதிலுமாழ் வார்க்குச் சொன்ன கர்த்ருத்வம் ப்ரகாசகத்வ ப்ரயுக்த மாகை யாலே, இத்தால் இதிலுடைய நித்யத்வ அபௌருஷேயத்வங்க ளுக்கு ஹானிவாரா தென்கை.]

47. [நால்வேதங்கண்ட]. நாலு வேதங்களையும் ஸாக்ஷாத்கரித்த புராணகர்த்தாவான ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் வேதாதிகளின் முன்னைய ஆநுபூர்வியை தர்சித்துச் சொன்னபடியாலே, "தர்சநாத் ருஷி:, மநநசீலோ முநி:, கவி: க்ராந்ததர்சீ" என்கிற அர்த்தங்களை நினைத்துக் கொண்டு, "ருஷேஷ்ஸ தஸ்ய மஹாத்மந:" என்றும், "வ்யாஸரூபீ மஹாமுநி:" என்றும், "கவிமுக்ய: பாராசர்ய:" என்றும் அவரை ருஷிமுநிகவி யென்றுப் போலவும், மந்த்ரதர்சி களானவர்களை பூர்வஸித்த ஸந்தர்ப்பத்தை ஸாக்ஷாத் கரித்துச் சொன்னவர்களென்னு மிடம் தோற்ற "நமருஷிப்யோ மந்த் ரக்ருத்ப்ய:" என்றும், "பகவாந் சௌநகமுநி:" என்றுமித் யாதிகளாலே ருஷிமுநி யென்றுப் போலவும், த்ராவிட வேதமான விதின் பூர்வஸித்த ஆநு பூர்வியை ஸாக்ஷாத்கரித்துப் பேசின இவ் வாழ்வாரையும், "ருஷிம் ஜ்ஞாநாமஹே" என்றும், "சடகோப முநிம் வந்தே" என்றும், "உலகம் படைத்தான் கவியாயி

னேற்கு" என்றும்—முன்புண்டான ஸந்தர்ப்பத்தை தர்சித்துப் பேசினவரென்னுமிடம் தோற்ற ருஷி யென்றும் முநியென்றும் கவி யென்றும் சொல்லா நிற்கும்.

48. [படைத்தான்கவி]. 'ப்ரளயம் கொண்ட வுலகத்தை முன்பு போல ஸ்ருஷ்டித்த ஈச்வரனுடைய கவி நான்' என்னுமர்த்தம் தோற்ற "ஒன்றியொன்றியுலகம் படைத்தான் கவியாயினேற்கு" என்று ஆழ்வார்தாம் அருளிச் செய்த பாசுரத்தை நோக்குமிடத்து—ஸ்ருஷ்டிதோறும் சந்த்ர ஸூர்யாதிஸகலபதார்த்தங்களும் யதாபூர்வகல்பநமாய் வருமாபோலே இந்தத்ராவிடவேதமும் ஸ்ருஷ்டிதோறும் யதாபூர்வ கல்பநமாய் வருமென்று தோற்று மாயிற்று.

49. [உறக்கம்தலைக்கொண்ட]. ஸம்ஹாரஸமயத்தில் நாமரூபவிபாகாநர்ஹமாய் ஸதவஸ்தமாய்க் கிடந்தவித்தை ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே விபக்தமாக்கி மஹதாதிஸகலதத்வங்களையும் அண்டகடாஹத்தையும் ஸ்ருஷ்டித்து சதுர்முகஸ்ருஷ்டிக்கு முன்னாக, ஏகார்ணவத்திலே "இவை நல்வழியாய்க் கரைசேரும் விரகு வதோ" என்று அநுஸந்திக்கையாகிற யோக நித்ரையைச் செய்தபின்பு, ஸுப்தப்ரபுத்த ந்யாயத்தாலே ஸம்ஸ்காரகதமாய்க் கிடந்த நாலு வேதங்களையும் அநுபூர்விதப்பாமல் ஸ்மரித்த தன் தகப்பனான ஸர்வேச்வரன்பக்கலில் அவ் வேதங்களை ஓதின சதுர்முகன், நித்யஸ்நாந, உபவீதக்ருஷ்ணாஜிநதாரண, பிக்ஷாந்ந போஜந, இந்த்ரியஜய, ஸதாஅத்யயநபரத்வங்களான ப்ரஹ்மசர்யலக்ஷணங்களோடே கூடினவனுய்த் தனக்கு ஜ்யேஷ்ட புத்ரனான ருத்ரன் முதலானார்க்கு அந்த வேதத்தை ஓதுவித்தாப் போலே, ஸம்ஹாரகாலத்தில் நாமரூபங்களை இழந்தாப்போலே ஸத்தையையுமிழந்து போகாமல், எந்தையான முறையாலே தன்மேலே ஏறிட்டுக் கொண்டு நோக்கி மீண்டும் காணகளேபரங்களைத் தந்து ஜ்ஞாந விகாஸத்தைப் பண்ணின ஆதிபகவான் தானே ஆழ்வார்க்கு ப்ரஹ்ம குருவாய் இரவும் பகலும் முன்னுருச் சொல்ல, ஆழ்வாரும் அநுச்சாரணம் பண்ண, இப்படி அவன்பக்கல் ஓதின இவ்வாழ்வாரும் தம் பக்கலில் க்ருதஜ்ஞரான மதுரகவிகள் போல்வாரை அப்யஸிப்பிக்க, வேதமானது தன்னோடொத்துமவர்களையிட்டு நிரூபிக்கப் படுமதாகையாலே "ஆதர்வணம், காண்வம், தைத்திரீயம்" என்று பேர் பெற்றுப்போலே, ஆழ்வார் இந்தத்ராவிட வேதத்துக்கு முதன்மையான அத்யேதாவானது பற்றி இதுவும் "சடகோபன்சொல்" என்று பேர்பெற்றது.

[ஆக, முப்பத்தேழாவது சூர்ணையில் ப்ரஸ்துதமான திருவாய்மொழியின் வேதத்வம் இவ்வளவும் வர ஸாதிக்கப்பட்டது.]

50. [இயற்பா மூன்றும்]. நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் நான்கினுள்ளுமை இயற்பாவென்னு மாயிரத்திற் சேர்ந்த மூன்றில் முதலதான திருவிருத்தம் ருக்வேத ஸ்தானீயம்; இரண்டாவதான திருவாசிரியம், யஜுர்வேத ஸ்தானீயம், மூன்றுவதான பெரிய திருவந்தாதி அதர்வணவேத ஸ்தானீயம். சாம ப்ரபந்தமான திருவாய்மொழி ஸாமவேத ஸ்தானீயம்.

51. [ருக்கு ஸாமத்தாலே]. ஸாம ஸங்க்ரஹமான ருக்கானது தனக்கு விவரணமுமாய் ரஸமுமா யிருந்துள்ள கானரூபமான ஸாமத்தாலே ரஸஸஹிதமாய் "ஹாவு ஹாவு ஹாவு" இத்யாதி யான ஸ்தோபத்தாலே விஸ்தருதமானுப்போலே ருக்வேத ஸ்தானீய மான திருவிருத்தம் நூறுபாட்டும் இசையிலே கூட்டினவாறே ஸாமவேத ஸ்தானீயமாய் ஸரஸமா யிருந்துள்ள திருவாய்மொழி யாயிரம் பாட்டாகப் பரம்பிற்று.

52. [சந்தோகனென்று]. ஸாமம் அநேகவிதமாகையாலே திரு வாய்மொழி எந்த ஸாமத்தோடொக்குமென்னில்; சாந்தோக்ய ஸாமத்தோடொக்கும். "சாமவேதகீதனை" என்று திருமழிசைப் பிரானும் "சாமியப்பன்" என்று திருமங்கையாழ்வாரும் "ஸாம வேதோஸ்மி" என்று கீதாசார்யனுஞ் சொன்ன ஸாமம் ஸாமான்ய மாகாமல் "சந்தோகன் பௌழியனைந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி" என்ற திருமங்கையாழ்வாரருளிச்செயலில் "சாம வேதி" என்று மேலே சொல்லாநிற்க முதலிலே 'சந்தோகன்' என்று சிறப்புறப் பிரித்துரைத்து "யாழ்பயில்நூல் நரம்பின் முதிர்சுவை" (திருவாய்மொழி) என்று யாழ்விஷயமாக அப்யஸிக் கப்படுவதான சாஸ்திரத்திற் சொன்ன லக்ஷணத்தையுடைய நரம பிலே பிறந்த பண்பட்ட ரஸமென்னும்படி கானஸ்வரூபம்போலே பரமபோக்யனானவன் என்று—கானஸாமான்யமாகாமல் "பண்ணி னின்மொழி யாழ்நரம்பில்பெற்ற பாலையாகி" (பெரிய திருமொழி) என்று அந்த சந்தோக ஸாமத்தின் நிறமான பாலையாகிற பண்ணை யிட்டு விசேஷிக்கையாலே ‡பச்வதிகரண ந்யாயத்தாலே "சாம வேதகீதன்" "சாமி" "ஸாமவேதோஸ்மி" என்ற விடங்களில்

---

‡ பச்வதிகரணந்யாயமாவது — வேதத்தில் பலவிடங்களில் "பசுநா யஜேத" [பசுவைக்கொண்டு யாகம பண்ணவேண்டும்] என்று சொல்லப் பட்டிருக்கிறது. நாற்கால் விலங்குகளெல்லாம் பசுவென்று சொல்லுதற் குரியவையாதலால் எந்த விலங்கு விவிக்ஷிதம்? என்று ஸந்தேகம்வரின் இதர வாக்கியங்களைக்கொண்டு சாகபசுவே (ஆடாகிற விலங்கே) விவக்ஷித மென்று மீமாம்ஸையில் நிர்ணயம் செய்யப்பட்டது. இதனால் பொது வான ஒரு சப்தத்திற்குச் சிறப்பிலே பர்யவஸாநம் தெரிவிக்கப்பட்டது. இந்த ரீதியே இங்குங் கொள்ளப்படுவதாம்.

பொதுப்படையாகச் சொல்லப்பட்ட ஸாம சப்தமும் கீழ்ச் சொன்ன சந்தோகஸாமமும் அதன் கீதமுமாகிற விசேஷத்திலே பர்யவஸிக்குமான பின்பு சந்தோக ஸாமமே இத்தால் சொல்லப் பட்டதாகையாலே இப்படி ஆழ்வார்களும் தாணும் தன்னேடு அபேதமாகச் சொல்லும்படி மிகச் சிறந்ததாய் அவனுக்கு ஆதாணீயமான சந்தோக ஸாமமே இத் திருவாய்மொழி என்பது தோன்றும்படியாக ஆழ்வார் என்ன செய்திருக்கிறரென்றால், உத்கீத ப்ரணவத்தை முதலிலே மாறுடினர்;—ஒரு ஸாமத்திற்கே ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதநம் என்று ஐந்து பாகங்களுண்டாகையாலே அவற்றுக்குள்ளே (உத்கீதமும்) ஒன்றுயிருக்கச்செய்தே "ஸாம்ந: உத்கீதோ ரஸ:" என்று ஸாமத்திற்கு ரஸமாகச் சொல்லப்படுமதாய் ப்ரணவத்தை முன்னிட்டு காநம் பண்ணப்படுமதாயிருப்பது உத்கீதமாகையால் அந்த உத்கீதத்தின் அவயவமான ப்ரணவத்தை சாந்தோக்யத்தில் முதலிலே யெடுத்தாப்போலே திருவாய்மொழியிலும் முதலிலே யெடுக்கிற வளவில் 'ஓம்' என்று சேர்த்தேயெடுத்தால் திருவாய்மொழியின் ஸர்வாதிகாரத்வம் குன்றுமென்று அந்த ப்ரணவத்தை மூன்றக்ஷரமாகப் பிரித்து அம் மூன்றையும் [உயர்வறவுயர்நல மென்கிற பாசுரத்தில்] முதல் மூன்றடிகளில் எடாநிற்கச்செய்தே முதலெழுத்தான அகாரம் முதலாக எடாதே உகாரம் முதலாக எடுக்கையாலே அக்ஷரக்ரமத்தை மாறுடினர். இங்ஙனம் மாறுடி உகாரம் முதலாக எடுத்தது எனென்னில்; அந்த சாந்தோக்யாஸ்மான உத்கீதத்திற்கு நோக்கான 'உத்' என்கிற திருநாமம் இதற்கு உள்ளுறையாயிருக்கின்றமைதோன்ற உகாரம் முதலாக வெடுத்து முடிவில் 'உயர்ந்தே' என்று தகார மிறுதியாக முடிக்கையிலே திருவுள்ளம். ஆகவிப்படி மூன்றக்ஷரமாக ப்ரணவத்தை முதலிலே மொழியா நிற்கச்செய்தே கீழ்விவரித்த கருத்தினல் எழுத்துமுறைமையை மாறுடியும், சாந்தோக்யத்தின் நடுவிற் சொல்லப்பட்ட அர்ச்சிராதியாகிற சாமகதியைத் திருவாய்மொழியில் * சூழ்விசும்பணிமுகிற் பதிகத்திற் பேசுகையாலே சாமகதியை முடிவாகக்கொண்டும், அந்த ஸாமம் "வதத் ஸாம காயந் நாஸ்தே" என்கிறபடியே பகவதநுபவத்திலுண்டான மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாக "ஹாவு ஹாவு ஹாவு" இத்யாதிப்படியே ஸாமகாநம் பண்ணி "அஹமந்நாத:" என்று களிக்கும் நித்யமுக்தரான தேவர்களுக்கு போக்யமா யிருப்பதுபோல இத் திருவாய்மொழியையும் "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்கிறபடியே பகவதநுபவ ரஸிகர்களுக்கு போக்யமாம்படியாக்கியும், "ஸர்வேப்யோபி ஹி வேதேப்ய: ஸாம கோஷோ மஹாநபூத், அந்வகோஷயதத்யர்த்தம் தேந ப்ரஹ்ம

மாண்ட மண்டப:" [எல்லா வேதங்களின் ஒலியிற்காட்டிலும் ஸாமவேத வொலியே ப்ரஹ்மாண்ட மண்டலம் வரையில் எட்டும் படி மிகப் பெரிதாயிருந்தது] என்றும், "பாடு § நல்வேதவொலி பரவைத் திரைபோல்முழங்க" என்றும் "எங்குமெழுந்த § நல் வேதத்தொலிநின்றேருங்கு" என்றும் சொல்லுகிறபடியே பெரிய கோஷத்தையுடைத்தான ஸாமவேதம்போலே திருவாய்மொழியும்

பெரிய திருவத்யயநமென்னப் பாடப்படுகையாலே ஆகவிப் படிப்பட்ட ஆகாரங்களைக்கொண்டு திருவாய்மொழியை சந்தோக ஸாமத்தில் உபநிஷத்பாகமான சாந்தோக்யதோடு ஒத்தென்று மஹான்கள் நிர்வஹிப்பர்கள்.

53. [புரவியேழொருகால்]. வழு குதிரைகளையும் ஒரு சக்கரத்தை யுமுடைத்தாகையாலே விலக்ஷணமான பெருமைவாய்ந்த தேரிலே, தேஜோ விசேஷத்தாலே திருவாழியோ டொத்து, காலசக்ர நிர்வா ஹகனை எம்பெருமானுடைய காலசக்ர விஷயமான ஆஜ்ஞை யை நடத்தி, நக்ஷத்ரம் முதலிய சோதிமண்டலங்களின் தேஜஸ் ஸைக் குறைத்து, அக்நியினுடைய தேஜஸ்ஸுக்கும் சந்திரனுடைய அம்ருதத்துக்கும் பிறப்பிடமாயும் மந்தேஹரென்னும் ராக்ஷஸர்க் குச் சிவந்த நெருப்பாயும் அர்ச்சிராதியான மோக்ஷவழிக்கு முதல்வாசலாயும், அனைவர்க்கும் கண்போன்றவனை ஸர்வேச்வர னுடைய கண்ணிலே பிறந்த கண்மணியாயும் வேதமயமாயு மிருக் கின்ற ஸூர்யமண்டலத்தில் *கீர்பூத்த செழுங்கமலத்திருத்தவிசில் வீற்றிருப்பவனுய், தோள்வளையும் மகரகுண்டலமும் கிரீடமும் ஹாரமும் திருவாழி திருச்சங்கும் பொன்னிறமான திருமேனியும் செந்தாமரைக் கண்களுமுடையனுய், பகவத் விக்ரஹத்தையும் ஆதித்ய மண்டலத்தையும் தன்னிறமாக்குகின்ற சிவந்த நிறத்தை யுடையளான பிராட்டியோடுகூட ஆதித்யனுள்ளே யிருப்பவ னுய், எப்போதும் சிந்திக்க வுரிய தேஜோரூபியா யிருக்கிற வில க்ஷண பரமபுருஷனை ப்ரதிபாதிக்கின்ற சந்தோக ஸாமத்துக்கு ரஸமாயிருந்துள்ள உத்கீதத்தில் 'உத்' என்று சொல்லப்பட்ட திரு நாமம் இத் திருவாய்மொழிக்கு உள்ளுறையானமை தோற்றும் படியாக உயர்வு என்றெடுத்து உயர்ந்தே என்று தலைக் கட்டுகை யால் உகாரம் ஆதியாயும் தகாரம் அந்தமாயுமிருக்கிற ஆத்யந்தங்

---

§ நல்வேத மென்கையாலே ஸாமவேதம் விவக்ஷிதமென்று திரு வுள்ளம்.

நம்பெருமாள் ஸந்நிதியில் முதலாயிரமும் பெரிய திருமொழியும் ஸேவிக்கப்பெறுகிற பகற்பத்துத் திருநாள் சிறிய திருவத்யயனமென்றும், திருவாய்மொழி ஸேவிக்கப்பெறுகிற இராப்பத்துத் திருநாள் பெரிய திருவத்யயநமென்றும் வழங்கப்படுதலால் ஸாமகோஷத்திற்கும் திருவாய் மொழி கோஷத்திற்கும் பெருமை ஒக்குமென்க.

களாலே, ஒரு திரு நாமமே ஆயிரம் முகமாக நின்று உலகேழு ளிக்கவல்ல திரு நாமங்களிலே ஒரு திரு நாமத்தை, ஒன்றுன கங்கை தானே உலகத்தைப் புனித மாக்குவதற்காகத் தன்னை ஆயிர முக மாய்ப் பெருக்கிணப்போலே லோகபாவனமான ஆயிரம் பாட் டாக விஸ்தரிக்கிறுரென்று வேதாசார்யபட்டர் உபதேசிப்பாம்.

[ஆக இவ்வளவால் ஆழ்வாருடைய நான்கு திவ்ய ப்ரபந்தங்களும் வேதரூப மென்பதும், அங்க உபாங்கஸஹித மென்பதும், வேதத்திற்குள்ள லக்ஷணங்களும் அமையப்பெற்றன வென்பதும், நித்யங்களும் அபௌ ருஷேயங்களுமாயிருக்கு மென்பதும், இவற்றில் இன்ன ப்ரபந்தம் இன்ன வேதஸ்தானீய மென்பதும், அதில் ஸாமவேத ஸ்தானீயமான திருவாய்மொழி ஸாமச்ரேஷ்டமான சந்தோக ஸாமோபநிஷத்துக்கு ஸமமென்பதும் நிரூபிக் கப்பட்டன. இனி ஆழ்வாருடைய நான்கு ப்ரபந்தங்கட்கும் வேதஸாம்யம் தவிர, வேத உபப்ரும்ஹண ஸாம்யமும் உண்டென்கிறது.]

54. [அன்றிக்கே ஸ்வரூபகுண]. ஆழ்வாரருளிச்செய்த திருவிருத் தம்முதல் திருவாய்மொழியீருன நான்கு திவ்யப் பிரபந்தங் கட்கும் இப்படி வேதஸாம்யம் சொல்லுகை மாத்திரமன்றியே வேதோபப்ரும்ஹண ஸாம்யமுஞ் சொல்வதுணடு; எங்ஙனே யென்னில்; எம்பெருமானுடைய ஸ்வரூப குண விபூதிசேஷ்டி தங்களை ப்ரதிபாதியா நின்றுள்ள ச்ருதியிற் சொல்லப்பட்ட ஸ்வ ரூபத்தையும் குணங்களையும் விசதமாக்குவதற்குப் பஞ்சராத்ர சாஸ்த்ரம் அவதரித்தாப் போலவும், விபூதியை விசதமாக்குவதற் குப் புராணங்கள் அவதரித்தாப்போலவும், சேஷ்டிதங்களை விச தமாக்குவதற்கு இதிஹாஸங்கள் அவதரித்தாப்போலவும், எல் லையற்ற தேஜோராசிமயமான ஸ்ரீமந்நாராயண திவ்யமங்கள விக் ரஹத்தை ப்ரதிபாதியா நின்றுள்ள வேதபாகங்களை விசதப்படுத் துவதற்கு இந்நான்கு திவ்ய ப்ரபந்தங்களும் அவதரித்தனவென் பர். [பஞ்சராத்ரபுராண இதிஹாஸங்களிலும் இந்நான்கு பிரபந் தங்களிலும் ஸ்வரூபம் குணம் விபூதி சேஷ்டிதம் ஆகிய எல்லா மூமே சொல்லப்பட்டிருந்தனவாகிலும், பஞ்சராத்ரங்களுக்கு ஸ்வரூப, குணங்களிலே நோக்கு என்றும், புராணங்களுக்கு "ஸர் க்கச் ச ப்ரதிஸர்க்கச் சவம்சோ மந்வந்தராணி ச ! வம்சாநுசரி தஞ்சைவ புராணம் பஞ்சலக்ஷணம்" என்கிறபடியே விபூதிவிஸ் தாரப்ரதிபாதநத்திலே நோக்கு என்றும் நம்மாழ்வார் அருளிச் செயல்களுக்கு திவ்ய மங்கள விக்ரஹத்திலே நோக்கு என்றும் இதிஹாஸங்களுக்குச் சேஷ்டிதங்களிலே நோக்கு என்றும் பெரி யோர்கள் நிஷ்கர்ஷித்திருக்கையாலே இப்படி வகையிட்டுச் சொல்லக் குறையில்லை. திருவிருத்தத்தில் தொடக்கத்தில் "முழுநீர் முகில் வண்ணன்" என்று திருமேனியை ப்ரஸ்தா வித்து, முடிவிலும் "மைப்படி மேனியும் செந்தாமரைக்கண்

ணும்" என்று அதனையே ப்ரஸ்தாவிக்கையாலும், திருவாசிரியத்திலும் " மீதிட்டுப் பச்சைமேனி மிகப்பகைப்ப" என்று தொடக்கத்திலே திருமேனியை ப்ரஸ்தாவித்து, மேலேயும் " தாமரைக்காடு மலர்க்கண்ணெடு கனிவாயுடையதுமாய்" என்று அதனையே ப்ரஸ்தாவிக்கையாலும், பெரிய திருவந்தாதியிலும் " நற்பூவைப் பூவீன்றவண்ணன்" என்று திருமேனியைத் தொடங்கி முடிவிலும் " கார்கலந்தமேனியான்" என்று அதனையே பேசுகையாலும், திருவாய்மொழியிலும் " துயரறு சுடரடி" என்று திருமேனியிலே தொடங்கி " புனக்காயாநிறத்த" என்று அதுதன்னிலே தலைக்கட்டுகையாலும் நம்மாழ்வாருடைய நான்கு பிரபந்தங்களுக்கும் திவ்யமங்கள விக்ரஹத்திலே பெரும்பான்மையான நோக்கு என்பது மிக்க பொருத்தம்.]

55. [கல்பாதியில் தோற்றிற்று] ஆழ்வாரருளிச்செயல்களும் மஹர்ஷிகளின் க்ரந்தங்களும் வேதங்களுக்கு உபப்ரும்ஹணம் என்னுமாகாரத்தாலே ஒருவாறு ஸாம்யம் பெற்றிருந்தாலும் நம்மாழ்வாரருளிச்செயல்களுக்குள்ள ஏற்றம் ரிஷிகளியற்றிய புராணதிகளுக்கு இல்லையென்பதை அறிவிப்பதற்காக ரிஷிக்ரந்தங்களினுடையவும் ஆழ்வாரருளிச்செயல்களினுடையவும் உத்பத்திமூலங்களை வெளியிட விரும்பி, முதலில் ரிஷி க்ரந்தங்களின் உற்பத்திக்கு மூலம் இன்னதென்கிறது.—ஸங்கீர்ணங்களென்றும் ஸாத்விகங்களென்றும் ராஜஸங்களென்றும் தாமஸங்களென்றும் சொல்லப்படுகிற அஹஸ்ஸுக்களாகிற கல்பங்களினுடைய ஆதிகளிலே கிளர்கின்ற குணங்களுக்கு ஏற்ப தாமஸ கல்பங்களில் அக்நியினுடையவும் சிவனுடையவும் மாஹாத்ம்யத்தையும் ராஜஸ கல்பங்களில் தன்னுடைய [நான்முகனுடைய] மாஹாத்மியத்தையும், ஸாத்விக கல்பங்களில் ஸர்வேச்வரனுடைய மாஹாத்மியத்தையும், (மூக்குணங்களுங் கலசின) ஸங்கீர்ண கல்பங்களில் பித்ருக்களினுடையவும் ஸரஸ்வதியினுடையவும் மாஹாத்மியத்தையும் பேசுகின்ற நான்முகக்கடவுளின் அநுக்ரஹமும்,—ஆகமம் முதலிய மோஹசாஸ்திரங்களைப் பிரவர்த்திப்பித்தவனை ருத்ரன் சுடுகாடுகளிலே திரிந்து பிணங்களின் நீற்றை உடம்பெங்கும் பூசி எலும்புமாலையைப் பூண்டு புலித்தோலுடுத்து, கங்கை சந்திரன் ஸர்ப்பம் முதலானவற்றைச் சடைமீதணிந்து ரிஷபவாஹனனுய்க் கூத்தாடியாய் விஷத்தைக் கழுத்திலுடையனுய் 'நம்மிற்காட்டில் மேம்பட்டாரில்லை' என்று தன்னை ஈச்வரனாக நினைத்திருக்கும் மயக்கம்நீங்கி ஸத்துவகுணம் தலையெடுத்து ஸர்வேச்வரனைத் தான் உபாஸிக்கும் வகையை உபதேசிக்கக் கேட்ட ஸஜாதீயர்களான அகஸ்த்ய புலஸ்த்ய தக்ஷ மார்க்கண்டேயர் நால்வரிலே ஒருவனை புலஸ்தியன் பண்ணின வரப்ரதானமும் ஆர்ஷ க்ரந்தங்களின் உத்

பத்திக்கு மூலம். [வால்மீகிபகவானுக்கு நான்முகனுடைய அநுக்ரஹமும், பாராசரபகவானுக்குப் புலஸ்த்ய ப்ரஹ்மாதமும் மற்றும் இப்புடையிலே அறியக் கடவது.]

56. [பரமஸத்வத்தோடே]. ரஜோகுண தமோகுணங்கள் கலசாமல் சுத்த ஸத்வகுணத்தோடு கூடி வேதமார்க்கங்களை நன்கு விசாரித்து அருள்செய்யுமவனுய்ப் பரிபூர்ணஜ்ஞானத்தை நிரூபகமாகவுடையனுய்ப் பிரம ருத்திரர்களுக்கு அந்தர்யாமியாய் நின்று அந்தந்தக் காரியங்களை நிர்வஹிக்கையாலே அவரவர்களைச் சொல்லும் சப்தத்தாலுஞ் சொல்லப்படுபவனுய் ஸர்வஸ்மாத்பரனை திருமகள் கொழுநனுலே மயர்வற மதிநலமருளப்பெற்றவராய் அந்த அத்வாரக [ஸாக்ஷாத்] பகவத்ப்ரஸாதத்தை மூலமாகக்கொண்டு ஆழ்வார் திவ்யப்ரபந்தங்கள் பாடினர்.

57. [கருவுள் வேறலாமை]. ஆழ்வார் எம்பெருமானருளடியாகவே பாடினரென்பதற்கு ப்ரமாணம் மூதலிக்கப்படுகிறது. பிரமனுக்கும் ருத்ரனுக்கும் அந்தர்யாமியாய்க்கொண்டு ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் முதலியவற்றைப் பண்ணுநிற்கச்செய்தே, ஜகத்ஸ்ருஷ்டி வேதோபதேசம் ஜகத்ஸம்ஹாரம் த்ரிபுரதஹனம் ஆகிறவற்றை ப்ரஹ்ம ருத்ரர்கள் தாங்களே செய்தார்களாக லோகத்தார் சொல்லும்படி செய்தாப்போலே, த்ரிமூர்த்தி ஸ்வரூபியான ஆதிகாரணபூதன் எந்த காரியத்தில் வந்தாலும் ஒரு த்ருணத்தைக்கொண்டும் காரியம் தலைக்கட்டிக்கொள்ளவல்ல ஸாமர்த்தியத்தையுடையனுகையாலே, தன்னைக் கவிபாடுவிக்க வேண்டிலுல் அதற்கீடான ஜ்ஞானசக்திகளால் குறைவற்றவர்களாய் இனிய கவிகளான வ்யாஸர் பாராசரர் வால்மீகி முதலானுரும் முதலாழ்வார்களுமுண்டாயிருக்க, அவர்களைக்கொண்டு பாடுவித்துக்கொள்ளாதே, தனக்குத் தகுதியாம்படி கவிபாடுகைக்கு அடியான ஞானம் முதலிய குணங்களில்லாதவனை என்னைத் தன்னேடொத்த ஞான சக்திகளையுடையனும்படிபண்ணி என்னுடைய வாக்கின் ப்ரவ்ருத்திக்கு முதலாய்வந்து புகுந்து என்னை ஒரு கருவியாகக்கொண்டு தான் பாடாநிற்கச்செய்தே என்னுடைய ஸம்பந்தத்தாலாகும் தோஷம் தட்டாதபடியாகக்கொண்டு, நான் புகழ்ந்தமையாலே தான் ஸ்ரீவைகுண்டநாதனுய் அங்குற்ற ஐச்வர்யம் பெற்றுகை நினைத்து எனக்கு அந்தராத்மாவாய்நின்று தன்னைத் தானே துதித்து, இப்படி இவ்வளவும் எம்பெருமான்றன்னுடைய காரியமாயிருக்க இனிய பாசுரங்களை நான் பாடினேனென நினைத்து நானுஞ் சொல்லி "குருகூர்ச் சடகோபன் சொல்" என்றவாறே நான் இத்தைப்பாடினேனென நினைத்து நாடெல்லாம் அஞ்ஜலிபண்ணும்படி என்னுடைய வசந வ்யக்தியாலே நான் கர்த்தாவாகச்

சொன்ன இனிய கவியென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினை னென்று ஆழ்வார்தாமே அருளிச்செய்தமை காண்க. [திருவாய் மொழி ஏழாம்பத்தில் * என்றைக்குமென்னை யென்கிற பதிகத்திலும், மற்றும் * பண்ணார் பாடலின்கவிகள் யாஞைப்த் தன்னைத் தான் பாடி * என்பது முதலான பாசுரங்களிலும் இது ஸ்பஷ்டம்.]

58. [தர்மவீர்யஜ்ஞானத்தாலே]. (எம்பெருமானருள் மூலமாக அவதரித்தவை அருளிச்செயல்கள் என்பதனாலுண்டான ஏற்றந் தவிர வக்த்ரு வைலக்ஷண்யத்தாலுண்டான ஏற்றமுமுண்டென்று அறிவிப்பதற்காக ரிஷிகளிற்காட்டிலும் ஆழ்வார்க்குண்டான வாசி சொல்லப்படுகிறது.)—ரிஷிகளாவென்னில் தாம் தாம் அனுட்டி்த்த தபோரூபமான தர்மத்தினுடைய சக்தியினால் ஜனித்த ஞானத்தாலே அறியவேண்டுமவற்றைத் தெளியவறிந்து மகிழ்ச்சி கொண்டவர்களாய் அந்தத் தெளிவும் மகிழ்ச்சியுமடியாக மேன் மேலும் ச்லோகங்களைத் தொடுத்துக்கொண்டே சென்றார்கள்: ஆழ்வாரோவென்னில் அதற்கு எதிர்த்தட்டாக * அபர்வறும மார்களதிபதியால் மயர்வறமதிநலமருளப்பெற்று ஞானம் பரிபக் குவமான நிலைமையாகிய பக்தியாலே பிரிவாற்றாமையில் ஞான மெல்லாம் அடிமண்டியோடே கலங்கி, நினைத்தபடி எம்பெரு மானை அனுபவிக்கப்பெறாமையாலே சோகித்து "எத்திற மூரலிதேடிணைந்திருந்தேதங்கிய வெளிதே!" என்று சொல்லி ஆறு மாதமும், "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்று சொல்லி ஆறுமாதமும் "கண்கள் சிவந்து பெரியவாய்" என்று சொல்லி ஆறுமாதமுமாக மூவாறுமாதம் மோஹித்துக் கிடந்து, ஒரு சொல் எடுக்கும்போது ஒருமலையெடுக்குமாபோலே வருத்தப் பட்டு, அனுபவம் கிடையாத வருத்தத்தினால் அப்பெருமான்படி களைப் பலகாலுஞ் சொல்லிப் பொருமிப் பொருமி யழுது தழ தழத்த ஈரச் சொற்களாலே பிரபந்தங்களை யருளிச்செய்தார். (ஆதலால் ரிஷிகளைப்போலல்லர் ஆழ்வார்).

59. [ஸ்வாத்யாயயோகங்களை]. வேதத்தையும் அஷ்டாங்க யோகத்தையும் அப்யஸித்து அவ்வழியாலே பரமாத்மாவை இப் படிப்பட்டவனென்று தெளிந்து, இப்படித் தம் முயற்சியாலே கண்ட காட்சியில் விளக்கமின்மையாலே இன்றளவும் ஸம்ஸார போக விஷயங்களான ஆசையென்கிற பலபல பாசங்களாலே கட்டுப்பட்டிருப்பர் ஓதி யுணர்ந்த ரிஷிகள்; ஆழ்வாரோவென் னில், தன்னைக் காண்கைக்கு உறுப்பாக அப்பெருமான் கொடுத் தருளின திவ்ய ஜ்ஞாநரூபமான கண்ணாலே பிரமன் சிவன் முத லானோர்க்கும் அரியனை ஸர்வேச்வரனை மிகவும் விளக்கமாக ஸாக்ஷாத் கரித்தபோதே "இந்நின்றநீர்மை இனி யாமுறுமை"

என்று அவனைக் கால்கட்டும்படி தம்முயற்சியாலே கழிக்க வொண்ணுமே பிரபலங்களான புறம்புண்டாஸ பற்றுக்கள் அவனருளாலே அடியோடு விட்டுநீங்கப்பெறுவர்.

60. [அவர்களுக்குக்காயோடு]. சிஷ்யகளுக்குக் கனிகாய் கிழங்கு சருகு காற்று தண்ணீர் ஆகியவினைவையே நாராக போலிக போக்யங்களாயிருக்கும், "ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண க்ருஷ்ணாய தத்வமிவோதிதம்" என்றும்படி நம்பெருமான் பக்கலுள்ள காதலே வடிவெடுத்தவரான ஆழ்வார்க்கோ வென்னில் *உண்ணுறுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்.

61. [அழுநீர்துளும்ப]. எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் கண்ணுங் கண்ணீருமாய்க் கடலோடு மலையோடு ஆகாசத்தோடு வாசியற எங்கும் தேடி நெஞ்சு கலங்கி "திருமாலே!" என்று கூப்பிட்டு 'எங்கே காணக்கடவேன்!' என்று இவ்விதமாக எம்பெருமான் விஷயத்தில் ஆழ்வார்படும் ஆற்றாமையெல்லாம் சிஷ்யகளுக்குப் புத்ரவிரஹத்திலேயாயிருக்கும். வஸிஷ்டபகவான் புத்ரனிறந்த வருத்தத்தினால் மரணத்தை விரும்பி மலையிலேறி விழுவது நெருப்பிலே குதிப்பது கழுத்தில் கல்லைக்கட்டிக்கொண்டு கடலிலேவிழுவது ஆகவிப்படியெல்லாம் தடுமாறினரென்பதும், வேதவ்யாஸபகவான் புத்ரவியோகம் பொறுக்கமாட்டாமல் 'புத்ரனே!' என்று வாய்விட்டுக் கூப்பிட்டு அழுதுகொண்டு ஞானப்பெருமையால் அலமந்து திரிந்தாரென்பதும் புராணப்ரஸித்தம்.

62. [பலஸாதனதேவதா]. கீழ்ச்சொன்னவைமாத்ரமன்றியே, பலன், ஸாதநம், தேவதாந்தரம் ஆகிய இவ்விஷயங்களில் சிஷ்யகளினுடைய ப்ரதிபத்தியிற் காட்டில் ஆழ்வாருடைய ப்ரதிபத்திக்கு நெடுவாசியுண்டு.—எம்பெருமானே யடைவதே பலனாகவும் கர்மஜ்ஞாநாதிகளே உபாயமாகவும் இந்திரன் முதலிய தேவதைகளுக்கு அந்தர்யாமியான ஈச்வரனே உத்தேச்யனாகையாலே அந்தத் தேவதைகள் அநுவர்த்திக்கவுரியராகவுமாயிற்று சிஷ்யர்கள் பேசுவது; ஆழ்வார் அருளிச்செய்வதோ வென்னில், கைங்கரியமே புருஷார்த்தமாகவும், அதனைப் பெறுவிப்பது ப்ரபத்தியேயாகவும் இதர தேவதைகள் அநுவர்த்திக்கவுரியரல்லராகவும்.

63. [ராமாயணம் நாராயண] (அருளிச்செயல் லைலாஷண்யம்). ராமகதையைச் சொல்லுவதாக ராமாயணமென்று தொடங்கி, கங்கையின் உற்பத்தி, ஸுப்ரஹ்மண்யனுடைய உற்பத்தி, புஷ்பகவர்ணநம் முதலான கதைகளைப் பரக்கப் பேசுவதால் அஸத்கீர்த்தநம் பண்ணி வாக்கில் அசுத்திபடைத்தான் வால்மீகி. 'நாராயணகதை' என்பதாகத் தொடங்கி ஸம்பவ பர்வத்திலே பீஷ்மர் முத

லான பற்பலருடைய உத்பத்தி ப்ரகாரங்களை விரிவாகப் பேசுகை யாலும் .'பூசல் பட்டோலை [யுக்தி டிஷ்டகரம] என்னும்படி பாரதப்போர்வகைகளையே பக்கநின்று வர்ணித்தபடி பாலும் அஸங்கீர்த்தநத்திலே மிகவும் பரந்து அசுத்தமான வாக்கை பகவத் கதை மொழியாகிற கங்கையாலே சுத்தமாக்குகிறேனென்று சுத்திபண்ணினன் வேதவ்யாஸ பகவான். ஆகவிப்படி, தொடங் கினபடிக்குச் சேராமே அஸத்கீர்த்தநத்தைப்பண்ணி வாக்கை அசுத்தமாக்கிப் பின்பு அதற்கு சுத்திபண்ணவேண்டாதபடி "திரு மாலவன் கவியாதுகற்றேறன்" என்று திருமால் விஷயமான கவி யென்று அடியில் வாயோலையிடடபடியே, இதர விஷய ஸம்பந்த முள்ள ஒரு சொல்லும் ஊடு கலசாதபடி சொற்களைத் தெரிந் தெடுத்து விஷயத்திற்குத்தகுதியான சொற்களாலே சொல்லப் பட்டதாய் ஸர்வேச்வரனுக்கு வாய்த்ததான நம்மாழ்வாருளிச் செயல் வேதங்களில் புருஷஸூக்தமும் தர்மசாஸ்த்ரங்களில் மநுஸ் மிருதியும் மஹா பாரதத்தில் கீதையும் புராணங்களில் ஸ்ரீ விஷ்ணு புராணமும் ஸாரமாயிருக்குமா போலே, வேறு பேச்சின் வாஸ நையுமற்ற திவ்விய ப்ரபந்தங்களுக்குள் ஸாரமாயிருக்கும்.

64. [குருசிஷ்ய] (ஆழ்வாருளிச்செயலோடு இணங்காதவை தள்ளுபடி யென்றல்.) திவ்ய ப்ரபந்தங்களுள் ஸாரமான நம்மாழ்வார் ஸ்ரீஸூக் திகளின் ப்ராமாண்யாதிசயத்தை விளக்குதற்காக ஆழ்வார்களின் ஐககண்டியத்தையும் அவர்களில் தலைவரான நம்மாழ்வாருளிச் செய்த பிரபந்தங்களின் பரம்பாட்டையும் தெரிவித்துக்கொண்டு, இப்படிப்பட்ட விவற்றுக்குச் சேராத சாஸ்த்ரங்கள் உபேக்ஷிக்க வேண்டியவை யெனப்படுகிறது. ரிஷிகளில் ஆசார்ய சிஷ்யர்க ளான வ்யாஸ ஜைமிநிகளில் ஆசார்யரான வியாஸருடைய க்ரந்த மான ப்ரஹ்ம ஸூத்ரத்தோடு சிஷ்யனை ஜைமிநியினுடைய க்ரந்தமான பூர்வ மீமாம்ஸைக்கு நிரீச்வரவாதம் முதலியவற்றால் வந்த விரோதத்தைப் பரமதவாத-அந்ய பரத்வ வாதங்களாலே பரிஹரிக்க வேண்டினப்போலே, ஆழ்வார்களிலும் பரஸ்பரம் வசன விரோதமுண்டாய் அதற்கொரு பரிஹாரம் பண்ணவேண் டாதபடி "செஞ்சொற் கவிகாள்!" என்றும் "செந்தமிழ் பாடு வார்" என்றும் "இன்கவி பாடும் பரமகவிகள்" என்றும் "பதியே பரவித் தொழுந் தொண்டர்" என்றும் "ஆடிப்பாடி அரங்கவோ வென்றழைக்குந் தொண்டர்" என்றும் இப்படி ஒருவர்க்கொரு வர் சிலாகித்துக்கொண்டு ஒருவர் பேசினதே எல்லாரும் பேசும் படி ஏககண்டரான ஆழ்வார்களுள் மிகச் சிறந்தவரானநம்மாழ்வா ருடைய அதி விலக்ஷண திவ்ய ஸூக்திகளைக்கொண்டு வேதத்திலும் அதன் உபப்ரும்ஹணங்களிலும் ஸந்தேஹாஸ்பதமான அர்த்தங்

களை நிர்ணயிக்கவேண்டும்படி யிருக்கையாலே, ப்ரதிபாத்ய வஸ்துவை உள்ளபடி ப்ரதிபாதிக்கும் ஸாமர்த்தியமுடைய இவ்வருளிச் செயலுக்குச் சேராத சாஸ்திரங்கள் மநுதர்ம சாஸ்த்ர விபரீதமான ஸ்மிருதிகள்போலே கழிக்கப்படுவனவாம்.

65. [பாஷ்யகாரர் இதுகொண்டு]. அருளிச்செயல்கொண்டு சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயித்தவர்கள் உண்டோ வென்னில், உண்டு; பாஷ்யகாரர் ஸ்ரீ பாஷ்யம் செய்தருளுமபோது ஸ்ரீமத்ர வாக்யங்களில் ஸந்தேஹ கோசரமான அர்த்தங்களையெல்லாம் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளைக்கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டருள்வர்.

66. [அநுக்குமூலம்]. அந்த ஸ்ரீபாஷ்யகாரர் தாமும் அருளிச்செயலைக்கொண்டு ஸ்ரீமத்ர வாக்யங்களை யொருங்கவிடுவதற்கு மூலமேதென்னில்: "விதயச் சவைதிகா: த்வதீயகபீர மதோநுஸாரிணை:" என்று ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தாரருளிச்செய்த ஸ்ரீ ஸூக்தியே மூலமாகும். [இவ்வாழ்வார்கள்போல்வார்நினைவை சாஸ்த்ரங்கள்தாம் பின்செல்லுமதாகவன்றே ஆளவந்தாரருளிச் செய்தது.]

67. [ஆப்தர்க்கு இவர்]. இப்படி மஹராவித்வான்கள் இது கொண்டு சாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்கவேண்டும்படி வேதோப ப்ரும்ஹணங்களெல்லாவற்றிலும் மிகப் பிரபலமாயும் நாலிட வேதமாய்க்கொண்டு வேதஸமமாயும் ஆப்தமமாயு மிருக்கிற இத் திவ்யப்பிரபந்தத்திலே ஆப்தர்க்கு உறுப்பாக இவர் வேறே சில ஸாக்ஷ்யங்களை யெடுப்பானேன்? "உளன் சுடர் மிகு சுருதிபுள்" என்றும், "மார்க்கண்டேயனும் ‡ கரியே" என்றும் "பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை" என்றும் வேதத்தையும் மார்க்கண்டேயனையும் அர்ஜுநனையும் ஸாக்ஷிகளாக இட்டிருக்கிறதே, இது வன்? என்னில்; பரம ஆப்தமாக இசையப்பட்ட வேதமும் ஆப்தர்க்கு உறுப்பாக வ்யாஸரையும் மநுவையும் ப்ரஹ்மவாதிகளையும் சொன்னப்போலே யென்று கொள்க.

68. [பாரதகீதைகளின்]. ஆழ்வாரருளிச்செயலை உபப்ரும்ஹணமாகச் சொன்னபக்ஷத்தில் வேதத்திற்கு இதுவொரு வியாக்கியானமென்றதாகுமே யொழிய "வேதரூபமிதம் க்ருதம்" என்றும் த்ராவிடம் ப்ரஹ்மஸம்ஹிதாம் என்றும் மஹான்கள் இதனை வேதமாகச் சொல்வது கூடுமோ வென்னில்; வேதத்திற்கு உபப்ரும்ஹணமான மஹாபாரதமும் அதில் ஸாரமான கீதையும் "வேதாந் அத்யாபயாமாஸ மஹாபாரதபஞ்சமாந்" என்றும் "பகவத்கீதாஸு உபநிஷத்ஸு" என்றும் சொல்லுகிறபடியே வேதமும் உபநிஷத்து

‡ கரி = ஸாக்ஷி.

மாகிறுப்போலே இதுவும் வேத வியாக்கியானமான உபப்ரும் ஹணமாணலும் வேத ரஹஸ்யமுமாகக் குறையில்லை. [வேதரஹஸ்ய மாவது-வேதத்தில் ரஹஸ்யமான உபநிஷத்து. கீழே சாந்தோக்ய ஸமமாகவன்றே இதனைச் சொல்லிற்று.]

69. [உதாத்தாதி]. (வேதத்திற்கும் உபப்ரும்ஹணங்களுக்குமுள்ள அலங்காரங்கள் அருளிச்செயலுக்கும் ஒக்குமென்றல்). வேதத்திற்கும் அதன் உபப்ரும்ஹணங்களுக்கும் உதாத்த அநுதாத்த ஸ்வரித ப்ரசயங்க ளென்கிற ஸ்வர விசேஷங்களும் க்ரம ஜடா பஞ்சாதிகளும் ப்ரச்ந அஷ்டகங்களும், அத்யாயம் அம்சம் பர்வம் ஸ்கந்தம் முதலான வைகளும், பத வாக்ய பாத வ்ருத்த காண்ட அத்யாயங்களுமாகிற பல அலங்காரங்கள் உண்டானப்போலே அருளிச்செயலுக்கும், குற்றெழுத்து முதலான பதின்மூன்றெழுத்தும் நேரசை நிரை யசை யென்கிற இரண்டசையும் ஆசிரிய வுரிச்சீர் முதலான மூப்பது சீரும் குறளடி முதலான ஐந்து அடியும் மோனை முதலான நாற்பத்து மூன்று தொடையும் நேர்நிரை நிரைநிரை முதலானவையும் செப்பலோசை முதலான ஓசையும் நேரொன் ருசிரியத்தளை முதலான வெழுதளையும் தாழிசை துறை விருத்த மென்கிற பாக்களினம் மூன்றும் ப்ரபந்த ரூபத்வமாகிற யாப்பும் வெண்பா முதலான பாக்களும் முதிர்ந்த குறிஞ்சி முதலான பண்ணும் நிஷாதம் முதலிய இசைகளேழும் கஜகர்ணதி தாளமும் பத்து என்கிற அவாந்தர பரிச்சேதமும் நூறு என்கிற ப்ரதான பரிச்சேதமும் ஆயிர மென்கிற மஹா பரிச்சேதமுமாகிற கவிக்குச் சொல்லுகிற ஸகல அலங்காரங்களுமுண்டு.

70. [அதவா வேதவேத்ய]. (அருளிச்செயல் அபூர்வமான வொரு வேதாவிர்ப்பாவ மென்றல்). கீழ்ச்சொல்லியபடி அருளிச்செயலுக்கு வேதஸாம்யமும் உபப்ரும்ஹண ஸாம்யமும் உண்டென்று உப பாதித்த வழியன்றியே, வேதத்தின் ஆவிர்ப்பாவ விசேஷமாய் இவ்வாழ்வாராலே நிர்மிதமாக ப்ரஸித்தமாயிருப்ப தொன் றென்று மற்றொரு யோஜனையுஞ் சொல்லப்படுகிறது—"வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸா தாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்று வேத ப்ரதிபாத்யனை பரமபுருஷன் சக்ரவர்த்தி திருமகனுய் அவதரித்தவளவில் அபௌருஷேயமான வேதமும் ஸ்ரீ வால்மீகிபகவான் பக்கல் நின்றும் ஸ்ரீராமாயணமாகத் திருவவதரித்தென்கிற நியாயத்தி னல், பலவிடங்களிலும் எம்பெருமானுடைய பரத்துவ நிலைமை யைப் பேசுகையாலே பரத்வத்தில் நோக்கான வேதமானது அப்பெருமானுடைய வ்யூஹாவஸ்தையிலே அதன் குணம் ரூபம் க்ருத்யம் முதலியவற்றைப் பேசுதற்காக அதுவே பாஞ்சராத்ர

மாக அவதரித்தது. அப்பெருமானுடைய அந்தர்யாமித்வ நிலைமையில் வியாப்தியைப் பேசுதற்காக அந்த வேதமே மநுஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளாக அவதரித்தது; அப்பெருமானுடைய ராம க்ருஷ்ணாதி விபவாவதார நிலைமையில் அவ்வவதார சேஷ்டிதம் முதலியவற்றைப் பேசுதற்காக அந்த வேதமே ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் முதலிய இதிஹாஸங்களாக ஆவிர்ப்பவித்தது. அப்படி விபவாவதாரங்களால் ரக்ஷித்தருளுந் தெம்பெருமான் அவதாரத்திற்குப் பிற்பட்டவர்களுந்தம் இழுவாதபடி மிகவும் ஸுலபனாக அர்ச்சாவதாரமானவளவில் அர்ச்சைபின் பெருமையைப் பேசுதற்காக அந்த வேதந்தானே தானும் ஸர்வ ஸுலபமாய் ஸர்வாதிகாரமாகைக்குறுப்பாகத் தமிழ்வடிவாய்க் கொண்டு ஆழ்வார் பக்கலிலே ஆவிர்ப்பவித்ததாகையாலே ஸம்ஸ்க்ருத வேதத்தை த்ராவிட வேதமாகச் செய்தாரென்று சொல்லுவதொரு ப்ரகாரமுமுண்டு. [அந்த வேதம் முதலானவை யெல்லாவற்றிலும் எல்லாம் சொல்லிற்றேயாகிலும் ஓவ்வொன்றுக்கு ஓவ்வொன்றிலே நோக்காகக் கடவது.]

71. [மண்ணுடினஸ்ஹ்யஜலம்.] அபௌருஷேயமான வேதமே இப்படி அருளிச்செயலான வொரு நிலைமையையடைந்ததாகில் கலங்கினதாய் உட்பொருளை ஸ்பஷ்டமாக வெளிக் காட்டுந் தன்மை குன்றப்பெறுதோவென்னில்; ஆழ்வார் வக்தாவாக அமைந்த விசேஷத்தால் அது வேறுபடியாக ஆயிற்றென்பது த்ருஷ்டாந்தத்தோடு மூதலிக்கப்படுகிறது.—உயர்ந்த நிலத்தில் நின்றும் வேகத்தோடேவந்து பூமியில் விழுகையாலே மண்ணோடு கூடியதாய்க் கலங்கி ஸஹ்யபர்வதத்தில் நின்றும் வருகிற ஜல மானது § தோதவத்தித் தாய்மறையோர் துறையிலும் ¶ பொருநற் சங்கணி துறையிலும் வந்தவாறே துறைவாசியாலே தெளிந்த நீராய்த் தனக்குள்ளே கிடக்கிற பொருள்களை நன்கு பிரகாசிப் பிக்குமாபோலே * பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி * என்று வேதம் தான் நடுங்கும்படி, அதன்கருத்தறி யாமல் தம் நெஞ்சில் தோன்றினதே சொல்லுகிற சிற்றறிவாளர் கலக்கக் கலங்கின வேதமானது யதார்த்தஞானத்துறையான இவ் வாழ்வார் பக்கலிலேவந்து சேர்ந்து முன்புள்ள கலக்கம் தீர்ந்து தெளிவையடைந்து அகாதமாய்ப் பரம ரஹஸ்யமான அர்த்த விசேஷங்களையெல்லாம் அறிவிக்கவல்லதாயிற்று. [இதனால், தெள்ளிதான பொருளை வெளியிடுந்தன்மை வேதத்திற்கு அரி

---

§ தோதவத்தித் துறையென்பது ஸ்ரீரங்கத்தில் திருக்காவேரியிலும் சங்கணி துறையென்பது ஆழ்வார்திருநகரியில் தாமிரபரணியிலும் ப்ரஸித்தம்.

தென்றும், அருளிச்செயலே கலக்கமறத் தெளிந்தபொருளைக் காட்டவல்லது என்றும் கூறியபடி. "செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவேவாதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்ற தூப்புல் பிள்ளையின் பாசுரமும் இக்கருத்திலேயமைந்ததாம்.]

72. [மேகம்பருகின] (வேதத்திற்குப்போல் அருளிச்செயலுக்குச் சில நியமங்களில்லாமைக்குக் காரணங்கூறுதல்) வாயில் வைக்க வழங்காதபடி விரஸமாயும் ஸ்பர்சகாலாதி நியமங்களோடு கூடினதாயுமிருக்கின்ற கடல் நீரானது மேகத்தாலே உட்கொள்ளப்பட்டு வர்ஷிக்கப்படுமளவில் அந்த மேக ஸ்பர்சத்தாலே வைரஸ்யம்நீங்கி எல்லாக்காலத்திலும் எல்லார்க்கும் போக்யமாவதுபோல, அத்யயநகால நியமத்தையும் அதிகாரி நியமத்தையுமுடைய வேதவித்யாஸமுத்ரவசனமானது ஆழ்வாருடைய திருவாக்கில் புகுந்து கால நியம அதிகாரி நியமங்களில்லாத தன்மையை அடைந்து திருத்தம் பெற்றவாறே எப்போதும் எல்லாரும் அதிகரிக்கலாம்படியாயிற்று.

73. [ம்ருத்கடம் போலன்றே]. வடமொழி வேதம்போலன்றியே அருளிச் செயல் ஸர்வாதிகாரமாயிருப்பதனல் இதற்கு யாதொருகுறையும் வாராது;—மண்குடம் நியதாதிகாரிகளே தொடவுரியதாய் எல்லார்க்கும் தொட வொண்ணுதாயிருக்க, பார்த்திவமாயிரா நிற்கச்செய்தே பொற்குடம் எல்லார்க்கும் தொடவுரியதாயிராநின்றதன்றே. இத்தால், காரணமான வேதம் அதிக்ருதாதிகாரமாஞலும் அதன் கார்யமான திவ்யப்ரபந்தம் ஸம்ஸ்கார விசேஷத்தாலே ஸர்வாதிகாரமாயிருக்கக் குறை யில்லையென்பதும், இந்தஸர்வாதிகாரத்வம் சிறப்புக்கேஉறுப்பென்பதும்தேறிற்றும்.

74. [பெரும்புறக்கடலும்] (வ்யூஹ, அந்தர்யாமி, விபவநிலைமைகளில் அவகாஹிக்கப்பெருதார்க்கு ஸுலபமாக அர்ச்சாவதாரம் அமைந்ததுபோல் பாஞ்சராத்ர ஸ்மிருதி இதிஹாஸங்களில் அதிகாரமற்றவர்களுக்கு எளிதாக அருளிச்செயல் அமைந்ததென்றல்) ப்ரமாணமான வேதமும் ப்ரமேயமான எம்பெருமானும் பலபல அவதாரங்களைச் செய்கின்ற விஷயம் முன்னமேசொல்லப்பட்டது; அதாவது - வேதம் பாஞ்சராத்ரமாகவும் ஸ்மிருதியாகவும் இதிஹாஸ புராணமாகவும் அருளிச் செயலாகவும் வடிவெடுத்ததென்றும், வேதவேத்யனை பரமபுருஷனும் வ்யூஹமாயும் விபவமாயும் அந்தர்யாமியாயும் அர்ச்சையாயும் வடிவெடுத்தனனென்றும் சொல்லிற்று. அளவிடமுடியாமையிலே வேதமும் ஒரு கடல், எம்பெருமானும் ஒரு கடல். அவகாஹிக்கமுடியாத சில பாகங்களும் அவகாஹிக்கக்கூடிய ஒரு பாகமும் கடலுக்கு உண்டு. அலையெறிந்து கிடக்குமிடமும், நிலைகாண

வொண்ணுதபடி ஆழ்ந்திருக்குமிடமும் அவ்காஹிக்கமுடியாத பாகமாகும்; கழிகளாய்க்கொண்டு ஓடுமிடம் அவகாஹிக்கக் கூடிய இடமாகும். அளவிடமுடியாமைபற்றிப்* பெரும்புறக் கடலென்று சொல்லப்பட்ட எம்பெருமாணுகிற ப்ரமேயமீனது (க) கடல் அலை செறிந்து நிற்குமிடம்போலே ஞாணம் முதலிய ஆறு குணங்கள் நிறைந்த ஜான் அவற்றிலே இரண்டிரண்டு குணங்களைப் பிரகாசிப்பித்துக்கொண்டு லெங்கர்ஷணாதி ரூபத்தாலே வ்யூஹித்திருக்குமிடத்திலும் (உ) கடலில் நிலைகாணவொண்ணுத படி ஆழ்ந்திருக்குமிடம்போலே கர்ம்ஹேற் காணவொண்ணுமே அந்தர்யாமியாய் நிற்குமிடத்திலும், (ரூ) கடலானது கழிக ளாய்க்கொண்டு ஓடுமிடம் போலே கண்காணவந்து தோன்றி ஞாலத்தூடே நடந்து திரிந்த அவதாரமான விடத்திலும் (க) தேச தாரத்தாலும் (உ) இந்த்ரியதாரத்தாலும் (ரூ) காலவிபர்யயத்தாலும் கிட்டியநுபவிக்க முடியாதவர்களுக்கு "அதிலே தேங்கினமடுக் கள் போலே அர்ச்சாவதாரம்" என்கிறபடியே தேச காலாதி விப்ரகர்ஷ லவலேசமுமில்லாதபடி கல்பிக்கப்பட்ட மிகவும் ஸுலபமான விஷயம் ப்ரமேயத்தின் ஆவிர்ப்பாவ பரம்பரையில் கடைசி அவஸ்தையான அர்ச்சாவதாரம். இப்படியே, அளவிட முடியாததாய்ப் பரத்வபரமான வேத ஸமுத்ரமானது (க) கடலின் அலை செறிந்தவிடம்போலே வ்யூஹப்ரதிபாதகமாய்க் கொண்டு வேறொரு நிலைமையெய்திப் பாஞ்சராத்ரமானவிடத்திலும் (உ) கடலில் ஆழ்ந்த விடம்போலே அந்தர்யாமித்வ ப்ரதிபாதகமாகி, அவகாஹித்து அர்த்தங்காண வொண்ணுதபடி மந்வாதி ஸ்மிருதி ரூபமான விடத்திலும் (ரூ) ஸமுத்ரம் கழிகளாயோடுமாபோலே அவதார ப்ரதிபாதகமாகி இதிஹாஸரூபமாய்ப் பரம்பின விடத்தி லும் ஜ்ஞான சக்தி முதலியவற்றின் ஸங்கோசத்தினால் அவகா ஹித்து விடாய் தீரமாட்டாதவர்களுக்குச் சாய்காலம்போலே சிரமமில்லாமல் உபஜீவிக்கலாம்படி மிகவும் எளிதான சாஸ்திரம் ப்ரமாணபூதமான வேதத்தினுடைய ஆவிர்ப்பாவ பரம்பரையின் கடைசி அவஸ்தையான திருவாய்மொழி.

75. [வீட்டின்ப.] (ஆழ்வார்பக்கலில் ஜாதிரூபணம் பண்ணலாகா தென்றல்.) ப்ரமாணத்தினுடையவும் ப்ரமேயத்தினுடையவும் வைபவம் விரித்துரைக்கப்பட்டதுகீழ்; இனி ப்ரமாதாவான ஆழ்வாருடைய வைபவம் விரித்துரைக்கப்படுகிறது. ப்ரமாண மும் ப்ரமேயமும் இப்படி விலக்ஷணமாயிருந்ததாகிலும் இந்த ப்ரமாணமாகிய திருவாய்மொழியை அருளிச்செய்த ஆழ்வார் நான்காம் வருணத்தவரன்றோவென்னில்; இப்படி சங்கித்தாலும் மஹாபாப முண்டென்னப்படுகிறது.—பகவத் விஷயமென்றால்

உள் கனிந்திருக்குமவர்களுடைய திருமாளிகைகளிலே அவர்களு கந்த வொரு த்ரவ்யத்தைத் திருமேனியாகக் கொண்டிருந்து இன்பத்தை விளைக்கிற அர்ச்சாவதாரத்தைப் பார்த்து 'இது இன்ன லோஹமன்றே' என்றுல் எப்படிப்பட்ட பாபமுண்டோ: விதேசஷஜ்ஞர்களுக்குப் பரமானந்தத்தை விளைப்பதான திருவாய் மொழியை நோக்கி 'இது தமிழ்ப்பாஷையன்றே' என்றிகழ்ந் தால் எப்படிப்பட்ட பாபமுண்டோ, அப்படிப்பட்ட பாபம் ஆழ்வார்பக்கல் ஜாதியைப்பற்றின இகழ்ச்சி செய்தலாலு முண்டாகும்.

76. [பேச்சுப்பார்க்கில்.] (அருளிச்செயலின் பாஷையையும் ஆழ்வா ருடைய ஜாதியையும் கணிசிக்கலாகா தென்பதைத் திடப்படுத்தல்). விஷய வைலக்ஷண்யத்தை நோக்காமல் 'ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ளதும் ஜன்ம கௌரவமுடையார் சொல்லுவதுந்தான் ஆதரிக்கத்தக்கது' என்று கொள்ளுகிற பக்ஷத்தில், * கள்ளநூல் * பொய்ந்நூல் * எனறு கழிக்கப்பட்ட ஸம்ஸ்க்ருத பாஷாமயமான பாஹ்ய சாஸ்திரம் முதலானவையும் பரிக்ரஹிக்க வேண்டியவைகளாக ப்ரஸங்கிக்கும்; அப்படியே, மத்ஸ்யகந்தையின் மகனுக வியாஸன் சொன்ன ஐந்தாம் வேதமான மஹாபாரதமும், * கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப்பெற்றுக் காடுவாழ் சாதியுமாகப்பெற்ற க்ருஷ்ணன் சொன்ன கீதோபநிஷத்தும் த்யாஜ்யமாகவும் ப்ரஸங்கிக்கும்.

77. [க்ருஷ்ண க்ருஷ்ணத்வைபாயந.] (வியாஸருடையவும் கண்ண னுடையவும் உத்பத்தியிற்காட்டிலும் ஆழ்வாரவதாரத்திற்குண்டான சிறப்பு.) கண்ணபிரான் * ஒருத்தி மகனைப்பிறந்து ஓரிரவிலொருத்திமக னனவன்; வியாஸனே கன்னிகையின் மகனைப் பிறந்தவன். இவர்களுடைய உத்பத்திபோலன்று ஆழ்வாருடைய திருவவ தாரம்; எனெனில்; "நெடுங்காலமும் கண்ணன் நீண்மலர்ப்பாதம் பரவிப் பெற்ற" என்று (திருவிருத்தத்தில்) தாமே பேசலாம்படி யாய், ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண த்ருஷ்ணுதத்வமிவோதிதம்" என்று (ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்) பட்டர் அருளிச்செய்தபடியே பகவத்விஷயமான ஆசைதான் ஒருவடிவுகொண்டாப்போலிருக் கிறவராயிற்று ஆழ்வார். ஆதலால், இடைச்சிவயிற்றிற் பிறந்த க்ருஷ்ணனுடையவும் வலைச்சி வயிற்றிற் பிறந்த க்ருஷ்ணத்வை பாயநனுடையவும் உத்பத்தியிற் காட்டில் ஆழ்வாரவதாரம் மிகச் சிறந்ததே.

78. [பெற்றும் பேறிழந்தும்.] (ஆழ்வாரவதாரச் சிறப்பை நன்கு நிலை நாட்டுதற்காக ஸ்ரீக்ருஷ்ண, வ்யாஸ மாதாக்களினுடையவும் ஆழ்வாரது தாயாருடையவும் தன்மைகளைத் தெரிவித்தல்.) "திருவின்வடிவொக்குந்

தேவகிபெற்ற" என்கிறபடியே க்ருஷ்ணனைப் பிள்ளையாகப் பெற்றிருக்கச்செய்தேயும் அவனுடைய பால்யரஸம் ஒன்றும் அநுபவிக்கப்பெறுமையாலே "திருவிலேனென்றும் பெற்றிலேன்" என்று பேறிழந்தவளான தேவகியும் "த்வீபே பதரிகாமிச்ரே பாதராயணமச்யுதம், பராசராத் ஸத்யவதீ புத்ரம் லேபே பராந்தபம்" என்கிறபடியே வியாஸனைப் பிள்ளையாகப் பெற்றிருக்கச்செய்தேயும் அவனுள்ள ரஸமொன்றும் அநுபவிக்கப்பெறுதபடி "புந: கந்யா பவிஷ்யதி" என்ற பராசர வசனத்தாலே மீண்டும் கந்யகையான மத்ஸ்யகந்தையும், "எல்லாந் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே" என்னும்படி க்ருஷ்ணனுடைய பால சேஷ்டிதம் முதலியனவெல்லாம் அநுபவிக்கப்பெற்றிருக்கச் செய்தேயும் "தத்துக்கொண்டாள்கொலோ தானே பெற்றாள் கொலோ" என்றும் "இம்மாயம்வல்லபிள்ளை நம்பீ! உன்னை யென்மகனே யென்பர் நின்றூர்" என்றும் அவனுடைய அதி மாநுஷ சேஷ்டிதங்களடியாகத் தானும் பிறரும் சங்கிக்கும் படியான மாத்ருத்வத்தையுடைய யசோதையும்—ஆகிய மூன்று தாய்மார்களும் "நெடுங்காலமுங் கண்ணன் நீண்மலர்ப்பாதம் பரவிப்பெற்ற" என்றும் "நங்கைமீர்! நீரும் ஓர் பெண்பெற்று நல்கினீர், எங்ஙனே சொல்லுகேன் யான் பெற்ற வேழுலை" என்றுஞ் சொன்ன ஆழ்வார்திருத்தாயார்க்கு இறையும் ஒப்பாக மாட்டார்களே.

79. [மீநநவநீதங்கள்]. மீன் வெறி நாறுகிற வியாஸர் பிறப்பிடமும் வெண்ணெய்முடை நாறுகிற கண்ணன் பிறப்பிடமும் "வெறிகொள் துழாய் மலர்நாறும் விணையுடை யாட்டியேன் பெற்ற" என்றும், "அன்றிமற்றோருருபாயமென் இவளந்தண்டு ழாய் கமழ்தல் குன்றமாமணிமாடமாளிகைக் கோலக் குழாங்கள் மல்கித், தென்திசைத் திலதம்புரை குட்டநாட்டுத் திருப்புலியூர், நின்றமாயப்பிரான் திருவருளாம் இவள் நேர்பட்டதே" என்றும் தாமே அருளிச்செய்யுமாறு பகவத்ஸம்பந்தப்ரகாசகமான திருத் துழாய்ப் பரிமளம் கமழப்பெற்ற ஆழ்வாரவதார ஸ்தலத்திற்கு ஈடாகுமோ? ஆகாது.

80. [ஆற்றில்துறையில்] வியாஸர் பிறப்பிடம் - ஆறுதான் அசிக்ஷ பரிக்ரஹமுடைய கங்கையாய், துறை ஓடத்துறையாய், ஊர் வஹ்னிச்சேரியா யிருக்கும். கண்ணன் பிறப்பிடம்—ஆருனது க்ருஷ்ண ஜலப்ரவாஹமுடைத் தாகையாலே தமோமயமான யமுனையாய், துறையும் அதில் காளியவிஷதூஷிதமான துறையாய், ஊர்தானே அறிவொன்று மில்லாத ஆய்க்குலமாயிருக்கும். இனி இவ் வாழ்வாருடைய உத்பத்தி ஸ்தலத்தை ஆராய்ந்தாலோ, ஆறு "பவள

நன்படர்க்கீழ்ச் சங்குறை பொருநல்" என்று விலக்ஷண பதார்த்தங்களுக்கு ஜன்மபூமியாகி மிகச்சிறந்ததான தாம்ரபர்ணியாய், துறை சுத்தஸ்வபாவமாயிருக்கிற சங்குகள் வந்து சேர்கிற திருச்சங்கணி துறையாய், ஊர் *நல்லார்நவில் குருகூராயிருக்கும். ஆகையாலே வ்யாஸ க்ருஷ்ணர்களினுடைய ஆறுகளையும் துறைகளையும் ஊர்களையுங் காட்டில் ஆழ்வாருடைய ஆற்றுக்கும் துறைக்கும் ஊருக்குமுள்ள வைலக்ஷண்யம் வாய்க்கு நிலமல்ல.

81. [தேவத்வமும்]. (ஆழ்வாருக்குண்டான சதுர்த்தவருணப் பிறப்பு அடிமைச்சுவடறிந்தவர்கட்குத தேஜஸ்காரமென்பதை த்ருஷ்டாந்தத்தோடு மூதலித்தல்) ராவண ஸம்ஹாரம் தலைக்கட்டின பின்பு பிரமன் முதலான தேவர்கள் வந்து "பவாந் நாராயணோ தேவ:" என்று மேம்படச்சொல்லிப் போற்றினது அஸஹ்யமாய் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று தன்னைத் தயரதன் மகனாகவே சொல்லிக்கொள்ளுகையாலும்,* கோவர்த்தன மென்னுங் கொற்றக்குடை யெடுத்துக் கோநிரைகாத்தபின் அந்த அதி மாநுஷ சேஷ்டிதங்கண்டு ஆச்சரியப்பட்ட இடையர் 'கண்ணா! நீ தேவனா? அஸுரனா? யக்ஷனா? கந்தர்வனா? சொல்ல வேணும்; எங்கள் இழிகுலத்தையும் உன்றன் செயல் வன்மையையும் நோக்குமிடத்து எங்களுக்கு மிக்க அதிசங்கையாயிருக்கின்றதே' யென்று சங்கித்துச் சொல்ல, அது அஸஹ்யமென்பது தோன்றச் சிறிதுபோது வாய் திறவாமலிருந்து, பின்பு 'நான் 'தேவனுமல்லேன், கந்தர்வனுமல்லேன், யக்ஷனுமல்லேன், அஸுரனுமல்லேன்; உங்களிலே ஒருவனேயாவேன்; வேறுவிதமாகவொன்றும் எண்ணவேண்டா, என்கையாலும் தேவர்க்குந் தேவனை தான் லோகஸம்ரக்ஷணார்த்தமாக மநுஷ்ய ஸஜாதீயனாய் அவதரித்தவளவில் தேவனைச் சொல்லுகையும் தனக்கு நிந்தையாம்படி புரையறப்பிறக்கும் சீலவானை ஈச்வரனுக்குக் கல்யாண குணங்கள ஒளிபெற்றுவரும் தாழ்ந்த ஜன்மங்கள்போலே,— ப்ராஹ்மண்யத்துக்கு எல்லைநிலமான ப்ரஹ்மாவாய்ப் பிறக்கையும் சேஷத்வ விரோதியான அஹங்காரத்திற்கு ஹேதுவாகையாலே ஆத்மாவுக்கு அவத்யமென்று இகழும்படி அடிமைச்சுவடு அறிந்தவர்களுக்கு "பண்டைநாளாலே" என்கிற திருவாய்மொழியில் "பல்படிகால் குடிகுடி வழிவந்தாட்செய்யும்" என்றிது முதலாகச் சொன்னபடியே தாஸ்யத்திற்கு விரோதியான ஜந்மாதி அபிமானமின்றிக்கே கைங்கர்யாநுரூபமான குடிப்பிறப்பானது பரமபதத்தில் பகவத் கைங்கரியத்திற்குத் தகுதியாகப் பரிக்ரஹிக்கும் தேஹம்போலே சேஷவஸ்துவான ஆத்மாவுக்குத் தேஜஸ்காரமாம்.

82. [ஜநகதசரத]. (ஆழ்வாரவதாரம் பரோபகாரகமென்றல்) ஜநக குலத்திற்கு மூத்தபெண்ணை (1) பிராட்டி பிறந்து, "ஜநகாநாம் குலே கீர்த்திம் ஆஹரிஷ்யதி மைதிலீ" என்கிறபடியே தான் பிறந்தகுலத்துக்குக் (1) கீர்த்தி யுண்டாக்கினப்போலேயும், தசரத குலத்திற்கு நடுவிற் பிள்ளையான (2) பரதாழ்வான் பிறந்து 'மூத் தாரிருக்க இளையார் முடிசூடக் கடவதன்று' என்கிற தலமர்யா தையை நடத்தினவளவுமல்லாமல் மூத்தவரான பெருமாளுடைய பிரிவில் சடைபுனைந்து மரவுரியுடுத்துக் கண்ணீராலே யுப்பாடான சேற்றிலே தரைக்கிடை கிடந்து குலத்துக்கு முன்பில்லாத வற் றங்களை யுண்டாக்கினப் போலேயும், வஸுதேவகுலத்துக்குக் கடைக்குட்டியான (3) க்ருஷ்ணன் பிறந்து தாய்தந்தையரின் (3) கால் விலங்கை அறுத்தாப்போலேயும் இவ்வாழ்வாரும் திருவவ தரித்து "மலிபுகழ்வண்குருகூர்" என்னும்படி தாம் பிறந்த வூருக்குப் (1) புகழுண்டாக்கி, "குடிக்கிடந்து ஆக்கஞ்செய்து" என்று (2) சேஷத்வ குலமரியாதை தப்பாதபடி நின்றவளவேயல் லாமல் எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தின் கனத்தாலே * காண வாரா யென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து, கண்ணீர் கைகளாலிறைத்து, இட்டகாலிட்ட கையாகத் தரைக்கிடை கிடந்த ப்ரேம விசேஷத்தாலே இக்குடிக்கும் முன்பில்லாத வற்றத்தையு முண்டாக்கி "அறுவர் தம் பிறவியஞ்சிறையே" என்கிறபடியே தம்முடைய திவ்யப்ரபந்த அப்யாஸ முகத்தாலே தம்மோடு அவ் யழுடையாருடைய (3) ஸம்ஸாரமாகிற சிறையையு மறுத்தார். [திருஷ்டாந்த பூதரான மூவர் செய்ததும் இவரொருத்தரே செய் கையாலும் இத்தனையும் ஸ்வரூபாநுகூலமாகச் செய்கையாலும் இவரது அவதாரம் மிகவும் பரோபகாரகமாயிற்றென்க.]

83. [ஆதித்யராமதிவாகர]. (ஆழ்வாரவதாரத்தினல் உலகுக்குண்டான நன்மைகளைப் பேசுதல்) "யத்கோஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணே வஸதி யத்ர ஸசங்கசக்ர: -யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா: தஸ்மை நமோ வகுள பூஷண பாஸ்கராய." என்றருளிச்செய்த முன்னோர்கள் நம்மாழ்வாரை ஒரு ஸூர்யனாக உருவகப்படுத்தினர்கள். [திருவாய்மொழி யாயிரமாகிற ஆயிரங் கிரணங்களை யுடையராய், மஹிஷீபூஷணையுத விசிஷ்டனை நாரா யணனை * கண்கள் சிவந்து பெரியவாய் * என்ற பாசுரத்தின் படியே உள்ளே யுடையராய், வேதவித்துக்களான ஸகல சிஷ் டர்களும் கேட்டபோதே தாமிருந்த தேசத்தை நோக்கி வணங் கும்படியான வைபவத்தை யுடையராய், ஆக இப்படிப்பட்ட தன்மைகளாலே ஸூர்யனைச் சொல்லலாம்படி யிராநின்ற ஆழ் வானைத் தொழுகின்றே னென்பது இந்த ச்லோகத்தின் கருத்து.]

இந்த வகுளபூஷண பாஸ்கரன் தவிர மூன்று ஸூர்யர்கள் இவ் வுலகிலுண்டு (1) ப்ரஸித்தனை ஸூர்யன். (2) "சராஜராலாம்சுமாந் சூர: கபே! ராமதிவாகர:, சத்ருராகூடாமயம் தோயம் உபசோ ஷம் நயிஷ்யதி." என்று ஸ்ரீராமாயணத்திற் சொன்னபடியே அம்பு களாகிற கிரணங்களையுடையனைக் கொண்டு சத்ரு ராக்ஷஸ ஸமூஹமாகிற ஸமூத்ரத்தை வற்றப்பண்ணின ராம ஸூர்யன். (3) "தேகில ஜகத் பத்மபோதாய அச்யுதபாநுநா-தேவகீ பூர்வ ஸந்த்யாயாமாவிர்ப் பூதம் மஹாத்மநா." என்று ஸ்ரீ விஷ்ணுபுரா ணத்திற் சொன்னபடியே ஸகலலோகமாகிற தாமரைப்பூ மலரும் படி தேவகியாகிற கீழ்த்திசையிலே ஆவிர்ப்பவித்த ஸ்ரீ க்ருஷ்ண ஸூர்யன். ஆகவிப்படி ப்ரஸித்தர்களானமூன்று ஸூரியர்களுக் கும் ஆகாத காரியங்கள் வகுளபூஷணபாஸ்கரன் உதயமானவாறே ஆயின. எங்ஙனே யென்னில்; "கதிரவன் குணதிசைச்சிகரம்வந் தணைந்தான் கனவிருளகன்றது" என்னும்படி ஸூரியன் (1) வெளியிருளை மாத்திரமே போக்கிக்கொண்டு உதிப்பன்; உள்ளிருள் அவனால் நீங்காது. ஆழ்வாராகிற ஸூர்யனாலேயே அது நீங்கப் பெற்றது. (2) ஸ்ரீ ராமாயணஸித்த ராம ஸூர்யனைவன் சத்ரு ராக்ஷஸராகிற ஸமூத்ரத்தை வற்றப்பண்ணினவளவே யல்லது, ஸம்ஸார ஸமூத்ரத்தை வற்றப்பண்ணின படியில்லை: ஸம்ஸார ஸமூத்ரமும் வற்றிற்று ஆழ்வாராகிற ஸூரியனால். (3) ஸ்ரீ விஷ்ணு புராண ஸித்த ஸ்ரீ க்ருஷ்ண ஸூரியன் * அகில ஜகத் பத்மத்தை விகஸிக்கச் செய்தானத்தனை யல்லது ஹ்ருதய புண்டரீகத்தை விகஸிக்கச் செய்தானென்றில்லை: * போதிற் கமலவன் னெஞ்ச மும் விகஸிக்கப்பெற்றது ஆழ்வாராகிற ஸூரியனால். [இத்தால் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கி ஸம்ஸார ஸாகரத்தை சோஷிப்பித்து ஹ்ருதய புண்டரீகத்தை விகஸிக்கச்செய்த வகுளபூஷண பாஸ்கரருடைய வைபவம் வாசாமகோசரமென்ற தாயிற்று.]

84. [வம்சபூமிகளையுத்தரிக்க.] இப்படி பரம விலக்ஷணரான ஆழ்வார் மூன்று வருணங்களுள் ஒன்றிலே அவதரியாமல் நான்காம் வருணத்தில் தாழ விழிந்ததற்கு ஹேதுகூறுதல்.) யயாதி சாபத்தாலே ராஜ்யார்ஹமல்லாத படி இழிவாய்க்கிடந்த யது வம்சத்தை உத்தரிக்கைக்காக ஆய்க் குலம்புக்க கோபாலனைப் போலேயும், ஹிரண்யாக்ஷ பலத்தாலே நிலைகுலைந்து கிடந்த பூமியை உத்தரிக்கைக்காகப் பாதாளத்திலே தாழவிழிந்த வராஹரூபியைப்போலேயும் இவ்வாழ்வாரும், குலந் தாங்கு மபிமானத்தாலே ஸம்ஸாரத்திலே மூழ்கிக்கிடப்பவர்களை அந்நிலையில் நின்றும் பேதித்து* அபிமானதுங்கன் என்னுமுயர்த்தியை யுடையராக்குகைக்காக அஹங்காரஹேதுவான வருணங்கள்

அநர்த்தகாமென்று தோற்றும்படி அஃதில்லாத சதுர்த்த வருணத்திலே தாழ விழிந்தார்.

85. [ம்லேச்சனும் பக்தனுல்.] (இன்னமும் ஆழ்வாரது வைபவத்துக் குறுப்பாகப் பொதுவிலே பாகவத வைபவத்தைப் பல உதாஹரணங்களாலும் வெளியிடுதல்.) "மத்பக்தஜனவாத்ஸல்யம் பூஜாயாஞ்ச அநுமோதநம், ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ மதர்த்தே டம்பவர்ஜனம், மத்கதாச்ரவணே பக்தி: ஸ்வாராதநாங்கவிக்ரியா, மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி, பக்திரஷ்டவிதா ஹ்யேயஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, ஸ விப்ரேந்த்ரோ முநி: பூரீமாந் ஸ யதிஸ் ஸ ச பண்டித:, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்" என்று—மிலேச்ச ஜாதியிற் பிறந்தவனுயினும் அஷ்டவித பக்தியையுடையவனுனல் அவனை உத்க்ருஷ்ட வருணத்தவரான சதுர்வேதிகள் அபிஜாதி அபிமான தூஷிதமான ஸ்வஸ்வரூபத்தின் சுத்திக்காக அநுவர்த்திக்கலாம், அவனிடத்தில் ஞானம் பெறலாம்; குலதைவதுல்யமாக அவனைப் பூஜித்து பூரீபாத தீர்த்தம் ஸ்வீகரிக்கலாம், அவனுடைய களிகை ப்ரஸாதம் ஸ்வீகரிக்கலாம், பரமபாவனமாம்—என்றருளிச்செய்த எம்பெருமானுடைய திருமுகப் பாசுரத்தையும்;

அபர ராத்ரியிலே சென்று பாடித் திருக்குறுங்குடி நம்பியைத் திருப்பள்ளி யுணர்த்துகையாலே முன்பு இராமபிரானையும் கண்ணபிரானையும் அரங்கத்தம்மானையும் திருப்பள்ளியுணர்த்தின விச்வாமித்ரன் பெரியாழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிற இவர்களோடே ஸகோதரியாய், அநந்யப்ரயோஜன வ்ருத்தியிலே அந்விதனுய் உள்கலந்து ஜந்மஸித்தமான நைச்சியத்தையுடையனை நம்பாடுவான், ஸோமசர்மாவாகிற பிராமணனுடைய யாக யவகல்ய தோஷத்தால் வந்த ப்ரஹ்மராக்ஷஸத்வத்தை கைசிகப் பண்ணாலே போக்கி யாகத்தைத் தலைக்கட்டின படியையும்;

ஜந்மவ்ருத்த ஜ்ஞானங்களால் தண்ணியரான குஹப்பெருமாள் ஸகல ப்ரகாரங்களாலும் உத்க்ருஷ்டனை சக்ரவர்த்தித் திருமகனுக்கு ஸமாந ஸ்நேஹிதராய் அந்த ராம வசனத்தாலே 'இளைய பெருமாளுக்குத் தமையன்' என்ற விருதைப் பெற்றவராய், இங்ஙனம் தம்மை அங்கீகரித்தவன்றிரவு சித்ரகூடத்திலே பெருமாள் பள்ளிகொண்டருளாநிற்க, பரிவாலே கண்ணுறக்கமற்றுக் கையும் வில்லுமாய்க் காத்துக்கொண்டிருக்கிற இளைய பெருமாளையும் அதி சங்கை பண்ணித் தாம் ஆயுதபாணியாய்க் கொண்டு அவர்பேலே கண்ணுய்நின்று அவருடைய நினைவை சோர்த்து, ராம விரஹக்லேசத்தோடே சித்ரகூடத்தேற வந்த

பரதாழ்வானுக்கு, இளையபெருமாள் திருத்தமையனுர் பக்கலில் ப்ரேம பாரதந்திரியங்களே நிரூபகமாம்படி யிருக்குமிருப்பைத் தான் (குஹன்) சொல்லும்படி இக்ஷ்வாகுவம்சஸ்தர்களோடு ஏககுலமானபடியையும் ;

* முன்னேர் தூது வானரத்தின் வாயின்மொழிந்து * என் கிறபடியே பிராட்டிக்குத் தூதுமொழியைத் திருவடிவாயிலே சொல்லிவிட்ட சக்ரவர்த்தித் திருமகன் * சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:* என்று சபரியின்கையில் பண்ணின ஸம்ய க் போஜநத்தையும்,

"கோதில் செங்கோல்குடை மன்னரிடை நடந்ததூதா!" என்னும்படி பாண்டவர்களுக்காகத் தூதுபோன கண்ணபிரான் பீஷ்மர் த்ரோணர் முதலானுருடைய க்ருஹங்களை விட்டு * விது ராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச * என்கிறபடியே பாவநத்வ போக்யத்வங்கள் கண்டுகந்து ஸ்ரீவிதுரர் திருமாளிகையில் பண் ணின ஸகுண போஜநத்தையும் ;

* ஓதமாகடலைக்கடந்தேறி உயர்கொள்மாக் கடிகாவையிறுத் துக், காதல் மக்களுஞ் சுற்றமுங்கொன்று கடியிலங்கை மலங்க வெரித்துத் தூதுவந்த குரங்கு * என்று சொல்லப்பெற்ற திருவடி * த்ருஷ்டா ஸீதா* என்று வந்த ப்ரீதியாலே* தத்துல்யம் ஸஹபோஜநம்* என்று திருவுள்ளம் பற்றிக் * 'கோதில் வாய்மை யிளையொடு முடனே யுண்பன்நா' னென்ற பெருமாளோடே பண்ணின ஸஹ போஜநத்தையும்;

யதுகுலத்திலே பிறந்து இடைக்குலத்திலே வளருகையாலே ஒரு பிறவியிலே இரு பிறவியான க்ருஷ்ணனுக்குத் தருமபுத்ரர் தம்முடைய யாகத்திலே அக்ரபூஜை கொடுத்தபடியையும்,

ரிஷி புத்ராராய்ப் பிறந்து பொருந்தரிடத்திலே தஜ்ஜாதீயராய் வளருகையாலே ஒரு பிறவியிலே இரு பிறவியான திருமழிசைப் பிரானுக்குப் பெரும்புலியூரடிகள் தம்முடைய யாகத்திலே அக்ர பூஜை கொடுத்தபடியையும்,

பஞ்ச பாண்டவர்களில் முதல்வரான தர்மபுத்ரர் விதுரர்க்கு ஞானப் பெருமையையும் அசரீரிவாக்கையுங்கொண்டு ஸந்தேஹி யாமல் புத்ரக்ருத்யம் [சரமகைங்கர்யம்] செய்தபடியையும்,

தயரதன் புதல்வர் நால்வரில் முதல்வரான பெருமாள்—ஸஹ ஜரான இளைய பெருமாளுங்கூட நிற்கச்செய்தே அவர்கையிலுங் காட்டிக்கொடாமல் தானே பெரியவுடையார்க்கு [ஜடாயுவுக்கு]ப் புத்ரக்ருத்யம் செய்தபடியையும்,

பெரியநம்பி திருக்கோட்டியூர்நம்பி பெரியதிருமலைநம்பி யென்று ஸப்ரஹ்மசாரிகளாய் ஆளவந்தார் திருவடிகளாய் உடையவர்க்கு ஆசார்யர்களாய் ப்ரஸித்தரான நம்பிகள் மூவ ரிலும் ப்ரதானரான பெரியநம்பிகள் மாறனேரி நம்பிக்கு, "புரோடாசத்தை நாய்க்கிடாதே கொள்ளும்" என்று ஆளவந்தா ரருளிச்செய்து போனபடியே புரோடாசமாக நிவேதித்துப் புத்ர க்ருத்யம் செய்தபடியையும்,

* சிந்துபூமகிழுந் திருவேங்கடமாகையாலே புஷ்ப மண்டப மான திருமலையில் பணிப்பூவுங்கையுமாய்த் திருவுள்ளமறியப் பரிமாறுகையாலே திருவேங்கட முடையானுக்கு அந்தரங்கரான குறும்பறுத்த நம்பியைத் தொண்டமான் சக்ரவர்த்தி அநுவர்த் தித்தபடியையும்,

* வேகவத்யுத்தரதீரே புண்யகோட்யாம் ஹரிஸ் ஸ்வயம், வரதஸ் ஸர்வ பூதாநாமத்யாபி பரித்ருச்யதே * என்கிறபடியே த்யாகமண்டபமான பெருமாள்கோயிலில் திருவாலவட்டமுங் கையுமாய்ப் பேரரு ளாளனுக்கு அந்தரங்கராய் நின்ற திருக்கச்சிநம்பியை வைதிக சிகாமணியான உடையவர் அநுவர்த்தித்தபடியையும்,

* தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளி கொள்ளும் * என்கிறபடியே போகமண்டபமான கோயிலில் வீணையுங் கையுமாய்ப் பெரிய பெருமாளுக்கு அந்தரங்கராய் வர்த்திக்க திருப்பாணழ்வாரை லோகஸாரங்க மஹா முனிகள் அநுவர்த்தித்தபடியையும்,

* யஜ—தேவபூஜாயாம் * என்கிற தாதுவின்படியே யாகமென் னப்படுகிற திருவாராதநத்தில் பிள்ளையுறங்கா வில்லிதாஸர் ஸ்பர் சத்தாலே காயசுத்தி பண்ணின உடையவரும், அநுயாக சப்த வாச்யமான ப்ரஸாத ஸ்வீகாரத்தில் பிள்ளையேறுதிருவுடையார் தாஸருடைய கரஸ்பர்சத்தாலே அந்நசுத்திபண்ணின நம்பிள்ளையும், உத்தரவீதி குடிபுகுருகிறபோது பிள்ளைவானமாமலைதாஸர் ஸஞ் சரணத்தாலே ஸ்தலசுத்திபண்ணின நடுவில்திருவீதிப்பிள்ளைபட் டருமாகிற ஞானவ்ருத்தர்களினுடைய ஆசாரக்ரமத்தையும் அறிய வல்லவர்களுக்கன்றே 'இன்ன ஜன்மம் உத்க்ருஷ்டம், இன்ன ஜன்மம் அபக்ருஷ்டம்' என்று ஜன்மத்தினுடைய ஏற்றக்காழ்வு கள் தெரியக்கூடும்.

86. [அஜ்ஞர் ப்ரமிக்கிற.] (பகவத்விஷய ஸ்பாசமற்ற வர்ணச்ரமங்களும் ஜ்ஞாந வ்ருத்தங்களும் ஹேயம் என்றல்.) எம்பெருமானுக்கு அடிமைப் பட்டிருத்தலே ஆத்மாவுக்கு நிரூபக மென்று நிஷ்கர்ஷித்து அதற்குத் தகுதியாக த்யாஜ்ய உபாதேயங்களைப் பகுத்துணரத்

தக்க ஞானமில்லாதவர்கள், எம்பெருமானது ஸம்பந்தமின்மை யாலே நிக்ருஷ்டங்களா யிருக்கிற வர்ண, ஆச்ரம, வித்யா: வ்ருத்தங்களை உத்தமவர்ண மென்றும் உத்தமாச்ரமமென்றும், ஸத்வித்தையென்றும், ஸக்வ்ருத்தமென்றும் உத்க்ருஷ்டமாக ப்ரமித்திருப்பர்கள்; ஆனல் அவற்றை ஞானிகள் இகழ்வர்கள், எங்ஙனேயென்னில்; *சதுர்வேததரோ விப்ரோ வாஸுதேவம் ந விந்ததி, வேதபாரபராக்ராந்தஸ் ஸ வை ப்ராஹ்மண கர்த்தப:* என்று நான்கு வேதங்களிலும் அதிகரித்துவைத்தே வேதவிழுப் பொருளாகிய எம்பெருமானை அறியாதவன் குங்குமஞ் சுமந்த கழுதைபோலே தான் சுமந்துகொண்டு திரிகிற வேதத்தின் பரிமளமறியாத பிராமணக் கழுதையென்றும், *ச்வபசோபி மஹீபால! விஷ்ணுபக்தோ த்விஜாதிக:, விஷ்ணுபக்திவிஹீநஸ் து யதிச் ச ச்வபசாதம:. * என்று உத்தமாச்ரமியாளையும் எம்பெருமானிடத்தில் பக்தியில்லாதவன் சண்டாளனிற் காட்டிலும் கீழ்ப்பட்டவனென்றும், "தத் கர்ம யந் ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே, ஆயாஸாய அபரம் கர்ம வித்யாந்யா சில்பனைபுணம்" என்று மோக்ஷார்த்தமாக உபயோகப்படும் வித்யை எதுவோ அதுவே வித்யையாகும், அப்படியல்லாதது செருப்புக் குத்தக் கற்ற கல்விபோன்றதேயாகும் என்றும், — *ஆம்நாயாப்யஸநாநி அரண்ய ருதிதம் வேதவ்ரதாந்யன்வஹம் மேதச்சேதபலாநி பூர்த்தவிதயஸ் ஸர்வே ஹுதம் பஸ்மநி, தீர்த்தா நாமவகாஹநாநி ச கஜஸ்நாநம் விநா யத்பதத்வந்த்வாம்போருஹ ஸம்ஸ்ம்ருதீர் விஜயதே தேவஸ் ஸநாராயண:. * (முகுந்தமாலை)* என்று எப்பெருமானுடைய சிந்தனையில்லாதவர்கள் செய்கின்ற கர்மாநுஷ்டாநம் சாம்பலிலிட்ட ஆஹுதிபோலே பிரயோஜந மற்றது என்றும், "யஸ்யாகிலாமீவஹபிஸ் ஸுமங்கலை: வாசோ விமிச்ரா குணகர்மஜந்மபி:, ப்ராணந்தி சும்பந்தி புநந்தி வை ஜகத் யாஸ் தத்வியுக்தாச் சவசோபநா மதா:" "விஷ்ணுபக்திவிஹீ நஸ்ய வேதச் சாஸ்த்ரம் ஜபஸ் தப:, அப்ராணஸ்யேவ தேஹஸ்ய மண்டநம் லோகரஞ்ஜநம். * என்று பகவத்விஷயத்தில் அந்வயம் பெறுத உக்திகளும் பகவக்பக்தி யில்லாதவனுடைய அறிவும் நடத்தையும் பிணக்கோலம் செய்வதாக்குமென்றும், "ப்ராதுர்ப் பாவைஸ் ஸுராநரஸிம்ஹ தேவதேவஸ் ததீயா: ஜாத்யா வ்ருத்தைரபி ச குணதஸ் தாத்ருசோ நாத்ர கார்ஹா, கிந்து ஸ்ரீமத் புவநபவநத்ராணத:, அந்யேஷு வித்யாவ்ருத்த ப்ராயோ பவதி விதவாகல்பகல்ப: ப்ரகர்ஷ:" என்று பகவத்விஷயத்தில் அந்வய மற்றவர்களுடைய கல்வியொழுக்கச் சிறப்புகள் பகவத்ஸம்பந்த ஜ்ஞாநமாகிற ஸுமங்கலிலக்ஷண மில்லாமைபற்றி விதவாலங்கார துல்யமென்றும் ஞானிகள் இகழ்வார்கள். — ஆக இப்படி பகவத்

விஷய ஸம்பந்தமற்ற வர்ணச்ரமங்களும் ஞான வொழுக்கங்களும் ஹேயமென்கையாலே கீழே காழ்ந்த ஜன்மமாகக் கருதப்பட்ட ஜன்மம் இன்னதென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று. (*)

முதல் ப்ரகரணத்தின் தாத்பர்யஸாரம்

முற்றிற்று

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்
திருவடிகளே சரணம்.

இரண்டாம் ப்ரகரணம்

87. [அணைய வூரப்புணைய]. (ஆத்மாவுக்கு நிரூபகமான சேஷத்வத்திற்குப் பாங்கான பிறவியே உத்க்ருஷ்ட ஜன்ம மென்பது விளக்கப்படுகிறது.) நித்யவிபூதியிலே எம்பெருமான் [அணைவ தற்கு -] கண்வளர்ந்தருளுகைக்குப் பாங்காயிருக்கும் அரவணையாயும், அவன் பலகாலும் மேற்கொண்டு [ஊர -] நடத்துகைக்கு வாஹநமான கருத்மானையும், அவன் [புனைந்துகொள்ள -] ஆகரித்துச் சாத்துகைக்கு அர்ஹமான திருத்துழாயாயு மிராநின்றுள்ள திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை மஹாத்மாக்களான நித்யஸூரிகள் பகவத் கைங்கர்யேச்சையாலே பரிக்ரஹித்தார்கள்; யமுனைக் கரையில் அவன் திருவடிகளால் மிதிக்கதறின கடம்பமரமாகவாதல் குருந்த மரமாகவாதல் ஆகவேணுமென்றும், ப்ருந்தாவனத்தில் கண்ணபிரான் போனவழியைப் பின்தொடர்ந்த பெண்களுடைய பாததூளியை வஹியாகின்றுள்ள சிறு செடிகள் கொடிகள் ஓஷதிகளில் ஏதேனு மொன்றாக வேணுமென்றும், "வேங்கடத்துக் கோனேரிவாழும் குருகாய், மீனாய், செண்பகமாய், தம்பகமாய், அன்னனைய பொற்குவடாம்,.....எம்பெருமான் பொன்மலைமே லேதேனுமாவேனே" என்று திருமலையோடு ஸம்பந்தமுடைய திர்யக் ஸ்தாவர ஜந்மங்களில் ஏதேனு மொன்றாக வேணுமென்றும்-ஸ்ரீ சுகப்ரஹ்மர்ஷி, உத்தவர், ஸ்ரீ குலசேகரப்பெருமாள், ஆளவந்தார் முதலான முமுக்ஷுக்கள் ப்ரார்த்தித்தார்கள்.

[திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை வாசிக காயிக பாபபலமாக சாஸ்த்ரம் சொல்லாநின்ற போதிலும் இந்த ஜந்மங்களை நித்யஸூரி

கள் பகவத் விநியோகார்ஹமாக ஸ்வேச்சையாலே எறிட்டுக் கொள்ளுவர்களென்றும், அடிமைச் சுவடறிந்தவர்களான முமுக்ஷுக்கள் தத்ஸம்பந்த தீயஸம்பந்தமுள்ள திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை ப்ரார்த்திப்பர்களென்றும் சொல்லுகையாலே அடிமைக்கு உரிய ஜந்மமே உத்க்ருஷ்டமென்றதாய்த்து.]

88. [சேஷத்வ பஹிர்ப்பூத]. முமுக்ஷுக்களான இவர்கள் பகவத் பாகவத சேஷத்வத்தில் விரூப்பத்தாலே திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை ப்ரார்த்தித்தார்களாகிலும் உத்க்ருஷ்டமாக சாஸ்த்ரஸித்தமான வர்ணத்தை இப்படி கழிப்பானேன்? என்னில்; "நு தேஹம் நு ப்ராணந்" இத்யாதி ச்லோகத்திற்படியே சேஷத்வத்துக்குப் புறம்பானபோது ஜ்ஞாநாநந்த மயத்வத்தாலே ச்லாக்யனை ஆத்மாவையும் ஸஹியாதவர்கள், சேஷத்வத்துக்கு விரோதியான அஹங்காரத்துக்கு ஹேதுவென்னு மிடத்தாலே த்யாஜ்யமாயும், கர்மநிபந்தநமாகையாலே ஔபாதிகமாயுமிருக்கிற வர்ணத்தை ஆதரிக்க மாட்டார்களிறே.

89. [இதின் ஔபாதிகத்வம்]. (வர்ணம் ஔபாதிக மென்னுமிடம் எங்ஙனே தெரியுமென்னில்;) க்ஷத்ரியனை விச்வாமித்ரன் தன்னை ப்ரஹ்மர்ஷியாக்கின வஸிஷ்டனுலே யஜ்ஞோபவீதமே வாராம்படி சண்டாளனுக்கப்பட்ட த்ரிசங்குராஜாவை அந்த வார்தானே யாகத்துக்கு அங்கமான உறுப்புத்தோலாகக் கொண்டு தன்னுடைய தபோபலத்தாலே யாகம் செய்வித்து ஸ்வர்க்க மேற்றுவித்தானென்கிற கதையாலே வர்ணம் ஔபாதிகமென்பது தெரியும்.

[இது ஔபாதிகமன்றாகில் ஒரு க்ஷத்ரியன் ப்ரஹ்மரிஷியாவதும், மற்றொரு க்ஷத்ரியன் சண்டாளனுவதும் கூடாதன்றே.]

90. [மாவுருவில் கள்ளவேடம்]. (ப்ரமேயம் ப்ரமாணம் ப்ரமாதா என்னும் வகுப்புக்களில் த்யாஜ்யங்களுமுண்டு உபாதேயங்களுமுண்டு என்று நிரூபிக்கப்படுகிறது.) அப்ராக்ருதமாய் ச்லாக்யமாயிருந்துள்ள பகவதவதார விக்ரஹங்களுள் வைதிக ருசியைக் குலைப்பதற்காகப் பரிக்ரஹித்த புத்தமுனிரூபமான விக்ரஹம் த்யாஜ்யம். பகவத்ஸ்வரூபாதிகளை உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலே கட்டளைப் பட்டிருந்துள்ள வேதத்தில் மலாம்சமான மனுஷ்ய ப்ரசம்ஸா வாக்யங்கள் த்யாஜ்யம். எல்லா வர்ணங்களிலும் பகவத் பக்தரல்லாதார் எவரோ அவர்கள் சூத்ரர்கள் என்கையாலே அன்னவர்கள் த்யாஜ்யர்கள். ஆக ப்ரமேய ப்ரமாண ப்ரமாதாக்களிலுண்டான த்யாஜ்யாம்சங்களை இங்ஙனே யறிவது. பசுக்களுக்குப் புல்லும் தண்ணீருமுள்ள காடுகளிலே வஸிக்கும்

இடைச்சாதியில் க்ருஷ்ணனுடைய பசுமேய்த்து வருகிறபோ துள்ள அலங்காரமுடைய விக்ரஹம் உபாதேயம். த்ராவிட பாஷாமயமான க்ரந்தங்களில் பகவத் ப்ரதிபாதகமானவை உபாதேயம். ச்வபாகரில் [- சண்டாளர்களில்] பகவத் பாதகமல பக்தியாகிற தனமுடையவர்கள் உபாதேயர்கள். ஆக ப்ரமேய ப்ரமாண ப்ரமாதாக்களில் உபாதேயாம்சங்களை இங்ஙனே யறிவது. இவ்விபாக மறியுமவர்கள் வேதனும் ஜந்மவ்ருத்தங்களை யுடையரேயாகிலும் நித்யஸூரிஸமாநரென்னுப்படி ச்லாக்யராய் பரகதியை யடைவர்கள்; கீழ்ச்சொன்ன ப்ரமேயம் முதலிய மூன்றிலும் வாசியறியாதவர்கள் உத்க்ருஷ்ட ஜந்மாக்களுமாய் ஸகலயாக்யதா பரிபூர்ணர்களுமாயிருந்தார்களேயாகிலும் ஸ்ரீ வைஷ்ணவர்களை ஜந்மாதிகளையிட்டு நிந்திப்பார்களாகில் ஒரு காலும் கரையேற யோக்யதையில்லாத கர்மசண்டாளராய்க் கீழே விழுவர்கள்.

91. [தமிழ்மாமுனிதிக்கு]. (ஆழ்வாருடைய வைபவஸூசகமாக ப்ரமாணம் காட்டப்படுகிறது.) "தக்ஷிணே திக் க்ருதா யேந சாண்யா புண்யகர்மணே" என்று—'த்ராவிட சாஸ்த்ர ப்ரவர்த்தகரான அகஸ்த்யனிருக்கிற திக்கு எல்லார்க்கும் புகலிடம்' என்று சொன்ன ருஷிகள் "கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: க்வசித் க்வசிந்மஹாபாக த்ராவிடேஷு ச பூரிச:; தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ, காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ, யே பிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேச்வர, தேஷாம் நாராயணே பக்திர் பூயஸீ நிருபத்ரவா" என்று ஜ்ஞாநதாக்கள் வந்து ஆவிர்ப்பவிக்கும் ஸ்தல விசேஷங்களைச் சொல்லுகிறவளவில் முதன் முதலாக "தாம்ரபர்ணீ நதீ யத்ர" என்று இவராவிர்ப்பாவ ஸ்தலத்தைச் சொல்லுகையாலே இவ் வாழ்வாருடைய ஆவிர்ப்பாவமானது த்ரிகாலஜ்ஞாநி ஸ்ரீ சுகாதிகளாலே ஸூசிப்பிக்கப்பட்டது; இவ்வாழ்வார்தாம் மயர்வற மதிநல மருளப் பெற்றவராகையாலே "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று—கலியன், உடையவர்போல் வாரவதரித்துக் கலியுகஸ்வபாவமும் கழியுமென்று மேல் வருமதை நோக்கிச் சொன்னப்போலே யாய்த்து இதுவும்.

92. [அத்ரி ஜமதக்நி.] (ஆழ்வாருடைய அவதாரத்தில் பலவகை யான உல்லேகங்களுண்டென்கிறது. க்ருத யுகத்திலே அத்ரியும் ஜமதக்நியுமாகிற ப்ராஹ்மணேத்தமர்களுக்குப் பிள்ளையாய்க் கொண்டு தத்தாத்ரேயனும் பரசுராமனுமாய், த்ரேதாயுகத்திலே க்ஷத்ரியனான தசரத சக்ரவர்த்திக்குப் பிள்ளையாய், த்வாபர யுகத் திலே ராஜ்யப்ராப்தியில்லாத யதுகுலத்திற் பிறந்து க்ஷத்ரியரில்

தண்ணியரும் வைச்யப்ராயருமான வஸுதேவர்க்கும், பத்ரகூணத்தாலே ஸாகூர்த்வைச்யரான ஸ்ரீ நந்தகோபர்க்கும் பின்னையாய், இப்படி க்ருதாதி யுகக்ரமத்திலே ப்ராஹ்மணாதி வர்ணக்ரமேண அவதரித்துவந்த ஸர்வேச்வரன் நான்காவதான கலியுகத்திலே நான்காம் வருணத்திலே (ஆழ்வாராக) வந்து அவதரித்தபடியோ! என்றும், வேதங்களைப் பரிஷ்கரிப்பது முதலிய காரியங்களுக்காக வ்யாஸாதிகள்பக்கல் ஆவேசித்தாப்போலே த்ராவிட வேதப்ரவர்த்தநார்த்தமாக இவர் பக்கல் ஆவேசித்தபடியோ! என்றும், இவ்விபூதியைத் திருத்துகைக்காக ஈச்வர நியமனத்தாலே நித்ய ஸூரிகளிலொருவர் வந்தவதரித்தபடியோ!, அன்றிக்கே, முக்தரிலே ஒருவர் வந்தவதரித்தபடியோ!, அல்லது, ச்வேததத்வீபவாஸிகளி லொருவர் வந்தவதரித்தபடியோவென்றும், அல்லது கீழ்ச் சொன்னவர்க ளொருவரு மல்லாமல் ஸம்ஸாரிகளுக்குள்ளே ஜன்மாந்தர ஸஹஸ்ர ஸஞ்சிதமான தம்முடைய ஸுக்ருத பலமாகக் கொண்டு இப்படித் திருந்தினொருவரோவென்றும், அன்றிக்கே, நிர்ஹேதுகக்ருபாகூ விசேஷத்தாலே நித்ய ஸம்ஸாரியை நித்ய ஸூரிஸமமாக்க வல்ல அநந்தசாயியான ஸநாதந புண்யம் மூழுநோக்காகப் பலித்தபடி திருந்தினொருவரோவென்று மிப்படிப்பட்ட வகைகளாலே இவரை இன்னரென்று நிச்சயிக்க மாட்டாமல் ஜ்ஞாநிகள் சங்கிப்பர்கள்.

93. [அதுக்கு மூலம் யான் நீ] இவரை இப்படியெல்லாம் சங்கிக்கைக்கு ஹேதுவென்னென்னில்;—"புவியும்இரு விசும்பும்" என்கிற பாட்டாலே—'விபூதிமாத்ரையுடைய நான் பெரியவனேயன்றி விபூதியையுடைய நீ பெரியவனல்லை; என்று ஈச்வரனே டொக்க மறுதலிக்கும்படியான வைபவத்தையுடையராய், ஒன்றுக்கும் விகாரப்படமாட்டாத ஸர்வேச்வரனும் தெகுடாடும்படி திருவாய்மொழி பாடுகிற நாவீறுடைமையாலேஉபய விபூதியிலும் உபமாநரஹிதராய், ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் மாறி மாறி நடக்கையாலே-ஸம்ச்லேஷைகரஸராய்ச் செல்லும் அங்குள்ளார் படியுமல்லாமல், *உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனென்றிருக்கையாலே அந்தபாகாதிகளாலே தரிக்கும் இங்குள்ளார் படியுமல்லாமல் இப்படி உபய விபூதியிலுமடங்காமையாலே "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும் நிலையிடமே" என்று வாஸஸ்தலம் தெரியாத படியால், "தெய்வத்தினமோ ரணியீர்களாய்!" என்னும்படி—நித்ய ஸூரிகளெல்லாரும் கூடிஞலும் தமக்கு ஒரு வகைக் கொப்பாம்படியாய், நித்ய ஸூரிபரிஷந் நிர்வாஹகனை எம்பெருமான் பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தைத் தம்மிடத்தில் ஒரு மடை செய்ய, மேன்

மேலும் அவனது விஷயீகாரங்களைப் பெற்றமைக்குக் கலவிக் குறிகளுண்டாய்ச் செல்ல, அவன் ஸௌந்தர்ய சீலாதிகளையநுஸந்தித்து உத்தரோத்தரம் விளைகிற பாஹ்யாப்யந்தர ஹர்ஷத்தாலே சிதிலராவது, பரப்ரஹ்மஸாக்ஷாத்காரம் பிறந்தாரைப் போலே ஸ்திமிதராவதாய், *உண்டியே உடையே உகந்தோடி யானேயென்றனதே என்று அஹங்கார மமகாரவச்யரா யிருக்கிற லௌகிகருடைய ஸம்பந்தபற்று, சடகோபராகையாலே பாஹ்ய குத்ருஷ்டிகளாகிற சடரை ஸ்வஸம்பந்தி விசேஷங்களாலே தூரத்தி, பராங்குசராகையாலே— அபிஜ்ஞ வித்யாதந மதமத்தராய்த் திரியுமவர்களுக்கு மத மொழிந்து தலை வணங்கும்படி உபதேச ரூபமான அங்குசமிட்டு, ஸர்வேச்வரன் விஷயத்திலே எல்லார்க்கும் பக்தியை யுண்டாக்கி நடத்தா நின்று கொண்டு தம் கடாக்ஷத்திலகப்பட்டவர்களின் ஸம்ஸாரத்துக்கு ம்ருத்யுவாய், ஸாட்ஸாரிக துக்க ஹேதுவான பாபம் முதலியவை அருகிலும் வாராதபடியாய், பகவத்ருசி விரோதியான கலியுகம் போய் கேவல வைஷ்ணவ தர்மமே நடக்குமதான க்ருதயுகம் ப்ரவேசிக்கும்படியாய், இராப்பகல் வாசியு மறியாமல் அகால காலயமான தேசத்திற்போலே பகவதநுபவைக பராயிருந்த ப்ரபாவமாய்த்து கீழ்ச் சொன்ன சங்கைக்குக் காரணம்.

94. [அதுக்கு ஹேது.] கீழே விரிவாக விளக்கிய பிரபாவம் இவர்க்கு உண்டானமைக்கு அடியேதென்னில்; உலகில் க்ருஷி செய்பவன்தான் பண்ணின க்ருஷிகள் நிஷ்ப்பலமா யொழிந்தாலும் சோம்பிக் கைவாங்காமல் பின்னையும் க்ருஷியையே பண்ணுமாபோலே, எம்பெருமான் கல்பந்தோறும் ஸ்ருஷ்டிக்கச் செய்தே ஸபலமாகாதிருக்க அவ்வளவோடே கைவாங்காமல் மிகவுமொருப்பட்டு என்றேனுமொருநாள் பலிக்கு மென்று க்ருஷியை யுகந்து ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணி, பண்டைத்த அந்த ஜகத்தில் அநுப்ரவேசித்து, அவற்றைச் சொல்லும் வாசக சப்தம் தன்னளவிலே பர்யவஸிக்கும்படி ப்ரகாரியாய் நின்று, அறிய வேண்டு மர்த்தங்களை யெல்லாம் அறிவிக்குமதான சாஸ்த்ரத்தை உபதேசித்து, திருப்பாற் கடலிலே திருவனந் தாழ்வான்மேலேயேறிப் படுக்கை வாய்ப்பாலே கண்வளர்ந் தருளுகிறுப் போலே ஜகத்ரக்ஷண சிந்தை பண்ணி, சிந்தித்த வுபாயத்திற்குத் தகுதியாக *என்றேனும் கட்கண்ணால் காணக் கூடாத தான் து: கமயமான மநுஷ்யப் பிறவியிலே ஆவிர்ப் பவித்தருளி அவர்களுடைய மாம்ஸ சக்ஷுரிந்த்ரியத்துக்கு விஷயமாம்படி வந்து இப்படி அவதாராதிகளாலே "எனக்கடிமையாவாருண்டோ?" என்று இதுவே கார்யமாகத் தேடித் திரிகிறவன்—சப்தாதி விஷயங்களிலே

துக்கப்பட்டழுந்துகிற லோக ஸ்வபாவத்தை ஸஹாஸமாகப போக்குகைக்காக ; ம்ருகபக்ஷிகள் பிடிப்பார் ஸஜாதீய புத்தியாலே தன்னேடே இணக்கவற்ருன ம்ருக பக்ஷீகளைப் பார்வையாக ணீவத்துப் பிடிப்பாரைப் போலே பார்வை வைத்திணக்குவதாக 'அதுக்காவாராரர் ?' என்று தேடி, "கழறலமொன்றே நிலமுழுதாயிற்று" என்கிற ப்ரசுரத்திற் படியே தன்னுடைய திருவடித் தாமரையும் ஜ்ஞாநதீபமும் மறுபாடுருவின பரப் பெங்குமோட்டிடப் பார்த்த புண்டரீகாக்ஷனுடைய திருக் கண்களானவை ஓரிடத்திலும் அதுக்காவாரைக் காணுமல், ஒருவிஷயத்தை அப்படிக்கு ஆக்குமதாகப் பார்க்கிற வளவிலே, ஸ்ரீ விபீஷணுழ்வான் விஷயமாக எப்போதும் அன்போடு பார்த்துக்கொண்டு கிடக்கையாலே தனக்குப் பள்ளமடையான திசையிலே ஜாதி நியமமாதல் வர்ண நியமமாதலின்றிக்கே கர்மாநு குணமாக வதேனுமொரு சரீரத்திலே ப்ரவேசித்து அந்த சரீரத்தின் வழியே போய் ஜன்ம பரம்பரைகளிலே தோள்மாறி அவ் வநர்த்தத்திலே வெறுப்பின்றிக்கே அதிலே அவகாஹித்துத் தரை காண வொண்ணுத ஸம்ஸார ஸாகரத்தினுள்ளே ஆழ்ந்து நடுங்குகிற இவ்வாழ்வார் மேலே பட, இப்படி இவர் மேலே பட்டவித்தை "நம்மேலொருங்கே பிறழ வைத்தார்" (திருவிருத்தம்) என்கிறபடியே ஓருமடைப் படுத்தி, "எங்கும் பக்கநோக்கறியான்" (திருவாய் மொழி-2-6-2) என்று நாய்ச்சிமார் திருமுலைத் தடத்தாலே நெருக்கியணைத்தாலும் புரிந்து பார்க்கவறியா னென்னுமபடி ஸ்வேச்சையாலே நிர்ஹேதுகமாகப் பண்ணப் பெற்ற விசேஷ கடாக்ஷமாய்த்து கீழ்ச் சொன்ன ஆழ்வார் ப்ரபாவத்துக்கு ஹேது.

[இத்தால் "அத்ரி ஜமதக்நீ" த்யாதி சங்காஸூத்ரத்திற் சொன்ன சங்கைகளெல்லாம் கிடக்க, "அனந்தன்மேல் புண்ணியங்கள் பலித்தவர் இவர்" என்று நிச்சிதமாயிற்று.]

95. [ச்ரமணிவிதுர]. நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தாரொருவர்க்கு பகவத் கடாக்ஷமாத்ரத்தாலே ஸகல பாபங்களும் நீங்கி இந்த ப்ரபாவமெல்லா முண்டாகக் கூடுமோ ? என்னில் ; ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன் தானே சென்று விஷயீகரித்த வேடுவிச்சியான ச்ரமணி "தேவரீருடைய அழகிய திருக்கண்பார்வையாலே என்னுடைய ப்ராப்தி ப்ரதிபந்தகங்களெல்லாம் போய்ப் பரிசுத்தையானேன்" என்று சொல்லும்படியாகவும், கண்ணபிரான் தானே சென்று க்ருஹத்திலே புகுந்து விரும்பி அமுது செய்யப்பெற்ற ஸ்ரீ விதுரர் அழகிய திருக்கண்களின் கடாக்ஷத்தாலே ஸகல ஸாம்ஸாரிக தோஷங்களும் போய்ப் பரிசுத்தராம்படியாகவும், பக்தவிலோசநத்தில் ருஷிபத்நிகளிலே ஒருத்தி "தத்ரைகா விதுதா

பர்த்ரா பகவந்தம் யதாச்ருதம், ஹ்ருதோபகூஹ்ய விஜஹௌ தேஹமம் கர்மநிபந்தநம்" என்று க்ருஷ்ணவிஷய ப்ராவண்யத் தாலே அப்போதே ஸம்ஸாரத்தில் நின்றும் விடுபட்டவளாம்படி யாகவும் பண்ணின ஸர்வேச்வரனுடைய கடாக்ஷமானது அநுபவ விரோதியான ஸகல பாபங்களும் ஒரு கணப்பொழுதிலே தீரும் படி செய்யத் தட்டுண்டோ?

96. [கோவ்ருத்திக்கு]. இப்படி ஆழ்வாரை எம்பெருமான் நிர் ஹேதுகமாக விசேஷ கடாக்ஷம் பண்ணினது எதுக்காக? கடாக்ஷத்தின் தன்மைதான் எப்படிப்பட்டது? கடாக்ஷிக்கப் பெற்ற பின்பு இவர் எங்ஙனே யானார்? என்னில்; பசுக்களை ரக்ஷிக்கக் கருதின கண்ணபிரான் ஒவ்வொரு பசுவையும் தனித்தனியே ரக்ஷிப்பதென்றால் மஹாச்ரமமாகு மென்று பார்த்து ஸதுபாயமாக நெரிஞ்சிக் காட்டைப் பசும்புற்காடாம்படி ஸங்கல்பித்தாப் போலே ஜகத்திநுடைய ஹிதார்த்தமாக "எதிர் சூழல் புக்கெனைத் தோர் பிறப்புமெனக்கே அருள்கள் செய்ய விதிசூழ்ந்ததாலெம்மைக் கோலம்மான் திரிவிக்கிரமனேயே" என்று இவர் பேசும்படி-ஸர்வ பூதங்களின் பக்கலிலும் நடக்கிற தன்னுடைய ஸௌஹார்த்த பல மான ப்ரஸாதமாகிற க்ருபையை இவரொருவர் விஷயமாக ஒரு மடைப் படுத்தி, அஜ்ஞாந அசக்திகளுக்கெல்லையா யிருக்கிற இவ ரைத் தன்னோடொத்த ஜ்ஞாநசக்திகளை யுடையராம்படி பண்ண இப்படி அவனேலே திருந்தின விவர் "ஊரும் நாடுமுலகமும் தன் னைப்போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்ற" என்கிற படியே தம்மோடு அந்வயித்த இந்த லோகத்தாரை யெல்லாம் தம் மைப்போலே பகவதேக பராகப் பண்ணும்படியானார்.

97. [அதாவது மயர்வற]. ஆழ்வாரை எம்பெருமான் தன்னோ டொத்த ஜ்ஞாநசக்திகளை யுடையராம்படி பண்ணுகையாவது— * மயர்வற மதிநலமருளுகை;— அஜ்ஞாநத்தை ஸுவாஸநமாகப் போக்கி பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநத்தைக் கொடுக்கை.

98. [இருள் தயக்கு மயக்கு]. (*மயர்வற மதிநலமருளுகை யாவது இன்னதென்கிறது.) அடியோடு ஞானம் பிறவாமையும், கிஞ்சித்காரமாக வன்றிக்கே ஸம்தேஹமாக வுணர்வதும், உள்ளபடி யுணராமை யன்றிக்கே விபரீதமாக வுணர்வதும், உள்ளபடி யுணர்ந்ததை மறந்து போகையுமாகிற நான்கு வகைப்பட்ட ஸங்கோசாவஸ்தையு மற்று, மந: பரிசுத்தியாலே விகஸிதமாய்க் கொழுந்துவிட்டு ப்ராப்த விஷயத்தை நோக்கிக் கிளர்கிற ஜ்ஞா நத்தைப் பரமபக்தி பரிபர்யந்தமாகும்படி பண்ணுகை. இதற்குப் படிப்படியாகச் சில அவஸ்தா பேதங்களுண்டு. அவை தமிழில் காதல் அன்பு வேட்கை அவா என்பப்படும். ஸம்ஸ்க்ருதத்தில், ஸங்

கம் காமம் அநுராகம் ஸ்நேஹம் எனப்படும். இப்படிப்பட்ட அவஸ்தைகளுக்குத் தகுதியான நாமங்களையுடைத்தாகின்ற *மலர்மிசை யெழுகிற ஞானத்தை க்ரமேண பரம பக்தி தசையி னளவாக முதிரப்பண்ணுகையே மயர்வற மதிநலமருளுகை.

99. [ஜந்மாந்தர ஸஹஸ்ர]. (இனிமேல் இவ்வாழ்வாருடைய பக்தியானது உபாஸகர்களுடைய பக்தியென்ன, ப்ரபந்நர்கள் எம்பெருமானிடத்துப் பெறும் கைங்கர்யோபகரணமான பக்தி யென்ன இவ்விரண்டு பக்திகளிற் காட்டிலும் விலக்ஷணமென் பதை யறிவிக்கைக்காக, முதலில் ஸாதநபக்தியின் நிலைமை காட் டப்படுகிறது.) அநேக ஜந்மங்களிலே பகவதாராதந ரூபமாக அநுஷ்டித்த ஸத்கர்மங்களாலே ப்ரஹ்ம வித்துக்களாக ப்ரஸித்த ரானவர்களுடைய வம்சங்களிலே பிறந்து பகவத் விஷயமான சப்தங்களை யெழுதுவது வாசிப்பது பிறர் சொல்லக் கேட்பதாய்க் கொண்டு இந்த சாஸ்த்ராப்யாஸமுகேந பிறந்த தத்வஜ்ஞாநத்தை யுடையராய், நித்யகர்மாநுஷ்டாந நோபயுக்தமாய்ப்பிறந்துள்ள காய சுத்த்யர்த்தமான ஸ்நானத்தைப் பண்ணி, ஸந்தியாவந்தந காயத்ரீ ஜபம், பஞ்ச மஹாயஜ்ஞம், ஷட்கர்மங்களென்றிப்படி யிருந் துள்ள நித்ய நைமித்திக கர்மாநுஷ்டாநங்களால் பரிபூர்ணராய், நித்யகர்மாதிகளைக் குறைவற அநுஷ்டிக்கையாலே தபஸ்ஸில் யோக்யதை பிறந்தவாறே காயசோஷணார்த்தமாக ஆஹாரத்தைக் குறைத்து ப்ராணதாரணத்துக்குத் தக்கவளவாக்கி உஷ்ணகாலங் களில் மலையுச்சியிலும் பஞ்சாக்நிமத்யத்திலும் நின்று, சீதகாலங் களில் குளங்களிலே முழுகிக் கிடந்து ஜீர்ண பர்ண பலாசநராயும் இப்படி தபஸ்சர்யையாலே உடம்பை யுலர்த்தி, கீழ்ச் சொன்ன கர்மாநுஷ்டாநத்தாலே துக்கஹேதுவான பாபங்களைப்போக்கி, இப்படி ப்ரதிபந்தக பாபநிவ்ருத்தியாலே மநஸ் சுத்திஹேதுவான விவேகாதிகளும் சமதமாதிகளும் அபிவ்ருத்தமாக, காமக்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யா ஜ்ஞாநாஸுமையைகளாகிற எட்டை யும் போக்கி, அஹிம்ஸை முதலான அஷ்டவித புஷ்பங்களையுமிட்டு ஸாஷ்டாங்க ப்ரணமம் பண்ணி, புஷ்பாங்கராகாதிகளான ஸமா ராதநோபகரணங்களை ஸம்பாதித்துக் கொண்டு பகவத் ஸமாராத நத்தைச் செய்து பரிசுத்தாந்த: கரணராய், விஷயாந்தரவனைக் களிலே ஓடாநிற்கிற மிகக்கொடிய இந்த்ரியங்களாகிற மத்த கஜத்தை ஜ்ஞாநமாகிற அங்குசத்தாலே வசப்படுத்தி விஷய போகங்களைக் குறைத்து பகவத் விஷய ப்ரவணமாக்கி, இந்த்ரிய மார்க்கத்தைத் தடுத்து, இப்படி ஜிதேந்த்ரியராய் அவித்யாஅஸ் மிதாராகத் வேஷாபி நிவேச ரூபக்லேச பஞ்சக ஸஞ்சாரத்தைத் தவிர்த்து ஸ்வயம்ப்ரகாசமான ஆத்ம ஸ்வரூபத்தை சாஸ்த்ரோக்

தப்ர க்ரியையாலே ஸாகூதத்கரித்து, யோகமாகிற உபாயத்தாலே கிட்டி ஆந்ருசம்ஸ்யரூப தர்மத்தை யுடையவர்களான தார்மிகாக் ரேஸரருடைய ஹ்ருதயத்திலே பொருந்தியிரா நின்றுள்ள பெறுதற் கரிய அத்யுஜ்ஜ்வல விக்ரஹமுடையனயிருக்கும் ஸர்வேச்வரனை "கண்கள் சிவந்து" என்ற பாட்டில் சொல்லுகிற படியே ஹ்ருதய கமலத்திலே த்யானம்பண்ணி, அந்தத்யாநத்துக்கு விச்சேதமும் விஸ்ம்ருதியுமற்று அநுஸ்யூதமாக நடக்கும் த்ருவாநுஸ்ம்ருதியாய், ஸ்வப்நத்திற் காட்டிலும் அதிசயிதமாக ப்ரத்யக்ஷஸமாநாகார மாய், அப்படி தர்சந ஸமமான அதுதான் அங்கநா பரிஷ்வங்கம் போலே ஸ்மர்த்தவ்ய விஷய ஸாரஸ்யத்தாலே மிகவும் ப்ரியமாய், பரமபதத்திலநுபவத்தையு முபேக்ஷிக்கும்படி தானே பரமப்ராப்ய ரூபமாம்படி ரஸிக்கையாலே அநந்ய ப்ரயோஜநமாய், வேதநமென் றும் உபாஸநமென்றும் ஸேவையென்றும் த்யாநமென்று மித்யாதி சப்தங்களால் சொல்லப்படுகிற பக்தியானது கர்மஜ்ஞாந ஸம்ஸ் க்ருதாந்த : கரண.னுக்குப் பிறக்குமதான்முகையாலே ஸாத்ய ஸாத்யமாய் பகவத்ப்ரஸாதநோபாயதயா தத்ப்ராப்திஸாதநமான பக்தியாக வேதாந்த சாஸ்த்ரத்திலே சொல்லப்பட்டது.

[இந்தால் கர்மஜ்ஞாந ஸாத்யையாய் பகவத்ப்ராப்தி ஸாதநமான உபா ஸகருடைய பக்தியின் வேஷம் காட்டப்பட்டது. ப்ரபந்நர் எம்பெருமா னுடத்தில் ப்ராத்திதப் பெறுகிது கைங்கர்யோபகரண பக்தி விசேஷம் மேல் ப்ரதிபாதிக்கப் படுகிறது.]

100 [ஸ்வீக்ருதஸித்தஸாதநர்.] (ப்ரபந்நர்களுடைய பக்தி ஸ்வ ரூபம் நிரூபிக்கப்படுகிறது.) "த்வத்பாத மூலம் சரணம் ப்ரபத்யே" என்று ஸித்தோபாய ஸ்வீகாரம் பண்ணின ப்ரபந்நர், போஜநத் துக்குப் பசிபோலே இந்த பக்தி கைங்கர்யத்துக்கு உபகரண மாகையாலே ப்ராப்யமான கைங்கர்யம்போலே இதுவும் நமக்கு ப்ராப்யமென்று கருதி "பகவந் பக்தீமபீ ப்ரயச்ச மே" இத்யாதிகளிற் படியே இந்த பக்தியை பகவான் பக்கலில் ப்ரார்த்திக்க, சரீர வியோகத்துக்குப் பிறகு பகவத் ப்ராப்தி பண்ணுவதற்கு முன்னே ஸித்திக்கும்.

101. [இது உபயமுமன்றிக்கே.] முன் சொல்லப்பட்ட ஆழ்வா ருடைய் பக்தியானது உபாய பக்தியும் பலபக்தியுமாகிற இவ் விரண்டு பக்தியுமல்லாமல், திருத்துழாய்க்குப் பரிமளம் போலே கூடப் பிறந்து விடவொண்ணாததாய், மநோரதப்படி அநுபவிக்கப் பெறுதபோது போஜநம் பெறுத தசையிற் பசிபோலே கஷ்ட மென்பது வ்யாதியென்பதாம்படி வெறுப்பைவிளைத்து, அசேஷ்ய மான ஆத்ம வஸ்துவை சோஷிப்பித்து, அபிநிவேச ஸாகரத்திலே விழுந்து துவளும்படி பண்ணி, இதரோபாய பரித்யாக பூர்வகமாக

'அவனே உபாய' மென்று அறுதியிட்டிருக்குமிவரை "குதிரியாய் மடலூர்துமே" என்னும்படி த்யஜித்த வுபாயத்திலே மூட்டுகை யாலே த்யாக நிஷ்டாஹராநியையும், "உன பாதம் சேர்ந்தேனே" "அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அடிக்கடி. ப்ரபத்திபண் ணும்படி யாக்குகையாலே ஸக்ருத் கர்த்தவ்யமான ஸ்வீகாரத்தில் நிஷ்டாஹராநியையு முண்டாக்கி ஸத்தைக்கும் போகத்துக்கும் வ்ருத்திக்கும் உபகரணமா யிருப்பதொன்று.

[ஆக, இவருடையபக்தி ஸாதித்துப் பெற்றது மன்று, அபேக்ஷித்துப் பெற்றது மன்று; ஸஹஜையா யிருப்பதொன்று என்றதாய்த்து.]

102. [இடகிலேன் நோன்பு.] இங்ஙனன்றிக்கே இவருடைய பரம பக்தி—கர்மஜ்ஞாந பக்திகளாகிற ஸாதநத்ரயத்தையும் இந்த ஜந் மத்தி லநுஷ்டிக்கையாலே யாதல் பூர்வ ஜந்மங்களி லப்யாஸத் தாலே யாதல் உண்டானதா யிருக்கக்கூடாதோ வென்னில்; "இடகிலே னென்றட்டகில்லே னீம்புலன் வெல்லகில்லேன், கட வுளைக் காலந்தோறும் பூப்பறித் தேத்தகில்லேன்" "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" இத்யாதி பாசுரங்களிலே கர் மஜ்ஞாந பக்தியோகங்க ளொன்றிலும் தமக்கு நிவேசமில்லை யென்னுமிடத்தை ஆழ்வார் தாமே அருளிச் செய்கையாலே வர்த்தமாநஜந்மத்தில் கர்மஜ்ஞாந பக்திகளாகிற ஸாதநத்ரயா நுஷ்டாநத்தா லுண்டானதல்ல; "கிற்பன் கில்லேனென்றிலன் மூனநாளால்" என்றும், "தெரிந்துணர் வொன்றின்மையால் தீ வினையேன் வாளா விருந்தொழிந்தேன் கீழ்நாள்கு ளெல்லாம்" என்று மருளிச் செய்கையாலே பூர்வ ஜந்மங்களி லப்யாஸத்தா லுண்டானது மல்ல.

103. [இப்பிறப்பே சிலநாளில்.] (ஆழ்வாருடைய பக்தியின் வைல க்ஷண்யம்.) இன்னமும், "குறிக்கொள் ஞானங்களா லெனையூழி செய்தவமும் கிறிக் கொண்டிப் பிறப்பே சிலநாளிலெய்தினன் யான்" என்று-யமநியமாத்யவஹிதராய்க் கொண்டு ஸம்பாதிக்க வேண் டிய வேதநத்யாந உபாஸநாத்யவஸ்தர் விசேஷங்களான ஜ்ஞாநங்க ளாலே அநேக கல்பம்கூடி ச்ரவணமாய் மநநமாய் த்ருவாநு ஸ்ம ருதியாய் வரக் கடவதான பக்தியோகமாகிற தபஸ்ஸி னுடைய பலத்தை ஒருயத்நமுமில்லாமல் ஸதுபாயபூதனை அவ் வெம்பெரு மாளுலே இஜ்ஜந்மத்திலே ஸ்வல்ப காலத்திலே பெற்றேனென்று ஆழ்வார் தாமே ஸ்பஷ்டமாக அருளிச் செய்து வைக்கையாலே-வர்த்தமாந ஜந்மத்தில் ஸாதந த்ரயா நுஷ்டாநத்தா லுண்டான தென்றும் பூர்வ ஜந்மாப்யாஸத்தாலுண்டானதென்றும் சொல்லுகிற இரண்டு வாதமும் கழியுண்டதாய்த்து.

104. [பெரும்பாழில் கூத்ராஜ்ஞன்.] (ஆனால் இவர்க்கு இந்த பக்தி உண்டாகைக்கு ஹேதுவென்? என்னில்; பலனையனுபவிப்பவனை னம்பெருமானுடைய க்ருஷி பலித்தபடி இது என்பது கூத்ரமும் பயிர் செய்பவனும் பயிரும் அதன் பலனுமாக ரூபித்துக் கூறப் படுகிறது.) அளவிட முடியாததாய் போகமோக்ஷங்களை விளைத்துக் கொள்ளலாம் நிலமான ப்ரக்ருதி தத்வத்தில், கலியுகமாகிற வன் னியன் "இவனை நலியுங்கோள்" என்று ஏவ, மநஸ்ஸைத் தங்க ளுக்கு சேஷமாக ஆளுகிற மிடுக்கரான இந்திரியங்களாகிற குறும் பர் இச் சேதநனுக்கு நியாமகராய்க் கொண்டு தேஹத்திலே குடி புகுந்து தங்களுக்கு ப்ரதாநமான மநஸ்ஸையும் தாங்கள் நினைத்த வழியே நடக்கும்படியாகப் பண்ணி விஷயங்களிலே படிந்து புழிக்கிற போகத்திலே ஒருகாலும் த்ருப்திபெறாதே, இவற்றால் வந்த நலிவை ஆற்றியிருப்போமென்றால் ஆற்றவொண்ணாதபடி விஷய போகங்களை புஜிக்கவேணுமென்று இவனைச் சிறைசெய்து தனக்கு அபீஷ்டமானவற்றைத் தாவென்று துகைத்திழுத்து சம்ஸா ரமாகிற சக்கிலே யிட்டுச் சுழற்றி க்ரூரமாய்க் கரையேறவொண் ணாதபடியாயிருக்கும் விஷயங்களாகிற படுகுழியிலே தள்ளி வெகுவிதமாக தண்டித்து அர்த்த காமங்களிரண்டையும் கடன் செலுத்திக் கொள்வாரைப் போலே செலுத்திக் கொள்ள பத்தசேதநனுடைய பக்திக்கு விரோதிலமான மநஸ்ஸானது ஸுக்ருத கந்தமற்றுப் பாழ்பட்டவாறே, இந்திய வச்யதை யாலே இப்படிப் பாழ்பட்ட மனஸ்ஸைத் தன்வசமாக்குவதற்காக, இந்திரியங்களாகிற ஐவர் கூடியித்து முடிந்து போம்படி ஸ்தாவர ப்ரதிஷ்டையர்க விருந்தான்; க்ருபையாகிற வாளையுருவிப் பாப மாகிற தூறுகளை நிர்மூலமாக்குவித்து உருமாய்ந்து போம்படி தக்தமாக்கினன்; பகவதாபிமுக்யம் பிறந்தவளவிலே "இவன் பாகவதனனன்" என்று ஸம்ஸாரிகள் சொல்லும்படி பழி மொழியை பக்தியாகிற பயிர் வளருவதற்கு எருவாக விட்டு ஜ்ஞாநமாகிற அம்ருதநதியை வாயளவாய்த் தலைக்குமேலே போம்படி பெருகப் பண்ணினன்; மநஸ்ஸானது ஊர்த்வமாய்ப் பதம் செய்து வாய்த்தவாறே அந்நெஞ்சிலே ஸங்கமாகிற நெல்லை விளைத்து, தேக பரதந்த்ரமாய் தேஹபோகமாய் வளருகிற இப்பயிரில் கர்த்ருத்வ போக்த்ருத்வ புத்தியை விளைக்கும் அஹங் கார மமகாரங்களாகிற களையையும் ஊசிவேரோடே பறித்துப் பொகட்டான்; களை பறித்தாலும் பட்டிபுகாமல் நோக்கினை லன் றிப் பயிர் தலைப்பெற்றுச் செல்லாதாகையாலே பக்தியாகிற இப் பயிருக்குப் பட்டியான இந்திரியங்களாகிற சேக்களினுடைய ஸ்வச்சந்த ஸஞ்சார ஹேதுவான கர்வத்தைப் போக்கினன்; பக்தியாகிற பயிர் விளைந்து கிடக்கிற நெஞ்சு அப்யாஹமாகாத

படி "பள்ளியறை குறிக் கொள்மின்" என்கிறபடியே காவ லிடைத்து, காளமேக நிபச்யாமமான வடிவழகை வர்ஷித்து வளர்க்கையாலே அந்த பக்தியாகிற பயிர் கடல்போலே அபரிச் சேத்யமாம்படி பலித்து பக்தி பரிபாக நிபந்தநமான ஆர்த்தியால் வரும் பாரவச்யம் பிறந்தவாறே, ஒரு நாள் புஜித்து விடுகையன் றிக்கே நாள்தோறும் புஜியா நிற்கச் செய்தேயும் அத்ருப்தனாய் இத்தலையில் ஸ்வல்பம் சேஷித்துக் கிடக்கிறதென்று நிரூபித்தறிய வேண்டும்படியாக, அருகேயிருந்த பிராட்டிமார் முதலானோரு மறியமாட்டாதபடி, பெரும்பசியரானவர்கள் விழுங்க நெல்லைச் சோரவுறுத்துக் கொண்டுபோய் புஜிக்கப் பற்றுமல் முற்றினவளவு களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு புஜிக்குமாபோலே, முக்தனனவாறே பின்பு பூர்ணமாக புஜிப்போ மென்றிருக்க மாட் டாத தன் அபிநிவேசத்தாலே இச்சரீரத்தோடே இருக்கச் செய்தே விழுங்க பரிபாகாநு குணமாக மனஸ்ஸுக்கு த்ருப்தி பிறவாமல் மேன்மேலும் விரும்பி புஜித்து, பரிபக்வமான இவ் வஸ்து காலக்கழிவாலே தரைப்பட்டு மங்கிப் போகாமல் ப்ராப்தி விரோதியான கர்மங்களை யறுத்தான்; அறுத்த நெற்கதிரைத் தடியாலே யடித்துப் பதரும் மணியும் பிரிக்குமாபோலே "அரு ளென்னும் தண்டாலடித்து" என்கிறபடியே தன்னுடைய க்ருபையாகிற த்ருடமான ஸாதநத்தாலே பதர்போன்ற ஆத்மாநு பவத்தில் ருசியை அறுத்தான்: அந்த நெல்லில் உமியை விடுவிக்கு மாபோலே ஆத்மாவைப் பொதிந்து கிடக்கிற ஆதிவ்யாதி ஷட்பாவ விகாரங்களுக்குக் காரணமான ஸ்தூலதேஹத்தை விடு வித்தான்; பிறகு அரிசியைத் தவிடறக் கழுவுமாபோலே ஸம் ஸார ஹேதுவாய்ப் போந்த ஸூக்ஷ்ம சரீரத்தை விரஜாஜல ஸ்பர் சத்தாலே வாஸநாலேஶக்களோடேபோக்கி, ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபையான ப்ரக்ருதியில் நின்றும் விவேகித்து வாங்கின இவ்வாத்ம வஸ்துவை அமாநவகர ஸ்பர்சத்தாலே அப்ராக்ருத தேஹத்திலே ப்ரவேசிப்பித்து, ஸத்கார ஸாமக்ரியோடு எதிரேவருகிற அப்ஸ ரஸ்ஸுக்களைக்கொண்டு ஜ்ஞாநாதி ஷட்குணங்களாகிற அறுசுவை களோடு "அஹமந்நம்" என்கிற அன்னமாம்படி பக்வமாக்கி நித்ய ஸூரிகளுக்குப் பரமபோக்யமாம்படி யானவாறே, இவ்வாத்ம வஸ்துவை முழுக்க புஜிப்பதாக இவ்வாத்மாவுக்கு ருசி பிறப்ப தற்கு முன்னே பிடித்தும் பாரித்து இவன் கர்ஷகனென்று தோற் றும்படி க்ருஷிஸாதநத்தைக் கையிலே கொண்டு இவ்வாத்மோஜ் ஜீவநத்துக்கு மிகவும் யத்நியாநிற்கும் ஸ்வபாவனைய் ஸ்வவிஷய பக்தியை விளைக்கைக்கு க்ருஷி பண்ணித் திரியும் ஸர்வேச்வர னுடைய க்ருஷியின் பலமிறே இவ்வாழ்வாருக்குண்டான இந்த

பக்தி [இத்தால் ஆழ்வாருடைய பக்தியின் உத்பத்திக்குக் காரணம் பகவானுடைய க்ருஷி யென்றதாயிற்று.]

105. [கோஸல கோகுல.] இப்படி இத்தலையில் ஒரு ஸுக்ருதமு மில்லாமலிருக்க ஈச்வரனுடைய க்ருஷி பலிக்கக் கண்டவிட முண்டோ வென்னில்; திருவயோத்யாதி கோஸல தேசவர்த்திக ளான சராசரங்களெல்லாம் "புற்பாழுதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே.....நற்பாலுக் குய்த்தனன்" என்னும்படி நிர் ஹேதுகமாக பகவத் விஷயீகாரம் பெற்றபடியும், கோகுலத்தி லுண்டான சராசரங்களெல்லாம் அவனெருவன் குழலூதின போது நிர்ஹேதுக பகவத்ப்ராவண்ய பரவசங்களான படியைக் கண்டு "நங்கை மீர்களிதோ ரற்புதம் கேளீர்" என்று விசேஷஜ் ஞர் ஈடுபட்டுச் சொல்லும்படியும் கண்டோமன்றே.

[இத்தால் எம்பெருமானது நிர்ஹேதுக விஷயீகாரம் இப் படிபலிக்கக் காண்கையாலே, ஆழ்வாருடைய பக்தியும் அவனது நிர்ஹேதுக க்ருஷி பலமென்னத் தட்டில்லை யென்றதாய்த்து.]

106. [பட்டத்துகுரியவானையும்.] ஆனால் இப்படி நிர்ஹேதுக மாக விஷயீகரிக்கு மளவில் எல்லாரையும் விஷயீகரிக்கலாயிருக்க, இங்ஙனே இவரொருவரை விஷயீகரிக்கைக்கு ஹேதுவென்னென் னில்; அராஜகமான தேசத்திலே பட்டத்துக்குரிய ஆனையைக் கண்ணைக் கட்டிவிட்டால் அவ்வானையால் எடுக்கப்பட்டவனெரு வன் ராஜாவாகும்போது, 'அல்லாதா ரெல்லாம் கிடக்க, இவனை இப்படி எடுக்கைக்கு அடியென்?' என்று ஆராயாதாப் போல வும், ராஜாவானவன் தன் செருக்காலே ஒருத்தியைத் தனக்கு மஹிஷியாகப் பரிக்ரஹிக்குமளவில், 'இப்படிக் கொத்த ஸ்த்ரீகள் பலரு முண்டாயிருக்க, இவளை இவன் இப்படி பரிக்ரஹிக்கைக்கு அடியென்? என்று ஆராயாதாப்போவவும், நிரங்குச ஸ்வதந்த்ர னை ஸர்வேச்வரன் ஸ்வாதீநமுமாய் ஸ்வார்த்தமுமான ஆத்ம வஸ்துக்களிலே ஒரொன்றை ஸ்வேச்சையாலே தன் விநியோகத் திற்கு உரித்தாம்படி விஷயீகரித்தால் அதுக்கு ஹேது ஆராயப் படாது.

107. [முந்நீர் வாழ்த்தார் சூட்டும்.] இப்படி சொல்லுவானென்? இவர் தமக்கு ஜ்ஞாதஸுக்ருதங்களன்றே இல்லை யென்றது; யாத்ருச்சிகாதி அஜ்ஞாத ஸுக்ருதங்களடியாக அங்கீகரித்தா னாகாதோ வென்னில்; "முந்நீர் ஞாலம் படைத்த" "வாழ்த்தார் கள் வாழ்ந்தது" "சூட்டுநன்மாலைகள்" "கோவைவாயாள் பொருட்டு" "ஆழியெழ" இத்யாதிகளாலே தமதுவ்ருத்தாந்தங் களையும் பிறாது வ்ருத்தாந்தங்களையும் ஸாகூதாக்கரித்து அருளிச்

செய்கிற ஆழ்வார்க்கு அஜ்ஞாதமான அம்சமொன்று மில்லாமையாலே தம்மை ஈச்வரனங்கீகரிக்கைக் கடியான யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்களுண்டாகில் மற்றவைபோலே அவையும் ப்ரகாசிக்கும்; ப்ரகாசித்தால் ஆழ்வார் அருளிச்செய்வர்; அப்படி அருளிச்செய்யக் காணுமையாலும் கேவல நிர்ஹேதுக விஷயீகார ப்ராகாசக ஸ்ரீ ஸூக்திகள் பலவு மருளிச் செய்தமை காண்கையாலும் அவையு மிவர்க்கில்லை.

108. [செய்த நன்றி தேடிக்.] இப்படி அங்கீகார ஹேதுவாயிருப்பதொரு ஸுக்ருத மில்லையே யாகிலும் அத்வேஷமும் ஆபிமுக்யமும் ஸுக்ருத மடியாக வாணுலோ வென்னில்; "வாட்டாற்றுற்குளந்தன்றி செய்தேனை என்னெஞ்சில் திகழ்வதுவே" என்று-எம்பெருமான் தம்மை விஷயீகரிக்கைக்கு உடலாகத்தாம் செய்த ஸுக்ருத மேதேனுமுண்டோ வென்று தேடிக் காணுமல் "என்னைத் தீமனம் கெடுத்தாய்" "மருவித் தொழும் மனமேதந்தாய்" என்று தீமனம் போகையாகிற அத்வேஷமும், மருவித் தொழும் மனமுண்டாகையாகிற ஆபிமுக்யமும் இரண்டு மவனுலே யுண்டாய்த்தென்று தாமே நிஷ்கர்ஷிக்கையாலே அத்வேஷாபி முக்யங்களும் ஸத்கர்மத்தாலே வந்ததன்று.

109. [எண்ணிலும் வரும் கணக்கு.] ஆனல் பரமபக்திக்கு முகம் காட்டுமாபோலே பரிகணனைக்கும் முகம் காட்டுமென்றுரோ இவர்தாமே; அந்த பரிகணனைதானிவர்க்கு உண்டாணுலோ வென்னில்; "எண்ணிலும் வருமென்னினி வேண்டுவம்" என்றது எம்பெருமாணுடைய குணப்ரகர்ஷத்தைச் சொன்னவித்தனையே யன்றே. அந்த பரிகணனைக்குத் தம்மோடு அந்வயமில்லாமை கண்டு "கண்டாயே நெஞ்சே! கருமங்கள் வாய்க்கின்று, ஒரெண்டாணு மின்றியே வந்தியலுமாறு" என்று தம் திருவுள்ளத்துக்கு மூதலிக்கையாலே அதுவும் இவர்க்கில்லை.

110. [மதியாலிசைந்தோமென்னும்] அதுதான் வேண்டுமோ? தமக்கு அநுமதிச்சைகள் இருப்பதாக அருளிச்செய்தாரே, அவைதான் ஹேதுவாணுலோவென்னில்; "வைத்தேன் மதியால் எனதுள்ளத்தகத்தே" என்றும், "யாணுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்றும் தமக்கிருப்பதாகச் சொன்ன அநுமதியும் இசைவும் ஈச்வரக்ருஷிபல மென்ணுமிடம் "யாமேட்டி யென்ணுளிருத்துவமென்றிலன்" "இசைவித்தென்னை யுன்தாளிணைக் கீழிருத்து மம்மானே" "என்னிசைவினை" இத்யாதிஸ்வஸூக்திகளாலே விளங்கும்.

111. [மாதவன் மலை நீர்.] இவையொன்றுமில்லையாகிலும், மாதவனென்றும் திருமாலிருஞ் சோலையென்றும் சொன்ன உக்திமாத்

நிரத்தைப் பற்றுசாகக் கொண்டு எம்பெருமான் தம்மை விஷயீக நித்தாரை ஆழ்வாரருளிச் செய்கையால் அவைதானுண்டே யென்னில்; "மாதவனென்றதே கொண்டு என்னையினி இப்பார்ப்பட்டது, யாதவங்களும் சேர்கொடேனென்று என்னுள் புகுந்திருந்து" என்றும், "திருமாலிருஞ் சோலைமலையென்றேனென்ன, திருமால் வந்தென்னெஞ்சு நிறையப்புகுந்தான்" என்றும் சொல்லும்படி, மாதவனென்று நம் பேரைச் சொன்னன், திருமாலிருஞ் சோலைமலையென்று நம் ஊரைச் சொன்னன் என்று வறிடுகிறவை ஈச்வரனுகந்த திருநாமமென்றும் அவன் உகந்து வர்த்திக்கிற திருமலையென்றும் சொன்னவையல்ல; பேருக்கும் மலைக்கும் வ்யாவ்ருத்தி சொன்னமாத்திரமே; மற்று மிவற்றோடு ஸஹபடிமாய்ப் போரும்வையான 'என்னடியார் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்றேறிடுகிறவை தன் பயிர் கெடாமைக்காகத் தண்ணீர் இறைக்கிறதும், சூது சதுரங்க மாடுகைக்காகத் தெருத் திண்ணை கட்டிவைக்கிறது மொழிய, பாகவதர்களுடைய விடாயைத் தீர்க்கைக்கும் அவர்கள் ஒதுங்க நிழலாகைக்கும் செய்கிறதல்லாமையாலே அந்யார்த்தம், இவையித்தனையும் இத்தலையில் நினைவின்றியிருக்க அவனடிந்து வறிடுகிறவை யாகையாலே புத்தி பூர்வகமல்ல; இவைதான் பல ஹேதுவாக சாஸ்த்ர விஹிதங்களுமன்று; பகவத்விஷயீகாரமாகிற மஹாபலத்துக்கு இவை ஸத்ருசமுமல்ல; இவையுண்டானால் இவ்வருகே சில அல்பப்ராயோஜநங்களுக்கு ஹேதுவாமித்தனை; ஆகையாலிவை பகவதங்கீகார ஹேதுவாக மாட்டாது.

112. [இவன் நடுவே.] ஆனால் இவரை இப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரிக்க வேண்டுவானேன்? என்னில்; இப்படி ஒன்றை ஆரோபித்தாகிலும் விஷயீகரிக்குமிவன் நிர்ஹேதுகமாக வந்து "த்வம்மே" இத்யாதிப் படியே 'இவன் என்னடியான்' என்று பிடிக்க, அதுக்கு இவர் இசையாமல் 'என்னை நீ உன்னடியானென்றது எத்தாலே?' என்ன: இவரை இசைவிக்கைக்காக வேதத்தை ப்ரமாணமாகக் காட்ட; அது எழுதாமறையாகையாலே 'அது ஓலைப் படாப்ரமாணம்' என்று இவர் அத்தை அங்யதாகரித்துத் தம்முடைய அநாத்யநுபவத்தைப் ப்ரபலமாகக் கொண்டு நிற்கையாலே ஆட்சியிலும் ப்ரபலமான தொடர்ச்சியை முன்னிட்டவளவில் அதுக்கு ஸாக்ஷியாரென்று கேட்டவாறே தத்வதர்சிகளான ஜ்ஞாநிகளை ஸாக்ஷியாகக் காட்ட. 'அவர்கள் உனக்குப் பக்ஷபாதிகள்' என்று அதுக்குமிவர் கண்ணழிவு சொல்லுகையாலே, அநாதிகாலம் தாம் 'அஹம் மம' என்றிருந்து போந்தவநுபவம் ஆத்மாபஹாரமாகிற வலியகளவாலே வந்த

தென்று இவர் அநுதபிக்கும்படி இந்த்ர ஜாலங்கள்போலே த்ருஷ்டி சித்தாபஹாரிகளான வடிவழகையும் சீலத்தையும் சேஷ்டிதத்தையும் காட்டி வாய்மாளப் பண்ணி, இவர் தம்மதாக நினைத்திருந்த ஆத்மாத்மீயங்களைத் தன்னதாக்கிக் கொள்ளும் படியாக அநிவார்யமான க்ருபையானது எம்பெருமானைச் சூழ்ந்துகொண்டது.

113. [வரவாறில்லை வெறிதே.] எல்லாம் செய்தாலும் இப் படிப்பட்ட க்ருபையானது அநாதிகாலம் இவ்வாத்ம விஷயமா கப் பெருகாமல் இன்று பெருகுமளவில் இதுக்கு ஒரு ஹேது வேண்டுகையாலே இதுக்குடலாகக் கல்பிக்கலாவதொரு ஸுக் ருதமில்லையோவென்னில்; "வரவாறொன்றில்லையால் வாழ்வினி தால்" "வெறிதேதயருள்செய்வர்". இத்யாதிகளாலே பகவத்விஷயீ காரம் நிர்ஹேதுகமென்று ஆழ்வார்தாமே அறுதியிட்ட பின்பு "தனியேன் வாழ்முதலே" என்று தம்முடைய பேற்றுக்கு மூல ஸுக்ருதமாக இவரருளிச் செய்த அவ்வீச்வரனையொழிய வேறு கல்பிக்கலாவதொரு ஸுக்ருதமில்லை.

114. [நலமருளினன் என்கொல்.] இப்படி நிர்ஹேதுக விஷயீகாரபாத்ரபூதரான இவருடைய பக்தி எம்பெருமானது அருளினாலேயே பெறப்பட்டதாகிலும் உபாஸகனுக்கு கர்மஜ் ஞாநஜந்ய பக்திபோலே இவர்க்கு ப்ராப்திஸாதநம் இதுவோ வென்னில், "மயர்வற மதிநலமருளினன்" என்று 'தம்முடைய பக்த்யுத் பத்திகாரணம் கேவல பகவத் க்ருபை' என்று உபக்ர மித்து, "என்கொலம்மான் திருவருள்கள்" என்னுமளவாக ஜ்ஞாநதசையோடு, வரண தசையோடு, ப்ராப்தி தசையோடு வாசியற ஆமூலசூடம் "மாலருளால் மன்னுகுருகூர்ச் சட கோபன்" என்று - நின்ற நிலைதோறும் அவனருள் கொண்டே தரிக்கவேண்டும் ஸ்வபாவரான இவர்க்கு "ஆருவன்பிலடியேனுன் னடிசேர் வண்ணமருளாயே" என்கையாலே "மதிநலமருளினன்" என்று முதலிலே பக்தி காரணமாகச் சொன்ன க்ருபையே தச்சரண கமலப்ராப்திக்கும் ஸாதநம்.

115. [புணர்தொறுமென்ன]. இப்படி ப்ராப்தி ஸாதநம் க்ருபையேயாகில், "இந்நின்ற நீர்மையினியாமுறுமை" என்ற போதே இவரபேக்ஷிதம் செய்துவிடலாயிருக்க, இவரை இந் நிலத்திலேவைத்து ஸ்வஸம்ச்லேஷ விச்லேஷங்களாலே ஜ்ஞாந பக்திகளை வளர்த்தது ஏதுக்காகவென்னில்; கநமான கர்ண பூஷணமிடுகைக்கு இடமாம்படி நூலிட்டுத் திரியிட்டுக் குதம்பை யிட்டுக் காது பெருக்குமாபோலவும், மாஸோபவாஹிகளுக்கு முதலிலே போஜநமிட்டால் பொறுதென்று சோற்றையறைத்து உடம்பிலே பூசிப் பொரிக்கஞ்சி கொடுத்துப் பொரிக் கூழ் கொடுத்து நாளடைவிலே போஜநம் பொறுப்பிக்குமாபோலவும், "ஆற்றநல்ல வகைகாட்டுமம்மான்" என்று எனக்குப் பொறுக்

கப் பொறுக்க தன்குணசேஷ்டிதாதிகளைக் காட்டி அவ்வழி யாலே என்னை அடிமைகொண்டவனென்னும்படி பகவதநுபவம் கண்டறியாதவிவர்க்கு அதிச்லாக்யமாய் நித்யஸூரிகள் அநுபவிக்கிற போகத்தை முதல் முதலிலே கொடுத்தால் ஸாத்மியாதென்று கருதி அது ஸாத்மிக்கைக்காக ச்ரமம் செய்வித்த படி. [ஆனபின்பு ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது ப்ராப்திஸாதநதயா அன்றென்று கருத்து.]

116. [இவற்றுல் வரும் ஸம்.] கீழ்ச்சொன்ன இக்காரியங்களடியாகவரும் ஸம்ச்லேஷமும் விச்லேஷமும் எவையென்னில்;—ப்ரத்யக்ஷாதுல்யமான மாநஸாநுஸந்தாநம் - ஸம்ச்லேஷம்; அபேக்ஷிதமான பாஹ்யாநுபவம் பெருமையாலே உள்ளநுபவமும் அடிமண்டியோடே கலங்கும்படி பிறந்த அந்தஃகரணசைதில்யம்-விச்லேஷம்.

117 [புண்ணியம் பாவம் புணர்ச்சி.] ஆகையால் அபிமதவிஷய ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் புண்ய பாபநிபந்தநமாகவன்றோ லோகத்தார்க்கு வருவது; லோகவிலக்ஷணரான இவர்க்கு அவை வருகைக்கு நிதாநமேதென்னில்; நாட்டார்க்கு புண்யபாபபலமாய்க் கொண்டுவருகிற ஸம்ச்லேஷ விச்லேஷங்களை, புண்ய பாபரூபமான ப்ரபலகர்மங்கள் அற்றிருக்கிற இவ்வாழ்வார்க்கு ப்ரியபரனும் ஹிதபரனுமான ஈச்வரன்தானே நடத்திக் கொண்டு போவன்; கிம்நிமித்தமென்னில்; "துளக்கற்றமுதமாயெங்கும் பக்க நோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணன்" என்று ஸ்வஸம்ச்லேஷத்தாலே இவர் அதிப்ரீதராகைக்காகவும், "தழைநல்ல வின்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே" என்று - 'விச்லேஷவ்யஸநத்தாலே நான் முடியாநின்றேன், இனி என்துக்கம் காணுமையாலே லோகமெல்லாம் ஸுகித்து ஸம்ருத்ததமாகக் கடவது' என்னும்படி மிகவும் துக்கநிமக்நராகைக்காகவும். [இப்படி ப்ரீதிதுக்கங்களை வளர்ப்பதும் ஜ்ஞாநபக்திகளை வளர்க்கையில் நினைவாலேயென்பது கீழ்ச் சொல்லப்பட்டது.]

118. [ஜ்ஞானத்தில் தம் பேச்சு]. இவர் ஜ்ஞாந தசையிலே தாமான தன்மையில் நின்று பேசுவர்; ப்ரேம தசையில் அவஸ்தாந்தராபந்நராய்ப் பெண் பேச்சாகப் பேசுவர்.

119. [தேறும் கலங்கியென்றும்]. இப்படி தெளிவும் கலக்கமுமான இத்தசைகளில் பேச்சில் வாசியொழிய ஸ்வரூபத்திலும் வாசியுண்டோவென்னில்; "சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்" "கண்ணீர் மிகக் கலங்கிக் கைதொழும் நின்றிவ்வேள" என்று—தெளிந்த தசையிலும் கலங்கின தசையிலும் ஸ்வரூபத்வ ப்ரகாசகமான அஞ்சலிமாறுமையாலே "தேறியும் தேறாதும் மாயோன்திறத்தினளே இத்திருவே" என்கிறபடியே

தெளிந்த தசையோடு கலங்கின தசையோடு வாசியற இரண்டு அவஸ்தைகளிலும் சேஷத்வ ரூபஸ்வரூபமும் நிலைகுலையாது.

120. [**அடியோம் தொடர்ந்து.**] ஆனல் இவர்க்கு அவஸ்தாந் தரமாவதேதென்னில்; "அடியோம் போற்றி யோவாதே" "தொடர்ந்து குற்றேவல் செய்து" என்று தாமான தன்மையில் சொல்லுகிறுப்போலே "அடிச்சியோம் தலைமிசை நீ யணியாய்" "திருவடிக்கீழ் குற்றேவல் முன் செய்ய" என்று ஸ்த்ரீத்வ தசை யிலும் சொல்லுகையாலே ஸ்வரூபத்திலும் ஸ்வரூபாநு ரூப வ்ருத்தி ப்ராப்தனையிலும் பேதமில்லை; பிராட்டியான பாவனை யாலே தம் பேச்சானவிது போய் பெண் பேச்சாகை இவர்க்கு அவஸ்தாந்தரமாவது.

121. [**வித்யை தாயாகப் பெற்று.**] ஆனல் இவர்க்குத் தம் பேச்சன்றே ஸ்வாபாவிகம்; பிராட்டிமார் தசையை அண்டாது பேசும் பேச்சு வந்தேதறியன்றேவென்னில்; அன்று; ஆசார் யன் திருமந்த்ர முகத்தாலே ஸ்வரூபஜ்ஞாநத்தை யுண்டாக்கின போர்து இவ்வாத்மஸத்பாவமாகையாலே வித்யையை மாதாவாகக் கொண்டு இவ்வாத்ம வஸ்துவை ஜநிப்பித்து * தேனும் பாலு மமுதுமாய திருமால் திருநாமமென்கிற போக்ய பதார்த்தமான திருமந்த்ரத்தாலே — அநந்யார்ஹ சேஷத்வாதிகளால் லக்ஷ்மீ ஸத்ருசமாக வளர்த்துக்கொண்டு போந்த ஆப்த ரக்ஷகனை ஆசார்யனுகிற பிதா, அங்யசேஷத்வ ப்ரஸங்கம் வாராதபடி, ஸர்வ லோகநாயகனுகச் சொல்லப்படுகிற * பணமாடரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள் மணவாளரை எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம் போலே எட்டக்ஷரமாய் மூன்று பதமாய் ஈச்வர ஸம்பந்த ப்ரகாசகமான திருமந்த்ரமாகிற மங்கள ஸூத்ரபந்தத்தேதாடே வரிக்கும்படி பண்ண, பரமபுருஷ ரான மணவாளர் பரிக்ரஹித்த வனந்தரம் கைங்கர்ய ப்ராப்தனை யோடே செல்லும் சரம சதுர்த்தியிலே உள்புகுந்து, பகவதநு பவவிரோதியாய் இடையீடான சரீரம் நடுவே கிடக்கிற நாலு நாளையும் கழித்து, ஒருவராலும் விடமுடியாத ஜந்ம பூமியான இவ்விபூதியை முன்பு ஆதரணீயமாய்ப் போந்த வஸ்துக்களோடே கூடவிட்டு நீங்கி "சூழ்விசும் பணிமுகில்" என்கிற திருவாய் மொழியில் சொல்லுகிறபடியே அர்ச்சிராதிமார்க்கத்தாலே வழியி லுள்ளாரெல்லாரும் ஸத்கரிக்க "நயாமி பரமாம் கதிம்" என்கிற நாயகன் முன்னே போகப் பின்னே போய், பர்த்ரு க்ருஹத்துக் குப் போகிற பெண் அவ்வூரெல்லையிலே சென்றவாறே அவர்கள் குளிப்பாட்டக் குளிக்குமா போலே அம்ருதவாஹிநியான விரஜையிலே இப்பாலுள்ள அழுக்கு அறும்படி நீராடி, குளித் தேறின பெண்ணை பர்த்ரு பந்துக்களான ஸ்த்ரீகள் வந்து அலங் கரிக்குமாபோலே அலங்காரோபகரணங்களான திவ்யமால்ய திவ்யாம்ஜந திவ்ய சூர்ண திவ்யவஸ்த்ர திவ்யாபரணங்களை ஏந்திக்

கொண்டு திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் எதிரே வந்து போக்காவான ஈச்வரனுக்கு போக்யமாம்படி அலங்கரித்து, இவ்விஷயத்தில் கிஞ்சித்கரிக்கையிலுண்டான சாபலம் தோற்றத் திரளநின்று மங்களாசாஸனம் பண்ணி சாமரம் பரிமாற, அலங்க்ருதையாய் உபலாலநத்தேதாடே செல்லுகிற பெண் பார்த்ருக்ருஹத்தை அணுகச் சென்றவாறே அங்குள்ள ஸ்த்ரீகள் மங்கள தீபாதிகளை ஏந்திக்கொண்டு எதிரே வந்து ஸத்கரிக்கு மாபோலே பூர்ண கும்பதீபாதிகளைத் தரித்துக்கொண்டு நித்ய நவயௌவனைகளான வேறே சில ஸ்த்ரீகள் எதிர்கொள்ள, உபலாலநத்தேதாடே சென்ற பெண் பார்த்ருக்ருஹத்திலே புக்கிருக்குமாபோலே ச்ரிய: பதியானவனுக்கு போகஸ்தானமான ஸ்ரீ வைகுண்டத்தை ப்ராபித்து அவனோடே கூடியிருந்து, பார்த்ருக்ருஹத்திலே பெண் வந்த பின்பு தம்பதிகளும் மற்றுமுள்ள பந்துக்களும் கூடியிருந்து பெருங்களிச்சியுண்ணுமாபோலே * அடியார் குழாங்களும் அவனுமாக இருக்கிற சேர்த்தியிலே பெருங்களிச்சியாகப் பூர்ணுபவம் பண்ணி, நித்ய ஸூரிகள் புஜிக்கிற போகத்தை "ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ரஹ்மணா விபச்சிதா" என்கிறபடியே புஜித்து பார்த்ருஸம்ச்லேஷத்துக்குப் படுக்கையில் ஏறுமாபோலே உபயவிபூத்யாதிபத்ய ப்ரகாசகமாய் ஸர்வாச்சர்யமயமான திவ்யபீடத்திலே பாதபீடத்திலே அடியிட்டேறி, ஸ்ரீ பரதாழ்வானையும் அக்ரூரனையும் திருவடியையும் ஆதரித்தணைத்துக் கொண்ட ஸ்ரீ கௌஸ்துபோஜ்ஜ்வலமான திருமார்பிலே ஸ்ரீ கௌஸ்துபம் போலே போக்யமாய் அணைகிற ஆத்ம வஸ்துவுக்கு நாயகிப் பேச்சு ஸ்வாபாவிகமேயொழிய வந்தேறியன்று.

122. [இன்பு மன்பும்.] "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பனே" என்னும்படி பிராட்டிக்கு முன்னே இவர்பக்கல் இன்பமுண்டது, "கோலமலர்ப் பாவைக்கன்பாகிய வென்னன்பே" என்னும்படி அவள்பக்கல பண்ணினஸ்நேஹம் இவரளவும் வர வளருவதாய் இப்படி இன்புமுற்படுவது, அன்பு கொழுந்து விடுவதாகிறது - பிராட்டியோடு இத்தலைக்குள்ளஸாம்யத்துக்கு உடலான ஆறுப்ரகாரத்தாலே யாய்த்து. [அநந்யார்ஹசேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வம், ஸம்ச்லேஷத்தில் தரிக்கை, விச்லேஷத்தில் தரியாமை, ததேகநிர்வாஹ்யத்வமாகிற இவையாய்த்து ப்ரகாரஷட்கம்.]

123. [கீழ்ச் சொன்ன ஆகாரத்தாலே பெரிய பிராட்டியாரோடுள்ள ஸாம்யமேயன்றிக்கே, தம்முடைய பாவவிசேஷங்களாலே பகவதபிமததிவ்ய மஹிஷிகளான பிராட்டிமார் மூவரோடுமிவர்க்குண்டான ஸாம்யம் இவர் பாசுரங்களிலே தோற்றும்; எங்ஙனேயென்னில்; "உண்ணுதுறங்கா தொலிகடலை யூடறுத்து" "கிடந்திருந்து நின்றளந்து" "சூட்டுநன் மாலைகள்" என்னுமிப் பாட்டுக்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட வைலக்ஷண்யாதிசய சாலினி

களாய், ஸர்வேச்வரஸாம்ராஜ்யத்தில் அவனைடொக்க முடிசூடு கையாலே முடிக்கு உரியரான ஸீதாபிராட்டி, பூமிப் பிராட்டி, நப்பின்னைப் பிராட்டி என்னுமிவர்களோடு, "மாயோன்திறத் தின்ளே யித்திருவே" என்றும், "மண்ணேரன்ன வொண்ணு தலே' எனறும், "பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள் கொல்" என்றும் சொல்லுகிறபடி. இவ்வாழ்வாருக்குண்டான ஸாம்யமாவது - "தென்பாலிலங்கை வெங்களம் செய்த" "இலங் கைக் குழா நெடுமாடமிடித்த பிரானுர் கொடுமைகளே" "காயும் கடுஞ்சில்லியென் காகுத்தன் வாராணல்" "இலங்கைநகர் அம்பெரி யுய்த்தவர்தாளிணை மேலணி" "தீமுற்றத் தென்னிலங்கை யூட்டி னன் தாள்நயந்த" "மாறில் போரரக்கன் மதிள்நீறெழச் செற் றுகந்த" "கிளரரக்கன் நகரெரித்த" "காண்பெருந் தோற்றத் தென் காகுத்த நம்பிக்கு" "என்னுருயிர்க் காகுத்தன் நின்செய்ய வாயொக்கும் வாயன்" இத்யாதிபாசுரங்களிலும், "ஆதியங்காலத் தகலிடம் கீண்டவர்" "மண்புரை வையமிடந்தவராகற்கு" "ஞாலப்பொன்மாதின் மணுளள் துழாய்" "ஏனமொன்ருய் மணதுகளாடி" இத்யாதிபாசுரங்களிலும், "எருதேழ்தழீ இக் கோளியார்" "சறையினுர் கவராத" இத்யாதிப்பாசுரங்களிலும் தோற்றும். [இத்தால், திவ்யமஹிஷிகள் மூவரோடு மிவர்க் குண்டான ஸாம்யம் ஸீதாபிராட்டிக்கு அஸாதாரணமான ராமாவதார, ததபதாநங்களிலும்-ஸ்ரீ பூமிப் பிராட்டிக்கு அஸா தாரணமான வராஹாவதார, ததபதாநங்களிலும், நப்பின்னைப் பிராட்டிக்கு அஸாதாரண்மான் க்ருஷ்ணவதார - ததபதாநங் களிலும் அந்தப் பிராட்டிமார் தங்களைப்போலே மிகவும் ப்ரவண் ராய் அருளிச்செய்த அவ்வவதிவ்ய ஸூக்திகளிலே அபிவ்யக்த் மென்றதாய்த்து.]

124. [இவர்கள் தேடி நிற்க.] (இப்படி ப்ரதாநமஹிஷிக ளான இவர்களோடுள்ள ஸாம்யமேயன்றிக்கே அவனுக்கு இவர் களிற் காட்டிலும் அபிமதைகளான கோபிமார்களுடையவும், மதுரா நகரஸ்த்ரீகளுடையவும, நரகவதத்திற்குப் பிறகு பரிக்ர ஹித்த பதிணருயிரம் தேவிமாருடையவும் பாவங்கள் இவர்க்கு உண்டென்னுமிடம் இவர் தம் பேச்சிலே தோன்றும்.) "தேடித் திருமாமகள் மண்மகள் நிற்ப" என்கிறபடியே ப்ரதாநமஹிஷி களான ஸ்ரீ பூம்யாதிகள் தன்னைத் தேடி நிற்கவேணுமென்படி இவர்களை யுபேக்ஷித்து, பொய்கை, மணல் குன்று, முல்லைப் பந்தல், திருமுற்றம், மச்சு, மாளிகை முதலான அவ்வவ ஏகாந்த ஸ்தலங்களிலே சென்றுபுக்கு, துகில்களை வாரியும், சிற்றிலை யழித்தும், பந்தைப் பறித்தும், கச்சொடுபட்டைக் கிழித்தும், இப்படி நியாமகரற்ற ஸ்வதந்த்ரர் செய்யுமவற்றையும், நியாமகர் கீழடங்காமல் மூலையடியே நடத்துவார் செய்யுமவற்றையும் செய்து, பேராரவாரம் விளைத்து விரும்பியநுபவிக்கப்பெற்ற

பரமவிலக்ஷணகளான திருவாய்ப்பாடியிற் பெண்களுடைய பாவனை இவர்க் குண்டென்னுமிடம், "மின்னிடைமடவார்கள் நின்னருள் சூடுவார்" "மல்லிகை கமழ்தென்ற லீருமாலே" என்கிற திருவாய் மொழிகளிலும், "பேய் முலையுண்டு சகடம் பாய்ந்து" "முனிந்து சகடமுதைத்து" என்கிற பாட்டுக்களிலும் தோன்றும்; ஸ்ரீமாலாகாரரும் கூனியும் கொடுத்த திருமாலையையும் சாந்தையும் சாத்திகொண்டு ராஜமார்க்கத்தாலெழுந்தருளிக் குவலயாபீடநிரஸநம்பண்ணி நிற்கிறபோது, "மூழுசி வண்டாடிய தண்டுழாயின்" "ஆவரிவை செய்தறிவா" என்கிற பாட்டுக்களில் சொல்லுகிறபடியே, ரூபலாவண்ய சேஷ்டிதாதிகளில் தோற்றுத் தாங்கள் பேசுகிற இனியபேச்சுக்களாலே அவர் கோகுலத்தை மறக்கும்படி பண்ணவல்ல ஸ்ரீ மதுரையிற் பெண்களுடைய பாவனையிவர்க் குண்டென்னுமிடம் - "மற்பொரு தோளுடை மாயப் பிரானுக்கு" "விறல கஞ்சனை வஞ்சனை செய்தீர்" என்னும் பாசுரங்களிலே தோன்றும்; நரகாஸுரன் - கந்யகைகளாகக் கொண்டுவந்து திரட்டிவைக்க, அவனை நிரஸித்து தொழித்துப் . பரிக்ரஹிக்கப்பட்ட பதினாயிரம் தேவிமார் பாவனை இவர்க் குண்டென்னுமிடம் - "நாற்றுவரையன்று மங்கு நாற்ற நிகரில் முகில் வண்ணன் நேமியான்" என்ற பாசுரத்திலும், "வாயுந்திரையுகளும்" என்ற திருவாய் மொழியிலும், * தீர்ப் பாரையாமினியிலும் தோற்றும்.

125. [இராவனனில்]. (இப்படி ப்ரதாந மஹிஷிகளோடும் மற்றும் பகவத்பரிக்ரஹமுடையாரோடும் இவர்க்கு ஸாம்யமுண்டேயாகிலும் அல்லாதாரெல்லாம் இவர்க்கு ஒருவகைக் கொப்பாமித்தனையாகையாலே ஸர்வதாஸாம்யம் ஸீதாபிராட்டியோடேயென்கிறது.) "ந ச ஸீதா த்வயா ஹீநா" இத்யாதி ச்லோகத்திற் படியே நீரில் நின்று மெடுக்கப்பட்ட மீன்போலே விச்லேஷத்தில் ஸத்தா ஹாநி பிறக்கும்படியாளன் பிராட்டி; ஆழ்வாரும் "மராமரமெய்த மாயவன் என்னுளிராவனனில் பின்னை யாவெனைட்டு வேவே" என்று அவனைப் பிரிந்தால் தாம் உளராகாதபடியாளர். "இலங்கை செற்றாய்! உன்னையென்னுள்ளே குழைத்தவெம்மைமந்தா" என்று இவரோடு ஏகதத்வமென்னலாம்படி ஸம்ச்லேஷித்த பெருமாள், லங்காத்வாரத்தளவும் அவளைத் தேடிப்பின் தொடர்ந்தாப்போலே "எதிர்சூழல்புக்கு எனைத்தோர் பிறப்பும்" என்று இவர் பிறந்த ஜந்மங்கள்தோறும் தானும் பின்தொடருமபடி. அவள் ராவண பவநத்திலே சிறையிருந்தாப்போலே இவரும "வன்சிறையிலவன் வைக்கில்" என்று ஸம்ஸாரத்திலே சிறையிருந்தார். அப்பேர்து ப்ரதிகூலனை ராவணனுக்கு "விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞச் சரணாகதவத்ஸலः, தேந் மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி" என்று ஹிதம் சொன்னப்போலே இவரும் ப்ரதிகூலரான ஸம்ஸாரிகளுக்கு "புணைவன் பிறவிக் கடல்

நீந்துவார்க்கே" என்று ஹிதமருளிச் செய்தார். "ந ஹி மே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர் ந ச பூஷணை:, வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம்" என்று சக்ரவர்த்தி திருமகனை யொழிய ராக்ஷஸிகள் நடுவே யிருக்கிற வெனக்கு ப்ராணதிகளாலென்ன பரயோஜநமென்று பிராட்டி அவற்றை உபேக்ஷித்தாப்போலே இவரும் "ஏழுலகுமிறையோனும்" என்கிற திருவாய்மொழியிலே "மணிமாமை குறைவிலமே" "மடநெஞ் சால் குறைவிலமே" "உடம்பிலல் குறைவிலமே "உயிரிலல் குறைவிலமே" என்று அவனுக்கு உறுப்பல்லாத நானும் என் னுடைமையும் வேண்டாவென்று ஆத்மாத்மீயங்களை யுபேக்ஷித் தார். "விஷஸ்ய தாதா ந ஹி மேஸ்தி கஶ் சித் சஸ்த்ரஸ்ய வா வேச்மநி ராக்ஷஸஸ்ய" என்று ராவண பவநத்திலே பிராட்டி மர ணோபாயங்களைச் சிந்தித்தாப்போலே இவரும் "மாயும் வகையறி யேன் வல்வினையேன் பெண் பிறந்தே" என்று மூடியும் வகைதேடி னர். "ஹா ராம ஸத்யவ்ரத தீர்க்கபாஹோ! ஹா பூர்ணசந்த்ர ப்ர திமா நவக்த்ர" என்று பிராட்டி பெருமாளுடைய சௌர்யாதிக ளைச சொல்லிக் கூப்பிட்டாப்போலே இவரும் "புணராநின்ற மர மேழன்றெய்த ஒருவில்வலவா ஓ!" என்று அவனுடைய வீரப் பாட்டைச் சொல்லிக் கூப்பிட்டார். "க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ் ஞச் ச ஸாநுக்ரோசச் ச ராகவ:, ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசச் சங் கே மத்பாக்யஸம்க்ஷயாத்" என்று பெருமாளைப் பிராட்டி நிர்தய ராக சங்கித்தாப்போலே இவரும், "இரக்கமிழிர் இதற்கென் செய்கேன்" என்றும், "இலங்கைக் குழா நெடுமாடமிடித்த பிரா னர் கொடுமைகளே" என்றும், "அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்" என்றும் அவனை நிர்க்ருணரக சங்கித்தார். "ஜீவந் தீம் மாம் யதாராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந், தத் த்வயா ஹநு மந் வாச்யோவாசா தர்மமவாப்நுஹி" என்று தம்முடைய ரக்ஷிய வர்க்கத்திலே நானுமொருத்தியிருப்பதாகப் பெருமாளுக்கு விண் ணப்பம் செய்யென்று பிராட்டி ஆள்விட்டாப்போல, இவரும்"மா றில் போரரக்கன் மதிள்நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனர்க்கு என்னையுமுளளென்மின்களே" என்று தூதுவிட்டார். "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" என்று ஆதித்யனோடு ப்ரபைபோலவே நான் பெருமாளோடு அநந்யையாயிருப்பேன் என்று பிராட்டி சொன்னப்போலே இவரும் "சோர்ந்தே போகல் கோடாச் சுடரை யரக்கியை மூக்கீர்ந்தாயை அடியேனனைடந் தேன் முதல் முன்னமே" என்று சேஷத்வத்தாலே அவனோடு தாம் நித்யஸம்யுக்தராகப் பேசினர். அவள் "அகலகில்லே னிறையுமென்றலர்மேல் மங்கையுறைமார்பா" என்கிறபடியே உன்னை க்ஷணகாலமும் பிரிந்திருக்கவல்லேனல்லேன் என்னுமா போலே இவரும், "அந்தாவடியேயனன பாதமகலகில்லே னிறையுமே" என்று பேசினார். ஆகையாலே இவர்க்கு ஸ்வதா ஸாதந்த்ருச்யம் பெரிய பிராட்டியாரோடேயாய்த்து

126. [**பிரியில் இலேனுக்கு.**] இப்படி பிராட்டியைப்போலே பிரியில் தரியாதவர் இவரொருவரேயோ? பின்னையுமுண்டோ வென்னில்; அவனைப் பிரியுமளவில் "நின்னலாலிலேன்காண்" என்னுமிவரைப்போலே ஸத்தையழிகைக்கு "ந சாஹமபி ராகவ!" என்று சொன்ன இளையபெருமாளும் கிழ்ப்ரஸ்துத மான .ஜலாதுத்திருத மத்ஸ்யமிவ. [இத்தால் பிராட்டியைப் போலே பிரியில் முடிகைக்கு இளையபெருமாளும் இவரும் ஒக்குமென்ற தாய்த்து.]

127. [**அழுந்தொழும்.**] (இனிமேல், லக்ஷ்மண பரத சத்ருக்ந தசரத யசோதா ப்ரஹ்லாத விபீஷண ஹநுமதர்ஜுநர்களுடைய படிகளும் ஆழ்வார் பக்கலிலே யுண்டென்கிறது.) 1—இளைய பெருமாள் "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தः" என்கிறபடியே பால்யமே தொடங்கிப் பிரியில் தரியாதஸ்நேஹத்தாலே "பாஷ்பபர்யாகுலமுகः" என்றும், "ப்ரஹ்வாஞ்ஜலிபுடம் ஸ்திதம்" என்றும் சொல்லுகிறபடியே விச்லேஷப்ரஸங்கத்தாலுண்டான சோகவேகத்தாலே சொரிகிற பாஷ்பத்தோடே அஞ்சலையும் கையுமாய்க் கொண்டு "ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத" என்றும், "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷு ரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதஸ் ச தே" என்றும் சொல்லுகிறபடியே திருச்சித்ர கூடகிரித் தாழ்வரை முதலான ருசிரதேசங்களிலே இருவருமான சேர்த்தியிலே ஸர்வவித கைங்கர்யங்களுமடியேன் செய்யும்படி ஏவிக்கொண்டருள வேணுமென்று ப்ரார்த்தித்து, அப்படிப்பட்ட அவிச்சிந்ந கைங்கர்யத்தைப் பெறுகைக்காக "ஸ ப்ராதுஸ் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தநः, ஸீதாமுவாசாதியசா ராகவம் ச மஹாவ்ரதம்" என்கிறபடியே புருஷகார பூர்வகமாகத் திருவடிகளைக் கட்டிக்கொண்டு "அக்ரதः ப்ரயயௌ ராமஸ் ஸீதா மத்யே ஸுமத்யமா, ப்ருஷ்டதஸ் து தநுஷ்பாணிர் லக்ஷ்மணோ நு ஜகாம ஹ" என்கிறபடியே ஆயுதபாணியாய்க் கொண்டு பெருமாளைப் பின்சென்று, "ப்ராதா பர்த்தா ச பந்துஸ் ச பிதா ச மம ராகவः" என்று-நமக்கு ஸர்வவித பந்துவும் பெருமாளே என்றுப்போலே, இவ்வாழ்வாரும், "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கணன்பு செய்வித்து" என்கிறபடியே பருவம் நிரம்புவதற்கு முன்னே பிரியில் தரியாதபடி பிறந்தஸ் நேஹத்தாலே விச்லேஷம் பொறுமல் "அழுந்தொழுமாவியனலை வெவ்வுயிர்க்கும்" என்று கண்ணும் கண்ணீருமான கையுமஞ்சலியுமாய் "திருவேங்கடத்தெழில்கொள்சோதிஎந்தை தந்தைதந்தைக்கு-ஒழிவில் காலமெல்லா முடனுய் மன்னிவழுவிலாவடிமை செய்ய வேண்டு நாம்" என்று * மொய்த்த சோலையும் மொய்பூம் தடம் தாழ்வரையுமான போகஸ்தலங்களையுடைய திருமலையிலே, * அலர் மேல் மங்கையுறைமார்பனுகையாலே பிராட்டியோடே கூடி

யிருக்கிற பரமசேஷியானவனுக்கு ஸர்வதா ஸகல சேஷவருத்தி களையும் பண்ணவேணும்; அதுதன்னிலும் 'முகப்பே கூவிப் பணிகொள்ளாய்" என்று ஸன்னிதிபிலே ஏவிக்கொள்ளவும் வேணுமென்று ப்ரார்த்திக்கடி தத்கைங்கர்யத்தைப் பெறு கைக்கு உபாயமாக "நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கு" என்று புருஷகாரம் முன்னாக அவன் திருவடிகளைப்பற்றி "வாளும் வில்லும் கொண்டு பின் செல்வார் மற்றில்லை" என்று திவ்யாயுதங்களைக் கொண்டு தாம் பின்னே நிரை ஆசைப்பட்டு "சேலேய் கண்ணியரும்• பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையுமவரே" என்று ஸர்வேச்வரனே தமக்கு ஸர்வவித பந்துவுமென்கையாலே இளையபெருமாளோடே ஒப்பர். 2.—ஸ்ரீ பரதாழ்வான் - பெருமாள் முடிசூடியிருக்கத் தாமடிமை செய்து வாழப் பெறுதபடி, கைகேயி அவரைக் காட்டிலே துரத்தித் தம்மேலே ஸ்வாதந்த்ர்யத்தை ஆரோபித்த கொடுமையாலே "ஹந்யாமஹமிமாம் பாபாம் கைகேயீம் துஷ்ட சாரிணீம்" என்று மாதாவானவளைச் சீறி உபேக்ஷித்து, தமக்கு ஸ்வாதந்த்ர்யம் அஸஹ்ய மென்னுமிடம் தோற்ற "ராஜ்யம் சாஹப் சராமஸ்ய" என்று சொல்லி, வஸிஷ்டாதி புரோஹிதர் 'நீ ராஜாவாக வேணும்' என்று நியமியாநிற்க மஹத்தான ஐச்வர் யத்தையும் விரும்பாமல் பெருமாளை மீட்டுக் கொண்டுவந்து பட்டாபிஷேகம் பண்ணுவிக்க விரும்பி அவர் திருவடிகளாலே சென்று மீண்டெழுந்தருள வேணுமென்றபேக்ஷித்தவிடத்தில், அவர் அது செய்யாமல் திருவடிநிலைகளைக் கொடுத்துவிட, அந்தப் பாதுகைகளை சிரஸாவஹித்துக் கொண்டு மகிழ்ந்து மீண்டுவந்து, பெருமாள் வநவாஸம் முடிந்து த்வரையோடே திரும்பிவருமளவும் "பங்கதிக்தஸ் து ஜடிலோ பரத:" என்கிற படியே கண்ணநீராலுண்டான சேற்றிலே அழுந்தி, "மூத்தா ரிருக்க இளையார் முடிசூடலாகாது" என்கிற இக்ஷ்வாகு குலமர் யாதை தப்பாமல் நோக்கிக்கொண்டு தம்முடைய மநோரதம் தலைக் கட்டப்பெறுத இழவோடே யிருந்தாப்போலே, இவ் வாழ்வாரும்,—பகவத்ப்ராவண்யாதிசயத்தாலே வழியல்லா வழியே யாகிலும் கிட்டுமத்தனையென்கிற த்வரைக்கு இசையாமல் விலக்கும் மாதாவை சத்ரு பக்ஷமாகக் காண்பவராய் "அன்னை யென் செய்யிலென்?" என்று சிறியுமபேக்ஷித்து, "யானே யென்றனதே" என்கிற ஸ்வாதந்த்ர்யத்தை ஸஹியாதவராய் "யானே நீ யென்னுடைமையும் நீயே" என்று ஆத்மாத்மீயங்க ளிரண்டும் அங்குத்தைக்கு சேஷமென்று, "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெரும் செல்வம் நெருப்பு" என்று நிர வதிகைச்வர்யத்தையும் அகிஞ்சனமமாகக்கொண்டு, "வேங்கட வாணனை வேண்டிச் சென்று" என்று திருச்சித்திரகூடத்திலிருந் தாப் போலே திருமலையிலிருக்கிற அவனை அநுபவிக்க விரும்பிச் சென்று, தம் அபேக்ஷிதம் அவனப்போது செய்யாமல் ஒரு

வைசத்ய முகத்தாலே "உன் திருவடியே சுமந்துழலக் கூட்டாரிய திருவடிக்கண் கூட்டினை" என்று திருவடிகளைத் தந்தா யென்று ஹ்ருஷ்டராம்படி பண்ணிவிட, அப்படி அவன் கொடுத்த திருவடிகளை சிரஸா வஹித்து, வீடுதிருத்தப் போனவன் விண்ணுலகம் தர விரைந்து வருமளவும் "கண்ணீர் கைகளாலிறைக்கும்" "இருநிலம் கைதுழாவிருக்கும்" என்கிறபடியே கண்ணீர் வெள்ளத்தாலுண்டான சேற்றிலேயிருந்து ஆற்றுமையாலே தரையைத்துழாவி, "குடிக் கிடந்தாக்கம் செய்து" என்கிறபடியே ப்ரபந்தகுல மர்யாதை தப்பாமலிருந்து, "காழுற்ற கையறவோடு" என்கிறபடியே தாமாசைப்பட்ட பொருள் கைபுகுராத இழவோடேயிருக்கையாலும் பரதாழ்வானேடு ஒப்பர். (3) ஸ்ரீ சத்ருக்நாழ்வான் பாகவத சேஷத்வமே பரமபுருஷார்த்தமென்று ஸ்ரீ பரதாழ்வானுக்கே சேஷபூதராய் அவருடைய பாவநத்வ போக்யத்வங்களிலே கால்தாழ்ந்து பெருமாளுடைய வடிவழகிலும் துவக்குண்ணுதே தம்முடைய நிஷ்டைக்கு அது நிக்ய சத்ருவென்று நிஷ்கர்ஷித்திருக்கச் செய்தே ஸ்ரீபரதாழ்வானுக்கு உகப்பாகையாலே உத்தேச்யப்ரீதியென்று புரிந்து பெருமாள் வடிவிலே நெஞ்சு சென்று "நாஹம் ஸ்வபிமி ஜாகர்மி நமே வார்யம் விசிந்தயந், இத்யேவமப்ரவீத் ப்ராதா சத்ருக்நோ பரதப்ரிய:" என்கிறபடியே எப்போதும் அத்தை மநஸ்வியில் கொண்டிருக்குமாபோலே, இவ்வாழ்வாரும்-ஸ்வரூபத்தினுடைய எல்லைநிலமாகையாலே 'கோதிலடிமை' என்று சொல்லப்படுகிற பாகவத சேஷத்வத்தினுடைய ரஸம் "அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டாரிங்கே திரிய" (அவர்களைத் தவிர்ந்து) சென்தாமரைக் கண் திருக்குறளன், "நறுமாவிரை நாண்மலரடிக்கீழ் புகுதல்—பாவியேனுக்கு உறுமோ" என்று சொல்லுவிக்கப்பட்டதாய், அந்த பாகவத நிஷ்டாவிரோதியான பகவத் விக்ரஹத்தை உத்தேச்யப்ரீதி யென்னுமத்தைப்பற்ற * திரிதந்தாகிற்படியே மீண்டு "புலன் கொள்வடிவென் மனத்ததாய்" என்று எப்போதும் மனஸ்ஸுக்கு விஷயமாகக் கொண்டிருக்கையாலே சத்ருக்நாழ்வானே டொப்பர். (4) தசரத சக்ரவர்த்தி "ந ததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாமேநா நராதிப:" என்கிறபடியே வைத்தகண் வாங்காதே மேன்மேலு மநுபவியாநிற்கச் செய்தே யும் ஒருகாலும் த்ருப்தி பெறுமல் இன்னமுமநுபவிக்க வேணு மென்கிற விருப்பத்துடனே செல்லுமாபோலே இவ்வாழ்வார்தும் "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழி யூழிதொறும் அப்பொழுதைக் கப்பொழுதென்னுராவமுதமே" என்று அநுக்ஷணமெனக்கு ஆசையைப் பெருக்குமதான போக்யவஸ்து வென்று மேன்மேலும் அபிநிவிஷ்டராகையாலே சக்ரவர்த்தியோ டொப்பர். (5) க்ருதஸங்கேதமாய் நலிய வந்துநின்ற யமளார்ஜுநங்களின்நடுவே க்ருஷ்ணன் போனபோது யசோதைப் பிராட்டி ஓடிச்சென்று எடுத்துக்கொள்ளாநிற்க, மருத மரங்களின் பெருமை

யையும் இவனது இளமையையுங் கண்டு வயிறெரிந்து முகத்தைப் பார்த்து "இப்பெரிய மருதுகளின் நடுவே போனுயே" என்று வெறுத்தாப்போலே இவரும் அதீத காலஸ்தமாயிருக்கவும் ஸமகாலத்திற்போல ப்ரகாசிக்கையாலே அப்படி வயிறெரிந்து கொண்டு "போனுய் மாமருதின் நடுவே என் பொல்லாமணியே!" என்கையாலே யசோதைப் பிராட்டியோ டொப்பர். (6) ஸ்ரீ ப்ரஹ்லாதன் "நாக்நிர் தஹதி நைவாயம் சஸ்த்ரைஸ் சிந்தோ மதேஹாரகை:" இத்யாதிப்படியே அக்நி முதலானவை பாதக மாகாதபடி ஸர்வமும் பகவதாத்மகதயா அநுகூலமாக அநு ஸந்தித்து "உர்வ்யாமஸ்தி—ஸர்வத்ராஸ்தி" என்று பிறர்க்கு முபதேசித்தாப்போலே இவரும்—"அறியும் செந்தீயைத் தழுவி அச்சுதனென்னும் மெய்வேவாள், எறியும் தண்காற்றைத் தழுவி என்னுடைக் கோவிந்தனென்னும்" "போமிளநாகத்தின் பின் போயவன் கிடக்கையீதென்னும்" என்று அக்நி முதலான பாதக பதார்த்தங்கள் பகவதாத்மகத்வே அநுகூலமாம்படி அவனை இடையறாது அநுஸந்தித்து "பரந்த தண்பரவையுள்" என்கிற பரீட்டாலே எங்கு முளனை அவனது தன்மையைப் பலரு மறியப் பேசுகையாலே * பள்ளியிலோதிவந்த சிறுவனை அந்த ப்ரஹ்லாதனே டொப்பர். (7) ஸ்ரீ விபீஷணழ்வான் லங்கை யோடேகூட புத்ரதாராதிகளான ஸர்வத்தையும் விட்டு சக்ர வர்த்தி திருமகனைத் தமக்கெல்லாமாகப் பற்றினப்போலே இவ ரும் "பாதமடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்ற விட்டு" என்று ஸாம்ஸாரிக ஸகல ஸங்கங்களையும் ஸவாஸநமாக விட்டு "தயரதற்கு மகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்று சக்ரவர்த்தி திருமகனையே தமக்கு ஸர்வப்ரகார ரக்ஷ கனைகப் பற்றுகையாலே தர்மாத்மாவான விபீஷனனே டொப்பர். (8) திருவடி, சக்ரவர்த்தி திருமகனைத் தன்னுள்ளே யுடையவனுய் அவனுடைய வீரசரிதத்தையே போக்யமாக வுடையனுய், ஸ்நேஹத்தாலும் பக்தியாலும் இவ்விஷயத்தை விட்டு பரத்வத்தில் தன் நெஞ்சு போகாமை சொல்லுகிறவிடத்தில் பரத்வத்தின் பேர் சொல்லுகையும் அஸஹ்யமாய் "அந்யத்ர" (பாவோ நாந்யத்ர கச்சதி) என்னும்படி சக்ரவர்த்தி திருமகனை யல்லது அறியேனென்றிருந்தாப் போலே, இவரும்—"செருக் கடுத்தன்று திகைத்தவரக்கரை, உருக் கெட வாளி பொழிந்த வொருவன், திருக்கடித்தானமுமென்னுடைச் சிந்தையுமொருக் கடுத்துள்ளேயுறையும் பிரான் கண்டீர்" என்று ஏகவீரனை சக்ரவர்த்தி திருமகனைத் தம்முள்ளேயுடையராய், "கணை நாணிலோவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே! ஓவாதவுணுகவுண்" என்கிறபடியே அவனுடைய வீரசரிதத்தை போக்யமாகவுடையராய், "கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" என்று தமக்கு இவ்விஷயத்திலுண்டான ப்ராவண்யா திசயத்தாலே பரத்வாதிகளைக் கழிக்கிறவிடத்தில் அவற்றின்

பேர் சொல்லுகையும் அஸஹ்யமாய் "மற்று" என்னுமப்படி * கயாதற்கு மகன்றன்னையன்றி மற்றிலராயிருக்கையாலே ராம தாஸரான திருவடியோ டொப்பர். (9) அர்ஜுநன், "பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ! தேஹே" என்று விச்வரூபம கண்டபிறகு, திவ்ய சக்ஷுர்ஸ்ஸாலே இப்போது கண்ட விச்வரூபம் முன்பு ஒருகாலும் கண்டதல்லாமையால் ஹர்ஷபங்களிரண்டையும் விளக்கையாலே பூர்வ பரிசிதமான ஸௌம்யரூபத்தைக் காண விரும்பி, சதுர்புஜமாய் சங்கசக்ர கதாதரமான திவ்ய விக்ரஹத் தைக் காட்டவேணுமென்று வேண்டிக்கொண்டபோலே, இவரும்— "நல்குரவும் செல்வும்" என்று தொடங்கி "பல்வகையும் பரந்த பெருமானே—திருவின்னகர்க் கண்டேனே" என்று விருத்த விபூதியுக்தனைக் கொண்டு விபூதி முகத்தாலே பலபடியாக விஸ்தருதனையிருக்கிறவனைக் கண்டு "நீராய் நிலனாய்" என்று தொடங்கி "சிவனையயனனை"ய்" என்று—காரண காரியங்களிரண் டையும் சரீரமாகக் கொண்டு நீ ஜகதாகாரனையிருக்குமிருப்பை எனக்குக் காட்டித் தந்தாயாகிலும் இது எனக்கு ஆகாஷகுஸுமாய் அநுபாவ்யமாயிருக்கிறதில்லை; ஆனபின்பு "கூராராழி வெண் சங்கேந்தி—வாராய்" என்று அஸாதாரண விக்ரஹத்தை அநுபவிப்பிக்கக்கடவாய் என்று அபேக்ஷிக்கையாலே அர்ஜுனனே டொப்பர். இங்ஙனே மற்றும் பலஜ்ஞாநிகளின் படியுமிவர் பக்கலிலே காணவுடற்கும்.

128. [குழலில் நெஞ்சும்.] (கீழ்ச் சொன்னவர்களோடு இவர்க்கு ஸாம்யம் மாத்ரமேயன்று; ஆதிக்யமுமுண்டு.) "குழற் கோவலர்" என்கிற பாட்டிற்படியே—பிராட்டிமாரும் நித்யஸூரி களும் அவனுமான திரளிலே பற்றின நெஞ்சையுடையராய், "அருகலிலாய பெருஞ்சீர்" என்ற பாட்டிற்படியே....பிராட்டிமா ரோடும் நித்யஸூரிகளோடும் ஒரோவகையாலே பரிமாறுமவன் அவர்களோடு பரிமாறுமாபோலே ஒருவழியால் வந்த ரஸத்தைத் தந்துவிட்டு என்னளவில் அவ்வளவோடே ஒழிகிறானில்லை; அவர் களெல்லார் பக்கலிலும் பண்ணுமாதரத்தை என்னளவில் பண்ணு நின்றானென்னுமப்படி எல்லாவழிகளாலுமுள்ள ஸம்ச்லேஷரஸத் தை அவன் தமக்கு விளக்கையாலே போகரஸமும் விசேஷிக்கப் பெற்றவரான இவ்வாழ்வார்—கீழ்ச்சொன்ன லக்ஷணஸ்திகளில் அதயந்தவயாவருதா.

129. [எற்றைக்குமென்றது தோன்ற.] ஸ்ரீ பூமிப் பிராட்டி யவதாரமான ஆண்டாளுடைய ப்ரார்த்தனை மூவர்க்குமொக்கு மாகையாலே "எற்றைக்கு மேழேழ்பிறவிக்கு முன்றன்னோடுற் றோமேயாவோ முனக்கே நாமாட்செய்வோம்" என்று அபேக்ஷித் தது தோன்றுமப்படி எம்பெருமானுடைய அவ்வவ அவதாரங் களுக்கு அநுகுணமாக ஸ்ரீ பூம்யாதிரூபேண அவதரிப்பாளென்ற படியே அவன் சக்ரவர்த்தி திருமகளையவதரித்தபோது தானும்

ஸீதா பிராட்டியாக அவதரித்து, பெருமாளைத் திருவபிஷே
கார்த்தமாக அலங்கரித்து அருகே ஸேவித்துநின்று திருவெண்
சாமரம் பரிமாறி, பிறகு சக்ரவர்த்தி மாளிகைக் கெழுந்தருளுகிற
போது பெருமாள் வடிவழகைக் கண்டு 'இது நமக்குத் தொங்கப்
புகுகிறதே தா!' என்னும் வயிறுபிடியாலே அந்தஃபுரத்வாரத்தள
வும் பின்சென்று மங்களாசாஸனம் பண்ணி, அதன் பிறகு காட்
டுக்கெழுந்தருளுகிறபோது "அக்ரதஸ் தே கமிஷ்யாமி" என்று
தான்முற்பட்டு—ஸ்ரீ தண்டகாரண்யதத்தில் எழுந்தருளுகிறபோது
அவர் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு நிற்கிறநிலையைக் கண்டு,
இவர் ஸாயுதராய் நின்றால் ஆரேனும் மேல்விழுந்து ப்ரமாதம்
விளையக்கூடுமென்று பயப்பட்டு, எல்லாவற்றுக்கும் தர்மமே மூல
மென்னுமிடத்தை ஸ்மரிப்பித்து, ஆயுதத்தை வைத்து தாபஸ
வேஷத்தோடே தர்மத்தை யநுஷ்டிக்கவமையுமென்று தர்மோப
தேசத்தையும் பண்ணின பெரிய பிராட்டியாரையும்; ஸ்ரீ வராஹ
நாயனார் பக்கலிலே பரமதர்மம் கேட்டு, அதற்காக சிஷ்யையும்
தாஸியும் பக்தையுமாய், "உன்றன்னோப்பாடி" என்கிறபடியே
சுவிபாடி "செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொற்றிருவடி
யினிணைவருட" என்கிறபடியே பெரியபிராட்டியாரைப்போலே
அவன் திருவடிகளைப்பிடித்து, "இன்று வந்தித்தனையுமழுது செய்
திடப்பெறில் நானென்று நூறுயிரமாக் கொடுத்துப் பின்னுமா
னும் செய்வன்" என்று தன்னை அமைமை கொண்டால் அதுக்கு
ப்ரத்யுபகாரம் பண்ணுவேனென்று சொன்ன ஸ்ரீ பூமிப்பிராட்டி
யாரையும்; "சென்றால் குடையாம்" என்கிற பாட்டிலும் "நிவாஸ
சய்யாஸந" இத்யாதி ச்லோகத்திலும் சொல்லுகிறபடியே பகவத்
விநியோகத்துக்குத் தகுதியாக சத்ரவிம்ஹாஸந பாதுகாதி சரீர
போதங்களைக்கொண்டு ஸகலவித கைங்கர்யங்களையும் செய்யும்
திருவனந்தாழ்வானையும், "ஊரும் புட்கொடியுமஃதே" என்கிற
சந்தையிலும், "தாஸஸ் ஸகா" இத்யாதி ச்லோகத்திலும்
சொல்லுகிறபடியே வாஹநத்வஜவிதாநவ்யஜநாதி தேஹ போதங்
களைக்கொண்டு அநேக கைங்கர்யங்களைச் செய்யும் பெரியதிருவடி
யையும்போலே இவரும் பிறந்து பிராட்டிமார் தசையிலே நின்று
பேசும்படியான பல பாவவ்ருத்திகளையும் "ஒழிவில் காலமெல்லா
மூடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்னு
மபிநிவேசாதிசயத்தையுமுடையராகையாலே பிராட்டிமாரையும்
அநந்தாதிஸகிகளையும் அவர்களுக்கும் தமக்குமொரு விசேஷ
மற அவர்கள்தாமாகவே பாவிப்பர்.

130. [எழுவதோருருவழிக்க.] "சோதி வெள்ளத்திணுள்ளே
எழுவதோருரு" என்று—தேஜஃபுஞ்ஜமத்யத்தில் உந்நேயமாம்
படியிருப்பதாய் ஆண்களையும் பெண்ணுடையுடுத்துமதான அவ
னுடைய அப்ராக்ருதவிக்ரஹம் இவ்வாழ்வாருடைய பும்ஸ்த்வத்
தை அழித்து ஸ்த்ரீத்வபாவனையை விளைத்ததற்கும், அவன் விஷ

யத்தில் ப்ரீதியாலே "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்
கிற தம்முடைய பாவவிசேஷங்களால் இவர் செய்கிற நாநாவித
அநுவ்ருத்திகளுக்கும்—த்ரௌபதியானவள் ஸ்வதேஹ ஸௌந்
தர்யத்தாலே புருஷ பாவத்தையடைவித்ததையும், கௌஸல்யை
யானவள் ஔபாதிக பர்த்ருவிஷயத்தில் பண்ணின சில அநு
வ்ருத்திகளையும் ஒருபுடை ஒப்புச் சொல்லுவோமென்றுமிம்
இதுக்கு அது பற்றுது. (130)

131. [பெருக்காறுபலதலைத்து.] பெருவெள்ளங் கொண்ட
ஆறு பலதலையாய்ப் பரந்து செல்லாநிற்க, தனக்கொரு குறைவில்
லாமல் தனக்குப் புகலான கடலை நோக்கிச் சென்று சேருமா
போலே, சிதிலராய் த்ரவீபூதராய் நிலைகலங்கி நெஞ்சு கட்டழிந்து
உருக்குலைந்து போம்படி அபாரமாகப் பெருகுகிற ஆழ்வா
ருடைய காதலானது கூரீராப்திசாயியான எம்பெருமானுகிற
கடலைத் தாமான தன்மையாலும் அவஸ்தாந்தராபத்தியாலுமுண்
டான பேதத்தாலே பலமுகமாகச் சென்று சேரும். [அவஸ்
தாந்தரத்தை யடைந்தாலும் தாமான தன்மையால் செல்லுமபிநி
வேசமும் இவர்க்குக் குறையாதென்றபடி.]

132. [அச்சேத்யமென்னுமது.] "அச்சேத்யோயமதாஹ்யோ
யமக்லேத்யோ சோஷ்ய ஏவ ச" (கீதா) என்று—வெட்டுதல்
கொளுத்துதல் நனைத்தல் உலர்த்துதலாகிற இக்கார்யங்களுக்கு
அநர்ஹமாகச் சொல்லப்படுகிற ஆத்மவஸ்து—"சிவனெடு பிரமன்
வண்திருமடந்தை சேர் திருவாக மெம்மாவினரும்", வேமமது
உயிரழல் மெழுகிலுக்கு" "காரியம் நல்லன களவை காணிலென்
கண்ணனுக்கென்று ஈரியாயிருப்பாள்" "வேட்கைநோய் மெல்லா
வியுள்ளுலர்த்த" என்னும் பாசுரங்களில் "ஈரும், வேம், ஈரியாய்,
உலர்த்த" என்று சேதநார்ஹமாகவும் தஹநார்ஹமாகவும் க்லேத
நார்ஹமாகவும் சோஷணார்ஹமாகவும் ஆயிற்றென்றுதாமே
சொல்லும்படியாக;—அதுக்குமேல் அசேதநமான மநஸ்ஸானது
சேதநஸமாதியை யடைந்து "என்னெஞ்சென்னை நின்னிடையே
னல்லேலென்று நீங்கி" என்கிறபடியே உறவறுத்துக்கொண்டு
தம்மைவிட்டுநீங்க; அதுக்குமேலே சக்ஷுராதித்ராதி பாஹ்ய
கரணங்கள் "முடியானே" என்னும் திருவாய்மொழியிற்படியே
சேதநஸமாதியாலே ஒருகரணத்தினுடைய வ்ருத்தியை மற்றொரு
கரணமாசைப்படும்படி விடாய்க்க; அதுக்குமேலே சரீரமானது
"ஆராவமுதே அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து
கரைய" என்று அன்புதான் ஒருவடிவுகொண்டாற்போலேயாய்
மேன்மேலும் சைதில்யமடைந்து ஆத்மதர்மத்தை யேறிட்டுக்
கொள்ள; "வாயுந்திரையுகளும்" என்கிற திருவாய்மொழியில்
"கடலும் மலையும் விசும்பும்" "இருளின்திணிவண்ணம்" இத்யாதி
களிற்படியே அசேதநமான காற்று முதலானவற்றைத் தமக்கு
ஸமதுக்கிகளாகக்கொண்டு தாமவற்றைக் கட்டிக்கொண்டுகிடந்து

கதறும்படியாக விளைந்த அபரிமித பக்திக்கு நூல் பிடித்துப் பரி மாறும்படி வரம்புகட்டவொண்ணாது; "அத்யந்த பக்தியுக்தாநாம் ந சாஸ்த்ரம் நைவ சக்ரமஃ" என்றது காண்க.

133. [ஸம்பந்தோபாயபலங்.] இப்படிப்பட்ட பக்தி தசை யில் இவர் பெண்பேச்சாகப் பேசுமிடத்தில், தோழி தாய் மக ளென்று மூவகையாகப் பேசுகிறவிதுக்குக் கருத்தென்னென்னில்; அநந்யார்ஹசேஷத்வாதி ஸம்பந்தத்தில் ஜ்ஞாநமும், வித்தோபா யத்தில் த்ருடாத்யவஸாயமும், பலத்தில் த்வரையுமாகிற ப்ரஜ்ஞா வஸ்தைகளுக்கு, முறையே தோழியென்றும் தாயாரென்றும் மக ளென்றும் பேர். அதாவது தோழியாவாள் நாயகநாயகிகளை இணக்கிச் சேர்ப்பவளாகையாலே திருமந்த்ரத்தில் முதற்பதமான ப்ரணவத்தால் ஈச்வரனோடு ஆத்மாவுக்குச் சொல்லப்பட்ட அநந் யார்ஹசேஷத்வாதி ஸம்பந்தஜ்ஞாநமே அவனோடு இவ்வாத்மா சேருகைக்கு ஹேதுவாகையாலே அந்த ஸம்பந்தஜ்ஞாநமாகிற ப்ரஜ்ஞாவஸ்தையைத் தோழியென்கிறது. தாயாராவாள் பெற்று வளர்த்து, பெண்பிள்ளை யெளவநப் பருவமடைந்து கணவனிடத் தில் மிக்க ப்ராவண்யத்தாலே அவனிருந்த இடத்தேதறப் போக வேணுமென்று பதறுமளவிலும் அவன்றானேவந்து கைப்பற்றும் படி நிற்கையொழிய மர்யாதை தப்பிப்புறப்படுகை தகாதென்று தடுப்பவளாகையால், வித்தோபாயத்தைப் பற்றினவர்கள் ப்ராப் யத்துக்குப் பதறுமளவில் இது ப்ரபந்நகுல மர்யாதைக்குச் சேரா தென்று தடுத்து இவளது துடிப்பையடக்கப் பார்க்கிற நமஃபதத் தால் ப்ரதிபாதிக்கப்பட்ட உபாயாத்யவஸாயமாகிற ப்ரஜ்ஞாவஸ் தையைத் தாயாரென்கிறது. தலைமகளாவாள் இயற்கையிற் புணர்ந்து நாயகனுடைய வைலக்ஷண்யத்திலே யீடுபட்டுக் குலமர் யாதைகளையும் பாராமல் அவனைக் கிட்டியல்லது தரிக்கமாட்டே னென்னும் பதற்றத்தை யுடையளாகையாலே, ப்ரணவநமஃபதங் களாலறியப்பட்ட சேஷித்வ சரண்யத்வங்களையுடையவனுக்கு சரமமான நாராயண பதத்தால் சொல்லப்பட்ட ஸ்வரூபரூப குண விபூதிகளால் வந்த வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து அவனை யநுபவிப்பதில் விளம்பம் பொறுக்க மாட்டாமையாலே தத்தே காபாயத்வாத்யவஸாயத்தையுமதிக்ரமித்து, கிட்டியநுபவித்தல் லது தரிக்க முடியாதபடி நடக்கிற ப்ராப்யத்வரையாகிற ப்ரஜ்ஞா வஸ்தையை மகளென்கிறது.

134. [ஸகி வெறிவிலக்கி.] இவ்வவஸ்தைகள்மூன்றும்இவர் பேச்சிலே தோன்றுமோவென்னில்; தோழியானவள் "தீர்ப் பாரையாமினி" என்ற திருவாய் மொழியில் வெறிவிலக்கியும், "துவளில் மாமணிமாடம்" என்ற திருவாய் மொழியில் ஆசை யறுத்தும், "கருமாணிக்க மலைமேல்" என்ற திருவாய்மொழியில் அறத்தொடு நின்றும், "இவ்வஸ்து அந்யசேஷமுமன்று, ஸ்வ சேஷமுமன்று, பகவதேகசேஷம்" என்று சொன்னபடியால்

ஸம்பந்தஜ்ஞாந தசையில் வரும் பேச்சாகிய இம்மூன்றுதிருவாய் மொழிகளிலுமம அநந்யார்ஹசேஷதவம் தெரியும். * அடியார்கள் குழாங்களையுடன்கூடப் பெருமையால் வந்த க்லேசத்தாலே ஆச்ரயத்தை இழந்த தளிர்போலே வாடுகிற படியைப் பேசின * [1] ஆடியாடியும், அதீதங்களை ஆசைப்பட்டு மெலிந்த படியைப் பேசின * [2] பாலனேயழலகும், ஸத்ருசபதார்த்தங்களையுமவலை நினைத்துக் கிட்டும்படி பிசகேறின படியைச் சொன்ன * [3] மண்ணை யிருந்து துழாவியும், ஆற்றமையாலே அநுகரிக்கிறபடியை யறியாமல் ஈச்வரனேவசித்சாமே வென்னும்படி அவன்றனைகப் பேசுகிறபடியைச் சொன்ன * [4] கடல்ஞாலமும், எம்பெருமானைப் பெறுதலிழவாலே ஸகலத்தையுமிழந்தமையைச் சொன்ன * [5] மாலுக்கு வையமும், 'என் மகள் எனக்கு உதவாமற்போனாள்' என்னும்படி தன்னைவிட்டுப் பிரிந்து போனபடியைச் சொன்ன * [6] உண்ணுஞ்சோறும், "சந்தித்துன் சரணம் சார்வதேதவலிதத தையல்" என்னும்படி அவனைக்கிட்டி அவன் ஸன்னிதியிலே முடிய-வேணுமென்று கொண்ட வ்யவஸாயம் ஸாதநகோடியில் புகுகிறதோவென்று மாதாவானவள் பயப்பட்டு, அவனைக் குறித்தும் வினவவந்தவர்களைக் குறித்தும் 'என் பெண் வாடா நின்றாள்; மெலியாநின்றாள்' என்றுப்போலே முறைப்பட்டுக் கூப்பிடுகிற * [7] கங்குலும் பகலுமாகிய—தாய்ப் பேச்சான ஏழு திருவாய்மொழிகளிலும் உபாயாத்யவஸாயம் தோற்றும்; தலைமகள் தூதுவிடும் திருவாய்மொழிகளான * [1] அஞ்சிறையமட நாராய், * [2] வைகல் பூங்கழிவாய், * [3] பொன்னுலகாளீரோ, * [4] எங்கானலகங்கழிவாய், என்கிற திருவாய் மொழிகளும், தன்னற்றாமையைச் சொன்ன * [5] வாயும் திரையுகளும், அவன் விரும்பாதவற்றை உபேக்ஷித்த * [6] ஏறாளுமிறையோனும், ஜகத் கோபம் பிறக்கும்படி மடலெடுத்த * [7] மாசறு சோதியும், ப்ரேமவ்யாதியும் காளராத்ரியும் கண்ணை மூடுகையாலே வேறு கதியில்லாமையைச் சொன்ன * [8] ஊரெல்லாம் துஞ்சியும், அப்ராக்ருதவிக்ரஹம் நெஞ்சினுள்ளே ப்ரகாசிக்கும் படியைச்சொன்ன * [9] எங்ஙனேயோவன்னைமீரும், அவனேடு கூடிவாழும் நாளைத் தேடின * [10] மானேய் நோக்கும், அவன் விளம்பித்து வந்த தற்கு ஊடின * [11] மின்னிடை மடவாரும், உசாத்துணையற்று வருந்தின * [12] வெள்ளைச் சுரிசங்கும், அவனுடைய உருவெளித் தோற்றத்தில் பாதைப்படுவதைப் பேசின * [13] ஏழையராவியும், ஹிதம் சொல்லுகிற தாய்மார் தோழிமாரை அதிக்ரமித்த * [14] நங்கள் வரிவளையும், ஸ்மாரகபதார்த்த தாசநத்தால் தளர்ந்த * [15] இன்னுயிர்ச் சேவலும், மாலைப்பூசலென்று ப்ரஸித்தமான * [16] மல்லிகை கமழும், காலைப்பூசலென்று ப்ரஸித்தமான * [17] வேய்மருதோளிணையும். ஆகிற மகள் பேச்சான பதினேழு திருவாய்மொழிகளிலும் ப்ராப்யத்வரை தெரியும்.

135. [தோழிமாரன்னையர்] தோழியென்றும் தாயென்றும் சொல்லுகிறது ஸம்பந்தஜ்ஞாநத்தையு முபாயாத்யவஸாயத்தை யுமாகில் 'தோழிமார்' 'அன்னையர்' என்கிற பஹுவசநத்துக்குக் கருத்தென்? என்னில்; திருமந்த்ரத்தில் சொல்லுகிறபடியே இவ் வாத்மாவோடு ஈச்வரனுக்கு ரக்ஷகத்வ சேஷித்வ காரணத்வ சரீரி த்வாதி ஸம்பந்தங்கள் பலவுமுண்டாகையாலே அந்தந்த ஸம்பந் தங்களை விஷயீகரித்தஜ்ஞாநத்தினுடைய பேதத்தாலே 'தோழி மார்' என்கிற பஹுவசநம் உபபந்நம்; உபாயபூதனான அவ னுடைய வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்யஜ்ஞாந சக்திக்ருபாதிகளைப் பற்றிவரும் வ்யவஸாய ரூபமானஜ்ஞாநத்தி னுடைய பேதத்தாலே 'அன்னையர்' என்கிற பஹுவசநம் உபபந்நம்.

136. [அபிலாஷா சிந்தநாது] தலைமகளென்கிறது ப்ராப் யத்வரையையாகில், "பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்" என்கிற பருவமேழும் இங் கே கொள்ளும்படியென்? என்னில்; அநுபாவ்யமான விஷயத்தை முதலில் காணும்போது பிறக்குமாசையாகிற அபிலாஷையும், கண்டபின்பு அவ்விஷயத்திலுண்டான ஸ்மரணமாகிற சிந்தனை யும் 2, அந்த ஸ்மரணத்தின் அநவரத ப்ரசாரமாகிற அநுஸ்ம்ருதி யும் 3, அவ்விஷயத்தை அவச்யமநுபவித்தே நிற்கவேணுமென் னுமாசையாகிற இச்சையும் 4, அவ்வாசைதான் வேறொரு ரஸத் தால் மாற்றமுடியாதபடி முதிருகையாகிற ருசியும் 5, அவ்விஷ யத்தில் ஸம்ச்லேஷவிச்லேஷங்களை ஸுகதுக்கங்களாகையாகிற பரபக்தியும் 6, அவ்விஷயத்தைப் பிரிந்தால் ஸத்தையழிகையாகிற பரமபக்தியுமாகிற ஏழு அவஸ்தையிலும் பேதை முதலான ஏழு பருவமும் தலைமகளான ப்ராப்யத்வரைக்குக் கொள்ளலாம். [பக்திரூபமான ப்ராப்யத்வரைக்கு பக்தியினுடைய ஒவ்வொரு தசையையும் ஒவ்வொரு பர்வமாகக் கொள்ளலாமென்கை.

137. [மயில்பிறை வில்லம்பு] இனி தலைமகளான அவஸ்தையில் வருணிக்கும் அவயவ விசேஷங்கள் எவையென் னில்; "தோகைமாமயிலார்கள்" என்று ஸ்த்ரீகளை மயிலாகச் சொல்லுகிறது கூந்தலின் விஸ்தாரத்தைப் பற்றியாகையாலே அத்தால் இவ்வாத்மாவினுடையஜ்ஞாநவிகாஸம் சொல்லுகிறது; "பிறையுடை வாணுதல்" என்று நெற்றியைப் பிறையாகச் சொல் லுகையாலே அதின் வெண்மையையிட்டு ஸ்வாதந்தர்யாந்யசேஷத் வங்களாகிற தோஷஸ்பர்சமற்றிருக்கும் சுத்தியைச் சொல்லு கிறது. "விற்புருவக்கொடி" என்று புருவத்தை வில்லாகச் சொல்லுகிறது வளைவைப் பற்றியாகையாலே பாஹ்யாப்யந்தரகர ணங்களை அடக்குகையாகிற தாந்தியைச் சொல்லுகிறது. "அம் பன்னகண்ணுள்" என்று கண்ணை லக்ஷ்யத்தில் விழுகிற அம்பாகச் சொல்லுகையாலே "தாமரையாள் கேழ்வனுருவனையே நோக்கு

முணர்வு" என்று தனக்கு வருத்த விஷயத்தைப் பற்றினஜ்ஞாநத்
தைச் சொல்லுகிறது. "பவளவாயாள்" என்று அதரத்தை ப்ர
வாளமாகச் சொல்லுகிறது சிவப்பையிட்டாகையாலே அவ்விஷ
யத்திலுண்டான அநுராகத்தைச் சொல்லுகிறது. "செப்பன்ன
மென்முலை" என்று பரிபக்வமான முலையைச் செப்பாகச் சொல்லு
கையாலே சேஷியானவன் விரும்பி மேல்விழும்படி முதிர்ந்த பக்
தியைச் சொல்லுகிறது. "மின்னேர்ணய நுண்மருங்குல்" என்று
இடையை மின்னலாகச் சொல்லுகிறது ஸூக்ஷ்மத்வத்தைப்
பற்றியாகையாலே கீழ்ச்சொன்னஜ்ஞாநாவஸ்தா விசேஷங்களுக்
கெல்லாம் ஆதாரமான ஆத்மஸ்வரூபத்தின் அணுத்வத்தைச்
சொல்லுகிறது. "தேரணங்கல்குல்" என்கிற நிதம்ப வைலக்ஷண்
யம் போக்தாவுக்கு போக்யமா யிருக்குமதாகையாலே சேஷிக்கு
மிகவும் ரஸாவஹமாம்படி யிருக்கிற ஆத்மவஸ்துவின் போக்யதை
யைச் சொல்லுகிறது. "அன்னமென்னடையாள்" என்று ஹம்
ஸத்தை ஒப்பிடுகிறது நடையழகுக்காகையாலே சேஷியும் தனி
யரும் ச்லாகிக்கும்படி ஸ்வரூபாநுரூபமாக நடக்கையைச் சொல்
லுகிறது. ஆக இப்படி மயில் பிறை இத்யாதி வர்ணனத்துக்கு
உரிய அவயவ விசேஷங்களோடு கூடி அப்ராக்ருதமாகச் சொல்
லப்பட்ட ரூபமாவது—ஜ்ஞாந, விகாஸ, சுத்த்யாதிகளுக்கு ஆச்ர
யமாய் ஆந்தரமாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தின் வகுப்பு.

138. [சூழ்ச்சியகற்றினீரென்னும்.] "தோழிமார் பலர்கொண்
டுபோய்ச் செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன்" என்று தாயா
னவள் தோழிமார்மேலே பழியிடுவது, "துலவில்லிமங்கலம்
கொண்டுபுக்கு அமுதமென்மொழியாளை நீருமக்காசையின்றி
அகற்றினீர்" என்று தோழியானவள் தாய்மார்மேலே பழியிடுவ
தாகிறவிதுவும், "இணக்கியெம்மை எம்தோழிமார் விளையாடப்
போதுமினென்னப் போந்தோமை" என்று—"எம்பிராளே!
உன்னை வெறுப்பாளேன்? என்னை உன் பக்கலில் அகப்படுத்தின
தோழிமாராலே வந்ததன்றோவிது என்பது, "எங்ஙனேயோ
வன்னமீர்காள்! என்னை முனிவதுநீர்" என்று 'எனக்கு அவ்விஷ
யத்தைக்காட்டி இந்த ப்ராவண்யத்தை விளைத்த தாய்மாரான
நீங்கள் இப்போது என்னை வெறுப்பாளேன்? என்பதாய், கீழ்ச்
சொன்னபழி—தோழி தாய்மாராகிற இரண்டு தலைக்கும் ஒக்கு
மென்று தலைமகள் மேலெழுத்திடுகையும், "முன்னின்றுயென்று
தோழிமார்களு மன்னையரும்முனிதிர்" என்னும்படி தோழி தாய்
மாரோடு கூடிநின்று தலைமகளைச் சீறுவது, "இவளை நீரினியன்னை
மீர்! உமக்காசையில்லை விடுமினே" என்று தாய்மார்க்கு கார்யோ
பதேசம் பண்ணுவாரைப்போலே தோழி தலைமகளுக்குத் துணை
செய்வதாய்க்கொண்டு இரண்டுதலைக்கும் ஒவ்வொரு ஸமயத்தி
லே உதவிசெய்கையாகிற இருபடைமெய்க்காட்டும் "அன்னைய
ரும் தோழியரும் நீரொன்னெயென்றுதே நீளிரவும் துஞ்சுவரால்"

என்று தாய்மாரோடும் தோழிமாரோடும் தலைமகளுக்குண்டான உடன்பாடும், [அதாவது—உறவு கொண்டாடுதல்] "உங்களோடெங்களிடையில்லையே" என்று தோழிமார் அன்னையராகிற இரண்டு தலையையும் உதறிவிடுகையும், "இருந்திருந்தரவிந்தலோசன வென்றென்றே நைந்திரங்கும்" என்று தோழி கொண்டாடுவது, "திருக்கோளூர்க்கே நேரிழை நடந்தாள்" என்று தாயார் கொண்டாடுவதாகிறவிதுவும், தோழி, தாய், மகளென்கிற அவஸ்தாத்ரயத்தினுடையவும் வ்யாபாரம்.

139. [தாயாரேதலர்.] இந்த அவஸ்தாத்ரயத்தில் தாய் என்றும், மகளென்றும் சொல்லுகிற அவஸ்தைகளில் ஸ்வஸ்வ சத்ருக்களும் பந்துக்களுமாகச் சொல்லுகிறது ஆரையென்னில்; தாயதரான உபாயாத்யவஸாயதசையில் "ஏதலர் முன்னு என்னினைந்திருந்தாய்" என்று சத்ருக்களாகச் சொல்லுகிறது—ஹித்தோபாய நிஷ்டைக்கு ப்ரதிகூலரான ஸாத்யோபாய நிஷ்டரை; "உற்றீர்கட்கென் சொல்லிச் சொல்லுகேன்யான்" என்று பந்துக்களாகச் சொல்லுகிறது— அநுகூலரான ஹித்தோபாய நிஷ்டரை. மகளான ப்ராப்யத்வராதசையில் "நம்முடையேதலர் முன்புநாணி" என்று அந்தரங்க சத்ருக்களாகச் சொல்லுகிறது—பகவதேக பரராயிருக்கச் செய்தே அவனுடைய உபாயத்வத்திலே யூன்றிநின்று, "பதறுதல் பாரதந்த்ரியத்துக்குச் சேராது" என்று நிஷேதிக்கிற ஹித்தஸாதநபரரை; "யாமுடைத்துணையென்னும் தோழிமார்" என்று தன்னோடொத்த ஸாதகதுக்கங்களை யுடையவர்களாகச் சொல்லுகிறது—தன்னைப்போலே அவனுடைய உபேயத்வத்திலே உடன்பட்டிருக்கிற ஸாத்யபரரை.

140. [நாலயலார் அயற்சேரியார்.] "நாணியினியோர் கருமமில்லை நாலயலாருமறிந்தொழிந்தார்" என்கிற நாலயலாராகிறார்—கர்மஜ்ஞாந பக்தி ப்ரபத்திகளாகிற நாலுபாயங்களிலு மூன்றியிருப்பவர்; "நானக் கருங்குழல் தோழிமீர்காளன்னையர்காளயற்சேரியீர்காள்" என்கிற அயல் சேரியாராகிறார்—அர்ச்சாவதாராதிகளில் ஊற்றமற்று தேவதாந்தர்யாமித்வத்திலே ஊன்றியிருப்பவர்.

141. [கீழ்மேலவடக்கிலவை.] ப்ரபத்திபரரையும் அசலாகச் சொல்லலாமோவென்னில்; "கீழையகத்துத் தயிர்கடைய" என்கிற பாசுரத்தில் சொல்லுகிற தயிர்கடைதலென்னும் க்ரியையாகிற கர்மயோகமும், "மேலையகத்து நங்காய் வந்து காண்மின்கள்" என்கிற பாசுரத்தில் சொல்லுகிற காணுதலென்னும் தர்சநமாகிற ஜ்ஞாநயோகமும், "வடக்கிலகம்புக்கிருந்து மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவம் செய்துவைத்த" என்கிற பாசுரத்தில் சொல்லுகிற ஒரு கந்யகையை விகாரப் படுத்துகையென்னும் அநுபவமாகிற பக்தியோகமும், ஹித்தோபாயபரர்க்கு பாஹ்ய சத்ருவாய், அவ்விஷயத்தில் ஸ்வகதஸ்வீகாரமா

னது அந்தரங்க சத்ருவாயிருக்கும். [ஆகையால் ஸ்வகதஸ்வீகார ரூபப்ரபத்திபரரை அசலாகச்சொல்லக் குறையில்லையென்கை.]

142. [ஊராள் நாட்டாருலகம்.] "ஊராரிகழிலும்" "ஊரவர் கவ்வை" "நாட்டாரோடியல்வொழிந்து" "எங்கள் கண்முகப்பே உலகர்களெல்லாம்" "இம்மடவுலகர்" "ஊரும் நாடுமுலகமும்" என்னுமிடங்களில் ஊராள் என்பது ஆத்மப்ராப்திகாமரான கேவலரை; நாட்டாரென்பது—புத்ரபச்வங்நாதிரூப இஹலோகைச்வர்யகாமரை; உலகர் என்பது—ஸ்வர்க்காதி பரலோகைச்வர்யகாமரான ஸ்வதந்தரரை.

143. [இறகலிறப்புக்கும்.] கைவல்ய நிஷ்டரை ஒரூராகச் சொல்லுவானேன்? எனில்; அபரிச்சிந்நமான ஸ்வரூப ரூபகுண விபூதிகளையுடைய எம்பெருமானுடைய அநுபவம்போலல்லாமல் அணுவான ஆத்மாவின் அநுபவமாத்ரமேயாகையாலே "இறகலிறப்பு" என்கிற ஸங்கோச ரூபமான அந்தகைவல்ய மோக்ஷத்துக்கும்=ஜராமரணாதிகளில் அந்வய மொழிந்து அநுபவிக்கும் போது ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கு ஆளாகிற ப்ரகருதி மண்டலத்துக்கு மேற்பட்ட பரமாகாசத்திலேயிருந்து அநுபவிக்க வேண்டுகையாலே "யோகிநாமம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்மஸங்தோஷகாரிணம்" என்கையாலே "இறந்தால் தங்கு மூரண்டமேம கண்டுகொள்மின்" என்கிறபடியே ப்ரக்ருதி ஸம்பந்தமற்றுல் பின்பு போய் வஸிக்கும் தேசம் ஸமாநமாமிறே.

144. [சிறு சீரார்சுளகுகள்.] "சிறுசுளகுமணலும் கொண்டு" என்றும், "சீரார் சுளகில் சில நெல் பிடித்தெறியா" என்றும் சொல்லுகிறவிடங்களில் சிறுசுளகாவது—பெரிய மணலையும் சிறிய மணலையும் பிரிப்பதொரு வஸ்துவாகையாலே தேஹாத்மவிவேகத்துக்குப் பரிகரமான ப்ரமாணத்தைச் சுளகென்கிறது; சீரார் சுளகானது—"இவனுக்கு இந்தவ்யாமோஹத்தை விளைத்தவன் யார்?" என்று ஆராயுமளவில், "சில நெல் பிடித்தெறியா" என்று தொடங்கி "பேராயிரமுடையானென்றுள்" என்று—"தேவதாந்தரங்களன்று; ஸர்வேச்வரன்" என்று விவேகிக்கிற போதைக்கு உபகரணமாகையாலே ஆத்மபரமாத்ம விவேகத்துக்குப் பரிகரமான ப்ரமாணத்தைச் சீரார்சுளகு என்கிறது.

145. [மாலகங்குல்காலை.] "செங்களம்பற்றி நின்றெள்கு புன்மாலை" "செல்கதிர் மாலை" இத்யாதிகளால் சொல்லுகிற மாலையாவது—பதார்த்தங்களை உள்ளபடி விசதமாக ப்ரகாசிப்பியாமல் மாறுகத்தோற்றுவிக்கிற ஸந்த்யாகாலமாகையாலே பதார்த்தங்களில் அந்யதாப்ரதிபத்திக்கு உறுப்பான ராஜஸஜ்ஞாநத்தை மாலை யென்கிறது. "சூழ்கின்ற கங்குல்" இத்யாதிகளால் சொல்லுகிற கங்குலாவது—பதார்த்தங்கள் ஒன்றும் தோற்றுதபடியாய் ஏதேனும் தோற்றுவதுண்டாகில் விபரீதமாகத் தோற்றும்படியிருக்கும் இருள்மூடின ராத்திரியாகையாலே, அறி

யவேண்டுமர்த்தத்தை அறிவியாதவளவேயன்றி விபரீதப்ரதிபத்தி ஹேதுவுமாயிருக்கும் தாமஸஜ்ஞாநத்தைக் கங்குலென்கிறது. "காலையெழுந்திருந்து" இத்யாதிகளால் சொல்லுகிற காலையாவது—ப்ராஹ்மமுஹூர்த்தமாகையாலே பதார்த்தங்களுடைய உண்மையுணர்ச்சிக்கு உறுப்பாயிருக்கும் ஸாத்விக ஜ்ஞாநத்தைக் காலையென்கிறது. "பகல் கண்டேன்" இத்யாதியில் சொல்லும் பகலாவது—பதார்த்தங்களை ஸம்சயவிபர்யயமின்றி விசதமாக ப்ரகாசிப்பிக்கும் காலமாகையாலே "நாரணனைக் கண்டேன்" என்கிறபடியே ஸமஸ்தகுணை விக்ரஹ விபூதிகளோடு கூடின எம்பெருமானை நன்றாக ஸாக்ஷாத்கரிக்கிற சுத்தஸத்வ ஜ்ஞாநத்தைப் பகல் என்கிறது.

146. [நிலாமுற்றம்.] "நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள்" என்கிற நிலாமுற்றமாவது—"ப்ரஜ்ஞாப்ராஸாத மாருஹ்ய அசோச்யஃ சோசகாந் ஜநாந், பூமிஸ்தாநிவ சைலஸ்தோ ஹ்யஜ்ஞாந் ப்ராஜ்ஞஃ ப்ரபச்யதி" என்கிறபடியே உயர நின்று எல்லாவற்றையும் காண்கைக்கு உறுப்பாகச் சொல்லப்படுவதாய் அதிலேநின்று பார்த்த வளவில் "காணுமே மா கண்ணபுரமென்று காட்டினாள்" என்கையாலே ததீய விஷயமே பரம ப்ராப்யமென்று பிறக்கும் விளங்கும்படி சரமாவதியான புருஷார்த்த ஜ்ஞாநம்.

147. [கலவாள அஹம்மம.] "கைவளையும் மேகலையும் காணேன்" "கலையாளாவகலல்குல் கனவளையும் கையாளா" இத்யாதிகளில் சொல்லுகிற கலையும் வளையுமாவன—பகவதநுபவத்துக்கு விரோதியான அஹங்காரமும் மமகாரமும். ["கழல்வளை பூரிப்பயாம்கண்டு" இத்யாதி ஸ்தலங்களில் த்யாஜ்யமான அஹங்கார மமகாரங்களல்லாமல் "சேஷோஹம்" "என்னுடைய திருவரங்கர்" என்றாற்போன்ற அஹம்மமதைகளைச் சொல்லுவதாகக் கொள்ளலாமாகையாலே அவ்விடத்துக்கு மிதுவே ஸ்வாபதேசமாகக் குறையில்லை.]

148. [பட்டஞ்சூடகமாவன.] "பட்டங்கட்டிப் பொற்றோடு பெய்து இவள் பாடகமும் சிலம்பும்" "சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே" இத்யாதியாகச் சொல்லுகிற ஆபரணங்களாவன—"க்ருஷ்ணங்க்ரி துலஸீ மௌலிஃ பட்டம் க்ருஷ்ணபிவந்தநம், குண்டலே க்ருஷ்ணசரித ச்ரவணம் கங்கணே ஞ்ஜலிஃ" என்கிறபடியே இவ்வாத்மாவை அங்கீகரித்த ஆசார்ய ஞாண்டாக்குகிற சேஷத்வஜ்ஞாநாதிகளாகிற ஆத்மாலங்காரங்கள்.

149. [பந்துகழல்பாவை.] "என்னுடைய பந்தும் கழலும் கந்து போகு நம்பீ" இத்யாதி பாசுரங்களிற் சொல்லப்படுகிற பந்து, கழல், பாவை, குழமணன் (மரப்பாச்சி), யாழ், மதியம், அடிசில், சாந்தம், பூண், அகில், சிற்றில், தூதை முதலான விளையாட்டுக் கருவிகளாயும் போக்யங்களாயும் போகோபகரணங்

களாயுமுள்ளவை எவை? யென்னில்; "அஜாமேகாம் லோஹித சுக்லக்ருஷ்ணம்" என்கிறபடியே செந்நால் வெண்ணால் கருநாலென்னலாம்படியான ஸத்த்வரஜஸ்தமோ குணங்களோடே விசித்ரமான கர்மஸ்வரூபத்தாலே கட்டி ஈச்வரன் தன்னுடைய விளையாட்டுக்காக—அஜ்ஞனுய் அசக்தனனவிவன் கர்மானுகுணமாக மேலுலகங்களில் போவது மீளுவதாம்படி தன் ஸங்கல்பத்தாலே ப்ரேரிக்க, தாழவிழுந்தும் உயர எழுந்தும் சக்ரப்ரமம்போலே சுழன்றும், ஒருகால் போனத்திலே பல தடவை போவது வருவதாய் உழன்றும் போருகிற ஆத்மாவோடுண்டான ஸம்பந்தத்தாலே விழுந்தெழுகை முதலான ஸ்வபாவங்களோடு கூடியதாய், ஈச்வரன் தன்னுடைய போக விரோதியென்று விடுவிக்குமளவில் விடுபட்டும் அல்ப ரஸங்களுமாய், மதீயமென்று ஸ்வஸம்பந்தத்தையிட்டுப் பார்க்கும்போது "சிற்றில் மென்பூவையும் விட்டகன்ற" என்கிறபடியே த்யாஜ்யங்களாய், ததீயமென்று தத்ஸம்பந்தத்தை யிட்டுக் காணும்போது "இகழ்விலிவ்வனைத்துமென்கோ" என்கிறபடியே முழுவதும் உபாதேயமாமவையாய், "அன்னை முனிவது மன்றியின் குரலீர்வதும்" "பனிப் பியல்வாகவுடைய தண்வாடை, இக்கால மிவ்வூர் பனிப்பியல் வெல்லாம் தவிர்ந்தெரி வீசும்" என்னுமிப் பாசுரங்களிற்படியே அவனில்லாமல் கண்டபோது ப்ரதிகூலங்களாகவும், "அவ்வாடை ஈதோ வந்து தண்ணென்றதே" என்று அவனோடு சேர்ந்ததுக் கண்டபோது அநுகூலங்களாகவும் சொல்லப்படுமவையான "பொங்கைம்புலனும் பொறியைந்தும்" என்கிற பாட்டில் சொல்லப்பட்ட போக்ய போகோபகரண போகஸ்தாநஸமூஹம். [மூன்றுவகை நூல்களாலே செய்யப்பட்ட பந்தாவது—குணத்ரயமயமாய் போகஸ்தாநமான தேஹம்; அம்மானே யென்கிற கழலாவது ஐந்தாயிருப்பதாகையாலே போகோபகரணமான பஞ்சேந்த்ரியங்கள; பாவை குழமணன்கள்—லீலோபகரண விசேஷங்கள்; யாழ் முதலிய ஏழும் போக்யங்களான சப்தாதி விஷயங்கள்; சிற்றிலாவது—போகஸ்தாநம்; சிறுசோறு சமைப்பதற்கு உபகரணமான தூதை—இந்த்ரியங்கள் தவிர மற்ற போகோபகரணங்களுக்கு உபலக்ஷணம் என்று கண்டு கொள்வது.]

ஆசார்ய ஹ்ருதய தாதபர்ய ஸாரத்தில் இரண்டாவது ப்ரகரணம் முற்றிற்று.

மூன்றும் பிரகரணம்

150. [சேர்ப்பாரை.] (எம்பெருமான்னிடம் தூதுவிடப்படுகிற பக்ஷிகளுக்கு ஸ்வாபதேசம் இனிவருவது.) *விண்ணேர் பிரானூர் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே! (திருவிருத்தம்) என்று ஆழ்வார் தாமேயருளிச் செய்கையாலே பகவத் விஷயத்திலே கொண்டுசேர்க்குமவர்கள் பக்ஷிகளாகக் கொள்ளப்படுவர்கள்; சிறகாகச் சொல்லப்படுபவை ஞானமும் அனுட்டானமுமாம்; ஆங்காங்குள்ள பதச் சேர்த்திகளுக்குத் தகுதியாக ஆசார்யர்களையோ ஸப்ரஹ்மசாரிகளையோ புத்ரர்களையோ சிஷ்யர்களையோ ஸ்வாபதேசமாகக் கொள்க.

151. [விவேகமுகராய்.] (இனி, பக்ஷிகளின் உட்பிரிவான அன்னம், கிளி, பூவை, குயில், மயில் முதலானவற்றுக்கு ஸ்வாபதேசம் க்ரமேணை கூறப்படுகிறது.) செல்வநம்பி பெரியாழ்வார் நாதமுனிகள் ஆளவந்தார்போல்வாரை அன்னமென்று கொள்ளலாம். நீரையும் பாலையும் கலந்துவைத்தால் அவற்றைப் பிரிக்கவல்லது அன்னம்; அதுபோல ஆசாரியர்கள் ஸாராஸாரவிவேகசுசலர்கள். வேதசாஸ்த்ரங்களை வெளியிட்டது பகவதவதாரமான ஹம்ஸம். அதுபோல சிஷ்யர்களைக்குறித்து சாஸ்த்ரோபதேசம் பண்ணுவர்கள். ஹம்ஸம் சேற்றில் பொருந்தாது; அதுபோல மாயவன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்து அழுந்தார்கள். அன்னம் மாதர்களின் நடையழகைக்கண்டு அப்படியே தானும நடைபயிலும்; அதுபோலே அன்னநடையவணங்கான பிராட்டியின் புருஷகாரத்வமாகிற நடத்தையை யநுசரிப்பார்கள். அன்னமானது மேலேயெழுந்த தாமரையிலையைக் குடையாகவும் பக்குவமான செந்நெற் பயிர் அசைந்தாடுவதைச் சாமரம் வீசுதலாகவும் சங்குகளின் முழக்கத்தை விஜயகோஷமாகவும் வண்டுகளின் மிடற்றிசையைப் பாட்டாகவுங்கொண்டு [மாநஸ] ஸரஸ்ஸிலுள்ள தாமரையே ஆஸனமாக வீற்றிருக்குமென்று அருளிச்செயல்களிற் சொல்லப்படுகிறது; அப்படியே தாமரையிலைபோற் சாமளமான பகவானது திருமேனியைத் தமக்கு ஸம்ஸாரதாபஹரமாகவும், செந்நெற்பயிர்போலே அஹமந்நமஹமந்நமஹமந்நம் என்னும்படி பரிபக்வஜ்ஞானமுடையவர்கள் அநுகூலவ்ருத்தி செய்யவும், சங்குபோலே சுத்த ஸ்வபாவமுடையவர்கள் தோத்திரம் செய்யவும் வண்டுபோலே ஸாரக்ராஹிகளாயிருப்பார் போற்றவும் பெற்று "குருபாதாம்புஜம் த்யாயேத்" என்கிறபடியே ஆசார்யர் திருவடியிணையை எப்போதும் நெஞ்சுக்குள்ளே கொண்டிருக்கும் சிஷ்யர்களுடையதாயும் பிரமகுருவுக்கு இருப்பிடமான தாயுமுள்ள * போதிற்கமல வன்னெஞ்சமென்கிற மாநஸபத்மத்தை வாஸஸ்தானமாகவுடையரா யிருப்பார்கள். * விதியினால் பெடைமணக்கும். மென்னடைய வன்னங்காளென்கையாலே

சாஸ்த்ரமுறைப்படி க்ருஹஸ்தாச்ரமத்திலிருப்பவர்களாகவுமாம். * அந்தரமொன்றுமின்றி அலர்மேலைசயுமன்னங்காள் என் கையாலே ஸம்ஸாரப் பற்றுஅற்ற யதிகளாகவுமாம்.

152. [என்பெறுதி யென்ன.] வண்டுகளாகவும் தும்பிகளாகவும் சொல்லுகிறது நாரதமுனிவர் திருப்பாணழ்வார் தம்பிரான்மார் (அரையர்கள்) போல்வாரை. வண்டுகள் அலைந்துகொண்டேயிருக்கும். ஆசிரியர்கள் அப்படியன்றிக்கே ஒரே பொருளில் ஊன்றியிருப்பார்கள். [என்கிற இஃது ஒன்றே வ்யாவ்ருத்தி. மற்ற அம்சங்களில் ஸாம்யம் நிரூபிக்கப்படுகிறது.] மதுவ்ரதமென்று பேர்பெற்ற வண்டானது தேன் தவிர மற்றொன்றை உணவாகக் கொள்ளாதவாறு போல *உளங்கனிந்திருக்குமடியவர் தங்கள் உள்ளத்துஊறிய தேனான பகவத் விஷயாநுபவத்தையே விரதமாகக்கொண்டவர்களாய், பரிசுத்தமான வாயைக்கொண்டு மகிழ்மாலே மார்பினனுடைய சொல் மாலையின் ஸாரத்தை க்ரஹிக்குமவர்களாய், வண்டுகள் தேதெனவென்று ஆலாபனை பண்ணுமாபோலே 'தே, தே' என்று [அதாவது உனக்கே நாம் என்று மமகார மொழிந்து] இதையே வாய் வெருவுகின்றவர்களாய், காலோசிதமான பண்களைப் பாடுகின்றவர்களாய், திருவாசல்களிலே பிரமன் சிவனிந்திரன் முதலான லைவகர்கள் நிறைந்து தலை நுழைக்க வொண்ணுதபடி நெருக்க, திருவாசல்காப்பானைக் கதவு திறக்கவேணுமென்று அபேக்ஷித்து ச்ரமப்பட்டு உள்ளே புக வேண்டாதபடி தனை வொன்றுமின்றிக்கே தாராளமாகவுள்ளே புகும் அந்தரங்கராய், எம்பெருமானது தலைமேலும் ஏறவல்லவர்களாய் அவனையே சேர்ப்பிக்குமவர்களான நாரதாதிகள் வண்டாகவும் தும்பியாகவும் கொள்ளத்தகுவர்கள்.

153. [கண்வலைப்படாதே.] கிளி பூவை முதலானவையாகச் சொல்லுவது ஸ்ரீமதுரகவிகள் தொண்டரடிப் பொடியாழ்வார் ஆழ்வாணண்டானெம்பார் அருளாளப்பெருமாளெம்பெருமானார் போல்வாரை. கிளிகள் வலையில் அகப்படுமா போலே இவர்கள் எம்பெருமானது தாமரைத் தடங்கண்விழிகளாகிற வலையில் அகப்படுவார்கள். [மாதராரார் கயற்கணென்னும் வலையில் அகப்படமாட்டார்கள்.] வளர்த்தெடுப்பார் கையிலே விதேயராயிருப்பார்கள். தயிர்ப்பழம் சோற்றுருடு பாலடிசில் நெய்யமரின்னடிசில் பாலமுது இவைபோல பரமபோக்கியமான பகவத்குணங்களை அநுபவிப்பிக்க அநுபவிக்குமவர்களாய், 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்னுமாபோலே *முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனப் பேசுமவர்களாய், ஆசாரியனுடைய நிக்ரஹாநுக்ரஹங்களிரண்டையும் ஸமமாகப் பாவிக்குமவர்களாய், கற்பித்தவர்கள் தளர்ந்திருக்கும்போது அவர்களுக்குச் செவிக்கினிதாகச் சொல்லி

அவர்களும் கைகூப்பி வணங்கும்படியிருப்பாராய், மயில்கள் ஆலிப்பதும் அழைப்பதுமை செய்யுமாபோலே எம்மாஜைச் சொலலிப் பாடி யெழுந்தும் பறந்தும துள்ளுமவர்களாய், குயில்கள் பரப்ருத மென்கிற பேருக்குத் தக்கபடி பிறரால் வளர்க்கபடுவது போலப் பராபிமாநத்திலே யொதுங்கியிருப்பாரான மதுர கவிகள் போல் வாரைச் சொல்லுவது பொருத்தம்.

154. [ஆசறுதாவியென்னும்.] நாரை கொக்கு குருகென்று சொல்லுகிறது ஸ்ரீ குலசேகரப் பெருமாள் போல்வாரை. உள்ளும் புறம்பு மொக்கப் பரிசுத்தர்களாய், நாரையானது திரைகள் வந்து கிட்டி மேலே தாவிப்போகா நிற்கிற கானலிலே அசையாமலிருக்குமா போலே ஸம்ஸார ஸமுத்ர தரங்கங்களான காபதரய ரூபவயஸனங்கள் வந்து மிடைந்து மேலிடா நின்றாலும் எம்பெருமான் பக்கலிலேயே சிந்தையூன்றியிருக்கப் பெறுகை யாலே அந்த வ்யஸனங்களுக்குக் கல்ங்காதே யிருப்பவர்களாய், கொக்கானது தன்வாயாலே யெடுத்துக்கொடுக்க ஜீவித்திருக்கும் தன் பிள்ளைக்கு வாய்க்கடங்கு மிரைதேடி யிடுமாபோலே தங்கள வாக்காலேயுதவும் பகவத் விஷயத்தைக் கொள்ளும் இளைய சிஷ்யர்களுக்கு அதிகாராநுகுணமாக ஸாத்மிக்கக்கூடிய பகவத்விஷயார்த்தங்களை சாஸ்த்ரங்களிலே ஆராய்ந்து உபகரிக்கு மவர்களாய், இடைவீடின்றிக் காலமெல்லாம கூடங்களிலே தாங்களே சென்று தங்களைப் பிரியில்தரியாத ப்ரேம முடைய சிஷ்யர்களுடனேகூட பகவத்குணாநுபவம் பண்ணுமவர்களாய், தங்களாலுஜ்ஜீவித்த சிஷ்யர்கள் உபகார ஸ்ம்ருதியாலே சிரஸா வஹரிக்கையாகிற ப்ரஹ்மரதம் பண்ணி யதாசக்தி ஸமர்ப்பித்த வற்றை அங்கீகரிக்குமவர்களாய், நல்லபதத்தால் மனவாழ்வ தென்று பாகவத கைங்கரியத்துக் குறுப்பான க்ருஹஸ்த தர்மத் தையும் ஸம்ஸார வெக்காயமடியான பயத்தாலே இன்பமருஞ் செல்வமுமிவ்வரசும் யான் வேண்டேனென்று உபேக்ஷிக்குமவர் களாயுள்ள ஸ்ரீ குலசேகரப் பெருமாள் போல்வார் இங்குக் கொள்ளப்படுவது பொருத்தம்.

155. [பூண்டதாள் சீக்கடலை.] மேகமாகச் சொல்லுகிறது முதலாழ்வார்கள் திருமழிசைப் பிரான் கலியன் இராமானுசன் போல்வாரை யென்க. பெய்யவேண்டிய காலங்களில் கடலிலே புக்கு அதில் நீரைப்பருகிக் கொள்ளும் மேகமபோலே பகவத் குண ஸாகரத்தை உள்ளேயடக்கிக் கொண்டிருப்பவர்களாய், மேகமானது அவன் திருமேனியோடொத்த நிறத்தையுடைத் தாயிருக்குமா போல, உள்ளுறையும் பெருமானுடைய நிழலீட்டாலே அவனேறு ஸாம்யம் பெற்றவர்களாய், மேக மானது பிராணிகளை ரக்ஷிக்க ஆகாசப் பரப்பெங்கும் ஸஞ்ச ரிக்குமாபோல ஸம்ஸாரி சேதநாகளை ரக்ஷிக்கைக்காக உல கமெங்கும் ஸஞ்சாரம் பண்ணுமவர்களாய், மேகமு வர்ஷத்தாலே

தடாகம் முதலியவற்றை நிறைக்குமாபோலே ஞானமாகிற தடாகத்தைத் தாங்கள் வர்ஷிக்கிற பகவத்குண தீர்த்தங்களாலே நிறைக்குமவர்களாய், மேகமானது தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து வாழுவுலகினில் பெய்து மாழுத்தகதி சொரியுமாபோலே அகர்த்தலேசமுமின்றிக்கே அனைவரு முஜ்ஜீவிக்கும்படி பகவத் குணரத்னங்களை வர்ஷிக்குமவர்களாய், மேகமானது எவ்வளவு வர்ஷித்தாலும் வர்ஷித்தேதாமென்று நினையாதாப்போலே தங்களுடைய ஔதார்யாதிசயத்தை நினையாதவர்களாய் அவ்வளவுமன்றிக்கே 'இன்னமும உபகரிக்கப் பெற்றிலோமே, நாம் செய்தது போருமோ?' என்று வெள்கியிருப்பாராய், உபகரிக்கப்பெறுதபோது உடம்பு வெளுத்து ஒளித்திருப்பாராய், எதிர்தலை வாழ்வதையே தங்களுக்குப் பேறாக நினைத்திருப்பவர்களான தன்மையிறல் அன்னவாகளுக்கு மேக ஸாம்யம் பொருந்தும்.

[ஆக இதுவரையில் தூதுவிடப்படுகிற அன்னம் முதலானவற்றுக்கு ஸ்வாபதேசம் அருளிச் செய்யப்பட்டதாயிற்று. இனி, பலகால் தூதுவிடவேண்டும்படி முகங்காட்டாமைக்கு ஹேதுவும், தூதுவிடுகைக்குப் பற்றாசும், அதுக்கு விஷயமும் வகையிட்டு அருளிச் செய்யப்படுகிறது.]

156. [தம் பிழையும்.] திருவாய்மொழியில் * அஞ்சிறைய மடநாராய் * வைகல்பூங்கழிவாய் * பொன்னுலகாளீரோ * எங்கானலகங்கழிவாய் என்கிற நான்கு பதிகங்களில் தூதுவிடுதலுள்ளது. அஞ்சிறைய மடநாரையில் * கடலாழி நீர் தோற்றி அதனுள்ளே கண்வளரு மடலாழியம்மானைக் கண்டக்காலித்து சொல்லி * என்றருளிச் செய்கையாலே அப்பதிகம் வ்யூஹநிலையான க்ஷீராப்தி நாதனை நோக்கித் தூதுவிடுவதாகும். * வைகல் பூங்கழிவாயில் * மாறில் போரரக்கன் மதிள்நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனுக்கு * என்றருளிச் செய்கையாலே அது விபவாவதாரத்தில் தூது விடுவதாகும். * பொன்னுலகாளீரில் * வானவர் கோனைக்கண்டு யாமிதுவோ தக்கவாறென்னவேண்டும்* என்றருளிச் செய்கையாலே பரமபத நிலயனை பரவாஸுதேவனை நோக்கி அப்பதிகம் தூதுவிடுவதாகும். அது தன்னிலேயே * எங்குச் சென்றுகிலுங்கண்டு * என்றுமருளிச் செய்கையாலே இப்பதிகமே அந்தர்யாமித்வத்திலும் தூதுவிடுவதாகும். இப்படி தூதுவிடவேண்டும்படி முகங்காட்டாமைக்கு அடைவே ஹேதுக்களாவன; (1) * என்பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு என்னும்படியான தம்பிழையும், * சிறுத்த செல்வம் மல்கு திருவண்வண்டீருறையும் என்னும்படி ஆர்த்தரக்ஷணத்திலே எம்பெருமானைத் தடைசெய்து கால்தாழப்பண்ணின திருவண்வண்டிரின் சிறந்த செல்வமும், * முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன் என்

னலங் கொண்டபிரான் தனக்கு * என்னும்படி தான்படைத்த ஜகத்தின் பரப்பை ரக்ஷிக்கிற பராக்குடம், * தமரோடு அங்குறை வார்க்குத் தக்கிலமே கேளீர * என்னும்படி தன்னையுகந்த பாகவதர்களோடு கூடி வாழ்கையாலே நம்மை மறந்தானென்னைகக் கடியான தமரோட்டை வாஸமுமாம். தூது விடுகைக்குப் பற்றாசு அடைவே எவையென்னில், * என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு * என்னும்படியான அபராத ஸஹத்வமும், * புனாத்த பூந்தண்டுழாய் முடி நம் பெருமானைக்கண்டு என்னும்படியான ஆர்த்தரக்ஷண தீக்ஷிதத் வமும், * தன் மன்னு நீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் * என்னும்படி அடியார்களோடு ஏகரஸையிருக்குந் தன்மையும், *செக்கமலத்தலர் போலுங் கண் கை கால் செங்கனி வாய் அக்கமலத்திலே போலுந் திருமேனியடிகளுக்குத் தக்கிலமே கேளீர்கள் * என்னும்படியான வடிவழகும். ஆக, தம்பிழை மறப்பித்த க்ஷமாகுணத்தை உணர்த்தப் பெற்ற வ்யூஹம் முதல் தூதுக்கு விஷயம், சிறந்த செல்வம் மறப்பித்த ரக்ஷாதீக்ஷா குணத்தை உணர்த்தப் பெற்ற விபவாவதாரம் இரண்டாந் தூதுக்கு விஷயம் ; தாம்படைத்த பரப்பில் பராக்கு மறப்பித்த ஸாரஸ்ய குணத்தை யுணர்த்தப் பெற்ற பரத்வமும் அதற்குத் தோள் தீண்டியான அந்தர்யாமித்வமும் மூன்றாந் தூதுக்கு விஷயம். தமரோட்டை வாஸம் மறப்பித்த ஸௌந்தர்யத்தையுணர்த்தப் பெற்ற அர்ச்சாவதாரம் நான்காந் தூதுக்கு விஷயம் என்ற தாயிற்று.

157. [**பகலோலக்கமிருந்து.**] (இப்படி பலவிடங்களிலும் தூதுவிட்டாலும் இடங்களில் பேதமேயன்றி வஸ்துவில் பேத மில்லையென்பது தருஷ்டாந்தத்துடன் நிரூபிக்கப்படுகிறது.) ஸகல பரிஜனங்களும் ஸேவிக்கத் தன் வீறு தோற்றப் பகலோ லக்கமிருக்கையும், ராஜ்யத்திலுள்ளாருடைய குணதோஷங்களை யறிகைக்காக இரவிலே பிறரறியாதபடி கறுபடுத்து நகர சோதனம் பண்ணுகையும், ராஜ்யத்தில் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களுக்காக ஏகாந்தமாகவிருந்து கார்ய விசாரம் செய்கையும துஷ்ட ஜந்துக் களை வதைக்க வேட்டையாடுகையும், அந்த ச்ரமந்தீரப் பூந்தோப் புகளிலே அரிமத விஷயங்களோடே விளையாடுகையும் ஆகிற இந்த ஐந்து ப்ரகாரங்கள் உலகில் அரசனுக்கு இருக்குமா போலே * பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங் காதுஞ் சோராமே யாள்கின்ற வெம்பெருமான் செங்கோ லுடைய திருவரங்கச் செல்வனார் * என்று ராஜாவாகச் சொல்லப் பட்ட ஸர்வேச்வரனுக்கும் * விண்மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய் மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும் மறைந் துறைவாய் * என்கிற பாசுரத்திற் சொல்லப்படுகிற பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களென்கிற ஐந்து நிலைகளி

ஆம் இவ்வைந்து ப்ரகாரங்களுங் காணலாம். (1) பகவல்லக்ஷ மிருக்கும் ப்ரகாரம் பரத்வத்திலே. (2) கழற்படுத்துச் சோதிக் கும் ப்ரகாரமே அந்தர்யாமித்வத்திலே. (3) காரியம் மந்த்ரிக்கும் பரகாரம் வ்யூஹத்திலே. (4) வேட்டையாடும் ப்ரகாரம் விபவா வதாரங்களிலே. (5) ஆராடங்களிலே விளையாடும் ப்ரகாரம் அர்ச்சாவதாரத்திலே யென்று காண்க. [இதனால பரத்வாதி களில் ஸ்தல பேதமொழிய வஸ்துபேதமில்லாமை காட்டப் பட்டது.]

158. [தமருகந்த வடியோமுக்கே.] (ஆழ்வார் அர்ச்சாவதாரத் திலே விசேஷமாக மண்டியிருப்பதற்குக் காரணம் அதிலுள்ள குணபூர்த்தியே யென்கிறது.) * தமருகந்த தெவ்வுருவம் அவ் வுருவந்தானே தமருகந்த தெப்பேர் மற்றப் பேர் * என்று அடி யாருகந்த த்ரவ்யமே திருமேனியாகவும் அவர்களுகந்த திருநாமங் களே தனக்குத் திருநாமமாகவுங் கொண்டிருக்குமென்றும் * அடி யோமுக்கே யெம்பெருமானல்லீரோ நீரிந்தவூரீரே * என்று— பரத்வம் முதலியவற்றில் அணுகுணைக்கு ஆளல்லாமல் அநந்ய கதிகளாயிருக்கிற வெங்களுக்கு ருசி பிறந்தபோதே நினைத்த வகைகளெல்லாம் அநுபவிக்கைக்காகவன்றே திருவிந்தவூரிலே வந்து நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிறது! என்றுஞ் சொல்லப்பட்ட * பின்னைநர் வணங்குஞ்சோதியான அர்ச்சாவதாரத்திலே இருட் டறையில் விளக்குபோலே எல்லாக் குணங்களுமே பூர்ணமாக விளங்கும். [இந்த சூர்ஷ்ணயின் மணவாள மாமுனிகளது வியாக் கியானத்தில் பல அச்சுப்பிழைகள் காணப்படுகின்றன. "ஸாவம் பூர்ணம் ஸோஹாம்" என்கிற ப்ரமாணமிருக்கவேண்டுமிடத்தில் "ஸர்வம் ஸோஹ" என்று விழுந்திருக்கிறது. "முற்பட்டவற்றி லுள்ளவையும்" என்றிருக்கவேண்டுவது 'முற்பட்டவைந்தி லுள்ளவையும்' என்று கிடக்கிறது. திருத்திக்கொள்க.]

159. [வன்பெரு.] (இப்படி அர்ச்சாவதாரத்தில் எல்லாம் பூர்ணமாகில் எல்லாத் திருப்பதிகளிலும் எல்லாக் குணங்களும் ஏக ரூபமாக ப்ரகாசிக்குமோ வென்ன, பரத்வம் முதலியவற்றிற்கு அஸாதாரணமாயும் ஸாதாரணமாயுமிருக்கின்ற குணங்களில் ஒவ் வொரு குணம் ஒவ்வொரு திருப்பதியில் பிரதானமாகப் பிரகாசிக் கும் விதம் நம்மாழ்வார் திருவாய்மொழியில் அருளிச்செய்துள்ள திருப்பதிகள் தோறும் அடைவே காட்டப்படுகிறது. ஸகல திவ்ய தேசப்ரதானமான கோயிலில் பிரகாசிக்கிற குணம் ஆதியிலே கூறப்படுகிறது.) * பாற்கடல் யோக நித்திரை சிந்தை செய்யும் வ்யூஹகுணமான ஸௌஹார்த்தம் கோயிலில் ப்ரதானமாகப் பிரகாசிக்கும். எங்ஙனேயென்னில்; திருப்பாற்கடலில் எம்பெரு மான் ஜகத்ரக்ஷணை சிந்தை பண்ணுவதாக ப்ரவிஷ்டனாய்; கோயிலி லும் அந்த சிந்தனையையே செய்துகொண்டு சாய்ந்தருள்வதாக திருவரங்கத்தாய்! இவள் திறத்து என் சிந்தித்தாயே?" "திருவ

ரங்கத்தாய் என்கொலோ மூடிகின்ற திவட்கே?" என்னும் பாசுரங்களிலுல் புலப்படுகின்றது. தென் திருவரங்கம் எப்படிப் பட்டதென்னில் * வன்பெரு வானக முதலுய்ய இனிதாகத் திருக் கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதியாகவுள்ளது. இது நான் அர்ச்சாவதாரமாயிருக்கச் செய்தேயும் பரவ்யூஹ விபவாந் தர்யாமி யென்கிற மற்றை நான்கு நிலைமைகளின் அநுபவமும் ஆழ்வார்க்கு இங்கே உள்ளதென்பது பாசுரங்களிலுல் விளங்கு கின்றது. எங்ஙனேயென்னில், (இத்திருப்பதி விஷயமான * கங் குலும் பகலுமென்கிற பதிகத்தில்). "வடிவுடை வானோர் தலைவனே!" என்கையாலே பரவாஸுதேவனுடைய அநுபவம் இங்கு ஆயிற்று; கடலிடங் கொண்ட கடல்வண்ணா!" என்கை யாலே வ்யூஹாநுபவமும் இங்கு ஆயிற்று, "கட்கிலீ! உன்னைக் காணுமாறருளாய்" என்கையாலே அந்தர்யாம்யநுபவமும் இங்கு ஆயிற்று. "காகுத்தா கண்ணேனே" என்கையாலே விபவாவதா ராநுபவமும் இங்கு ஆயிற்று. ஆக இங்ஙனே அநுபவிக்கபடு கின்ற பரத்வாதிகளில் வைத்துக்கொண்டு வ்யூஹத்தின் குணமான ஸௌஹார்த்தத்தின் அநுபவமே ஆழ்வார்க்கு இங்கு உறைத் திருக்கும்.

160. [மண்ணோர் விண்ணோர் வைப்பில்.] உபய விபூதியிலுள் ளார்க்கும் சேமித்து வைத்த நிதிபோலே ப்ராப்யமாயிருக்கிற திருமலையில் வாத்ஸல்ய குணம் விளங்கும். "போகின்ற காலங் கள்.....தாய் தந்தையுயிராகின்றாய்.....தண்வேங்கடமேகின் றாய்", "கண்ணேயேழுலகுக்குயிராய வெங் கார்வண்ணனே.....: வேங்கட வேதியனே" "என்கட் பாசம் வைத்து பரஞ்சுடர்ச் சோதிக்கே" "நிகரில் புகழாய்.....திருவேங்கடத் தெம்பெரு மானே" என்கையாலே.

161. [உபயப்ரதாந.] ஜீவனென்ன ஈச்வரனென்ன ஆக இருவர்க்கும் வாசகமாய்க்கொண்டு இருவருடையவும் ப்ராதான் யத்தைத் தோற்றுவிக்கிற ப்ரணவம்போலே ஆழ்வாருடையவும் பொலிந்துநின்ற பிராணுடையவும் ப்ராதான்யம் தோற்றநின்ற திருக்குருகூரிலே * உறுவதாவதெத்தேதவும் என்கிற பாசுரத்தில் சொல்லப்பட்ட பரத்வஸுஸுலபமான ஈச்வரத்வம் விளங்கும்.

162. [வைஷ்ணவ வாமநத்தில்.] திருக்குறுங்குடியிலே ஆழ் வார் திருவுள்ளத்திலே வேறொன்றுக்கு இடமறும்படி விளங்கா நின்ற சாளக்ராமநிப்ச்யாமமான விக்ரஹத்தினுடைய அநுபவ ருசியை மேன்மேலும் விளைவிக்குமதாய் ஸ்ரீ வாமந ராமக்ருஷ் ணாதி விபவாவதாரங்களில் ப்ரகாசிக்குமதாகச் சொல்லப்பட்ட ஸுகுமார்ய சௌலப்யமான லாவண்யம் பரிபூர்ணமாயிருக்கும்.

* எங்ஙனேயோவன்னைமீரில் பாசுரந்தோறும் இதுவேயன்றோ பேசப்பட்டது.

163. [ருசி விவசர்க்கு.] கீழ்ச்சொன்ன லாவண்யத்தாலே ஒருவராலும் நிவர்த்திப்பிக்கவொண்ணுதபடி. பிறந்த ருசியாலே பரவசராய் அநந்ய கதிகளானவர்களுக்குத் திருவடிகளே உபாயமாகக் கொடுக்கும ஔதார்யகுணம வானமாமலைப்பெரு மாள பக்கலிலே கொழுந்துவிடும். [“ஆறனைக்கு நின்பாதமே சரணகத் தந்தெழிந்தாய்” என்கிற பாசுரம் * தோற்ற சோன் புக்கு உயிரானது.]

164. [கஜகணற்ருரை.] வேறொரு ரக்ஷகனை யுடையோ மல்லோம் என்றிருப்பாரை “நீராயலைநது கரையவுருக்குகின்ற” என்று சிதிலராம்படி பண்ணுகிற ஆராவமுதான மாதுர்யம் கும்ப கோணத்திலே மேன்மேலும் ஆராமல் புஜிக்கும்படி பெருகா நிற்கும். [எம்பெருமானுடைய திருநாமம் மாத்திரம் ஆராவமு தன்று; பரிகரமும் ஆராவமுதுகாணீர்.]

165. [மெலிவிலும்.] கீழ்ச்சொன்ன பரம போக்யமான விஷயத்தை விரைவில் கிட்டி அநுபவிக்கப்பெறுமையாலே நாடோறும் மெலியுமளவிலும் அவனே ரக்ஷகனென்று அத்யவ வஸித்திருக்கும்படி பண்ணுமதான க்ருபை திருவல்லவாழிலே நித்யமாயிருக்கும். [* மானேய் நோக்கில் * வைகலும் வீனே யேன் மெலிய * என்ற பாசுரத்திலும் * அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் * என்ற பாசுரத்திலும் * பெருமா னது தொல்லருளே * என்ற பாசுரத்திலும் நோக்கு.]

166. [வ்யவஸாயஜ்ஞர்.] ஆர்த்தர்களை ரக்ஷிப்பதில் தன் னுடைய ஊற்றத்தை உள்ளபடி அறிந்திருக்குமவர்களுடைய ரக்ஷணத்தில் அநுகூலராலும் சலிப்பிக்கவொண்ணுதபடி யிருப்ப தான அவனுடைய ஸ்தைர்யகுணம், திருவண் வண்டூரில் நிலை பெற்று நிற்கும். [* வைகல்பூங்கழிவாயில் * ஏறு சேவகனுக்கு என்றதில் நோக்கு.]

167. [விளம்ப விரோதம்.] வைகல் பூங்கழிவாயில் தூது விட்டவிடத்தும் கடுகவந்து முகங்காட்டாமல் தாமதித்துவருகை யாலே “போகுநம்பீ” “கழகமேமேறல் நம்பீ” என்னும்படி ப்ரணய ரோஷத்தால் பிறந்த விரோதத்தை “அழித்தாய் உன் திருவடியால்” என்று அழித்துப் பொகட்டவிருத்தகடநா ஸாமர்த்தியம் தன்னில்தான் சேராதவற்றைச் சேர்த்துக்கொண்டு நிற்கிற விருத்த விபூதியோகத்தை ப்ரகாசிப்பித்த திருவிண்ணக ரிலே பரந்திருக்கும். [* நல்குரவும் செல்வும் என்று தொடங்கிப் பாசுரந்தோறும் விருத்த விபூதியோகம் சொல்லிற்றுக் காண்க.]

168. [கடிதகட.] “குழையும் வாண்முகத் தேழையைத் துலைவில்லிமங்கலம கொண்டுபுக்கு, இழைகொள் சோதிச் செந் தாமரைக் கட்பிரானிருந்தமை காட்டினீர்” என்னும் பாசுரத்திற் சொல்லப்பட்ட கடகராலே தன் பக்கலில் கடிதராளர்க்கும் கடக

ராஜர்க்கும் "துவளில் மாமணி மாடமோங்கு துலவில்லி மங்கலம் தொழுமிவளை நீரினியன்னைமீர் உமக்காசையில்லை விடுமிடே" என்னும்படி விகடனையைப் பண்ணுமதான பந்துத்வ குணம் துலவில்லி மங்கலத்திலே விளங்கும். [கடிதென்று ஆழ்வாரைச் சொல்லுகிறது. கடகுரென்று தோழிமார்களைச் சொல்லுகிறது. இவர்களுக்குப் பரஸ்பரம் பொருந்தாமையை விளைத்திட்டது பகவத்பந்துத்வம். "இவளைநீர் இனியன்னைமீர் உமக்காசையிலலை விடுமிடே" என்ற பாசுரத்திலல் அந்தப் பொருந்தாமை ஸ்பஷ்டம்.]

169. [கைம்முதலிழந்தார்.] திருக்கோளூரெம்பெருமானுக்கு வைத்த மாநிதிப்பெருமாள் என்று திருநாமமாகையாலும் நிதியானது ஆபத்துக்கு உதவுமதாகையாலும் இத்திருப்பதியில் ஆபத்ஸகத்வம் என்கிற குணம் விளங்கும். [* உண்ணுஞ்சோறு பருகுநீர்.]

170. [சென்று சேர்வார்க்கு.] சென்று சேர்ந்தவர்கட்கு உசாத்துணையான நெஞ்சைக் கொள்ளைகொள்ளுமதான லௌகர்யம் தென் திருப்பேரையில் விளங்கும். [* வெள்ளைச்சுரி சங்கில் * என்னெஞ்சிலுமங்கே யொழிந்தார் உழந்தினியாரைக் கொண்டென்னுசாகோ என்றதிலும் * செங்கனிவாயின் திறத்த தாயுமித்யாதியிலும் நோக்கு.]

171. [ப்ரவணசித்தம்.] தன் பக்கல் ப்ரவணராயினவர்களது சித்தத்தை "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை" என்று பரமபதத்தின் பேர் சொல்லுகையும் அஸஹ்யமாம்படி பரத்வத்தில் விழுகமாகப் பண்ணும் ஆனந்தப் பெருக்கம் திருவாறன் விளையிலே வ்யக்தம.

172. [ஸாதரை.] "பல்வளையார் முன்பரிசழிந்தேன்" என்னும்படி ஸ்த்ரீத்வப்ரகாரமான லஜ்ஜை முதலியவற்றை யழிக்கும் மாயக் கூத்தனென்கிற சேஷ்டிதாச்சர்யம் பெருங்குளமென்கிற திருக்குளந்தையிலே விளங்கும்.

173. [ச்ரமமனுஞ்சூழும்] எம்பெருமானுடைய சிரமத்தை யநுஸந்தித்த ஆழ்வாருடைய திருவுள்ளமானது சுழற்சியடைவதற் குறுப்பான பகவத் ஸௌகுமார்ய ப்ரகாசமானது திருவண் பரிசாரத்திலே விளங்கும். [* அங்கு மிங்குமென்கிற பதிகத்தில் * கொடியார்மாட மித்யாதி பாசுரத்திலும் * ஆருமாளார் இத்யாதி பாசுரத்திலும் நோக்கு.]

174. [மஹாமதிகள்] திருச்செங்குன்றூர்த் திருச்சிற்ருற்றில் எம்பெருமானுடைய சௌர்யவீர்ய பராக்கிரமங்கள் விளங்கும். [* வார்கடா வருவியென்கிற முதற் பாசுரத்தில் நோக்கு.]

175. [ஸாத்யஹ்ருதிஸ்தனயும்] தனக்கு தாயப்ராப்தமான ஸ்தானமாக நினைத்திருக்கும் திருக்கடித்தானத்தில் எம்பெருமானுடைய க்ருதஜ்ஞதத்வம் பரிமளிக்கும். [* திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும் ஒருக்கடித்துள்ளே யுறையும் பிரான் * என்ற பாசுரம் * எல்லியுங்காலைக்கு உயிரானது]

(ஆழ்வார் போன்ற அடியார்களுடைய திருவுள்ளத்தில் வாஸமே எம்பெருமானுக்குப் பரமப்ராப்யமென்றும், ஸமயம் பார்த்து அங்கே குடிபுகுவதற்காகவே ஆங்காங்குத் திருப்பதிகளில் உறைந்திருக்கிறபடியென்றும், அடியவருள்ளத்தில் வாஸம் கிடைத்துவிட்டால் பிறகு திவ்யதேசங்களில் விருப்பமும் எம்பெருமானுக்கு மட்டமாய்விடுகிறதென்றும், ஆனாலும், இந்தத் திருப்பதிகளில் வாஸம் பண்ணினத்தாலே யன்றோ நாம் அடியவருள்ளத்தில் வாஸம் பெற்றது' என்று அத்தேசம் தனக்குப் பண்ணின உபகாரத்தை நினைத்து, பின்னையும் அத் திவ்யதேசங்களில் விருப்பம் செல்லாநின்றது என்றும் ஸம்ப்ரதாயார்த்த ஸாரம் குறிக்கொள்ள வுரியது.) ஸாத்யஹ்ருதிஸ்தனயும்-ஸாத்யமான [பலமான] ஹ்ருதயவாஸம் லபித்திருக்கச் செய்தேயும் என்றபடி. ஸாதனம் ஒருக்கடிக்கும் க்ருதஜ்ஞதா—இந்த ஹ்ருதய வாஸத்திற்கு ஸாதனமாயிருந்த (திருக்கடித்தானத்) திருப்பதியில் ஹ்ருதயதத்திற்போல அநுராகங் கொண்டு வர்த்திக்கும்படியான க்ருதஜ்ஞதை என்றபடி. கடித்தானம் என்பதற்குமணத்தை யுடைத்தான ஸ்தானமென்று பொருளாகையாலே அதற்கு இணங்க (மூலத்தில்) "க்ருதஜ்ஞதாகந்தம்" எனப்பட்டது.

176. [அவகாஹித்தாரை.] தன் ப்ரஸாதத்திலே மூழ்கினவர்களை மற்றொருவர்க்கு ஆகாதபடி யீடுபடுத்துமதான அவயவ சோபை ஆபரண சோபை முதலான நாயக லக்ஷணம் குட்ட நாட்டுத் திருப்புலியூரில் பூர்ணமாயிருக்கும். [* கருமாணிக்க மலையென்னுமம பதிகத்தின் சுவையறிக.]

177. [போக்யபாகத்வரை.] கனத்த பசியை யுடையவன் அன்னம் பக்குவமாவதற்கு முன்னே பதற்றத்தினால் அதன் அருகே வந்து கிடப்பது இருப்பது நிற்பதாமாப்போலே, போக்ய பூதரான ஆழ்வார்க்குப் பரமபக்தியாகிற பாகம் பிறக்குமளவும் அநுபோக்தாவான எம்பெருமானுக்குண்டான பதற்றம் திருப்புளிங்குடியிலும் வரகுணமங்கையிலும் ஸ்ரீ வைகுண்டத்திலும் விளங்கும். [இம்மூன்று திருப்பதிகளிலும் நின்றுமிருந்தும் கிடந்தும் போருவதற்கு இதுவே கருத்து.]

178. [போகத்தில்.] இப்படி போக்யபூதரான ஆழ்வாருடனே கலந்து பரிமாறுமிடததில் "ஆட்கொள்வானெத்தனையிருண்ட மாயன்" என்றும், "வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று ஆர்வுற்ற என்னை யொழிய என்னில்

முனனம பாரிதது த தானெனனே முற்றப் பருகினன், க்காரொக் கும காட்கரையபபன கடியனே" என்றும சொலலும்படி அத தலை இதத்லையாய் சேஷசேஷிபாவம மாறுடிப பரிமாறும் சில குணமீ திருககாடகரையில கரையழியப பெருகும [* உருகு மால நெஞசமெனகிற பதிகம காணக.]

179 [மஹாத்மாக்கள் விரஹம்.] பாகவதாகளை விட்டுப பிரிநதிருகக மாட்டாமையாகிற ஸௌகுமாரயம திருமூழிக்களத் தில் பூரணம [* எஙகானலகஙகழிவாயில * தமரோடஙகுறை வாககு * என்ற பாசுரம உயிரானது.]

180 [பிரிந்த துனபக்கடல்] மேனமேலும ஆளவிட வேணடுமபடி தனனை பிரிகையால வந்த துகக ஸாகரதைதக் கடதது ம விஷணுபோதமான அவனுடைய பரமகருபை திரு நாவாயிலே ஊரின பெயா கொணடே அறியக கிடககும. [நாவா யென்பதற்கு - படகு எனறனரே பொருள]

181 [சரண்ய முருந்தத்வம்] திருக கணணபுரதில் சரணய னுடைய முக்திபூமிபரததவம விளஙகும [* மாலை நணணியில * மாணமாலுல் வைகுந்தம கொடுககும பிரான் என்ற பாசுரம் உயிரானது]

182. [மார்க்கபந்து] திருமோகூரில, வழிததுணைவனை எமபெருமானுடைய சீதளதவம் என்னும் குணம விளஙகும. (இவ்வூரத் திருபபதிகமான * தாளதாமரையில, "தயரதன பெற்ற மரதகமணிததடம" எனறும * அவனடி நிழல தடம் என்றுமுள்ள பாசுரஙகள உயிரானவை தேவாகளுககு அமுத மளிககும ஸமயததில் அசுராகளை மோஹிபபித்த அபதானத தோடே ஸேவை ஸாதிக்கும் இததலததிறகு மோஹனகேஷதிர மென்று புராண ப்ரஸிததி. மோகூரெனபது தமிழ வழக்கு)

183. [ஸைஸந்ய] அனநதசயனததில், நித்ய ஸூரிகள ஸம்ஸாரிகளென்று வாசிபாராத ஸாமயகுணம விளங்கும. இத தலம் திருமுகமும் திருநாபியும் திருவடிகளுமாகிற விவற்றைத் திருவாசல் மூன்றிலை காட்டும தலமாகும. இத்திருபபதியில மூன்று வகைபபட்ட அதிகாரிகள வந்து பணிவதாக ஆழ்வார அருளிச செய்திருக்கிறார் எங்ஙனமே யென்னில், "அனநத புரத்து, அமரர்கோன் ஆசசிக்கின்று அஙகபபணி செய்வா ரின்மேறை" என்ற பாசுரததிலை நித்ய ஸூரிகளில தலைவரான ஸேனைமுதலியார வநது அர்சசிக்கின்ற ரெனபது சொலலப பட்டது: அவாகளாகத திருமுகமணடலவாசல், அநதப பாசுரத்தி லேயே "அமராராய்த திரிகின்றார்கட்கு ஆதி" எனகையாலே பிரமன் முதலான தேவாகளும வந்து ஆசசிக்கின்ற ரெனபது காட்டப்பட்டது அவர்கட்காகத திருநாபிகமலவாசல் "பட முடையரவில் பள்ளிபயின்றவன பாதஙகாண நடமினே நமாக ளுள்ளீர்" என்று இவ்வுலகததவாகட்கும ப்ராப்யமெனபது

சொல்லப்பட்டது. இவர்கட்காகத் திருவடிவாசல். *பாதங் காண நடப்பார்த்திருப் பாதவாசல். உந்திமேல் வந்துதித்த நான்முகனுக்கு நாபிவாசல். முகம் நோக்கிப் பேசுமவனை ஸ்ரீபதியாழ்வானுக்குத் திருமுகவாசல்—என்கிற பொருத்தமும் உணர்க.]

184. [மோக்ஷதானத்தில்] திருவாட்டாற்றில், கிழே விவரித்தபடி ஸர்வஸமனை எம்பெருமான் அடியவர்களுக்கு மோக்ஷம் தருமளவில் அவர்கள் விதித்தபடி செய்வானுய் நிற்கிற ஆச்ரித பாரதந்திரியம் என்னும் குணம் விளங்கும். [அருள் பெறுவாரடியாரில் * ஆழியானருள் தருவானமைகின்றனது நமது விதி வகையே * இன்று விண்ணுலகம் தருவானுய் விரைகின்றன் விதி வகையே * என்ற பாசுரங்கள் உயிரானவை.]

185. [த்யாஜ்யதோஷ] திருமாலிருஞ்சோலையில், மஹிஷியின் உச்சிஷ்டத்தை விரும்பும் ராஜகுமாரனைப் போலே முமுக்ஷுக்களுக்கு த்யாஜ்யமான தோஷத்திலே எம்பெருமானுக் குண்டான வ்யாமோஹசாலித்வம விளங்கும். "திருமாலிருஞ்சோலை வஞ்சக் கள்வன் மாமாயன்" என்கிறபடியே வஞ்சக் கள்வனுய் * நெஞ்சு முயிரு முள்கலந்தவனுய், "மாயவாக்கை யிதனுள் புக்கு" என்கிறபடியே தோஷதோஷம் பாராமல் உள்ளே புகுந்தவனுய், "திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே என் தலையே" என்ற பாசுரத்தின்படியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றி லும் பண்ணும் விருப்பத்தை இதில் [தோஷத்தில்] எக தோசத திலே பண்ணி "மங்கவொட்டு உன் மாமாயை" என்று கால் கட்டி விடுவிக்க வேண்டும்படி அவனுக்குண்டான வ்யாமோஹம் "த்யாஜ்யதோஷ வ்யாமோஹம்" என்கிற பதத்தினுல் காட்டப் பட்டது.

186. [அங்கீகரிக்க] (அப்பக்குடத்தான் ஸந்நிதி யென்கிற) திருப்பேர் நகரில் தம்மை அங்கீகரிக்கைக் குடலான ஸுக்ருத லேசமில்லாதாரையும் மடிமாங்காயிடுமாபோலே 'என்னுரைச் சொன்னுய்' 'என் பேரைச்சொன்னுய்' என்றூற்போன்ற அஜ் ஞாதஸுக்ருதங்களை ஆரோபித்தும் அங்கீகரிக்கைக்கு இடம் பார்க்குமவனுடைய ஸ்வாமித்வம் விளங்கும். ['திருமாலிருஞ் சோலைமலை யென்றேறன், என்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்" என்ற பாசுரத்தில் நோக்கு.]

187. [இவற்றில் ப்ராவண்யம்]. (இத்திருப்பதிகளில் ப்ரா வண்யம் ஆழ்வார்க்கு உண்டானது எப்போது? இவர்தாம் ஸ்ரீஸூக்தி யருளிச்செய்யத தொடங்கினது எத்தனை பிராயத் திலே? இவர் ஸ்ரீஸூக்திகளுக்கு போக்தாக்கள் யார்? போக் யதை யிருக்குமபடி யாது? என்னும் விஷயங்களுக்கு விடை யிறுத்தல்.) கீழ்க்கூறிய அர்ச்சாவதார ஸ்தலங்களில் ஊற்றம் –ருவம் நிரம்புவதற்கு முன்னே [மிக்க இளம்பிராயத்திலே]

உண்டாயிற்று. இனி ப்ரபந்தமருளிச்செய்யத் தொடங்கினது பதிணாறுகலைகளாலும் பரிபூர்ணமான சந்திரமண்டலம் போலே பதிணாறு திருநக்ஷத்திரம் நிரம்பின பின்பு. அந்த சந்திரமண்டலத்தில் அமிருதம் தேவர்களுக்கு போக்யமாகையாலே போக்ருநியமமுடைத்தாயிருப்பது போலன்றிக்கே இதற்கு அநுபோக்தாக்கள் அருளிச் செய்கிற ஆழ்வார் தாமும், கற்பவர்களான ஸம்ஸாரிகளும் கேட்பவர்களான நித்யஸூரிகளும், பாட்டென்ப வனை ஸ்வேச்வரனுமாக உபயவிபூதியும் உபயவிபூதிநாதனும். [முகஞ்செய்தது—முகத்தில் நின்றும் வெளிவந்தது.]

188. [நீர்பால்] (திருவாய்மொழி அவதரித்த க்ரமம் வெளியிடப்படுகிறது.) நீர் பாலாய், பால் நெய்யாய், நெய் அமிருதமாய் அத்தாலே நிரம்பின ஓர் எரியாக ஆழ்வாரைக் கொள்ள வேண்டும். "மயர்வற மதிநல மருளினன்" என்கிற விடத்தில் கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தியின் ஸ்தானத்திலே பகவத்ப்ரஸாதமாய் அது அடியாகப் பரபக்தி தொடங்கிப் பிறக்கையாலே, ஞானம் முதலிலே பரபக்தி ரூபமாய் பரபக்தியானது பரஜ்ஞாநமாய், பரஜ்ஞானமானது பரமபக்தியாய் முதிர்ந்த படியை நோக்குங்கால், நீர்பால் நெய்யமுதாய் நிரம்பின எரியாகவே ஆழ்வார் கொள்ளத் தகுந்தவராவர். [நீரின் ஸ்தானத்தில் ஞானம்; பாலின் ஸ்தானத்தில் பரபக்தி; நெய்யின் ஸ்தானத்தில் பரஜ்ஞானம்; அமுதின் ஸ்தானத்திலே பரமபக்தி என்று காண்க] நிரம்பின எரி தரித்திருக்கமாட்டாமல் நெளித்து உடைந்துபோம்; அதுபோலவே ஆழ்வாராகிற எரியும் உடையத் தொடங்கிற்று. ஆச்ரயம் அழியாமைக்காகப் பரிவாஹரூபேணை பிறந்து வாய்கரை நெளியத் தொடங்கி, அங்ஙனம் நெளிகிற வாய்கரையாலே அருளிச்செயல் அவதரிக்க ஆரம்பித்து, சொற்களானவை நாம் இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாக வேறு மென்று, என்னைக்கொள் என்னைக்கொள் என்று மேல் விழுகையாலே "மிடைந்த சொல் தொடையாயிரம்" என்று ஆழ்வார் தாமே அருளிச் செய்யும்படியாகி உள்ளே தேங்கியிருக்கின்ற அம்ருத வெள்ளமே ஸ்ரீஸூக்தி ரூபமாகப் பெருக்கானறிந்து, இங்ஙனம் பரபக்தி முதலிய மூன்று நிலைமையைப் பெற்ற பக்தியினால் தூண்டப்பட்டுத் திருவாய்மொழி அவதரித்ததென்பது "அவாவிலந்தாதிகளால் இலையாயிரமும்" என்ற பாசுரத்தினால் விளங்கும். ஆகவே பக்திபலாத்காரத்தாலே பிறந்த அந்தாதியான ஆயிரமென்று நிரூபகமாம்படியாயிற்று. (இத்தால் ஆழ்வார் நாம் அவனைக் கவிபாடவேணுமென்று ஸங்கல்பித்திருந்து பாடினரல்லர்; பக்திபலாத்காரத்தாலே அவதரித்த தத்தினை என்று நிரூபித்ததாயிற்று.)

189. [மனஞ் செய்] (திருவாய்மொழியின் பொருள்களை இனி விரிவாக வெளியிடத் திருவுள்ளம்பற்றி முந்துற முன்னம்—

பகவத் தத்வத்தைக் கையிலங்கு நெல்லிக் கனிபாக ஸாக்ஷாத் கரித்த ஆழ்வார் ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவனமான அர்த்த விசேஷங்களை உபதேசம் பண்ணினதான இத்திருவாய்மொழி யானது ப்ரதிபாத்யங்களான அர்த்தங்களின் ஸாம்யத்தாலே கீதோபநிஷத்துக்கு ஸமமாகச் சொல்லப்படும் மென்கிறது.) ஜீவாத்மாக்களுக்கும் பரமாத்மாவுக்கும் பேதம், ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதம், அசித்திற்காட்டில் சித்துக்குண்டானவாசி, ஆத்மாக்களின் நித்யத்வம் தேஹங்களின் அநித்யத்வம், ஸ்வேச்வரனுடைய நியாமகத்வம் [அதாவது ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் பண்ணுவித்தல்], அவனுடைய ஸௌலப்யம், ஆச்ரயிக்குமிடத்தில் ஸர்வஸமனுயிருக்குந் தன்மை, அஹங்காரதோஷம், இந்த்ரியப்ராபல்யம், மநஸ்ஸினுடைய ப்ராதான்யம், மநோவாக்காயங்களை அடக்கவேண்டியதன் அவசியம், நால்வகைப்பட்ட ஸுக்ருதிகளின் பேதம், தேவாஸுரவிபாகம், விபூதியோகம், விச்வரூபதர்சனம், ஸாங்கபக்தி, அங்கப்ரபத்தி ஸ்வதந்த்ரப்ரபத்திகளாகிற இரண்டுவகை ப்ரபத்தி ஆகிய இவை கீதையில் ஆங்காங்கு ச்லோகங்களினால் சொல்லப்பட்டிருப்பதுபோல, திருவாய்மொழியிலும் ஆங்காங்குப் பல பாசுரங்களினால் சொல்லப்பட்டிருக்கையாலே இந்த அர்த்தஸாம்யத்தைக்கொண்டு கீதையோடொக்கச் சொல்லப்படும் திருவாய்மொழி.

190. [அது தத்வோபதேசம்.] (கீதையோடு திருவாய்மொழிக்குண்டான ஸாம்யம் சொல்லிற்று கீழ்; கீதையிற் காட்டில் மேன்மை இனி பல ஹேதுக்களால் ஸ்தாபிக்கப்படுகிறது. முதலில் வக்த்ருவைலக்ஷண்யத்தாலுண்டான ஏற்றம் நிரூபிக்கப்படுகிறது.) ஸாக்ஷாத் தத்வமான எம்பெருமான் தானே சொன்னது கீதை; அத் தத்துவத்தை உள்ளபடி கண்ட ஆழ்வாரருளிச் செய்தது திருவாய்மொழி. [கீதையில் *தத் வித்தி ப்ரணிபாதேந* என்கிற ச்லோகத்தில் தத்வதர்சிகளின் உபதேசத்தை எம்பெருமான் தானே புகழ்ந்து கூறியுள்ளதனால் தத்வதர்சிகளில் தலைவரான ஆழ்வாருடைய திருவாக்கே மிகச் சிறந்ததென்பது நிர்விவாதமென்க.]

191. [அது ஐவரை வெல்வித்து] கீதை அவதரித்ததற்கு எது காரணம்? திருவாய்மொழி அவதரித்ததற்கு எது காரணம்? என்று ஆராயுமளவில் அவதார ஹேது வைலக்ஷண்யத்தாலும் திருவாய்மொழியின் ஏற்றம் அறுதியிடப்படலாகும். கீதை அவதரித்ததன் காரணம் ஸுப்ரஸித்தமே; ராஜ்யத்தை விரும்பிச் சரணம் புக்குநின்ற பாண்டவர்கள் ஐவரையும் வெற்றி பெறுவிக்கவேண்டி நேர்ந்தது; அதற்காகப் பாரத யுத்தம் ஸஜ்ஜம் செய்யப்பட்டது; அப்போது அர்ஜுனன் யுத்தஞ் செய்யமாட்டேனென்று நின்றான்; அன்னவனை யுத்தத்திலே மூட்டி ஐவரை வெல்வித்து அவர்கட்கு எதிரிகளான நூற்றுவரையும்

பொடிபடுத்த வேண்டியதாக நேர்ந்தது; இதற்காகவே கீதை அவதரித்தது; இனி, திருவாய்மொழி அவதரித்தபடியோ வென்னில், "தோற்றோம் மட நெஞ்ச மெம்பெருமான் நாரணற்கு" என்று எம்பெருமான் பக்கலிலே எல்லாரும் நெஞ்சு பறியுண்டு போம்படியாக "முடிப்பான் சொன்னவாயிரம்" என்கிறபடியே ஸ்வரூப விரோதிகளில் ஸங்கத்தை முடிப்பதற்காகவே திருவாய்மொழி அவதரித்தது. ஆக, இரண்டும் மோக்ஷ சாஸ்த்ரமேயாகிலும் அவதரிக்கிறபோது மோக்ஷார்த்தமாகவன்றிக்கே அங்யார்த்தமாக அவதரித்த ஏற்றமுண்டு திருவாய்மொழிக்கு என்றதாயிற்று.

192. [அங்கு நம்பி சரணென்று.] (உபக்ரமோப ஸம்ஹார பரக்ரியையால் வந்த வைபவங் கூறுவது.) கீதையில் உபதேசம் தொடங்குகிறபோது "நாந்தகமேந்திய நம்பி சரணென்று தாழ்ந்த தனஞ்சயற்காகி" என்கிறபடியே தாழ்ந்து "சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்." என்ற அர்ஜுநனுடைய அநுவர்த்தனங் கண்டு ப்ரீதியோடே ஆரம்பம் செய்யப்பட்டது; முடிவிலோ வென்னில் அப்ரீதியோடே தலைக்கட்டிற்று. (உத்தர கீதையில்) "நஸ்ருமச்ரத்ததாநோஹி துர்மேதாச் சாவஜி பாண்டவ!, அபுத்த்யா யந்ந ஜாநீஷே தந்மே ஸுமஹதப்ரியம்." என்று அர்ஜுனன் பக்கல் அவதானமில்லாமை கண்டு இங்ஙனே பேசுகையாலே அப்ரீதியோடே தலைக்கட்டினமை அறியத் தக்கது. திருவாய்மொழியிலோ வென்னில், விமுகரைக்குறித்துப் பரமக்ருணையாலே உபதேசிக்கையாலே உபதேசத் தொடக்கத்திலே "ஏ பாவம்! பரமே!" என்று ஆரம்பம் செய்யப்பட்டது. 'ஐயோ! இது என்ன கஷ்ட காலம்! இப்பாவிகளுக்கு உபதேசம் செய்ய வேண்டும்படி நமக்கு நேர்ந்ததே!' என்று ஆரம்பம் செய்கையாலே அப்ரீதியோடே உபதேசாரம்பமாயிற்று. அவ்வுபதேசங் கேட்டு உலகமாகத் திருந்துகையாலே அங்ஙனம் திருந்தினவர்களைக் கண்டு "பொலிக பொலிக பொலிக" என்று மங்களாசாஸநம் பண்ணி "உற்றேனுகந்து பணி செய்து" என்னும்படி ப்ரீதியோடே தலைக்கட்டிற்று. இத்தால், கீதை கேட்டு அர்ஜுநன் யுத்தஞ் செய்ய வித்தனைவத்தினை யொழிய வித்த தர்மபர்யந்தம் உபதேசத்தின் பலன் வித்திக்கப் பெறுமையாலே உபதேசம் ஸபலமானதில்லை அங்கு; அது ஸபலமானது இங்கே என்றதாயிற்று.

193. [அதில் வித்த தர்ம விதி.] (அர்த்த கௌரவத்தால் வந்த வைபவஞ் சொல்லுதல்.) கீதையில் "மாமேகம் சரணம் வ்ரஜ." என்று வித்த தர்மத்தைப் பற்றும்படியாக விதித்தவத்தினையே யுள்ளது; திருவாய்மொழியிலோ வென்னில்; "திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்மினே" என்று விதியும் "அடிக் கீழமர்ந்து புகுந்தேனே" என்று அநுஷ்டாநமும் ஆக இரண்டும்

காணலாம்: இத்தால், விதியொன்றையே பிரதிபாதிக்குமதான கீதையிற்காட்டிலும் விதி அநுவட்டானம் என்ற விரண்டையும் பிரதி பாதிக்குமதான திருவாய்மொழிக்கே ஏற்றமுண்டென்ற தாயிற்று.

194. [பகவன் ஞான விதி.] (கீதைக்கும் ஏற்றம் ஆழ்வாரங் கீகாரத்தாலே யென்னல்) அந்த கீதைக்கு உத்கர்ஷமும் இவரங்கீ காரத்தாலே யென்று அறியக் கடவது. எங்ஙனே யென்னில்; "அந்தமிலாதியம் பகவன் வணக்குரைடத்தவ நெறிவழி நின்று" என்றும், "ஞானவிதி பிழையாமே" என்றும் "பண்டே பர மன் பணித்த பணிவகையே—கண்டேன் கமல மலர்ப்பாதம்" என்றுமுள்ள பாசுரங்களில் பரம வைதிகரான இவ்வாழ்வார் அந்த கீதையை ப்ரமாணமாகக் கொள்ளுகையாலே யாயிற்று அது தனக்கும் உத்கர்ஷ முண்டாயிற்று. [புத்தமுனியாயும் கபில முனியாயும் சொன்ன பௌத்த சாஸ்த்ரமும் ஸாங்க்ய சாஸ்த்ர மும் அவன்தான் அருளிச் செய்ததாயிருக்கச செய்தேயும் வைதி கர்கள் அவற்றைப் பரிக்ரஹியாமையாலே யன்றே அவை அப்ர மாணமாயின.]

195. [வேத வேத்ய வைதிக.] (உபதேச வைசால்யத்தாலும் திருவாய்மொழி யாசிரியரான ஆழ்வார்க்கு ஏற்றமுண்டென்னல்.) ஹிதாநுசாஸநபரமான வேதம் உபதேசிப்பதும், வேதவேத்ய னான எம்பெருமான் உபதேசிப்பதும், வைதிகர்களான மஹர்ஷி களின் உபதேசமும் தத்வஹித புருஷார்த்தங்களில் அறிவில்லா தவர்களான ஸம்ஸாரிகள் மாத்திரத்திலேயாம்; அறிவிலிகளான ஸம்ஸாரிகளும், எம்பெருமானே உபாயமென்று கடைப்பிடித் திருக்கும் ஞானிகளும், எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை ஸாக்ஷாத்கரித்து பகவதநுபவமே போது போக்கா யிருக்கும் ஜ்ஞாந விசேஷயுக்தர்களும், ஸர்வஜ்ஞனை ஸர்வேச் வரனும் ஆக எல்லார்க்கும் வேண்டும் அம்சங்களை யுபதேசித்து ஆழ்வார் திருத்துவர்.

196. [அறியாதார்க்கு.] (ஆழ்வாருடைய உபதேச விஷயங் களின் விவரணம்) கீழ்ச் சொன்ன நான்கு வகைப்பட்ட அதிகாரிகளுக்கும் ஆழ்வார் அறிவிக்க வேண்டிய அர்த்த விசேஷங்கள் கூறப்படுகின்றன;—(1) எம்பெருமானைப்பற்றின ஞானம் அடியோடு இல்லாத ஸம்ஸாரிகளுக்கு "அஃதே உய்யப் புகுமாறு" என்று திருநாரணன் தாளாகிறவதுவே உஜ்ஜீவிப்ப தற்கு உபாயமென்று ஸம்ஸார நிஸ்தரணோபாயம் உபதேசிக்க லாகிறது; (2) "அக்கரையென்னு மனத்தக்கடலுளழுந்தியுன் பேரருளால் இக்கரையேறி யினைத்திருந்தேனை" என்று ஸம்ஸா ரக்கடலில் அழுந்துகிறவர்களுக்கு 'எம்பெருமானொருவனே உபாயம்' என்கிற ஞானம் பிறந்தால் இங்கேயிருக்கச் செய்தே அக்கரை இக்கரை யென்னுமப்படி ஸம்ஸாரம் தூரத்திலுள்ளதாய்

பரமபதம் ஸந்நிஹிதமாம்படி யிருக்கையாலே எம்பெருமானெரு வனே உபாயமென்கிற வ்யவஸாயத்தை யுடையராய் ஸ்வப்ரவ்ருத்தியில் நிவ்ருத்தரா யிருக்கிறவர்களுக்கு அந்த வ்யவஸாயம் குலைந்து பதற்றமுண்டாம்படி "முகில்வண்ணவானத்து இமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே" என்னும்படியான ப்ராப்ய வைலக்ஷண்யம் உபதேசிக்கலாகிறது; (3) ஆற்றிலே யிழிந்து போகாநிற்கச் செய்தே நிலைக்குமிடமும் நிலையாதவிடமும் அறியாதாரைப்போலே, ப்ராப்யத்தைபபெற்று அநுபவியாநிற்கச் செய்தே, அதில் நிலை கொள்ளலாமிடமும் ஆழங்கால் படுத்து மிடமும் அறியாதவர்களுக்கு "செஞ்சொற்கவிகாளுயிர்காத்து ஆட்செய்மின்" என்று சிலகுணமாகிற ஆழங்கால் உபதேசிக்க லாகிறது; (4) ஸம்ஸாரஸாகரத்தைக் கடத்தி அக்கரைப்படுத்து மவனை எம்பெருமானுக்கு "மங்கவொட்டு உன்மாமாயை" என்கிற பாட்டிற்படியே இருபத்திரண்டு தத்துவமும் உபதேசிக்கலாகிறது. [ஆக, அறிவு கேடரை உபாயத்திலே மூட்டுவர்; உபாயத்திலே ஊன்றுவாரை உபேயபரராக்குவர்; உபேயத்திலே அவகாஹிக்குமவர்களுக்கு ஆழங்கால் அறிவிப்பர்; ப்ராப்தியை உண்டாக்குமவனுக்கு தியாஜ்யத்தை யறிவிப்பர் என்றதாயிற்று.]

197. [அவன் முனிந்தார்க்கு.] (கீழ்ச் சொன்ன நால்வர்க்கும் அந்த நான்கு அர்த்தங்களையு முபதேசிப்பதற்கான ஹேதுக்களோடே அதுதானே மற்றொருபடியாக அருளிச் செய்யப்படுகிறது.) (1) எம்பெருமானுடைய முனிவுக்கு [நிக்ரஹத்திற்கு] இலக்கான ஸம்ஸாரிகளுக்கு "ஞானப்பிரானை யல்லாலில்லை நான்கண்ட நல்லதுமே" என்று தாம்கண்டதை இவர்காட்டுவர். (2) "எங்ஙனேயோ வண்ணமீர்காள்! என்னை முனிவதுநீர்" என்கிறபடியே தம்மை முனிகின்ற [கோபிக்கின்ற] தாய்மார்க்கு "என்னெஞ்சிலுள் நோக்கிக்காணீர்" என்று தம்முடைய உட்கண்ணைக் காட்டுவர். (அதாவது—ப்ராப்ய வைலக்ஷண்யாவகாஹியான என்னெஞ்சாலே பார்க்கமாட்டீர்களோவென்று தம்முடைய உட்கண்ணென ப்ராப்ய வைலக்ஷண்ய ஜ்ஞானத்தையுண்டுபண்ணுவர் என்றபடி.) (3) "செஞ்சொற் கவிகாள் உயிர்காத்து ஆட்செய்மின்" என்று—புறம்பு ஒருவர் காணுததும் காண வல்லவர்களான கவிகளுக்கு, 'அவனுடைய சீலகுணத்திலே கண்வையாதே கொள்ளுங்கோள்' என்று கண்மாறுமிடம் காட்டுவர். (4) தம்மிடத்தில் அநுராகத்தாலே தேஹ தோஷம் காணமாட்டாத எம்பெருமானுக்கு "மங்கவொட்டு உன்மாமாயை" என்று ப்ரக்ருதி தோஷம் காட்டுவர். [ஸம்ஸாரிகள் எம்பெருமானுடைய நிக்ரஹத்திற்கு இலக்காயிருந்தபடியாலே அவர்களுக்கு அந்த நிக்ரஹத்தை மாற்றுவதற்காக உபதேசிக்க வேண்டியதாயிற்று; தாய்மார்கள் பகவத்விஷய வைலக்ஷண்யம் அறியமாட்டாமல் தம்மை முனிந்தபடியாலே அவர்களுக்கு உப

தேசிக்கவேண்டியதாயிற்று ; செஞ்சொற்கவிகள் எம்பெருமானுடைய சிலகுணமறியாமல் பகவத்விஷயத்தில் இழியப்புகுந்தபடியாலே அவர்களுக்கு உபதேசிக்கவேண்டியதாயிற்று ; எம்பெருமான் ஸர்வஜ்ஞனாயிருந்தும் தம்முடைய தேஹதோஷம் காணுமையினாலே அவனுக்கு உபதேசிக்கவேண்டியதாயிற்று என்றவாறு.]

198. [ஸாதநஸாத்யஸ்த.] (ஆழ்வார் அதிகமாக உபதேசிப்பது ஸம்ஸாரிகளுக்கும் எம்பெருமானுக்குமே யென்பது.) (அறிவிலிகளான ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்குமாபோலே கீழ்ச்சொன்ன எல்லார்க்கும் பலகாலும் உபதேசிப்பரோ வென்ன ; அதற்கு விடை கூறப்படுகிறது) உபாயமும் உபேயமும் கைபுகுந்திருக்கப் பெற்றவர்களுக்கு அறிவிக்கவேண்டுவது மிகவும் சிறிதேயாதலால் அவர்களிருவரையும் விட்டு, கர்ம பரவசர்களாய் உபாயோபேயங்கள் இன்னதென்றறியாதே கலங்கிநிற்கிற ஸம்ஸாரி சேதநர்களுக்கும், ப்ரேமபரவசனாய் அவற்றில் கலங்கிநிற்கிற ஈச்வரனுக்கும் பலகாலும் உபதேசம் செய்வதுண்டு. [மூலத்தில், "ஸாதந ஸாத்யஸ்தமத்யஸ்தரை" என்பதற்கு "ஸாதநஸ்தரென்ன, ஸாத்யஸ்தரென்ன, மத்யஸ்தரென்ன ஆகிய இவர்களை" என்று பொருள் அன்று. "ஸாதநஸ்ருதம் ஸாத்யஸ்தருமாகிற மத்யஸ்தர்களை" என்பது பொருள். "அஜ்ஞர், ஜ்ஞாநிகள், ஜ்ஞாந விசேஷயுக்தர், ஸர்வஜ்ஞன்" என்று உபதேச விஷய பூதர்களாகச் சொல்லப்பட்ட நால்வருள் இரண்டாமவரும் மூன்றாமவரும் இடையிலே யுள்ளவர்க ளாதலால் அவர்களை இங்கு மத்யஸ்தர்க ளென்னப்படுகின்றனர் ; அவர்களுள் ஒருவர் ஸாதநஸ்தர் ; மற்றொருவர் ஸாத்யஸ்தர் ; தாய்மார் உபாயாத்யவஸாய தசையிலே நின்று ஸ்வயத்ந பீருக்களாய் ப்ராப்யவைலக்ஷண்ய மறியாதே இத்தனை அதிப்ராவண்யம் தகாதென்று ஹிதஞ் சொல்லுகிறவர்க ளாகையாலே அவர்கள் ஸாதநஸ்தர் என்னத் தகுதியுடையார் ; "உயிர்காத்து ஆட்செய்மின்" என்று உபதேசிக்கப்படுகிற செஞ்சொற் கவிகள் ப்ராப்ய வைலக்ஷண்யத்தை நன்கறிந்து அதன் அநுபவத்தில் இழிந்தவர்க ளாகையாலே அவர்கள் ஸாத்யஸ்தர் என்னத் தகுதியுடையார். ஆகவே, ஸாதநஸ்தரும் ஸாத்யஸ்தரு மாகிற மதயஸ்தர்களை—என்று பொருள் கொள்க.]

199. [கதிர்ஞான மூர்த்திக்கு] (ஸம்ஸாரிகளுக்கும் ஸர்வேச்வரனுக்கும் பலகாலு முபதேசிக்கைக்கு ஹேது இன்னதென்பது.) "கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினைப்!" என்கிறபடியே ஸர்வஜ்ஞனை யிருக்கிறவனுக்கு "திண்சக்கரநிழறு தோல்படையாய் உனக்கொன்றுணர்த்துவன் நான்" என்று உபதேசிக்கிறது அவன் விஷயத்திலுள்ள ப்ரேமத்தினாலாகும். "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாகக் கொள்

ளென்று தமழுடும்'' என்று—ஐச்வர்யம்விநாச ஹேதுவாகக்காணு நிற்கச் செய்தே பின்னையும் அத்தை ஸ்வீகரிக்கும்படி தமோ குணம் மேலிடப் பெற்றிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு "நின்கண் வேட்கை யெழுவிப்பன்" என்று தம் உபதேசத்தாலே பகவத் பக்தியை விளைவிப்பது—அவர்களை விடமாட்டாதே திருத்தித் தம்மோடொக்க அவர்களையும் பகவதநுபவபராக்க வேணு மென்கிற ஜ்ஞானத்தாலே.

200. [உயிர்மாய்தல்.] (எந்த வுபதேசத்திற்கும் பரது:க்கா ஸஹிஷ்ணுத்வமே ஹேதுவென்பது.) ஆழ்வார் ஸ்ரீவைச்வரணைக் குறித்து உபதேசிப்பது ப்ரேமத்தாலே யென்றும், ஸம்ஸாரி களைக் குறித்து உபதேசிப்பது ஞானத்தாலே யென்றும் ஏன் சொல்லவேணும்? பரது:க்கம் ஸஹியாமையன்றோ பரோபதே சத்திற்கு முக்கிய காரணம், என்ன; அதுவும் உண்டு எனப்படு கிறது. அதாவது—கீழே ஹேதுவாகச் சொல்லப்பட்ட ஜ்ஞான ப்ரேமங்களிரண்டும் பரது:க்காஸஹிஷ்ணுத்வத்தை யொழிந்தி ராது என்று மூதலிக்கப்படுகிறது. எங்ஙனே யென்னில்; "கொண் டாட்டும் குலம்புனவும் தமருற்றூர் விழுநிதியும் வண்டார் பூங் குழலாளும் மனையொழிய வுயிர்மாய்தல்கண்டு ஆற்றேன்" என் கிற பாசுரத்தில் 'ஸம்ஸாரிகள் பாரிக்கிற பாரிப்பும் முடிந்து போகிறபடியும் கண்டு ஸஹிக்கமாட்டுகின்றிலேன்' என்கை யாலே பரருடைய து:க்கம் ஸஹியாமை ஸம்ஸாரிகளைக் குறித்து உபதேசிக்கைக்கு ஹேதுவாகச் சொன்ன ஜ்ஞானத்திலுமுண்டு: "அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொலாங்கென்று ஆழுமென் னுருயிர்" என்கிற பாசுரத்தில் 'அசுரர்கள் உன்னைவந்து கிட்டி னால் அங்கு என்னுகுமோவென்று என் ஆத்மாவானது வருந்து கின்றது' என்கையாலே பரனை ஈச்வரனுடைய து:க்கம் ஸஹி யாமை அவனைக்குறித்து உபதேசிக்கைக்கு ஹேதுவாகச் சொன்ன ப்ரேமத்திலுமுண்டு.

201. [என்னதுன்னதாவியிலே.] (ஆழ்வார் எம்பெருமானது நினைவாலே அவனுக்கு உயிராகையாலும் அவனுக்கு ஒரு தீங்கு வரப் பொறுக்கமாட்டா ரென்கிறது.) திருவாய்மொழியில் "உன்னதென்னதாவியும் என்ன துன்னதாவியும்" என்ற பாசுரத்தில் 'என்னுடைய ஆவி உன்னது உன்னுடைய ஆவி என்னது' என்கிறார். (அதாவது) என் ஸ்வரூபம் நீ இட்ட வழக்கு. உன் ஸ்வரூபம் நானிட்ட வழக்கு என்றவாறு. "அறிவி லேனுக்கருளாய் அறிவாருயிரானாய்" என்றும் ஆழ்வார் அருளிச் செய்கிறார். 'அறிவாருயிரானாய்' என்பதற்கு 'அறி யாரையுயிராக வுடையவன்' என்கிற பொருளே பொருந்தும்; ஏனென்னில் "ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்ற கீதா ஸ்லோக்தியோடு பொருந்தவேண்டுகையாலே. ஆகவே இவற்றால் ஆழ்வாரை எம்பெருமான் ஆத்மாவாக நினைத்திருக்கிறபடி தெரி

கையாலே அவனுக்கு ஒரு துக்கம் வாப் பொறுக்கமாட்டாதென் பது தெளிவாயிற்று.

202. [இருத்துமென்னாதாய்.] (எம்பெருமானுக்கே சிஷ்ய லக்ஷ்ணை பூர்த்தியுண்டென்று நிரூபித்தல்.) நல்ல சிஷ்யன் ஆசார்ய விஷயத்தில் எவ்விதமாக நடந்துகொள்ள வேணுமோ அவ்விதமாகவே ஆழ்வார் விஷயத்தில் எம்பெருமான் நடந்து கொண்டதாக அருளிச செயல்களினால் விளங்குகின்றது. ஸச்சிஷ்யனவன் ஆசார்யனை அவனுக்கு அடிமதமான ஸ்தலத்திலே வைத்து, அவனுடைய இஷ்டப்படி நடந்து, அவனுடைய திருமேனியிலே சிறந்த விருப்பமுடையனாயிருந்து, ஸகல ஸ்நேஹத்தையும் அவன் பக்கலிலே பண்ணி, வேறு விஷயங்களில் ஸங்கமற்று, தரித்ரன் செல்வம் பெற்றாற் போலேயும் பசியன் சோறு பெற்றாற் போலேயும் விடாய்த்தவன் தண்ணீர் பெற்றாற்போலேயும் மிருந்த அபிநிவேசத்தோடே அவனை யநுபவித்து, தன் ஆத்மாதீயங்களை அவ்வாசார்யனுக்கு ஸமர்ப்பித்து, எல்லாம் செய்தாலும் ஆசார்யன் பண்ணின மஹோபகாரத்துக்கு நேரல்லாமையாலே குறைவாளனாயிருந்து, ஆசார்யன் தன்னுடைய தேஹயாத்ரா பாரமெல்லாம் தன் மேலே பொகட்டிருக்கத் தான் அஃதடங்கலும் சுமந்து, அல்லும் பகலும் அவனைப் பிரியாதேயிருந்து, ஆசார்யன் நிக்ரஹித்துத் தள்ளினாலும் போகாதேயிருந்து, அவனுக்கு அநிஷ்டமாகில் தனக்கு உகப்பானவற்றையும்விட்டு, ஆசாரியன் விதித்தபடியே நடத்துமவனாக இருக்கவேண்டுமென்பது அனைவருமறிந்த விஷயமாகும் ஆழ்வார் விஷயத்திலே எம்பெருமான் நடப்பதுமிப்படியே காண்மின்.

203. [நண்ணுதார் மெய்யில்.] (ஆழ்வார் ஸம்ஸாரிகளுக்கு உபதேசிப்பதற்கு ஹேதுக்கள் இன்னவையென்பது.) அறிவிலிகளான ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கிறவளவில், விரக்தர்களாய் ஆத்ம குணங்கள் நிரம்பியவராய் அணுகிவந்து ஆதரத்தோடு அபேக்ஷிக்குமவர்களுக்கு உபதேசிக்கவேண்டிய அர்த்தங்களை, பகவத் விமுகர்களாய் ப்ரயோஜநாந்தர பரர்களாய், அநுவர்த்திப்பது மில்லாதவர்களான ஸம்ஸாரிகளுக்கு வலியப் பிடித்து உபதேசிப்பானேன்? என்னில்; அதற்குக் காரணம் கூறப்படுகிறது. இப்படி உபதேசிப்பதற்கு மூன்று காரணங்களுண்டு: "ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமான்" என்று நித்ய விபூதியிலுள்ளார்க்குப் போலே லீலாவிபூதியிலுள்ளார்க்கும் அவனோடு ஸம்பந்தம் ஒத்திருக்க இவர்கள் அவனை இழந்து கிடக்கவொண்ணாதென்கிற ஸம்பந்தவுணர்ச்சி ஒரு காரணம். "கண்டு ஆற்றேனுலகியற்கை" என்று இவர்கள் ஸம்ஸாரத்திலே படுகிற அநர்த்தங்கண்டு பொறுக்க மாட்டாமை மற்றொரு காரணம். அவ்வளவேயன்றிக்கே "அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்கிறபடியே எம்பெருமான் கைவிட்டவர்களையும்

திருத்தியல்லது நிற்கமாட்டாத கரைபுரண்ட காருண்யம் மற்றொரு காரணம்.

204. [தாய்க்கும் மகனுக்கும்.] (ஆழ்வாரைப் போலே உபதேசிப்பவர்கள் மற்றுஞ்சிலரு முண்டென்னல்.) (1) ஸர்வலோக ஜநநியான லக்ஷ்மீபிராட்டி, (2) பிள்ளையான ப்ரஹ்லாதாழ்வான், (3) தம்பியான விபீஷணாழ்வான், (4) ப்ரக்ருதரான நம்மாழ்வார், (5) "மாறனடி பணிந்துய்ந்த விராமாநுசன்" என்று ஆழ்வாரை அடி பணிந்து உய்ந்தவராக ப்ரஸித்தரான எம்பெருமானார் ஆகிய இவர்களுக்கே கிழ்ச்சொன்ன மூன்றும் உண்டு. [அபேக்ஷையின்றிக்கே காருண்யமே கொண்டு உபதேசித்தவர்கள் இந்த ஐவரேயென்றபடி.]

205. [க்யாதிலாப.] (இப்படி விழுகரான ஸம்ஸாரிகளைக் குறித்து ஆழ்வார் உபதேசித்தவிது ஸபலமாயிற்றே வென்னில்.) தமக்கு ஒரு ப்ரஸித்தியுண்டாகவேணு மென்றுவது, தமக்கொரு லாபமுண்டாகவேணு மென்றுவது, தம்மைச் சிலர் பூஜிக்கப்பெறவேணு மென்றுவது அபேக்ஷையில்லாதவர் ஆழ்வார்; இப்படிப்பட்ட விவர் சேஷத்வபரிமள யுக்தமான ஆத்ம புஷ்பங்களைத்தேடி * ஆட்செய்தாழிப்பிராஜ்ஞர் சேர்ந்தவன் * என்கிறபடியே கைங்கர்ய ரூபமாக் உபதேசிக்கையாலே உலகமெல்லாம் திருந்திற்று; அதனால் ஆழ்வாருடைய மூன்று இழவுகள் தீர்ந்தனவாயின: (எங்ஙனே யென்னில்;) "திருக்குருகூரதனை உளங்கொள் ஞானத்துவைகம்மின் உம்மையுய்யக்கொண்டு போகுறிலே" என்கிற பாசுரத்தை நோக்குமிடத்தில், ஸம்ஸாரிகள் உஜ்ஜீவிக்கப் பெறவில்லையே யென்கிற இழவு ஆழ்வார்க்கு இருந்ததாகத் தெரியவருகிறது; அந்த இழவும் தீர்ந்ததாயிற்று. "இழந்த வெம்மாமைத் திறத்துப்போன என்னெஞ்சிணருமங்கே யொழிந்தார், உழந்தினியாரைக்கொண்டு என்னுசாதேகா?" என்கிற பாசுரத்தை நோக்குமிடத்தில் தமக்கு உசாத்துணையில்லாமையால் இழவு உள்ளதாகத் தெரிகின்றது; அதுவும் தீர்ந்ததாயிற்று. "வாளரம் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்கிற பாசுரத்தை நோக்குமிடத்தில் எம்பெருமானுடைய ஸௌகுமார்ய மறிந்து பரிகைக்கு ஒருவருமில்லையே யென்கிற இழவு இருந்ததாகத் தெரிகின்றது: அதுவும் தீர்ந்ததாயிற்று. தம்முடைய உபதேசபலமாக எல்லாரு முஜ்ஜீவித்துத் தமக்கு உசாத்துணையாயுமிருந்து அவனுக்கு மங்களாசாஸநமும் பண்ணுகையாலே மூன்று இழவுகளும் தீர்ந்தனவாகக் குறையில்லையே.

206. [ப்ரஹ்மநிஷ்டரும்.] (ஆழ்வாருடைய நிர்ஹேதுக கருணையை நிலைநாட்டுதல்.) ஆழ்வாருடைய உபதேசம் ஸபலமாயிற்றென்று கொள்ளுமளவில், இவரிடத்தில் உபதேசம் கேட்ட சிஷ்யர்கள் [ஸம்ஸாரிகள்] சாஸ்த்ரமுறையின்படியே உபஸத்தி

பண்ணிரர்களென்றும், இவரும் அந்த உபஸத்திகளிரல் ப்ர ஸங்நராகி சாஸ்த்ரம் விதித்த கட்டளையிலே நின்று உபதேசித்தா ரென்றும் கொள்ளலாமே; அப்படியல்லாமல் (203, 204 சூர் ணிகைகளிற்படியே) * ரூலத்தார் பந்த புத்தியும் அநர்த்தங் கண்டு ஆற்ருமையும் மிக்க க்ருபையுமடியாகவே உபதேசித்தா ரென்றும், ஸம்ஸாரிகள் விமுகர்களாகவே யிருந்தார்களென்றும் ஏன் கொள்ளவேறுமென்னில்; இங்ஙனே கொள்ளவேண்டிய ஆவச்யகதைக்கு நிதாநம் சொல்லுகிறது.—(1) ஆழ்வார் ப்ரஹ்ம நிஷ்டராகில் * ஏபாவம் பரமே * என்கிற பாசுரம் சேராது. (2) ஆழ்வார்பக்கலில் உபதேசம் கேட்டவர்கள் ஸம்வத்ஸரவாஸி களாகில் * பயனன்ருகிலும் பாங்கலராகிலும் செயல் நன்ருகத் திருத்திப்பணிகொள்வான் * என்கிற பாசுரம் சேராது.—(என்று, இங்ஙனே யோஜித்துககொள்ளவேணும்.)

207. [மெய்ந்நின்ற மங்கவொட்டுக்கு.] (பரோபதேச தசை யிலும் பகவதநுபவம் இடையறுதென்னல்.) ஆழ்வார் பரோப தேச பரராடளவில் இவர்க்கு (அக்காலத்தில்) பகவதநுபவம் இடையற்றதாகாதாவென்னில்; ஆகாது. *மெய்ந்நின்ற கேட் டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே * என்றது முதல் * மங்கவொட்டுன்மாயரையை * என்கிறதளவாக நடுவுள்ள நான்கு திவ்யப்ரபந்தங்களும், அநுபவமுள்ளே செல்லாநிற்கச்செய்தே யுண்டான பரோபதேசம். [ஆழ்வார் தமக்கு அநுபவகர்ப்பமான உபதேசமும் உபதேச கர்ப்பமான அநுபவமுமாய்ச் செல்லும் என்றிறே நம்முதலிகள் அருளிச் செய்வது. ஆகையால் இவர்க்கு அநுபவவிச்சேதம் ஒருகாலுமில்லை.]

208. [இவற்றுக்கு மந்த்ரவித்யநு.] (ஆழ்வாருடைய நான்கு ப்ரபந்தங்களும் ரஹஸ்யத்ரயார்த்த ப்ரதிபாதகமென்னல்.) நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் நான்குக்கும் திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகமாகிற ரஹஸ்யத்ரயத் தோடே சேர்த்தி. அதாவது—ரஹஸ்யத்ரயத்தில் ஸங்க்ரஹமாகவும் நுட்பமாகவும் காட்டப்பட்டிருக்கின்ற பொருள்களே இந்த நான்கு ப்ரபந்தங் களில் விரிவாக வுரைக்கப்படுகின்றன வென்றவாறு. [" மந்த்ர வித்யநுஸந்தான ரஹஸ்யங்களோடே " என்ற மூலத்திற்கு— மந்த்ரரஹஸ்யமென்ன, வித்யரஹஸ்யமென்ன, அநுஸந்தான ரஹஸ்யமென்ன இவற்றோடே என்று பொருள். மந்த்ரரஹஸ்ய மென்றது திருமந்த்ரமாகிற ரஹஸ்யம் என்றபடி. வித்யரஹஸ்ய மென்றது ஸித்தோபாய வரணத்தை ஸாங்கமாக விதிக்கிற சரம ச்லோகம் என்றபடி. அநுஸந்தாந ரஹஸ்யமென்றது உபாய வரணத்தையும் உபேய ப்ரார்த்தனையையும் ஸக்ரமமாக ப்ரகா சிப்பியா நின்றுகொண்டு காலக்ஷேபத்துக்கும் போகத்துக்குமாக ஸாரஜ்ஞராலே ஸதா அநுஸந்தானம் செய்யப்படும் த்வயம் என்றபடி.]

209. [அளிப்பானடியேன்.] எந்த ப்ரபந்தத்திற்கு எந்த ரஹஸ்யத்தோடே சேர்த்தியென்னில், அது நிரூபிக்கப்படுகிறது. திருவிருத்தமும் திருவாசிரியமும் சேர்ந்து திருமந்த்ரார்த்த விவரணமாகின்றது. ப்ரணவத்தையும் நமஃ பதத்தையும் விவரிக்கிறது திருவிருத்தம். நாராயணைய என்பதை விவரிக்கிறது திருவாசிரியம். சரமச்லோகத்தை விவரிக்கிறது பெரிய திருவந்தாதி.

210. [த்வயார்த்தம்] (திருவாய்மொழி த்வயார்த்த விவரணமென்பது.) சரமப்ரபந்தமான் திருவாய்மொழியானது த்வயத்தின் பொருளை ப்ரதிபாதிக்கிறதென்னுமிடம் விரிவாக உபபாதிக்க வேண்டுகையாலும், இதைப்பற்றித் தம்முடைய திருத்தமையனரான பிள்ளைலோகாசார்யர் ஏற்கெனவே ஒரு ப்ரபந்தம் இட்டருளியிருக்கையாலும் அதிலே கண்டு கொள்வது என்கிற திருவுள்ளத்தோடே "த்வயார்த்தம் தீர்க்க சரணகதி யென்றது ஸாரஸங்க்ரஹத்திலே" என்று ராயிற்று.

211. [மூன்றில் சுருக்கிய] (திருவாய்மொழிக்கு மற்றும் சில அர்த்தயோஜனைகளுமுண்டென்னல்.) திருமந்த்ரத்திலும் சரமச்லோகத்திலும் ஸங்க்ரஹமாகக் கூறப்பட்ட அர்த்த விசேஷங்களை த்வயத்தில் விவரிப்பதுபோலே, திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதியாகிற மூன்ன பிரபந்தங்கள் மூன்றிலும் சுருக்கமாகச் சொல்லப்பட்ட அர்த்த பஞ்சகத்தைத் திருவாய்மொழியில் இருபது பதிகங்களிலே விசதமாகவுரைத்து, மற்றையெண்பது பதிகங்களாலும் அது தன்னையே விஸ்தரிக்கிறபடியினால் அர்த்த பஞ்சகத்தையும் திருவாய்மொழிக்கு ப்ரமேயமாக நிர்வஹிக்கிற புடையொன்றுண்டு. அந்த ஐந்து அர்த்தங்களிலுள்ளும் ப்ரதானமான உபாயோபேயங்களிரண்டையுமே இதற்கு ப்ரமேயமாக நிர்வஹிக்கிற புடையுமுண்டு. அவ்விரண்டிலுள்ளும் உபேயமொன்றையுமே இதுக்கு ப்ரமேயமாக நிர்வஹிக்கிறபுடையுமுண்டு.

212. [ரஹஸ்யத்துக்கோரெழுத்தும்.] இனி, ப்ரதம ப்ரபந்தமும் சரமப்ரபந்தமுமான திருவிருத்தம் திருவாய்மொழிகளிலுடைய ஸங்க்ரஹங்களான முதற்பாட்டுக்களில் பிரதிபாதிக்கப்பட்டுள்ள அர்த்த விசேஷங்கள் பலவும் நிரூபிக்கப்படுகின்றன—ரஹஸ்யத்துக்கு ஓரெழுத்தும், அதுக்கு ஓருருவும் போலேயானவற்றிலே என்கிற மூலத்திற்குப் பொருளாவது—; ரஹஸ்யத்துக்கு—திருமந்த்ரமாகிற ரஹஸ்யத்துக்கு, ஓரெழுத்துப்போலே—"ஓமித்யேகாக்ஷரம்" என்று ஓரெழுத்தாயிருக்கிற ப்ரணவம் எப்படி ஸங்க்ரஹமாயிருக்கிறதோ, அப்படியும்; அதுக்கு—அந்த ஏகாக்ஷரமான ப்ரணவத்துக்கு, ஓருருவும்போலே—ஓர் அவயவமாயிருக்கிற அகாரம் எப்படி ஸங்க்ரஹமாயிருக்கிறதோ அப்படியும்; ஆனவற்றிலே—நூறுபாட்டுக்கு ஸங்க்ரஹமாயிருக்கின்ற

* பொய்ந்நின்ற ஞானத்திலும், ஆயிரம்பாட்டுக்கு ஸங்க்ரஹமா யிருக்கின்ற * உயர்வறவுயர் நலத்திலும் என்றபடி.

மேற்குறித்த முதற்பாட்டுக்களிரண்டிலும் அர்த்த பஞ்சகம் ஸங்க்ரஹேண ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றமை காண்க. அவ்வளவேயுமல்லாமல், அவித்யாதிஸ்வரூப ஸ்வபாவம் ஆத்மேச்வர பந்தம் ரக்ஷணக்ரமம் குணயோகம் விக்ரஹயோகம் விபூதி யோகம் தத்யாபிமாகம் உபதேச விஷயம் அந்யாபதேச ஹேது இவை முதலான விஷயங்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கின்றமை காண்க. (இவை நமது விரிவுரையிலே பரக்கக் காண்க.)

213. [அடிதொழுதெழு....] (மங்களாசரணமும் உண்டென்று காட்டுதல்.) நூல்கள் இடையூறின்றித் தலைக்கட்டுதற்காகவும், மிக்க காமதமின்றி விரைவில் நிறைவேறுதற்காகவும் பிரபந்தத் தொடக்கத்திலே ஆசீர் நமஸ்கார வஸ்துநிர்த்தேசங்களாகிற மங்களாசரணம் அனுட்டிப்பதொரு முறைமையுண்டு; ஆழ்வார் 'நாம் ஒரு ப்ரபந்தம் பண்ணவேணும்' என்று கருதியிருந்து நிருமித்ததன்றிக்கே * நிரம்பினவேரி நெளிக்குமா போலே நிமிகிறவாய்கரைமிடைந்து புறப்பட்ட சொற்கள் இவர் பாசுரத் தாலே லோகத்தைத் திருத்தத் திருவுள்ளம்பற்றின எம்பெருமா னுடைய நினைவாலே ஸகல லக்ஷண ஸம்பந்நமாய்த் தலைகட்டின ப்ரபந்தமாகையாலே இந்த மங்களாசரணமும் கோல்விழுக்காட் டாலே பலித்தது. எங்ஙனே யென்னில்; * துயரறுசுடரடி * என்பதனால் வஸ்துநிர்த்தேசரூபமான மங்களம்; * தொழுது * என்பதனால் நமஸ்கார ரூபமங்களம்; * எழு * என்பதனால் ஆசீஸ் எனப்படும் மங்களம்.

214. [சாதுசனம்நன்னு.] (திருவாய்மொழி பத்துப் பத்தாக அவதரித்தவழகை நிரூபித்தல்.) திருவாய்மொழி பத்துப் பத்தாக அவதரித்திருப்பதை நோக்கினால் எம்பெருமான் தசாவதாரங்கள் செய்ததுபோலே இதுவும் இங்ஙனே பத்து அவதாரங்கள் செய் ததோ! என்னலாம்படியிராநின்றது. இவ்வளவுமாத்திரமேயன்று; எம்பெருமானுடைய அவதாரங்களுக்கு என்ன என்ன ப்ரயோஜ னங்களோ அந்த ப்ரயோஜனங்களெல்லாம் திருவாய்மொழியின் ப்ராதுர்ப்பாவத்திற்குழுள்ளன—என்னுமிடம் ஆழ்வா ருருளிச் செயல்களேயே கொண்டு வெகு அழகாக நிரூபிக்கப்படுகிறது.

215. [ஐந்நூறொடொன்பதோடு.] திருவாய்மொழியில் ஆங் காங்கு நிகமனப்பாசுரங்களில் பலவகையான நிர்த்தேசங்கள் காணப்படுகின்றன. "குருகூர்மாறன் சொல்லாயிரத்துள் ஐந்நூ றைடைந்தும் வல்லார்", என்று ஓரிடத்திலுள்ளது. "தென் குருகூர்ச் சடகோபன் சொல்லாயிரத்துள்ளிவை, ஒன்பதோ டொன்றுக்கும்" என்று ஓரிடத்திலுள்ளது. * "பாடலோ ராயிரத்துள் இவையுமொருபத்தும்" என்றுப் போலே 'ஒரு பத் தும் ஒரு பத்தும்' என்றே பலவிடங்களில் வருவதுண்டு;

"நூறே சொன்ன வோராயிரம்" என்றும், [பத்து நூற்றுளிப் பத்து என்றவிடத்தில்] பத்து நூறு என்றுமுள்ளது. * தெரியச் சொன்ன வோராயிரம் * மிக்க வோராயிரம் * அவாவிலந்தாதிகளா லிவையாயிரமும் * என்றுமுள்ளது. இப்படி வகைவகையாகக் கூறுவதற்கெல்லாம் ஒவ்வொரு அபிப்ராய விசேஷமுண்டு. அவை ஆழ்ந்து ஆராய்ந்து அறியத்தக்கன.

216. [பாட்டுக்கு க்ரியையும்.] (ஒவ்வொரு சதகத்திற்கும் உபதேச பரமான பதிகம் பிரதானமென்னல்.) ஒரு செய்யுள் இருந்தால் அதிலே வினைமுற்று ப்ரதானமாயிருக்கும்; க்ரியையோடே தலைக்கட்ட வேண்டுகையாலே. ஆகவே பாட்டுக்கள் தோறும் க்ரியாபதம் ப்ரதானமாயிருக்கு மென்னத்தட்டில்லை. ஒவ்வொருபதிகத்திலும் ஒவ்வொருபாட்டு ப்ரதானமாயிருக்கும். அதாவது, * அஞ்சிறையமடநாராய் என்கிற பதிகத்திற்கு அபராதஸஹத்வம் என்கிற குணம் ப்ரமேயம் என்றால் "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்கிற பாசுரத்தில் நோக்காக அந்தப்ரமேய நிஷ்கர்ஷம் பண்ணுகையாலே, இப்படி ஒவ்வொரு பதிகத்திற்கும் ஒவ்வொரு பாசுரம் உயிர் நிலையாயிருக்கும். இதுபோலவே நூறுபாட்டுக்குப் பரோபதேசபரமான பத்துப்பாட்டுக்கள் ப்ரதானமாயிருக்கும்.--செய்யுள்களுக்கு வினைமுற்றில் நோக்காயிருப்பதுபோலவும், பதிகத்திற்கு நிதானஞ் சொல்லு மொருபாட்டிலே நோக்காயிருப்பதுபோலவும், நூறு பாட்டுக்குப் பரோபதேசபரமான பத்துப்பாட்டிலே நோக்காயிருக்குமென்றதாயிற்று.

முதற்பத்தில்—வீடுமின்முற்றவும்.
இரண்டாம்பத்தில்—கிளரொளியிளமை.
மூன்றும்பத்தில்—சொன்னால் விரோதம்.
நாலாம்பத்தில்—ஒன்றுந்தேவு.
அஞ்சாம்பத்தில்—பொலிகபொலிக.
ஆறும்பத்தில்—நல்குரவுஞ்செல்வும்.
ஏழாம்பத்தில்—இன்பம்பயக்க.
எட்டாம்பத்தில்—எல்லியுங்காலையும்.
ஒன்பதாம்பத்தில்—மாலேநண்ணி.
பத்தாம்பத்தில்—கண்ணன்கழலிணை.

(நாலாவது ப்ரகரணத்தில் ஒவ்வொரு சூர்ணிகையிலும் இவ்வர்த்தம் விசதமாகும்.)

217. [பகவத் பக்தபரங்கள்.] (பாகவதபரங்களான திருவாய்மொழிகளுக்குத் தாத்பர்யமின்னதென்னல்.) எம்பெருமானைப் பற்றின ஸ்துதியாக ப்ரவ்ருத்தமான திருவாய்மொழியாயிரத்தில் * பயிலுஞ்சுடரொளி முதலான பாகவதபரங்களான திருவாய்மொழிகள் பகவதாச்ரயண விதிக்கு சேஷபூதங்கள். அதாவது,

"திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்துய்மினே" என்பது முதலான பாசுரங்களிலுல் விதிக்கப்படுகிற பகவதாச்ரயணமானது பாகவதர்களீள யடிபணிந்தாலல்லது ஸித்திக்கமாட்டாதாகையாலே பகவதாச்ரயணவிதிக்கு இவை சேஷபூதங்களென்கை.

218. [பரத்வகாரணத்வ] ஒவ்வொரு பத்திலும் எம்பெருமானுக்கு இன்ன இன்ன குணம் பிரதிபாதிக்கப்படுகின்றதென்பதும், அந்தந்த குணத்தோடுகூடியிவ்வுலக அநுஸந்திக்கப்பட்ட எம்பெருமான் ஒவ்வொருபத்திலும் ஆழ்வார்க்கு உண்டாக்கின பேறு இன்னதென்பதும் இந்த சூர்ணிகையில் நிரூபிக்கப்பட்டதாயிற்று.

மூன்ரும் பிரகரணம் முற்றிற்று

நான்காம் ப்ரகரணம்

219. [பரபரஞ்நின்ற.] முதற்பத்தின் கருத்தாவது:— பராத்பரனை எம்பெருமான் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே ஆழ்வார்க்கு அகவிருளைப்போக்கி, பக்தியாக வடிவெடுத்த ஞானத்தைக்கொடுத்து, இன்னமும் இவர் நம்மை மறந்துபோய்விடக்கூடுமென்றெண்ணி அங்ஙனம் மறவாமைக்காக இடைவிடாதே தம்முடைய ஹ்ருதயத்திலே நிரந்தரவாஸம்பண்ணினான்;

அத்தாலே நிஷ்களங்கமான தத்வஜ்ஞானத்தையுடையரான ஆழ்வார் அவனுடைய திருக்கல்யாண குணங்களைத் தமது திருவுள்ளத்தோடே அநுபவித்தார்; அவ்விஷயம் தனியிருந்து அநுபவிக்கவொண்ணுமையாலே ஸம்ஸாரிகளையுங் கூட்டிக்கொண்டு பெருந்திரளாயிருந்து அநுபவிக்க விரும்பினராகையாலே அவர்களைநோக்கி த்யாஜ்யமான ஸம்ஸாரத்தின் தோஷத்தையும் உபாதேயமான பகவத்விஷயத்தின் குணத்தையும் அவ்வெம்பெருமானை பஜிக்கவேண்டிய ப்ரகாரத்தையும் பஜனத்துக்குப் பற்றுக்கோடான திருமந்திரத்தையு முபதேசித்து, பஜநீயனான அவனுடைய ஸௌலப்யகுணமென்ன, அபராதங்களைப் பொறுக்குந்தன்மையென்ன, நீசர்களோடும் கலந்து பரிமாறும் சீலகுணமென்ன, எளிதாக ஆராதிக்கக்கூடியவனுயிருக்குந் தன்மையென்ன ஆச்ரயணம் போக்யமாயிருக்கப்பெற்ற தன்மையென்ன, கோணலேவடிவெடுத்த ஸம்ஸாரிகளோடும் செவ்வியனுய்ப் பரிமாறுகையாகிற ருஜுத்வகுணமென்ன, தன்னுடைய போகங்களைப் பொறுக்கப்பொறுக்க அடைவே கொடுத்தருளுந்தன்மையென்ன, பரமபக்திக்கும் பரிகணைக்குமொக்க முகங்காட்டுகை

யாகிற ஸாம்யமென்ன—ஆகிற இக்குணங்களை ஒவ்வொரு திருவாய்மொழியாலும் நிரூபணம செய்யாநின்றுகொண்டு அவ்வழியாலே பஜநத்திலுடைய ஸௌகர்ய போக்யதைகளையும், பஜிக்கவே ஸகல பலன்களும் கைகூடுமென்பதையும், பஜிக்கத் தொடங்கும்போதே பஜநவிரோதிகளெல்லாம் தொலைந்தொழியுமென்பதையும் அறிவித்து, ஆகவே ஸ்ரீ கீதையில் அவனருளிச் செய்த பக்திமார்க்கத்திலே நின்று தேவதாந்தரங்கள் பக்கலில் பரத்வசங்ஙகையைத் தவிர்த்து அவன் விஷயமான ஞானத்தைக் கொண்டு அவன் பக்கலிலே அநந்ய ப்ரயோஜந பக்தியைப் பண்ணுங்கோளென்று, தமக்கு அவன் மயர்வற மதிநலமருளினைப்போலே தாமும் இந்த ஸம்ஸாரிகளுக்கு அஜ்ஞாந நிவ்ருத்திபூர்வகமாக ஜ்ஞான பக்திகளை உபதேசத்தாலே உண்டாக்கி பஜநத்திலே மூட்டுகிறார் என்பதாம்.

220. [சோராத மூவா] இரண்டாம்பத்தின் கருத்தாவது :—அநேகத்துக்கும் காரணபூதனான எம்பெருமான் கீழ்ப்பத்திலே தமக்கு அறியாதவற்றை அறிவித்தருள அதனாலே அறிவுபெற்ற ஆழ்வார் அந்த அறிவுக்குப் பலனான மோக்ஷத்தை அப்போதே பெறவேணுமென்று ஆசைப்பட்டுப் பெருமையாலே விஷண்ணராநார் ; அந்த விஷாதமெல்லாம் தீரும்படி எம்பெருமான் வந்து ஸம்ச்லேஷித்து ப்ரீதனானென் ; அந்த ப்ரீதி இவரொருவரளவிலே நில்லாதே இவரோடு ஸம்பந்த ஸம்பந்தமுடையாரளவிலும் வெள்ளமிட்டு, அந்த ப்ரீதியாலே இவர்க்கு அவன் மோக்ஷத்தைக் கொடுக்கப் புகுந்தான் ; ஆழ்வார் அந்த மோக்ஷத்தை அவனுடைய சேஷித்வத்துக்கும் தம்முடைய சேஷத்வத்துக்கும் தகுதியாம்படி நிஷ்கர்ஷித்தார். அதன்பிறகு, ஆச்ரயணீயனான அவனுக்குக் கீழ்ப்பத்தில் சொன்ன பரத்வத்தை நிலைபெறுத்துவனவான லக்ஷணங்களை வெளியிட்டு, அவற்றுக்குப் பொருத்தமான வசனப்ரத்யக்ஷங்களையும் காட்டினார். ஆச்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக த்யாஜ்யமான ஸம்ஸாரத்திலுடைய துஃக்கபஹுளத்வத்தையும், ப்ராப்யமான மோக்ஷத்திலுடைய ஆநந்த ப்ராசுர்யத்தையும், ஸம்ஸார நிவ்ருத்திபூர்வக மோக்ஷப்ராப்திக்குறுப்பான ஸாதனத்திலுடைய ஸாரஸ்யத்தையும் முன்னிட்டுக்கொண்டு ஸகுணப்ரஹ்மோபாஸநத்தை விதித்து, அதற்கு அங்கமாக நிஷித்தாநுஷ்டாநத்யாகமும் க்ஷேத்ரவாஸம் முதலானவையும் செய்யவேணுமென்று அருளிச்செய்தாரென்பதாம்.

221. [முழுதுமாயெங்கணும்.] மூன்றாம்பத்தின் கருத்தாவது :—கார்ய வர்க்கங்களான ஸகல சேதநா சேதநங்களையும் வியாபித்து அவற்றிலுள்ள தோஷங்கள் அணுவளவும் தன்னை ஸ்பர்சிக்கப் பெறாதபடி ஸர்வவ்யாபகனாயிருக்கின்ற எம்பெருமான், கீழ்ப்பத்தில் இருவருடையவும் ஸ்வரூபத்திற்குத் தகுதியாக ஆழ்வார் நிஷ்கர்ஷித்த மோக்ஷத்திற்குப் பலனை தன்னு

டைய திவ்யமங்கள விக்ரஹாநுபவத்தை இவர் தாம் பெற்றாராய்ப் படி செய்தவளவில், இவரும் அவ்வநுபவத்தைப் பெற்றுத்தரித்த. அதனாலுண்டான உவப்பின் மிகுதியாலே எல்லாவடிமைகளும் செய்ய வேண்டும்படியான ஆவல் கிளர்ந்தவராய், அந்த ஆவலுக்குத் தகுதியாக அப்பெருமான் காட்டிக்கொடுத்த தன்னுடைய விபூதி விஸ்தாரத்தைப் பேசி அத்தாலே கரைபுரண்ட ப்ரேமமுடையராய், அந்த ப்ரேமம் அவ்வெம்பெருமானளவிலே அடங்கி நில்லாமல் சொல்லியான பாகவதசேஷத்வத்தளவும் சென்று, அந்த பாகவதர்களுக்கு நிரூபகம் பகவானுடைய வைலக்ஷண்யமாகையாலே அத்தை அநுஸந்திக்கவே ஒரு காரணத்தினுடைய செயலே மற்றொரு காரணம் ஆசைப்படவேண்டும்படியான பெரிதாய் படைத்தவராய், எம்பெருமானொருவனன்றி மற்று எவரையுமே துதிக்கமாட்டாத தம்முடைய வைலக்ஷண்யத்தை வெளியிட்டவராய், எம்பெருமானை யனுபவிப்பதற்கு ஒருவகையான இடையூறுமின்றிக்கே அபரிமிதமான ஆனந்தத்தை யடைந்தவராய், ஸம்ஸாரிகள் எம்பெருமானுடைய பரத்வத்தைக்கண்டு அஞ்சிப் பின்வாங்காமல் மேல்விழுந்து ஆச்ரயிக்கும்படி அர்ச்சாவதாரலீலாபயத்தை அவர்களுக்கு உபதேசித்து, அர்ச்சிராதிகதியாலே திருநாட்டைடைப் பெறுவிக்குமவனை எம்பெருமானையொழியப பிறருடைய ஸ்வாதந்த்ரத்திலே கைவைப்பது பயனற்றதென்றும், எம்பெருமான் விஷயத்திலே வாக்கு ஸபலமாம்படி அடிமை செய்வதே உரியதென்றும உபதேசித்து அவர்களைத் தம்மைபோலே கைங்கர்யபராம்படி செய்தருளுகிறரென்பதாம்.

222. [சகலாயிசன்.] கீழ் மூன்றும்பத்தில் எம்பெருமானுடைய வ்யாபகத்வமென்னும் குணம் கூறப்பட்டதாக நிரூபிக்கப்பட்டது: ஆகாசமென்கிற பூதமும் வ்யாபகமாயிருப்பது போலவன்று எமபெருமான் வ்யாபகனாக இருப்பது; இவன் தன்னுடைய வ்யாப்தி நிறம்பெறும்படி *அந்தஃ ப்ரவிஷ்டஃ சாஸ்தா ஜநாநாம் * இத்யாதிகளில் சொல்லுகிறபடி தன்னையொழிந்த ஸகல வஸ்துக்களினுடையவும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் யாவும் தன் அதீனமாமபடி நியமித்துக்கொண்டு போருகையாலே இப்படி ஸர்வ நியந்தாவாயிருக்கிற ஸர்வேச்வரன், தன் விஷயத்திலே ஆழ்வார் *ஏழிவில் காலமெல்லா முடனுய் மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டுநாம் என்று (கீழ்ப்பத்தில்) கைங்கர்யத்திலே அதிகமாகப் பாரித்தது போலே, வேறு தேசங்களிலும வேறு காலங்களிலும கைகழிந்து போன அபதாநங்களையும் அந்தந்த தேச காலங்களிற் போலவே அனுபவிக்க வேணுமென்று பாரிக்க, அப்படியே காலோபாதியைக் கழித்து ஸமகாலமாக்கி அநுபவிப்பித்து இவருடைய இழவைத் தீர்த்து இவருடைய த்ரிகரணவ்யாபாரங்களையும் போக்யமாகக் கொள்ள, ஆழ்வார் அந்த பரணயித்வ குணத்திலே தோற்று விரஹாவஸ்தை

யில் எம்பெருமானுக்குப் போலியான பொருள்களையும் அவனோடு ஸம்பந்தமுள்ள பொருள்களையும் அவனைக் கருதும்படி பித்தேதறி, திருநாட்டிலநுபவத்தையும் ஆசைப்பட்டுக் கூப்பிட, அவ்விழவும் தீரும்படி எம்பெருமான் தேச விசேஷத்திலே பெரிய பிராட்டியாரும் தானுமே போக்தாக்களாயிருக்கிற இருப்பைக் கிட்டியனுபவித்தாப் போலே ப்ரத்யக்ஷமாம்படி அநுபவிப்பிக்க, அநுபவித்து இப்படி முக்தபோகத்தை மானஸமாக ப்ராபித்து அதற்குப் பலனான தேவதாந்தராதி விரக்தியையுடையரான ஆழ்வார் ஐச்வர்ய கைவல்யங்களின் அல்பத்வம் அஸ்திரத்வம் ஸாவதிகத்வம் முதலிய தோஷங்களையும், ஆடு, கள், இறைச்சி முதலிய நிந்திதபதார்த்தங்களாலே க்ஷுத்ர தெய்வங்களை பஜிப்பதன் நிஹீநத்வத்தையும், பிரமன் ருத்ரன் முதலிய தேவதைகளின் அஜ்ஞாநாதிகளையும், பாஹ்யகுத்ருஷ்டி மதங்களின் தாமஸத்வத்தையும் வெளியிட்டு, "பாவிகளே! தேவதாந்தரங்களை ஆச்ரயித்து அகன் பலனும் கைகண்டீர்களே! ஸர்வேச்வரனே ரக்ஷகன், அல்லாதாரடங்கலும் அவனுக்கு ரக்ஷ்யபூதர்கள் என்னுமிடத்தைக் கண்டுவைத்தும் தெளிவுபெறமாட்டீர்கள்; இப்படி நீங்கள் தெளிவு பெறுமைக்குக் காரணம் அவனிட்ட வழக்கான ப்ரக்ருதி ஸம்பந்தம், அதுவிட்டு நீங்குதற்கு உபாயமும் அவனது திருவடிகளில் ஆச்ரயித்தல் என்றறிந்து அங்ஙனே ஆச்ரயித்து இத்தைத் தப்பப்பாருங்கள்; அவன் திருவடிகளில் கைங்கரியமே உங்களுக்குச் சீரிய புருஷார்த்தம்" என்று உபதேசித்து பகவத்ஸமாச்ரயணத்தை ருசிப்பிக்கிறரென்பது ஸாலாம்பத்தின் கருத்து.

223. [ஆவாவென்று.] ஐந்தாம்பத்தின் கருத்தாவது—கீழ் நான்கு பத்துக்களிலும் சொல்லப்பட்ட பரத்வம் காரணத்வம் வ்யாபகத்வம் நியாமகத்வமாகிற குணங்களால் வந்த தன்னுடைய ஏற்றத்தையும் தங்கள் தங்களுடைய தாழ்வையும் அநுஸந்தித்து அகன்றுபோக நினைக்குமவர்கள் திறத்திலும் மேல் விழுந்து விஷயீகரிக்கும்படி பரமகாருணிகனாயிருக்கின்ற எம்பெருமான் கீழ்யிவர்க்கு "தேவதாந்தர ஆத்மாத்மீய லோகயாத்ரைச்வர்யாக்ஷேபங்களில் வைராக்யம்" என்னும்படி பிறப்பித்த வைராக்யத்திற்குப் பலனான ஸ்வவிஷயமான பக்தியைப் பரம்பரயா வளரச் செய்ய, அந்த பக்தியையும் பாகவதஸமாகமத்தையும் உடையரான ஆழ்வார் தாம் திருத்தத்திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களையும் திருத்தின தம்மையும் காண்பதற்காக வந்த நித்யஸூரிகளையும் ச்வேதத்வீபவாஸிகளான ஸித்தரையுங் கண்டு மங்களாசாஸநம் பண்ணி, திருந்தாத அஸுராராக்ஷஸ ப்ரக்ருதிகளையும் உபதேசமுகத்தாலே திருத்தி, பாகவத ஸமாஜதர்சனம் இனிதாம்படியான ஞானம் பிறந்தவர்களுக்கு ப்ராப்யத்வரைக்கு அடியான பக்தியையும் உபதேசித்துத் தலைக்கட்டுகிறரென்பதாம்.

224. [என்னையும் யாவர்க்கும்.] ஆறும்பத்தின் கருத்தாவது— சிற்ப்பத்திற்பேசின குணமாகிய பரம க்ருணையிலே அனவரும் வந்து ஆச்ரயிக்கும்படியிருக்கிற ஸர்வசரண்யனான ஸர்வேச்வரன் பக்தி பாரவச்யத்தாலே அநந்யகதியான ஆழ்வார்க்குத் தன் திருவடிகளையே நிரபேக்ஷோபாயமாகக் காட்டிக்கொடுத்தான். அங்ஙனம் காட்டிக்கொடுக்கப்பெற்ற ஆழ்வார் அவ்வுபாயத்திலே விச்வாஸமில்லாதபடி நடக்கிற வ்யவஸாயத்தையுடையவராக ஆகி, அந்தத் தம்முடைய வ்யவஸாயத்தைத் தூதுவிடும் முகத்தாலே எம்பெருமானுக்கு அறிவித்தார். அறிவித்தும அவனெழுந்தருளத் தாமதிக்கையாலே ப்ரணயரோஷமுடையவராயழுவார். அந்த ப்ரணய ரோஷத்தை எம்பெருமான் வந்து பரிஹரித்தவாறே அவனுடைய ஸாமர்த்தியத்தை அநுஸந்தித்தார். கீழே ஐந்தாவதுபத்தில் * பிறந்தவாற்றிலே குணங்களைத் தரித்துநின்று அனுபவிக்கவல்லேனென்படி பண்ணியருளவேணுமென்று பண்ணின ப்ரபத்தியும் * குரவையாய்ச்சியரிலே பலித்தது. அது பலித்தவாறே ப்ராப்திக்கு ப்ரபத்தி பண்ணுவதாகச் சோதிக்கிறார். ஹிதோபாயவரணம் பண்ணும்போது இதாங்களைப் பரிதயஜித்தேயாக வேண்டுகையாலே உபாய விரோதிகளான த்யாஜ்யாமசங்களை ஸ்வாஸநமாகவிட்டார். விட்டவையெல்லாம் தடக்குப் பற்றுகிற விஷயமேயாக நினைத்து, தமக்கு உபாயமாக நினைத்திருக்கும் ஸர்வஸுலபமான உலகளந்த திருவடிகளை த்யஸ்தரிகளுமே வந்தனுபவிக்குமப்படி நிற்கிற திருமலையிலே கண்டு த்வயத்தில் பூர்வவாக்ய ப்ரக்ரியையாலே சரணம் புகுந்தார். * பத்துடையடியவா தொடங்கி அநுசாம்பத்தளவும் உபதேசித்த பக்தியுபாயத்தின் துஷ்கரத்வாதி தோஷவுணர்ச்சி காரணமாக சோகிக்குமபடியான நிலைமை பிறந்தவர்களுக்குத தம்முடைய ப்ரபத்தி நிஷ்டையை ப்ரகாசிப்பிக்கிறரென்பதாம்.

225. [எண்ணிலாக்குணங்கள்.] ஏழாம்பத்தின் கருத்தாவது— விசித்ரசக்தி யுக்தனான ஸர்வேச்வரன், தன் திருவடிகளை க்ஷணகாலமும் பிரியமாட்டாதே ப்ரபத்தி பண்ணினதம்மை விஷயங்களிலேமூட்டித் தன்பக்கல் சேராதபடி அகற்றுமவையான இந்த்ரியங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைக்கக்கண்டு வருந்திக் கூப்பிட்டு, தம் நிலைமை தாம் பேசமாட்டாதபடி தளர்ந்து, பிறரால் மீட்க வொண்ணுதபடி நெஞ்சு பறியுண்டவராக, அவன் தன் விஜயங்களைக்காட்டி இவரைத் தரிப்பிக்க, அந்தத் தரிப்பும் ஸம்ஸாரிகளின் இழவை நினைத்துச் சுவறிப்போய் பழையஆர்த்தியே தலையெடுத்து, அவனுடைய அவயவங்களெல்லாம் ஸ்ம்ருதி விஷயமாகி ஒரு முகஞ்செய்துநலிய நோவுபட்டு, இப்படி எடுப்பும் சாய்ப்புமாக வருத்தம் செல்லச் செய்தே "உபாயபூதனனை உனக்கோ ஜ்ஞானசக்திகளில் குறையில்லை, எனக்கோ ஆகிஞ்சந்ய அநந்யகதித்வங்களிலும் ஆர்த்தியிலும் குறையில்லை; இப்படி

யிருக்க என்னை ஸம்ஸாரத்திலே வைத்தது எதற்காக?'' என்று கேட்க, அவனும் ''நமக்கும் நம்முடையார்க்கும் இன்பமாகத் திருவாய்மொழிபாடுவிக்க வைத்தேதாங்காணும்'' என்றருளிச் செய்ய, 'வியாஸர் முதலான முனிவர்களும் முதலாழ்வார்களு முண்டாயிருக்க, கவிபாட வல்லவர்களான அவர்களைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளாதே நம்மைக்கொண்டு கவிபாடுவித்துக் கொள்வதே!' என்று அவன்பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து அதுக்குப் பிரதியுபகாரம் பண்ணத்தேடி ஒன்றுங்காணுமையாலே, திருவாறன்விளையிலே பெரியபிராட்டியாருடனே யெழுந்தருளியிருக்கிற பேரோலக்கத்திலே திருவாய்மொழி கேட்பித்து அடிமைசெய்வது தவிர வேறொருகைம்மாறில்லை யென்று துணிந்து அங்ஙனே செய்யத் திருவுள்ளம்பற்றவேணுமாகையாலே பரமபதத்திலிருப்பையும் உபேக்ஷிக்கும்படியானவராகி, கீழ்த் தம்முடைய உபாயநிஷ்டையை வெளியிடும்படிக்குப் பாங்காக நின்றவர்களுக்குத் 'திருவாறன் விளையே ப்ராப்யம், அங்கெழுந்தருளி நிற்கிறவன் உபாயம்' என்று தாம் அறுதியிட்ட ப்ராப்யப்ராபகங்களினுடைய முடிவைத் தம் உகப்பாலே வெளியிடுகிறரென்பதாம்.

226 [தேவிமார்பணியா] எட்டாம்பத்தின் கருத்தாவது— கீழ்ப்பத்திற் பேசின குணமாகிய ஸர்வசக்தியோகத்தாலே நித்யமாகக் கல்பிக்கப்பட்ட போக்ய போகோபகரண போகஸ்தானங்களையுடையவனுகையாலே ஸத்யகாமனான ஸர்வேச்வரனானவன் ஆழ்வாரைத் தரிப்பிக்க நினைத்தான்; எதற்காகவென்னில், ஆழ்வார், தேஹ தமக்குண்டான வாசிகமான அடிமையையும் மறந்து பகவதநுபவம் கிடைக்காமையினாலே கலங்கி, பகவத்குணத்திலும் பகவத்ஸ்வரூபத்திலும் அதிசங்கை பண்ணி ஸம்ஸார தோஷங்களை யநுஸந்தித்து அஞ்சிறைராகையாலே அவரைத் தரிப்பிக்க நினைத்தானெம்பெருமான். அதற்காக முன்னின உபகாரத்தை ஆழ்வார்க்கு நினைப்பூட்டினன்; ஆழ்வாரும் அத்தாலே க்ருதஜ்ஞராய் அதற்குப் பலனக ''ஆத்மஸமர்ப்பணம் பண்ணினர்; அத்தாலே எம்பெருமான் பெரும்பேறு பெற்றுனைய் இவர்க்குண்டான ஆத்மகுணங்களாலே மிகவும் மகிழ்ந்தவனுய் ஆழ்வார் திருவுள்ளத்திலேயிருந்து அநுபவித்து இனி இவர் அயோக்யதாநுஸந்தானம் பண்ணி அகலாமைக்காக ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை ப்ரகாசிப்பித்தான்; அப்போது ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை அநுஸந்தித்த ஆழ்வார் கீழ் தம்முடைய ப்ராப்ய ப்ராபகங்களைக் கேட்டு உகந்தவர்கள் ப்ராப்யம் ஒன்றும் ப்ராபகம் ஒன்றுமாய் இருகரையராயலையாதபடி ப்ராப்யமாகச் சொன்ன விஷயமொன்றிலேயே அவர்களை ஊன்றச் செய்தருளுகிறரென்பதாம்.

227. [எண்டிசையுமகல் ஞாலம்.] அவாப்தஸமஸ்தகாமனுகையாலே இத்தலையில் ஒன்றையும் அபேக்ஷியாமல் பிரளயம் முதலிய

ஆபத்துக்களிலே உதவி ரக்ஷிக்கின்ற ஆபத்ஸகனை எம்பெரு மான், கீழ் ப்ரகாசிப்பித்த ஆச்மஸ்வரூப யாதாத்மியத்தைக் கண்டதற்குப் பலன் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை அநுபவிக்கை யாகையாலே அவ்வநுபவத்திலுண்டான த்வரையாலே ஒரு நொடிப்பொழுதும் விளம்பம் பொறுக்கமாட்டாமல் ஆழ்வார் துடிக்க, அவ்வளவிலே எம்பெருமான் "சரீராவஸானத்திலே பேறு தப்பாது" என்று நாளவதியிட்டுக் கொடுக்க, அங்ஙனம் காளிடப்பெற்ற ஆழ்வார், கீழ் தம் உபதேசத்தால் திருந்தினவர்களை யொழிய அல்லாதாரையும் விடமாட்டாத பரமக்ருபையாலே அதிகாராநுகுணமாக எல்லாவுபாயங்களையும் அருளிச்செய்கிறார் ஒன்பதாம்பத்தில்.

228. [சுருக்குழலஞ்சனப்புனல்.] பத்தாம்பத்தின் ஸாரமான கருத்தாவது :—இப்படி ஆபத்ஸகனுகையாலே ஆபத்தைத் தவிர்க்கைக்குத் தகுதியாகப் பரிக்ரஹிக்கும் விக்ரஹங்களுக்கெல்லாம் மூலபூதமாய் சிறந்த வைலக்ஷண்யத்தோடு கூடியதான திவ்ய விக்ரஹத்தோடே வந்துதோன்றி, தன்னடியார்கள் ஸம்ஸாரத்தி லடிக்கொதிப்பாலும தன் திருவடிகளைக் கிட்டியநுபவிக்கப் பெறுமையாலும் படும் ஆர்த்தியைப் போக்குமியல்வினனவன் கீழ்ப்பத்தில் தம்முடைய த்வரைக்குத் தக்கபடி நாளிட்டுக் கொடுத்ததுக்குப் பலன் அர்ச்சிராதிகதியாலே தேசவிசேஷத்தேறப் போகையாகையாலே அதுக்கு ஆப்ததமனை அவன் தன்னை வழித்துணையாகப்பற்றி, இனி ப்ராப்தியில் தடையில்லை யென்று தமக்குள் நிச்சயித்தவிவர் மறைத்துவைத்த அர்த்தமுள்ளதும் வெளியிட வேண்டுமபடியான தசையானவாறே ப்ரதமோபதேச பாத்ரமான தம் திருவுள்ளத்திற்கு க்ருத்யாகருத்யங்களை விதித்து, அந்தத் திருவுள்ளம்போலே விதேயரான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக் கர்த்தவ்யம் முதலியவற்றை வெளியிட்டு முதற்பத்திலே * பிணக்கறவுறுவகையென்னும் பாசுரத்தில் உபக்ரமித்த பக்தியோகத்தை * சார்வேதவெறியோடே உபஸம்ஹரித்து, ஸம்ஸாரிகளுக்கு ஸுகரமாக ஆச்ரயணத்தை உபதேசித்து, அநுபவ கைங்கர்யங்களிலே நிற்கிறவர்களுக்கு சீலகுணமாகிற ஆழங்காலையுங் காட்டி ஜாகரூகதையை விதித்து, தம் பக்கல் விருப்பத்தாலே தம் திருமேனியில் அதிகவியாமோஹம் பண்ணுகிற எம்பெருமானுக்கு அதன் தோஷத்தையுணர்த்தி, இப்போது தமக்குப் பரதந்த்ரனைத் தம்மைப் பரமபதத்திலே கொண்டு போவதாக மிகவும் ஆதரம் பண்ணுகிறவனை, அநாதி காலம் தம்மை ஸம்ஸரிக்கவிட்டு உபேக்ஷித்திருந்ததற்கு ஹேது வென்னென்று கேட்க, அவனும் இந்த்ரியவச்யதை முதலான ஹேதுபரம்பரையையெண்ணி அதுவும் நம் அதீனமென்று அறியும் ஸர்வஜ்ஞரானவிவர்க்குப் போக்கடி சொல்லுகை அரிதென்று நிருத்தரனுய் அர்ச்சிராதி மார்க்கத்தையும் அங்குள்ளாருடைய

ஸத்காரத்தையும் அவ்வழியாலே போய்ப்பெறும் ஸ்வசரணக மலப்ராப்தியளவாகக் காட்டிக் கொடுக்க அத்தை ஸாக்ஷாத் கரித்து, அது மாநஸாநுபவமாத்ரமாய் பாஹ்யகரணயோக்யமல் லாமையாலே அத்தை உள்ளபடி ப்ராபிக்கவேணுமென்று பதறி அவனுக்கு மறுக்கவொண்ணாத திருவாணையிட்டுத் தடுத்து, அது பெருவாணையல்லாமைக்கு ஹேதுக்களையுஞ் சொல்லும்படியான தம்முடைய பரமபக்தியெல்லாம் மிகச் சிறிதென்னும்படி கரை புரண்ட அபிநிவேசத்தோடே வந்து தம்முடைய தாபங்களைப் போக்கினபடியை வெளியிட்டமையாயிற்று. (228)

229. [உருமையோடே] (பிரார்த்தித்தபோதே ஆழ்வார்க்கு மோக்ஷமளிக்காமைக்குக் காரணங்கள் கூறுதல்) ஆழ்வார் முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் * இந்நின்ற நீர்மை யினியாமுறு மை * என்று ஆர்த்தராய்ச் சரணம் புகுந்தபோதே அவர்க்கு ப்ராப்திவிரோதிகளைக் கழித்து, * உற்றேனுகந்து பணிசெய்து உனபாதம்பெற்றே னென்னும்படியாய்த் தன் திருவடித் தாமரை களிலே சேர்த்துக்கொள்ளலாமே எம்பெருமான்; ஆழ்வாருடைய ஆர்த்தியிலும் குறையில்லாமே எம்பெருமானுடைய சக்தியிலும் குறையில்லாமேயிருக்க எதற்காக அவரை இவ்விருள் தருமாஞாலத் திலே வைத்துத் துடிக்க விட்டது? என்கிற சங்கைக்குப் பரிஹாரம் பலர் பலவிதமாகச் செய்வதுண்டு; நாடுதிருந்துவ தற்காக வைத்து வைத்தான் என்பர் சிலர்; அதாவது, தன் னுடைய ஸ்ருஷ்டி-அவதாரம் முதலியவற்றாலும் திருந்தாதவுலகம் ஆழ்வாருடைய உபதேசத்தாலே * ஊரும் நாடுமுலகமும் தன் னைப்போல் * என்னும்படி திருந்துகைக்காக வைத்து வைத் தான் என்பராம். மற்றுஞ்சிலர் நச்சுப்பொய்கையாகாமைக்காக வைத்து வைத்தான் என்பராம்: அதாவது, ப்ரபத்தி பண்ணின வுடனே மோக்ஷம் கொடுத்துவிட்டால் உலகத்தார்கள் ப்ரபத் தியை நச்சுப்பொய்கையாக நினைத்து அஞ்சினவர்களாய் இதில் ஒருவரும் இழியாமைக்கு. ஹேதுவாய்விடுமன்றே; 'இந்தப் பொய்கையில் தண்ணீர்குடித்தால் உடனே இறந்து படுவார்கள்' என்று ப்ரஸித்தியிருந்தால் 'இந்தப் பொய்கையில் நஞ்சு இருக் கின்றது போலும்; இதில் நாம் இறங்கலாகாது' என்று ஒவ் வொருவரும் இருப்த்து வர்த்திப்பர்களன்றே; அப்படியே எம் பெருமானைக் குறித்து 'அவித்யாகர்ம வாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களாகிற ப்ராப்தி ப்ரதிபந்தகங்களை விடுவித்தருளாய்' என்று ப்ரபத்தி பண்ணினபோதே மோக்ஷம் கிடைத்துவிடுவதா யிருந்தால் ஆள்கொல்லியான இந்த ப்ரபத்தியில் நாம் கைவைக்கத் தகாது என்று ஒவ்வொருவரும் நினைத்துவிடக் கூடுமன்றே; அப்படி யாகாமைக்காகவே வைத்து வைத்தான் என்பராம். தானும் தன்விபூதியும் வாழும்படி எம்பெருமான் ஆழ்வாரைக் கொண்டு கவிபாடுவிக்கத் தொடங்கின 'திவ்யப்ரபந்தம் பூர்த்தி

யடைய வேண்டியது அவசியமாகையாலே அப்படி ப்ரபந்தம் பூர்த்தியடையாமலே ஆழ்வார்க்கு முக்தியளிதாதுவிட்டால் உலகம் அஸாரமாய் விடுமென்றே ; அப்படியாகாமைக்காக ஆழ்வானை வைத்து வைத்தான் என்பராம் மற்றுஞ்சிலர். வேர் சூடுமவர்கள் பரிமளத்திலாசையினாலே மண்பற்றுக் கழற்றுதாப் போலே ஜ்ஞானிகளை சரமசரீரத்தோடே வைத்து அநுபவிக்கையில் எம்பெருமான் மிகவும் ருசியுடையவனாகையாலே ஆழ்வாருடைய ஜ்ஞானப்ரேமபரிமளமெல்லாம் தோற்றுமட்படியிருக்கிற திவ்யமங்கள விக்ரஹதத்தில் தனக்குண்டான விருப்பத்தாலே இவரை வைத்து வைத்தான் என்பராம் மற்றுஞ்சிலர் : இவையெல்லாம் ஸமாதானங்களே யாஞலும் இவற்றிற்காட்டிலும் மிகவும் முக்கியமான ஸமாதானம் ஒன்றுண்டு ; அதாவது * இனியினியென்று இருபதின் கால் கூப்பிடும்படியான ஆர்த்திபரம்பரையை விளைத்துப் பரமபக்தி பர்யந்தமான அதிகாரபூர்த்தியை உண்டாக்குகைக்காகவே காலதாமதம் செய்து வைத்து வைத்தது என்பதாம்.

230 [கமலக்கண்ணனென்று தொடங்கி.] (பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளின் தசைகள் இன்ன திருவாய்மொழிகளிலேயென்று விவரிக்க வேண்டி, முதலில் பரபக்தியவஸ்தை இன்னதென்கிறது) * கமலக்கண்ணனென் கண்ணினுள்ளான் * என்று தொடங்கி * கண்ணுள் நின்றகலான் * என்னுமதளவாகப பத்துச் சந்தையாலும் சொன்ன ஸாக்ஷாத்காரமானது * நெஞ்சென்னும் முட்கண் * என்கிற ஆநந்தரசக்ஷாஸ்ஸான மனஸ்ஸாலே யுண்டானதாய்பாவ்யசக்ஷாஸ்ஸாலே அவனைக்காண வாசைப்பட்டுக் கூப்பிட்ட சந்தைகள் இருபது உண்டாகையாலே * கண்டுகளிப்பக் கண்ணுள் நின்றகலான் * என்கிற பாசுரம்வரையில் பரஜ்ஞானதத்தை உள்ளே கொண்டிருக்கிறப்ரபக்தி. அதாவது உள்ளே அநுபவம் செல்லா நிற்க, பெற்றல்லது தரியாத பாவ்யாநுபவாபேக்ஷா நடக்கையாலே பரஜ்ஞானகார்ப்பமான பரபக்தியென்கை.

231. [இருந்தமை யென்றது.] (பரஜ்ஞானாவஸ்தை இன்னதென்பது.) * அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ * என்று ஆழ்வார் முதலில் ஆசைப்பட்டபடியே அர்ச்சிராதிகதியாலே தேச விசேஷத்திலே சென்று பகவத்ஸ்வரூபம் முதலானவற்றைப் பரிபூர்ணாநுபவம் பண்ணுகிற நித்ய ஸூரிகள் திரளிலே கூடியிருந்தாராகக்கண்டு பேசின * அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை * என்கிற பாசுரத்தை யுட்கொண்டதான * சூழ்விசும்பணி முகிற்பதிகம் பூர்ணமான பரஜ்ஞானம்.

232. [முடிந்தவவா] (பரமபக்தியவஸ்தை இன்னதென்றல்.) *அந்தமில் பேரின்பத் தடியரோடிருந்தமையாகக் கண்டவதுதான் மாநஸாநுபவமாய் பாவ்யாநுபவ யோக்யமல்லாமையாலே பெருவிடாய்பிறந்து கூப்பிட்டுத் தரிக்கமாட்டாமல் திருவாணையிட்டுத் தடுத்துப் பேற்றிலே தலைக்கட்டின * முடிந்தவவாவி

லந்தாதி யிப்பத்து * என்கிற * முனியே நான்முகன் பதிகம்—→ பக்தியி னுடைய சரமாவதியான பரமபக்தி. (232)

233. [இவை ஜ்ஞாநதர்சந.] (பரபக்தி முதலியவற்றின் தன் மையை பகவத்வசனத்தாலே காட்டுதல்.) கீழ்ச்சொன்ன பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் * பக்த்யா த்வநந்யயா சக்யஃ அஹமேவம் விதோர்ஜுந, ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ் ச தத்வேந ப்ரவேஷ்டுஞ் ச பரந்தப* என்று அர்ஜுநனைக் குறித்துத் திருத்தேர்த்தட்டிலும், * பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ* என்று ப்ரார்த்தித்த எம்பெருமாளைக்குறித்து * மத்ஜ்ஞாந தர்சநப்ராப்திஷு நிஸ்ஸம்சயஸ் ஸுகமாஸ்வ * என்று சேர பாண்டியனெனும் சீரிய சிங்காசனத்திலும் அவனருளிச்செய்த ஜ்ஞான - தர்சந - ப்ராப்தி அவஸ்தைகளாம். எம்பெருமாளோடு கூடுவதும் பிரிவதுமே இன்பதுன்பங்களாம்படியான பரபக்தி யானது - ஜ்ஞாநாவஸ்தை. எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குணவிபூதிகளை மிகவும் விசதமாக ஸாக்ஷாத்கரிக்கிற பரஜ்ஞான மானது தர்சநாவஸ்தை. அப்படி ஸாக்ஷாத்கரித்த வஸ்துவை அப்போதே கிட்டியநுபவிக்கப் பெறுவிடில் முடியும்படியான பக்தியானது ப்ராப்தியவஸ்தை என்றதாயிற்று. (233)

234. [அவித்யா நிவர்த்தக.] (திருவாய்மொழியாயிரத்திற்கும் பிரமேயம் இன்னதென்று கூறிக் தலைக்கட்டுதல்.) கீழ் "நூறே சொன்னபத்து நூறு ஓராயிர மென்றதும் ஸாபிப்ராயம்" என்ற சூர்ணையில் ஓராயிரமென்றதின் கருத்தை விவரிக்கவேண்டியது சேஷித்திருக்கின்றமையாலே அது இப்போது விவரிக்கப்பட்டு நூலும் முடிக்கப்படுகிறது. திருவாய்மொழியை * மயர்வற மதி நல மருளினன் * என்று தொடங்கி * அவாவற்று வீடுபெற்ற * என்று தலைக்கட்டியிருக்கும்படியை நோக்குங்கால்—ஸம்ஸார காரணமான அஜ்ஞானத்தைப் போக்குமதான ஜ்ஞாநபூர்த்தியை உபகரித்த பகவானது நிர்ஹேதுகமான அநுக்ரஹத்தாலே ஸம் ஸாரநிவ்ருத்தி பூர்வகமான பகவத்ப்ராப்திரூப மோக்ஷத்தி னுடைய லாபமென்று தெளிவித்தல் இப்பிரபந்தத்திற்கு ஒன்றான தாற்பரியம் என்று தேறிநிற்கும். எந்த ப்கவத் ப்ரஸாதம் ஞானத்தை யருள்கின்றதோ அதுவே மோக்ஷத்தையும் அருள வல்லது என்னு மர்த்தமே திருவாய்மொழியின் திரண்டபொருள் என்றதாயிற்று. (234)

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்
அண்ணாங்கராசாரியர் இயற்றிய
ஆசார்ய ஹ்ருதயஸாரம் முற்றுப்பெற்றது

சின்ன காஞ்சீபுரம் க்ரந்தமாலா ஆபீஸில் கிடைக்கும் புத்தகங்கள்

[P. B. அண்ணங்கராசாரியர் வெளியீடுகள்.]

நித்தியாநுஸந்தானம் விரி வுரை	2-8-0
முமுக்ஷுப்படி ஸாரமும் ஸ்ரீவசநபூஷண ஸாரமும்	3-0-0
தென்னாசார்ய ஸம்பிர தாயம்	1-0-0
பெரியாழ்வார் திருமொழி பொழிப்புரை	1-0-0
முதலாயிர வுரை	10-0-0
பெரிய திருமொழி உரை 700 பாசுரம்	7-0-0
திருவாய்மொழி உரை 700 பாசுரம்	7-0-0
ஷை விரிவுரை ஷை	14-0-0
திருவெழுகூற்றிருக்கை, சிறு மடல்கள் உரை	1-0-0
முருங்க மாலை ஆளவந்தார் ஸ்தோத்ரம் முதலியன விரிவுரை	2-0-0
ஸ்ரீவசநபூஷணம் தத்வத் ரயம் முமுக்ஷுப்படி மூலம்	0-12-0
ஆழ்வார்கள் வைபவம்	0-12-0
வரதராஜஸ்தவம் விரிவுரை	1-4-0
ஸுதர்சநசதகம் ஷை	1-4-0
ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1) ஷை	1-8-0
யதீந்த்ரமததீபிகா (நாகரி)	1-0-0
ஸித்தித்ரயம் ஷை	0-8-0
கீதை முதலத்யாயம் விரி வுரை	0-10-0
மணவாளமா முனிகள் வைபவம்	0-8-0
ஷை ஸ்துதிகள் 16 உரை யுடன்	1-0-0
தேசிகன் வைபவம் துதி யுடன்	0-6-0
பிள்ளோயும்காதி உரை	0-8-0
ஹயக்ரீவஸ்தோத்ரம் முதலி யன உரை	1-8-0
ஆர்த்திப்ரபந்தம் உரை	0-10-0
துவரைப் பிரான் திருவருள்	1-0-0
வித்வத்ஸைநிகபூஷணம்	0-8-0
தத்வஸுக்திகோபதேசம்	0-4-0
பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த ஸகலஸ்தோத்ர பாடங்கள் (நாகரி)	2-0-0
வால்மீகி ராமாயண ஸாரம் உத்தரகாண்ட முட்பட	6-0-0
ரஹஸ்யத்ரயஸாரம்	0-12-0
தேசிகனருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும்	36-0-0
தேசிகனருளிச்செய்த ஸகல ஸ்தோத்ரங்களும் தெலுங்கு லிபி	2-0-0
பரமார்த்தரத்நா	0-8-0
வைதிகமநோஹரா என்கிற ஸம்ஸ்க்ருத பத்ரிகை (நாகரி) வருஷச் சந்தா	3-0-0
அம்ருதலஹரி என்கிற தமிழ்ப் பத்ரிகை வருஷச் சந்தா	3-8-0
ஸ்ரீ வைஷ்ணவஸுதா என்கிற ஹிந்தி பாஷைப் பத்ரிகை வருஷச் சந்தா	3-0-0
ராமாநுஜ பத்ரிகா என்கிற தெலுங்கு பாஷைப் பத்ரிகை வருஷச் சந்தா	5-0-0
பகவத் விஷயம் ஸம்பு. 1–5 பத்து தெலுங்கு லிபி	8-8-0

[புத்தக விளம்பரம் வரவழைத்துப் பார்க்க.]